# தமிழா நினைத்துப்பார்!

## தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

தெ. பொ. மீ.
வெள்ளி விழா
வெளியீடு

பதிப்பாசிரியர் :
ம. ரா. அப்பாத்துரை, பி.ஏ.,
13, முத்தியாலு செட்டித் தெரு,
புரசைப்பாக்கம், சென்னை—7

[விலை ரூ. 3

உரிமை ஆசிரியர்க்கே.

*Printed at*
*The Premier Art Press,*
*Madras-7.*

# ஆசிரியர்

## முன்னுரை

தமிழ்ச் சமுதாயம், அதன் கல்வி, அதன் வரலாறு, அதன் சமயம், அதன் அரசு நிலை—இவற்றைப்பற்றி நான் நினைத்தவை இந் நூல் வடிவில் வெளிவருகின்றன. இவற்றில் சில, சென்னை வானொலியிலும் இலங்கை வானொலியிலும் பேசியவை; வானொலியின் எதிர் ஒலிகளைக் கட்டுரையிலும் கேட்கலாம். வேறு சில, தலைமையுரையாக, மாநாட்டில் ஒலித்தவை. மற்றும் சில, கட்டுரையாக, உயர்நிலைப்பள்ளி ஆண்டுமலர்களில் வெளிவந்தவை. தமிழனுடைய பழம் பெருமையை நினைப்பூட்டி, இந் நாளைய நிலையையும் சுட்டிக் காட்டி, அடிப்படை உண்மைகளை வற்புறுத்தி. எதிர்கால வாழ்விற்குப் பண்ணுற்று நிற்குமாறு அவனை எண்ணத் தூண்டுவனவாக இந்தக் கட்டுரைகளும் பேச்சுக்களும் அமைந்துள்ளமையால், **"தமிழா நினைத்துப்பார்!"** என்ற தலைப்புடன் இவை வெளிவருகின்றன. என்னையே நான், "தமிழா நினைத்துப்பார்!" என்று விளித்துப் பிறர் காதிலும் விழப் பேசும் பேச்சுக்களே இவைகள்!

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளிக் கழகத்தின் செயலாளன் என்ற நிலையில் இருந்து விலகுகின்றேன். சின்னஞ் சிறு குழவிகளின் கள்ளமற்ற நகை முகங்களை நாடோறும் கண்டு இத்தனை நாளும் களித்தேன். அந்த இளங் குழந்தைகள் என் மனத்தே தூண்டிய எண்ணங்களே இக் கட்டுரைகள்: அவர்களே என் ஆசிரியர்கள். என் காணிக்-

கையாக இதனை அவர்கள் வடிவாம் ஆண்டவன் திருவடியில் வைத்து வாழ்த்துகின்றேன்.

என் நண்பர்கள், நான் செயலாளனாக இருந்தமையைப் பாராட்ட வேண்டி, இதுவரை யான் எழுதிய கட்டுரைகளை வெளியிடுவது என முன் வந்துள்ளார்கள். தமிழ் வள்ளல், சைவ சமயப் புரவலர், உயர்திருவாளர் உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள், தம் நண்பர் திரு. ம. ரா. அப்பாத்துரைப் பிள்ளையவர்களைத் தூண்டி, இதனை வெளியிடுமாறு செய்த நன்றி என்றும் மறக்கத் தகுந்தது அன்று. திரு. அப்பாத்துரைப் பிள்ளை அவர்களும், "என்னிடம் முன்னரே கூறியிருந்த லாகாதா?" என்று நட்புரிமை கொண்டு உவகையுடன் முன் வந்து, மிக விரைவில் இதனை அச்சிட்டுத் தந்துள்ளார்கள். அவர்கள் அன்பினையும் மறக்கப்போமோ? இரவு பகல் எனப் பாராது இதன் அச்சுத் தாள்களைத் திருத்தியுதவிய நண்பர் திரு. துரையரங்கனாருக்கும், திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கும் நான் என்ன நன்றி காட்டக் கூடும்? எப்படி எப்படி எல்லாம் இயற்கை அன்னை என்னையும் அறியாமல் என்னை உலகினுக்கு அறிமுகம் செய்துவைக்கின்றாள் என அறியும்போது, என்னை மறந்து அவளை வாழ்த்துவதன்றி வேறு வழி யறியாதவனாக அமைகின்றேன்.

இங்ஙனம் :

சென்னை,
4—12—'54.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

# தெ. பொ. மீ.
# வெள்ளிவிழாக் குழுவினர்
## அணிந்துரை

*பேராசியர், பன்மொழிப்புலவர், பல்கலைச் செல்வர், உயர்திருவாளர் தெ.பொ. மீநாட்சிசுந்தரனாருடைய வெள்ளிவிழாவின் மூன்றும் மலராகத் **"தமிழா நினைத்துப்பார்!"** என்ற இந் நூல் வெளிவருகிறது. ஷை விழாவின் முதலிரண்டாம் மலர்களாக, உழுவலன்பர், உயர்திருவாளர் பழனியப்பச் செட்டியார் அவர்கள் வெளியிட்டுள்ள **"வள்ளுவர் கண்ட நாடும் காமமும்"** என்ற நூற்கும், **"நற்றிணை நாடகங்கள்"** என்ற நூற்கும் நாங்கள் புனைந்த அணிந்துரை, இந் நூற்கும் முழுதும் ஏற்புடையதாகும்.*

*பொருள் முட்டுப்பாடுற்றுத் திகைக்கும் வேளையில், தமிழ்வள்ளல், சைவசமயப் புரவலர், உயர்திருவாளர் உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியாரவர்கள், எங்களுக்கு ஊக்கம் அளித்து, உயர்திருவாளர் ம. ரா. அப்பாத்துரைப் பிள்ளை அவர்களை அறிமுகப்படுத்திவைக்க, அவர்களும் உடனே விரைந்துவந்து அளவறுக்க முடியாத உள்ளன்புடன் இந் நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இவ்விரு பெரியார்களுக்கும் நாங்கள் யாது கைம்மாறு வழங்கவல்லேம் என்பதறியாது திகைத்து நிற்கின்றோம். இந் நூல் அச்சாகுங்கால் தாமே அன்புடன் வந்து ஒப்புநோக்கி யுதவிய உயர்திருவாளர் மே. வீ. வேணு-*

கோபாலப்பிள்ளை அவர்களுக்கு நாங்கள் என்றும் கடமைப்படுவோம்.

இந் நூலின் சிறப்பை எடுத்துக் கூற நாங்கள் எள்ளளவும் ஆற்றல் உடையோம் அல்லோம். பண்டைத் தமிழனுடைய பெருமையை நினைப்பூட்டி, இக் கால நிலையைச் சுட்டிக் காட்டி, மேற்கொள்ளத்தக்க அடிப்படை உண்மைகள் இவையெனவ வகுத்துக் கூட்டி, எதிர்கால நல்வாழ்விற்கு நிலைபெற்ற ஊன்றுகோல் நாட்டிச் சுவை சொட்டச் சொட்ட எழுத்தோவியமாகப் பேராசிரியர் அவர்கள் அமைத்துத் தந்த இந் நூலின் சுவையனைத்தும், பயின்று நுகர்தலாகுமே யன்றிக் கேட்டு உணர்தலாகாது என்றுமட்டும் கூறுகின்றோம்.

பல்வேறிடங்களில் சிதறுண்டு கிடந்த கட்டுரைகளை யெல்லாம் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கித் தொகுத்துதவி, இந் நூலை வெளியிடுமாறு துணை நின்ற பேராசிரியர் பெருமானார்க்கு நாங்கள் யாதும் ஆற்றகில்லோம். அவர்கள் வாழத் தமிழ் ஓங்கி வாழும் ஆதலால், எல்லாம் வல்ல இறைவன், அவர்கள் நீடு வாழ அவர்கட்கு அருள் பாலித்தல் வேண்டுமென, அவன் பொன்னார் திருவடிகளை உள்ளி, வாழ்த்தி, வணங்குகின்றோம்.

வாழ்க தமிழ் நாடு! வாழ்க தமிழ் மொழி!

வாழ்க மீனாட்சி சுந்தரனார்!

சென்னை,
4-12-'54.

இங்ஙனம்:
தெ. பொ. மீ. வெள்ளிவிழாக் குழுவினர்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | *தமிழர் கதை* | |
| 1. | இந்திய வரலாற்றின் கடைக்கால்... | 1 |
| 2. | பல நாட்டுத் தொடர்பு ... | 9 |
| 3. | பழங்கதை ... | 16 |
| 4. | சங்க கால அரசர்கள் ... | 24 |
| 5. | பல்லவ பாண்டியர் ... | 32 |
| 6. | இளங்காளைப் பருவம் ... | 41 |
| 7. | சோழர்கள் ... | 49 |
| 8. | காளைப்பருவம் ... | 58 |
| 9. | சோழர் கால மக்கள் ... | 66 |
| 10. | விளக்கு எரிந்து அவிகிறது ... | 74 |
| II. | *சைவம் சிறந்த கதை* ... | **81** |
| III. | *ஆலயங்களில் தமிழ்* ... | **108** |
| IV. | *சுங்குவார் குடும்பம்* ... | **117** |
| V. | *இந்தியாவின் ஒருமையும் தேசிய இனங்களின் உரிமையும்* ... | **127** |
| VI. | *புதுப் பொங்கலில் பழைய உப்பு* ... | **138** |
| VII. | *ஆசிரியர்கள் நிலை* ... | **151** |
| VIII. | *எழுதப் படிக்கக் கற்பிக்கும் விளையாட்டு* | **163** |

| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| IX. | *குழந்தைகள் கற்பது* | ... *170* |
| X. | *ஊழிய அரசியல்* | |
| 1. | செயலரசு | ... 177 |
| 2. | சிக்கல் நிலையும் மக்கள் தொண்டும் | 182 |
| 3. | அக அதிகாரமும் புற அதிகாரமும் | ... 187 |
| 4. | மனச்சாட்சியும் ஊழியமும் | ... 190 |
| 5. | வாயிலும் வயிறும் | ... 195 |

# தமிழா, நினைத்துப்பார்!

## I. தமிழர் கதை

### 1. இந்திய வரலாற்றின் கடைக்கால்

எதிர்காலச் சிங்கங்களே,

நான் தமிழில் பேசுகிறேன். நீங்கள் கேட்கிறீர்கள். தமிழ் மொழியில் வீட்டில் பேசிப் புழங்குகிறவர்கள் தமிழர்கள். இஃது 1954-ஆம் ஆண்டு; இப்போது உள்ள நம் நிலை இது. இஃது உங்களுக்கு நன்கு தெரியும். "இப்படியே எப்போதும் இருந்தோமா?" என்று அறிய நம் மனம் அவாவுகிறது. கதைகள் கேட்பதில் நமக்கு எல்லாம் விருப்பமுண்டு. கதை என்றால், அஃது ஓரிடத்தில் தொடங்கி நீண்டு வளரும். மனிதன் தோன்றி வளர்ந்த கதையே வரலாறு. எல்லாக் கதையையும் கேட்கிற நாம் தமிழன் வரலாற்றையும் அறிய வேண்டுமன்றோ? இன்று தமிழன் வாழும் இடமாய்த் தமிழ்நாடு எனப் பெயர்பெறுவது இந்தியாவின் தென்பகுதியாகும்.

உலகம் காடும் மலையுமாய் இருந்தது. விலங்குகள் ஆண்ட காலம் அது. மனிதனோ, அன்று யானைகள்போன்ற விலங்குகளின் எதிரே அவற்றின் காலுக்குக்கூடப் பற்றாதவனாய் இருந்தான். ஆனால், இன்றோ, அவனே ஆள்கின்றான். விலங்குகளுக்குப் பல்லும் நகமும் காலும் துதிக்கையுமே கருவிகள் : உடம்பே

கருவி. மனிதன் தனக்குப் புறம்பான கல் முதலிய-வற்றைக் கருவிகளாகக்கொண்டு அவற்றை வெல்கிறான். இக்கருவிகளே இன்றைய எந்திரங்களாய் வளர்ந்துள்ளன. முதலில், மனிதன் கையாண்ட கருவிகள் கற்களே ; ஏதோ ஒரு வகையால் கூராக்கப்பெற்றவை. அவை வழங்கிய காலமே **பழங்கற்காலம்** . காலம் பறக்கின்றது. கற்கருவிகள் செம்மையாகின்றன. **புதுக்கற்காலம்** இது. இப்படித்தான் தென்னாட்டிலும் நிகழ்கின்றது. இங்கே, அன்று வாழ்ந்த மனிதன், அன்று இறந்தவர்களைப் புதைத்து, மூன்று கற்களை மூன்று புறத்தும் சுவர் போல வைத்து, ஒரு புறத்தைத் திறப்பாக விட்டு, மேலே கல்லைப் பரப்புகின்றான் ; நாளடை-வில் உலோகங்களைக் கண்டு கருவிகள் செய்கின்றான். பானைகள் அழகு பெறுகின்றன. வேட்டையாடிக் குகையில் வாழ்ந்தவன், பயிரிடக் கற்கின்றான். நாகரிகம் வளர்கிறது. இவ்வாறு பல்வேறு காலங்களில் தென்னாட்டில் பண்பாட்டை வளர்த்தவர் ஒரே இனத்தவரல்லர். ஓர் எல்லையை எட்டியதும், அதனை அடைந்த இனம் சோர்ந்து போகிறது. புத்துணர்ச்சியோடும் ஆற்றலோடும், மற்றோர் இனம் மேலே செல்கிறது. இதுதான் மனித வரலாற்றில் எங்கும் நாம் காண்பது. இந்தியாவின் தென்னாட்டிலும் இப்படித்தான் நடந்தது.

இன்று, சாதி வெறி—இனவெறி—உலகில் தலை விரித்தாடுகின்றது. வெள்ளையர்கள் கறுப்பர்களோடு வாழக் கூசுகிறார்கள். அரசியல் காரணமாக, ஒவ்வொரு நாட்டாரும், ஒவ்வொரு சாதியும் இரத்தத்தால் வேறுபட்ட வெவ்வேறு இனம்

என்று கூற முன் வருகின்றனர். ஹிட்லர், ஜெர்மானியரை ஆரிய இனம் என்று பெருமை பேசி யூதவேட்டை ஆடினார். ஆனால், உண்மையில், பரம்பரையாகக் கலப்பில்லாமல் தனி இனமாக எந்த இனமும் வாழவில்லை.

இந்தியாவும், இலங்கையும் பூகோள அமைப்பில் ஓர் ஒற்றுமை பெற்று விளங்குவது போலப் பண்பாட்டிலும் ஓர் ஒற்றுமை பெற்று விளங்குகின்றன. இந்தப் பூகோள ஒற்றுமைக்கு இணங்க, மக்களும், பெரிதும் வேற்றுமை இல்லாத ஓரினமாக வரலாற்று நெருக்கடியில் வாழ்ந்தோங்கிவந்துள்ளார்கள். பலபல கூட்டங்கள் ஒன்று சேர்ந்து உருப்பெற்ற இனமே இன்று நாம் காண்பது.

ஆஸ்திரேலியாவிலும் கிழக்குத் தீவுகளிலும் வாழ்கிற மக்களினமும், தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஒரு காலத்தில் வாழ்ந்திருந்திருத்தல் வேண்டும். வெட்டர், இருளர், மலை வாழ் சாதியார் முதலானோர் இந்த இனத்தைச் சேர்ந்தவர் ஆகலாம். திராவிடக்கூட்டத்தார் பின்னர்த் தோன்றியவர். இவர்கள் தென்னாட்டிலேயே தோன்றியவர்கள் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், வெளியிலிருந்து வந்தவர்கள் என்று பலர் முடிவுசெய்கின்றனர். திராவிட இனம் என்பதும் இரத்தவகையில் வேறுபட்ட சாதி எனக் கருதுதல் ஆகாது. திராவிடர்கள் பேசுகிற மொழி திராவிடமொழி என்ற பிரிவைச் சேர்ந்தது என்பது ஒன்றே நாம் கூறக்கூடும். மொழி வழியே ஒரு பண்பாட்டு ஒற்றுமை விளங்குமன்றோ? 'பிராஹுவி' என்ற திராவிட மொழியை இந்தியாவின் வடமேற்கி-

லுள்ள **பெலுச்சிஸ்தானத்தில்** உள்ளவர் பேசுகின்றனர். ஆகவே, இந்த மொழிக் கூட்டத்தினர் வடமேற்கு வழியாக இந்தியாவில் வந்து, படிப்படியாகத் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவினர் என்று கூறவேண்டும். இந்தக் கூட்டம் நடுத்தரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளில் வாழ்ந்து, பின் **சுமேரியா** வழியாக இந்தியாவினை அடைந்தது என்று சிலர் கருதுகின்றனர்.

சிந்து நதிக்கரையில் செழித்தோங்கியது ஒரு சிறந்த நாகரிகம். **மொஹஞ்சதாரோ, ஹரப்பா** என்னும் இடங்களில் தோண்டிப் பார்த்தபோது பெரிய இரண்டடுக்கு மாடங்கள், கோட்டைச் சுவர்கள், நீர் விளையாட்டுக்கேற்ற பெரிய குளம், ஒழுங்கான அகன்ற தெருக்கள், நகைகள், அரசர்கள் செல்வச் சிறப்போடும் புதைக்கப்பெற்ற இடங்கள், தரைக்குள் ஓடும் சாக்கடைகள் என்ற இவைகளெல்லாம் வெளியாயின. இலிங்க வழிபாடு, சிவ வழிபாடு, தாய் வழிபாடு, மாட்டிற்கு ஒரு சிறந்த நிலை—இவையெல்லாம் அந்த மக்களை உருப்படுத்தியிருக்கக் காண்கின்றோம். சுமேரிய நாகரிகமும் இந்த நாகரிகமும் ஒரு காலத்தன. இவை ஐயாயிரம் ஆண்டுகட்கு முந்தியவை. இந்தச் சிந்துநதி நாகரிகம், திராவிட நாகரிகம் என்பது பலருடைய கொள்கை. அங்குப் புதையுண்டவர்களை ஆராய்ந்தால், பல இனங்களும் அங்கே ஒன்றாய் வாழ்ந்தது தெரிகிறது. கோட்டைகளைக் கட்டி நகரங்களில் வாழ்ந்த மக்களைப்பற்றி வேதம் குறிக்கிறது. இக்குறிப்பு இந்தத் திராவிட நாகரித்தைப் பற்றியது என்று பலர் கருதுகின்றனர். தெலுங்கு, கன்-

ணடம், மலையாளம், தமிழ், துளு, குடகு என்பவை தென்னிந்தியர் பேசுகிற மொழிகள். இவையே திராவிட மொழிகள். தமிழ் என்ற சொல்லின் திரிபுதான் '**திராவிடம்**' என்ற சொல் எனப் பலர் கருதுகின்றனர்.

வடக்கே இருந்தவர்கள் தெற்கே எப்படி வந்தார்கள்? இயல்பாக நாடு முழுவதும் அவர்கள் பரவி இருக்கலாம். 3000—4000 ஆண்டு-களுக்குமுன் மற்றொரு கூட்டம் இந்தியாவுக்குள் நுழைந்தது: இதுவே ஆரியக் கூட்டம். இதற்கு 'ஆரிய மொழி பேசியவர்கள்' என்பதே பொருள். இந்தக் கூட்டத்தினரும், வடமேற்கு வழியாகவே இந்தியாவுக்குள் வந்தனர்; இயற்கை அழகுகளிலும் இயற்கை ஆற்றல்களிலும் ஈடுபட்டு, அவற்றை வணங்கி, மாடுகளை மேய்த்து, இடத்திலிருந்து இடம் பெயர்ந்து, பின்பு நிலையாகப் பயிரிட்டு, ஊரூராய் வாழத்தொடங்கினர். இவர்களுக்கு முன் வந்த கூட்டத்தார், தமது நாரிகத்தின் கேட்டால் ஆற்றல் அற்றவராய், நாகரிக ஆரவாரத்தில் மயங்கி இளைத்தனர் போலும்! இயற்கை வாழ்வில் திளைக்கும் புத்துயிர் பெற்ற புதுக்கூட்டம், பழைய கூட்டத்தினை வென்று துரத்தியது. பின் வாங்கி-யவர் தென்கடல் வரையில் பரவினர் போலும்!

ஆனால், வந்த புதுக்கூட்டம் முன்னிருந்தவர்-களை வேரோடு களைந்தெறிந்திருக்க முடியாது; பழங்கூட்டத்தாரோடு ஒருங்கு சேர்ந்து, மணந்து, நாளடைவில் ஒன்றாகிப்போயிற்று என்னலாம். பழைய கூட்டம் நாடெங்கும் பரவியிருந்த நிலைமை, இன்றைய மக்களைக் கண்டாலும் நமக்கு நன்கு

விளங்குகிறது. வடமேற்கு மூலையை விட்டால், ஆரியதிராவிடர், மங்கோலியதிராவிடர், சிதியோ திராவிடர், திராவிடர் என்று காணும் வகையில் மக்கள் காட்சி அளிப்பதால், திராவிடக் கூட்டமே இந்திய நாட்டின் அடிப்படை என்னலாம். பிற மக்கள் இந்த அடிப்படை இனத்தோடு சேர்ந்து புத்துயிரளித்து ஓர் ஒற்றுமைப் பண்பாட்டினை வளர்த்ததே இந்திய வரலாறு எனலாம்.

ஆரியர் என்பதனை இன்று ஒரு கூட்டத்தின் பெயராக மேனுட்டு வரலாற்று நூல்கள் சில கூறினுலும், அச்சொல் பண்பாட்டின் உயர்நிலையையே இந்திய நாட்டில் குறித்துவரக் காண்கின்ருேம். **புத்தர் பெருமான்**, 'ஆரியபுத்திரர்' எனப் போற்றப் பெறுகிருர். இராமரை, 'ஆரியன்' எனக் கம்பர் புகழ்கிருர். ஆரியக் கூட்டத்தார் முதலில் போரில் வென்ருலும், பின்னர்த் திராவிடக் கூட்டத்தாரோடு ஒன்றுபட்டுப் போயினர் எனலாம். ஆனல், அவர்கள் வேற்று மொழியை எளிதில் கற்க முடியாமையாலோ, மனம் இல்லாமையாலோ நின்றதால் அவர்கள் மொழியே வடநாட்டில் அடிப்படை மொழியாயிற்று. ஆனல், திராவிட மொழி அதனை மாற்றியே இருக்கும். நாவினை மடித்து ஒலிக்கும் ட, ஷ, ள போன்ற ஒலிகள் பழைய ஆரிய மொழியிலில்லை; இந்திய ஆரிய மொழியில் புகுந்தன. "அவன் வந்தான் உண்டான் போனுன்," என வினைமுற்றுக்களை அடுக்கிக்கொண்டு போவதே ஆரிய மொழியின் பழைய அமைப்பு. "அவன் வந்து உண்டுபோனுன்," என வினையெச்சங்களை அடுக்கிக்கொண்டு போவது திராவிட மொழி அமைப்பு.

இந்தத் திராவிட மொழியமைப்பும் ஆரிய மொழிகளில் புகுந்தது. ஆதலின், திராவிடர், ஆரியர் எனப் பிரித்தாராய்வது அருமை.

மங்கோலியர்கள், யவனர்கள், ஹூணர்கள் என்ற எத்தனையோ இனமக்கள் இந்திய நாட்டிற்குள் வந்தார்கள்; பல மதத்தினரும் வந்தனர். அவ்வனைவரது ஒற்றுமைப் பண்பாட்டின் வளர்ச்சியே இந்திய வரலாறு. பலபல மொழிகள், பலபல நிலைகளில் இருந்து, இந்தப் பண்பாட்டு ஒற்றுமையைப் பல வகையில் வளர்த்துவந்தன. நாளடைவில் ஆரியர் பேசிய வடமொழி, இந்தியநாட்டு—ஏன்?—ஆசியநாட்டுப் பொதுமொழியாயிற்று. அதன் பயனாக, வடமொழிச் சொற்கள் எல்லா மொழிகளிலும் நுழைவன ஆயின. அடிப்படை ஒற்றுமையின் வளர்ச்சியோடு, மேல் ஆரவார ஒற்றுமையும் வளர்ந்தது. யாகத்தில் நம்பிக்கை முதலியன போன்ற கொள்கைகள் பரவினாலும், இவையெல்லாம் இரத்தத்தில் ஊறாமல் மறைந்தன. பண்பாட்டு ஒற்றுமை மட்டும் மறையவில்லை.

பலபல மொழிகள் பேசுவோர், பலபல நாட்டவராய் இந்தியாவில் பிரிந்து நின்றனர். தமிழ் மொழி பேசுவோர் வாழும் இடமே **தமிழகம்—தமிழ் நாடு.** இந்தத் தமிழ் மொழி, பிற திராவிட மொழிகள்போல வடமொழி ஒலிகளை எல்லாம் கடன் வாங்காது, தன் பழமை தோன்ற இன்றும் நின்று நிலவுகிறது. இதற்கும் தெற்கே இருந்த சிங்களமொழியும் வடமொழிக்கு இனமாகிவிடத் தமிழ் மட்டும் தன் தனிப் பெருமை குறையாமல் இன்றும் விளங்குகிறது. திராவிட அடிப்படையை

அறிவதற்கு, இந்த மொழியும் தமிழர் வரலாறும் ஒரு வகையாக உதவும். பொதுவாக அந்த அடிப்படையை அறிய முடியுமேயன்றிச் சிறப்பு வகையாக, "இதுதான் அந்த அடிப்படை," என்று எடுத்துக்காட்ட முடியாது.

மொழியால் மட்டும் தனித்து விளங்கியவர் அல்லர் தமிழர். **அசோகன்** காலத்தில், இந்தியநாடு ஒருநாடாய் விளங்கியது. ஆனாலும், அன்றும், தமிழர், பிறர்க்கு அடங்காது தனியே வாழ்ந்தனர். **சமுத்திரகுப்தன்,** தமிழ் நாட்டு வடவெல்லைவரை வந்தானேயன்றித் தமிழ் நாட்டிற்குள் புகுந்து அதை வெல்லவில்லை. மகமதியர்களும் வெள்ளையர்களும் வரும் வரையில், தன்னரசு நாடாகவே தமிழ்நாடு விளங்கியது. இதனாலும் திராவிடத் தனிப்பெருமை தமிழக வரலாற்றில் கொழுந்துவிட்டெரிகிறது என்னலாம்.

இலங்கையில் '**தமிழர், சிங்களவர்**' என இரு வேறு பிரிவினர் இருந்தாலும், மொழியாலன்றி, இனத்தாலோ பண்பாட்டாலோ அவர்கள் வேறுபட்டவர் அல்லர். தமிழர் பலர், சிங்களவராய் மாறியிருப்பர். இலங்கையின் முதல் அரசனை **விஜயனும்** அவன் கூட்டத்தாரும், பாண்டிநாட்டுப் பெண்களை மணந்ததாக அன்றோ கதை கூறுகிறது? ஆதலின், இலங்கை ஒருமைப்பாட்டை விளக்கவும், தமிழர் வரலாறு துணை செய்யும்.

வரலாறு என்பது, அரசர்கள் போராட்டம் மட்டும் அன்று. மக்கள் வரலாறுதான் இங்கு உயிர்நிலை. அந்த வரலாறு, பண்பாட்டு வரலாறாக ஓங்கி, ஒற்றுமையையே விளக்கிவரும். அந்த வகை-

யில் தமிழர் வரலாற்றினை நாம் அறியவேண்டும். மகமதியர் வருகையால் தமிழரது தனிப்பெருமை மறையும் வரையில் தமிழர் வாழ்ந்த வாழ்வினைப் பார்ப்போம் :

---

## 2. பல நாட்டுத் தொடர்பு

பல மக்கட்கூட்டங்கள் இந்தியாவுக்குள் நுழைந்தன என்றோம். ஆரியக்கூட்டம், பழைய கூட்டத்தோடு சேர்ந்து, வடநாட்டில் ஒன்றானபின், தென்னாட்டில் வடநாட்டினர் வரத்தொடங்கினர். **தக்ஷிணபதம்** என்று தென்னிந்தியாவை அந்நாளைய வடநாட்டு மக்களும் வழங்கினார்கள். **பாணினி** ஸம்ஸ்கிருத இலக்கணம் செய்தவர். அவர் எழுதிய நூலுக்கு **வரருசி, பதஞ்சலி** போன்று ஒருவர்பின் ஒருவராக, விரிந்துகொண்டே போகும் உரைகளைப் பலர் இயற்றினர். காலம் ஓடுவதற்கேற்பத் தென்னாட்டுப் பெயர்களும் அங்கே அவர்கள் எழுதியவற்றில் மிகுந்துவரக் காண்கிறோம் ; **காஞ்சி, சோழர், பாண்டியர்** என்ற பெயர்களுக்கும், அவர்கள் இலக்கணம் கூறத் தலைப்படுகின்றார்கள். வால்மீகி இராமாயணம், பாண்டிய மன்னனது கபாடபுரத்தைப் புகழ்கிறது. பல முனிவர்கள் தங்கள் ஆச்சிரமங்களைத் தென்னாட்டில் அமைத்து வாழ்ந்தமையும் அறிகின்றோம். சந்திரகுப்த மௌரியன், அரசு துறந்து, மைசூரிலுள்ள **சிரவணபெல்கோலாவில்**, சமணத் துறவியாய் வாழ்ந்தான் என்றொரு கதையுண்டு. அசோகன் கல்வெட்டுக்கள், சேர சோழ பாண்டியரையும், சத்திய

புத்திரர் என்ற தமிழ்நாட்டரசர்களையும் அசோகனுக்கு நண்பரெனக் கூறுகின்றன. அறிவொளி இவ்வாறு அறிவாராய்ச்சியின் பயனுகப் பரவத் தொடங்குகிறது. தென்னுட்டினரும் வடநாடு சென்றனர். **வாரணுசி** என்ற காசியினைப் பற்றிக் **கலித்தொகை** பாடுகிறது. காஞ்சியும் காசியும் இவ்வாறு பிணைப்புறுகின்றன. வடநாட்டில் குழப்பம் மிகுந்த காலத்தில், வடமொழிக் கலைகளும் தென்னுட்டில் வளர்ந்தமையை **மணிமேகலை** பாடுகின்றது.

அசோகன் மகன் **மகிந்தன்** இலங்கைக்கு வந்தபோது, தமிழ் நாட்டு வழியே வந்தான் போலும்! மகிந்தன் கட்டிய **விகாரை** தமிழ் நாட்டில் இருந்ததாகச் சீனுவிலிருந்து வந்து இந்தியாவைப்பார்த்துச் சென்ற **ஹியூன்சாங்** கூறுகிருர். பாடலிபுத்திரத்தைப் பற்றியும், அதனைக் கரையில் கொண்டு விளங்கும் சோணை ஆற்றினைப் பற்றியும், மௌரியருக்குமுன் ஆண்ட நந்தர்களது செல்வத்தைப் பற்றியும் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. மோரியர் படையெடுப்பினைப் பற்றியும், அந்தப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

ஈழத்தோடும் தமிழ் நாடு தொடர்புகொண்டு விளங்கியது. கீழைத் தீவுகளோடு தமிழர் வாணிகஞ் செய்தனர். கீழைக்கடலில் செல்லும் கப்பல்களைக் காக்கும் தெய்வமே **மணிமேகலா தெய்வம்.** சீனுவுக்கும், கிறிஸ்து பிறப்பதற்குமுன், பாண்டியன் தூதரை அனுப்பியதனைச் சீனவரலாறு கூறுகின்றது. சீனு வரையிலும் சென்ற தமிழன், மேலைநாட்டிலும் சென்று உலாவினுன். 'அரிசி' என்ற

சொல் கிரேக்க மொழியில் புகுந்துள்ளது. 'இஞ்சி' என்பதும் அப்படியே. தோகை, மயிலின் பெயராக **ஹீப்ரு**வில் நுழைந்துள்ளது. 'முகைர்' என்ற இடத்தில் தமிழ் நாட்டுத் தேக்குத்துண்டு காணப்படுகின்றது. **அகஸ்தஸ்** காலத்தில் அந்த உரோமப் பேரரசரிடம் பாண்டிய தூதுவர் சென்றமையும் (கி. மு. 20) அறிகிறோம். அகஸ்தஸின் கோயில் **முசிறி**யில் இருந்ததாம். தமிழ் நாட்டிலிருந்து முத்தும் பட்டும் உரோமாபுரிக்குச் சென்றன. உரோமாபுரி மகளிர் இவற்றை மிகமிக விரும்பி வரவேற்றுத் தம்மை இவற்றால் ஒப்பனை செய்து-கொண்டனர். பழைய உயர்ந்த எளிய வாழ்வு இந்த ஆரவாரத்தில் உரோம நகரில் பாழாகியதே என அந்த நகரப் பெரியார் ஒருவர் புலப்புகின்றார். அந்த உரோமர்களை 'யவனர்கள்' என்று சங்க-நூல்கள் கூறுகின்றன. உரோம நாணயங்கள் தமிழ் நாடு முழுவதும் காணப்படுகின்றன. யவனர் மிளகு கொண்டு சென்றனர்; பொன்னும் மதுவும் கொண்டு வந்தனர். அவர்கள் வாழ்ந்த குடியிருப்-புக்களும் தமிழ் நாட்டில் இருந்தன. புதுச்சேரியின் அருகே **அரிகாமேடு** என்ற இடத்தைத் தோண்டிப் பார்த்ததில், அவ்விடம் அத்தகையதொரு யவனக் குடியிருப்பு என்பது தெரிந்தது. யவனரின் அழகிய புலிச்சங்கிலிகள், பாவை விளக்-குக்கள் இவையெலாம் தமிழ் நாட்டிற்கு வந்தன. **ஆர்க்கிமிடீஸ்** என்பவர் **சைரக்யூசில்** உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பல வகை எந்திரங்-களைக் கண்டுபிடித்தார். அவையெல்லாம் 'யவனப்பொறிகள்' என்ற பெயரோடு தமிழ் நாட்டுக்

கோட்டைகளில் இடம் பெற்று விளங்கின. சிலப்பதிகாரத்தில் வரும் மதுரை வருணனை இதனை நினைவூட்டுகின்றது.

முசிறி, தொண்டி, கருவூர், கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், எயிற்பட்டினம் முதலிய துறைமுகங்கள் சீரும் சிறப்பும் பெற்று இருந்தன என்று யவனர்கள் நூலும், சங்கப் பாக்களும் கூறக் கேட்கிறோம். சரக்குகளுக்கெல்லாம், தமிழர், தமது முத்திரையிட்டுச் சுங்கம் வாங்கினர். அங்கே, கலங்கரை விளக்கங்கள் இருந்தன. பொதுவாக, வணிகர், சிறப்பாகவே நடந்துகொண்டனர். "கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது" வாணிகஞ்செய்துவந்தனர் எனப் புலவர் ஒருவர் பாடுகிறார். கொள்ளை இலாபமும் கள்ளச் சந்தையும் அன்று இல்லையாம்.

இந்த வணிக மக்களால் இந்திய நாட்டிற்கே ஒரு நன்மை விளைந்தது என்பர் சிலர். இந்தியாவிலும் இலங்கையிலும் வழங்குகிற பல வகை எழுத்துக்களும் அசோகர் கல்வெட்டு எழுத்துக்களிலிருந்து வளர்ந்தவையே என்பர் அவர். இவை **போனிஷியர்கள்** கையாண்ட எழுத்துக்களோடு தொடர்பு கொண்டவை. போனிஷியர்களோடு கடல் வழியே தொடர்பு கொண்டவர்கள் தமிழர்களே எனலாம். ஆதலின், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் எழுத்தினை உதவியவர்கள் தமிழவணிகர்களே என்பது சிலர் கொள்கை. சிந்து நதி நாகரிக எழுத்திலிருந்து அசோக எழுத்து வளர்ந்திருக்கலாம்.

இவ்வாறு, பல நாடுகளோடும் தமிழர் உறவாடிவந்தனர். நாகரிகம் இப்படித் திரைகடலோடியும்

வளர்ந்து வந்தது. வணிகப் பெருமக்கள் தமிழ் நாட்டுப் பண்பாட்டின் தூதுவர்களாகச் சென்றூர்கள்; பிற நாட்டு மொழிகளை அறிந்திருந்தார்கள்; தங்கள் மதக் கொள்கைகளை வேற்று நாடுகளில் பொதுக் கொள்கையாகப் பரப்பினூர்கள்; அறம் வளர்த்த பெருமக்களாகவும் விளங்கினூர்கள்; கழகங்களாய் அமைந்து பணி செய்தார்கள். ஆனல், சிலபோது அவர்களது ஆசை அரசியலிலும் அவர்களை ஈடுபடச்செய்து, வலியிழந்த அரசுகளைக் கைப்பற்றவும் தூண்டியது. இங்கே நமக்கு ஆங்கிலேயரது **கிழக்கிந்தியக் கம்பெனியின்** நினைவு வருகிறது. கிழக்கிந்தியத் தீவுகளில் சில இந்திய வீரர்கள், பிரம க்ஷத்திரியர்கள் எனப் பெயர் பூண்டு, தங்கள் அரசியலை நிலைநாட்டினூர்கள். ஆனல், இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டு வணிக மக்களே அரசர்களான வரலாற்றைக் காண்கின்றோம். இத்தகைய தலையீடுகள், தமிழரின் தேசிய முயற்சிகளல்ல; தமிழ் அரசர்களின் முயற்சிகளும் அல்ல; தனியாட்களின் அரசியல் சொக்கட்டான் விளையாட்டாகும். இருந்தாலும், நாளடைவில், தமிழரசர்களைப் பிற நாட்டில் தலையிடுமாறு இவை வழி காட்டிவிட்டன. "வாணிகத்தின் பின்னே வாளும் கொடியும் செல்லும்," என்ற கதை இவ்வாறு இங்கும் உண்மையாயிற்று.

குதிரைப்படை அரசருக்குரியது ஒன்று; குதிரையோ, இந்தியாவிலும் இலங்கையிலும்இயற்கையாகக் கிடைக்கும் உள் நாட்டுப் பொருள் அன்று; அரேபியா முதலிய வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரும் பொருள். ஆதலின், குதிரை வியாபாரிகள்

தமிழ் நாட்டில் கிளம்பினார்கள். இந்த வியாபாரிகள், போரில் ஈடுபடத் தொடங்கினார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு 177 ஆண்டுகளுக்கு முன் குதிரை வியாபாரியின் மைந்தரான தமிழர் இருவர்—**சேனன்** என்றும் **குடிகன்** என்றும் பெயர் உடையவர்—இவ்வாறு சிங்கள அரசனை ஓட்டிவிட்டு அரசராகி, 15 ஆண்டுகள் ஆண்டனராம். இத்தகைய வணிக ஆட்சி நிலைத்திருப்பது அருமை. இதனால், அரசியல் குழப்பங்கள் அடிக்கடி தோன்றினவேயன்றி, நிலையான அரசு தோன்ற இடமில்லாமற்போய்விட்டது.

இந்த வணிக அரசருள் தலை சிறந்தவன் **ஏலேலசிங்கன்.** '**ஏலாரா**' என்று இவன் பெயரை, இலங்கையில் பௌத்த துறவிகள் எழுதிக்கொண்டு வந்த இலங்கை வரலாற்று நூலாம் **மகாவமிசம்** கூறும். கி. மு. 145ல் சோழநாட்டிலிருந்து பெரும்படையுடன் திரிகோணமலையருகே இறங்கி, **அனுராதபுரத்தைக்** கைப்பற்றி இவன் அரசனானான். இவன் அறவழி ஆளும் அரசன் என்று பெயர் பெற்றான். முறைவேண்டுவார், வெளியே இருக்கும் கயிற்றினை இழுத்ததும் உள்ளே இவனிருக்குமிடத்தில் கேட்கும்படி இவன் அரண்மனையின் முன் 'ஆராய்ச்சி மணி' ஒன்று கட்டியிருந்ததாம். **மனுநீதிச் சோழன்** போல இவன் அரசாண்டான் என்பர். இருந்தாலும், இவன்—வெளிநாட்டான்—பௌத்தனல்லன் என்று இலங்கையர் மனம் வருந்தியது. குட்டிக் கலகங்கள் கிளம்பின. ஆனால், 43 ஆண்டுகள் எவரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. **துத்த-**

**காமினி** என்ற இலங்கை இளவரசன், தன் தந்தையின் மொழியையும் கேளாது, போர்முழக்கம் செய்தான். அது போது, ஏலேலசிங்கன் கிழவனுயிருந்தான். இருந்தும், அவன் அறவுள்ளம், வீணே போரில் பலர் மடிவதனைப் பொறுக்கவில்லை. "அரசு வேண்டிய இருவர் மட்டும் போரிடுவது, அதில் வென்றோர் அரசராவது," என்று முடிவு செய்து, போர் புரிந்ததில், கிழவன் கொலையுண்டான். **காமினி** அரசனுகி அனுராதபுரத்தினை அழகுறச் செய்தான். இந்த ஏலேலன் பெயரினைத் தமிழ்த் தொழிலாளிகளும் படகோட்டிகளும் இன்றும் மறக்கவில்லை ; "ஏலேலோ ஏலேரா" என்றும், "ஏலேலோ ஐலசா" என்றும் இன்றும் பாடிக்கொண்டு, பெரிய பாரங்களை வலித்து இழுக்கக் காண்கின்றோம். இவனுடைய அறநெறியைக் கண்டுபோலும், இவனைத் **திருவள்ளுவர்** சீடன் என்று கூறும் ஒரு கதை வழங்குகிறது !

வணிகர்களே அன்றித் தமிழ் மறவர்களும் இலங்கையின்மீது படை எடுத்துவரத் தொடங்கினார்கள். பாண்டிநாட்டு மறவர் எழுவர், கி.மு. 44ல் இலங்கைக்கு வந்து, அந்நாட்டை வென்றபின், இருவர் ஊர் திரும்பினர். ஐவர் அங்கேயே தங்கி, ஒருவர் பின் ஒருவராக, ஒருவரை ஒருவர் கொன்று, 15 ஆண்டுகள் அரசாண்டனராம். பின், **வலகம்பாகு** என்ற இலங்கை வீரன் அவர்களை வென்றான். தமிழ் நாட்டு வீரர்கள் கிழக்குத் தீவில் அரசியலை நிலைநாட்டியது போல, இலங்கையில் நிலைநாட்ட முடியவில்லை. இவர்கள், சில போது கப்பற்கொள்ளைக்காரர்களாகவும் மாறிக் கடலில்

வரும் கப்பல்களை அலைக்கழிப்பது உண்டு. **கடம்பர்** என்ற கூட்டத்தார் இவ்வாறு மேற்குக் கடலில் உள்ள தீவுகளைப் பிடித்துக்கொண்டு கப்பல்களுக்குப் பேரிடையூறாய் இருந்ததனைச் சங்க நூல்களில் கேட்கிறோம். **சேரன் செங்குட்டுவன்** இத்தகைய கடம்பர்களை வென்று அடக்கிக் கப்பல் வியாபாரத்தினை நிலைநிறுத்தியதனையும் **பதிற்றுப்பத்து** என்ற நூலிலிருந்து அறிகிறோம்.

இவ்வாறு, பழந்தமிழர், திரைகடலோடிப் பிறநாடுகளோடு தொடர்பு கொண்டதால், தமிழர் பெருமையும் வளர்ந்தது ; பண்பாடும் பரவியது. ஆனால், சில போது, இலங்கையைப் பொறுத்த வரையில் பகைமையே தழைத்தது.

---

## 3. பழங்கதை

தமிழர்கள் தங்கள் வரலாற்றைக் கலை வரலாறாகவே பல நூற்றாண்டுகளாகக் கருதி வந்துள்ளார்கள் ; தங்கள் வரலாற்றினைத் தமிழை வளர்த்த தமிழ்ச் சங்கங்களின் வரலாறாகக் கதை எழுதிவைத்துள்ளனர். **இறையனார் அகப்பொருள்** உரை நூல் ஒன்று, **நக்கீரர்** எழுதியதாக வழங்குகிறது. அதிலே இந்தக் கதையைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரும் இந்தக் கதையைக் கூறுகின்றார் : மூன்று சங்கங்கள் இருந்தனவாம். முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பன அவற்றுக்குப் பெயர். முதற்சங்கத்தினை நிலைநிறுத்தினவன் **காய்சின வழுதி** என்ற பாண்டியன். இந்தச்

சங்கம் தென்கடலில் இருந்த தென்மதுரையில் கூடி-யது; 4400 ஆண்டுகள் நடந்தது. 89 பாண்டியர் ஒருவர்பின் ஒருவராய் இதனை ஆதரித்துவந்தனர். அவர்களுள், ஏழு பாண்டியர்கள், புலவர்களாய் விளங்கினார்கள். 4449 புலவர் கவியரங்கேறினர். முத்தமிழ் நூல்கள் தோன்றின. ஆனால், **கடுங்கோன்** என்ற பாண்டியன் காலத்தில், தென்-மதுரையும் இந்த நூல்களும் கடலில் மூழ்கின. இதற்குப் பின்னர், **வெண்டேர்ச்செழியன்,** கபாடபுரத்தினைத் தலை நகரமாகக்கொண்டு, இடைச்சங்கத்தினை நிலைநாட்டினான். இது 3700 ஆண்டுகள்வரை, 59 பாண்டிய அரசர் தலைமுறை-யின் ஆதரவில் நடந்தது. இதில் 449 புலவர் பாடி-னர். **தொல்காப்பியம்** இந்த இடைச்சங்கத்து நூல். பின், கபாடபுரமும் கடல்கொண்டு அழிந்த பிறகு, மூன்றும் சங்கத்தை **முடத்திருமாறன்** என்ற பாண்டியன் மதுரையில் நிலைநாட்டினான். 1800 ஆண்டு நிலைத்திருந்தது இந்தச் சங்கம். 49 புலவர் பாடினர். இவர்கள் பெயர்களைத் **திருவள்ளுவமாலையில்** காணலாம். ஈதே இந்தக் கதை.

இந்தியாவின் தென்பகுதியில் சில நிலப்பகுதி-யைக் கடல் கொண்டது என்று தமிழர் நிலையாக நம்பிவந்துள்ளனர். வால்மீகி, பாண்டியரது தலை-நகராகப் புனைந்துரைப்பது, இடைச்சங்க காலத்துக் கபாடபுரமே எனப் பலர் நம்புகின்றனர். தொல்-காப்பியம் இன்று நமக்குக் கிடைக்கிற நூல்களில் மிகப் பழமையானது. கடைச்சங்கப் பாக்களும் 400க்கு மேலான புலவர்கள் பாடியனவாக நமக்குக்

கிடைக்கின்றன. கடைச்சங்கம், பல்லவர்கள் தலையெடுத்த கி. பி மூன்றும் நூற்றுண்டுக்கும் முந்தியே, மறைந்திருத்தல் வேண்டும். "இலங்கை இராசாவளி" என்னும் நூல், பத்தினி வழிபாட்டினை இலங்கையில் நிலைநாட்டியவன் **கயவாகுவே** என்று கூறுகிறது. பத்தினி என்பவள் **கண்ணகியே**. கண்ணகிக்குச் **சேரன் செங்குட்டுவன்** கோயில்கட்டி வழிபட்டபோது, கயவாகுவும் வந்திருந்தான் எனச் சிலப்பதிகாரம் பாடுகிறது. ஆகையால், செங்குட்டுவன் கி. பி. இரண்டாம் நூற்றுண்டினன் ஆவன். கி. மு. முதலாம் நூற்றுண்டிலும், கி பி. முதல் மூன்று நூற்றுண்டுகளிலுமே யவனர் என்ற உரோமரது வாணிகம் கடல் வழியாக நடைபெற்றிருக்கக்கூடும். அந்த நாளைய உரோமர்கள் எழுதிவைத்திருக்கும் நூல்களில் கண்ட செய்திகளும் சங்கப்பாக்களில் கண்ட குறிப்புக்களும் ஒத்திருக்கக் காண்கிறோம். ஆதலின், அதுவே கடைச்சங்க காலம் என்று கூறலாம்.

சங்கப்பாக்களும் தொல்காப்பியமும் சிறந்ததொரு குறிக்கோளாக வாழ்க்கையைப் புனைந்துரைக்கின்றன; பழைய தமிழரது வாழ்வினையே குறிக்கோளாகக் கூறுகின்றன. தமிழர், நாட்டினை ஐந்து பிரிவாகப் பிரித்து வழங்கினர். மலை நாடே **குறிஞ்சி**. காடும், மேய்காலுமே **முல்லை நிலம்**. ஊரும், வயலுமே **மருத நிலம்**. கடலும், கழியுமே **நெய்தல்**. மலையும் காடும், மழையில்லாது வறண்டால், **பாலை நிலமாகும்**. இந்த ஐந்து நிலத்து மக்களும், ஆணும் பெண்ணும், அந்தந்த நிலத்துக்குத் தக்க தொழிலும், உணவும், விளை-

யாட்டும், பண்ணும், பெயரும், கடவுளும், பறவைகளும், விலங்குகளும் கொண்டு விளங்கினர்கள். **முருகன்**, குறிஞ்சி நிலக் கடவுள். **திருமால்**, முல்லை நிலக் கடவுள். **வருணன்**, நெய்தல் நிலக் கடவுள். **இந்திரன்**, மருதநிலக்கடவுள். "**காளி**, பாலை நிலக் கடவுள்" எனப் பின்னே கொண்டார்கள். காதலர் இருவருள் ஒருவரே காதல் கொள்வது, இருவரும் காதலின்றி மணப்பது-எனப் பலவகையான மணங்கள் இருந்தாலும், அன்பினாலேயே மணம்செய்துகொண்ட காதலர்கள் சிறப்பே பாட்டுக்குரியதாகிறது. அவர் கூடுவது, குறிஞ்சி; பிரிவது பாலை; இரங்கிப் புலம்புவது நெய்தல்; வீட்டிலிருந்து கடமையைச் செய்து மனம் ஒருமித்து வாழ்வது முல்லை; முகங்கோணி ஊடுவது மருதம்; ஈருடலும் ஓருயிருமாக அன்பால் பிணிக்கப் பெற்று உலகுக்குதவுவதே **அகவாழ்வின்** சிறப்பு.

**புறவாழ்வு**, அந்த நாளில் சிறந்துள்ளது போரிலேதான். போரை எவ்வாறு தொடங்குவது? பகைவர் நாட்டு எல்லைப்புறத்தில் உள்ள முனைப்புலத்துப் பசுக்களைப் பகைவருக்குத் தெரியாமல் கொண்டுவந்துவிடுவதே போரின் தொடக்கம். அந்நாளைய வாழ்விற்குப் பசு இன்றியமையாதது. ஆதலின், அதனை முதலில் காக்கவேண்டுமென்றனர். "பசுக்கள், முனிவர்கள், முதியவர், நோயாளிகள், பிள்ளை பெருத பெண்கள் முதலியவர்கள் போரில் சிக்கி அழியாதபடி காத்தலே போர்நெறி" என்று சங்கப்புலவர் ஒருவர் பாடுகின்றார். கொண்டுபோன பசுக்களைத் திரும்பவும் பெறப் பகைவர் முயலுவர். இந்த **மாடுபிடிசண்டையே**, **வெட்சிப்**

போராகும். நிலத்தினைக் கைக்கொள்வதற்காக நிகழும் போர் வஞ்சிப் போராகும். இவற்றிலே வீரம் முற்றி நிகழ்கின்ற போர் **தும்பைப்** போர். தமிழ் நாட்டின் சிறப்பு இயல்பு கோட்டைகளே-யாம். இந்தக் கோட்டைகளில் மதில், அகழ், காவற்காடு, மதிற்பொறிகள் முதலியன இருக்கும். கோட்டைப் போரே **உழிஞைப்** போர். இவ்வாறு பல வகையாலும் போர் செய்யும்போது வீரர்கள் அததற்குத் தகுந்த அடையாளமாக வெட்சிமாலை, வஞ்சி மாலை, தும்பை மாலை, உழிஞை மாலை சூடிப் போர் செய்வார்கள்; வெற்றி பெற்றதும் **வாகை மாலை** சூடிக்கொள்வார்கள். பெண்டிரும் நாட்டினைக் காப்பதில் வீரம் மிகுந்து விளங்கினராம். வஞ்சத்தால் போர் செய்வதனைத் தமிழர் வெறுத்தனர்; படையில்லாதவனோடு போரிடவும் மாட்டார்கள். அரசர்கள், ஊர்களை வீரர்களுக்குத் தந்தார்கள்; '**ஏனாதி**' முதலிய பட்டங்களும் அளித்தார்கள். போரில், தேர், யானை, குதிரை, காலாட்கள் என்ற நால்வகைப் படைகளும் இருந்தன. வில், வேல், வாள்கொண்டு பழந்தமிழர் போர் செய்தனர்; மற்போரும் உண்டு.

போரோடு மட்டும் வாழ்வு முடியவில்லை. பல வகைத் துறைகளிலும் பலரும் உழைத்து வருகையில், வாழ்க்கையில் யாவரே ஆயினும் தத்தங் கடமையை நிறைவேற்றி வெற்றி கண்டவர் எல்லாரும் வாகை சூடியவராகவே கருதப்பெற்றனர். இத்தகைய வாழ்க்கையின் இன்பப் போக்கு அகவாழ்வாய் விளங்கியதனைக் கண்டோம். இந்த இன்பம் புறத்தோற்றமாகக் காட்சியளிப்பதே கலை வாழ்வு.

"புலவர் பாடாதவர் மேலுலகம் போகாதவரே." என்ற நம்பிக்கை இருந்தது. புலவர்கள் பாட, பாணர்களையும் புலவர்களையும் கூத்தர்களையும் பாராட்டி வாழ்பவனே பாடாண் வாழ்க்கையில் சிறந்தவன். கடவுள் வழிபாடும் புலவர் வழிபாட்டோடு ஒருங்கு சேர்ந்து விளங்கியது. இவ்வாறு புகழ் பெற வாழ்வதே பெருவெற்றி, வாழ்க்கையின் பயன்; இல்லையானால், அழிந்து மண்ணாவது திண்ணம். இந்த உண்மையை வற்புறுத்துவதே **காஞ்சித்திணையாகும்.**

சேர சோழ பாண்டியர் என்ற மூன்று வேந்தர் தமிழ் நாட்டினை ஆண்டுவந்தனர்; ஒருவரோடு ஒருவர் போரிட்டே வாழ்ந்தனர். "சத்தியபுத்திரர்" என்ற அரசர் மரபும் தமிழ் நாட்டில் ஆண்டதாக அசோகன் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அதியமான் மரபே அஃதெனச் சிலர் கருதுகின்றனர். குறுநில மன்னர்கள் சிலபோது தலையெடுப்பதும் உண்டு. தமிழ்நாடு பன்னிரண்டு நாடுகளாக ஒரு காலத்துப் பிரிந்திருந்ததாம். தமிழர், தமிழால் ஒன்றாய் விளங்கினாலும், அரசியலில் ஒன்றுபட்டு அந்நாளில் விளங்கவில்லை.

முத்தமிழ் அந்த நாளில் வளர்ந்துவந்தது. **இயல் தமிழ்** என்பது பாட்டு: புலவர்கள் இந்தத் தமிழை வளர்த்துள்ளமையைச் சங்கப்பாக்களில் காண்கின்றோம். சங்கப்பாக்கள் என்பது பல புலவர்கள் பாடிய தனிப்பாடல்களின் தொகுதியே (Anthology) ஆம். சிறு பாடல்களை எட்டுத்தொகுதிகளாகத் திரட்டினார்கள். இவையே '**எட்டுத்தொகை**' எனப்படும். பெரிய பாடல்களுள்

100 அடிகளுக்கு மேற்பட்ட பத்துப்பாடல்களை வேறொரு தொகுதியாகத் திரட்டினர். இதுவே **பத்துப்பாட்டு**. **இசைத்தமிழ்** என்பது சங்கீதப் பாடல். **பரிபாடல்** என்பது சங்கீதப் பாடலே ஆகும். அந்த நாளில் தமிழ் நாட்டின் தலைசிறந்த இசைக்கருவியாய் விளங்கியது **யாழ்** என்பதாகும். இதனைப்பற்றி ஆராய்ந்து இதன் வடிவினைக் காட்டிக்கொடுத்தவர், இலங்கை செய்த தவத்தால் தோன்றிய **விபுலானந்த அடிகளே** ஆவர். ஏழு நரம்பால் அமைந்தது **சீறியாழ்** (சிறு யாழ்). 21 நரம்பால் அமைந்தது **பேரியாழ்**. யாழை மீட்டி இன்பம் ஊட்டியவர்கள் **பாணர்கள்**. தண்ணுமை, குடமுழா முதலிய தாளக்கருவிகளும் பல இருந்தன. அந்த நாளைய திருவிழா, பாணரின்றி நடைபெறாது. மூன்றாவதாகிய **கூத்துத் தமிழ்** பொருநர் அல்லது கூத்தர் வளர்த்ததாகும். **பொருநர்** என்பார் ஒருவர் போல வேடம் பூண்டு, விறல்பட ஆடுபவர். போர்க்களம் பாடுவோர், ஏர்க்களம் பாடுவோர் எனப் பொருநர் இரு வகையினர். கூத்தர், பாட்டுக்கும் தாளத்திற்கும் இசையக் குதித்தாடி, பாடும் பாட்டின் பொருளைச் செய்கையால் விளக்குபவர் ஆவர். பழைய பதினோராடல்கள் பேரும் புகழும் பெற்று விளங்கின. கண்ணன் ஆடிய குடக்கூத்து முதலியன, கதையில் வரும் ஒவ்வொரு நிலையை விளக்குவன ஆகும். தொடர்ச்சியாகக் கதையை நாடகமாக ஆடுவது பின்னரே எழுந்திருந்திருத்தல் வேண்டும்.

ஓவியக்கலையும் வளர்ந்திருந்தது. திருப்பரங்குன்றத்தில் எழுதியிருந்த பல ஓவியங்களை, முருகனை வழிபடச் செல்வோர் காண்பதாகப் பரிபாடல்

பாடுகிறது. கோழியாய்ப்போய்க் கூவி அகலிகை-யைக் கெடுத்த இந்திரன் கதை முதலான புராணக் கதைகளை அவர் அங்கே கண்டனராம்.விலங்குகளின் உருவங்களும் எழுதப்பெற்றிருந்தனவாம். புலி எழுதியிருப்பதைக் கண்டு யானை வெருண்டதாகப் புலவர் பாடுகிறார். கதிரவன் செல்லும் வானவழி-யைப் படுக்கையின் மேற்கட்டியில் எழுதியமைப்-பது வழக்கம்.

யவனர்கள் கொண்டுவந்த புலிமுகச் சங்கிலி-கள், பாவை விளக்குகள், மணி விளக்குகள் முதலி-யன அரண்மனைகளை அழகு செய்தன. பூத்தொடுத்-தல், மை எழுதுதல், காலத்திற்கேற்ற கோலம் கொள்ளுதல் என்பன முதலாகப் பல கலைகளில் வல்லவர்களாய்ப் பெண்கள் வாழ்ந்தார்கள். களவுக் கலையினையும், கள்வர்களைக் கண்டுபிடிக்-கும் தொழிலோர் கற்றிருந்தனர்.

கல்லால் எழுப்பிய கட்டடங்கள் அன்று இருந்ததில்லை. சுடுமண் கொண்டு செங்கல்லால் கட்டிய கோயில்களும், அரண்மனைகளும் சிறப்-புற்று ஓங்கின. சுதை வேலை செய்து பல நிறம் பூசிவைத்த ஓவியத்தினையும் சிற்பத்தினையும், அந்-நாளைய மக்கள் ஒருசேர வளர்த்தார்கள். அவர்-களே காணியாட்சியாளர்கள், நிலமுதலாளிகள், கிழார்கள் எனப் பெயர் பெற்றார்கள். அவர்க-ளின் கீழ்க் கீழ்க்குடிகள் வாழ்ந்தனர்; வினையாளரும், அடிமைகளும் இருந்தார்கள். கிழார் என்பார் ஊரை ஆண்டுவந்தனர்.

ஊர் அவை சிறந்து விளங்கியது. சோழ நாட்டு உறந்தையில் இருந்த அவை, அறம் வழங்குவ-

தில் பெயர் பெற்று விளங்கியது. அரசர், புலவர்க்கும் முனிவர்க்கும் அடங்கி வாழ்ந்துவந்தனர். கல்விக்குப் பெருமதிப்பு இருந்தது. பொன் வாணிகர், கூல (தானியம்) வாணிகர், அறுவை (துணி) வாணிகர், நாணயப் பரிசோதகராகிய **வண்ணக்கர்**, பொற்கொல்லர், எயினி, குறத்தி முதலிய பல தொழிலாளரும், ஆண்களும் பெண்களுமாய்க் கல்வியிற்சிறந்து பாடியுள்ளனர். நெடுங்கணக்கினை (Alphabet)க் கற்பிக்கும் **கணக்காயர்கள்**, இளைஞருக்குக் கற்பிக்கும் **இளம்பாலாசிரியர்கள்**, பாலருக்குக் கற்பிக்கும் **பாலாசிரியர்கள்**, குருகுலம் நடத்திய **குலபதிகள்**, காளையர்களுக்குக் கற்பிக்கும் **ஆசிரியர்கள்** என்று படிப்படியாக அமைந்த ஆசிரியர் அமைப்பினையும் அங்குக் காண்கிறோம். **உலோச்சனார்** போன்ற சமணர்கள். **இளம்போதியார்** போன்ற பௌத்தர்கள், **நக்கீரர்** போன்ற இந்துக்கள்—இவர்கள் அனைவரும் ஒருமித்து அன்பால் பிணைப்புண்டு தமிழினை வளர்த்த வரலாறே சங்க வரலாறு.

---

## 4. சங்க கால அரசர்கள்

சங்க காலத்தைப்பற்றி முன்னரே கண்டோம். அன்று வாழ்ந்த தமிழரசர் பலர். அவர்கள் வரலாற்றை முறைப்படுத்திப் பார்ப்பது அருமையாகி வருகிறது. தலைசிறந்த சில அரசர்களைப்பற்றி மட்டும் அறிந்துகொள்வது இன்பம் தரும். அந்த அரசர் ஒருவரோடு ஒருவர் போரிட்டுவந்தாலும், அவர்தம் குறிக்கோள்கள் சிறந்தனவாகவே

தோன்றுகின்றன. **அறிவுடைநம்பி** என்ற ஒரு பாண்டியன், தன் பெயருக்கேற்ப, அறிவுக்கே முதலிடம் கொடுத்துக் கல்வியைப் புகழ்ந்து பாடுகிறான். **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்ற மற்றொரு பாண்டியன், வஞ்சினம் அல்லது சபதம் ஒன்று செய்கிறான்; "நான் சொன்னபடி செய்யாமற் போவேனானால், என்னுடைய நாட்டைப் புலவர்கள் பாடாது ஒழிக!" என்று வஞ்சினம் கூறுகிறான். அரசர் அறிவிலே ஈடுபட்டதோடு அறத்திலும் ஈடுபட்டிருந்தனர். மற்றொரு **நெடுஞ்செழியன்** தன் செங்கோல் கொடுங்கோலாகிக் கோவலனைக் கொன்றது என்பதை அறிந்ததும், உயிர் விடுகின்றான். நட்பின் பெருமையையும் அரசர் பாராட்டினர். **கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிர் ஆந்தையார்** என்ற புலவருக்கும் இருந்த நட்பு மிகச் சிறந்தது. "தன் நாட்டில் உயிரிற்சிறந்த தன் மக்களோடு போரிடவேண்டாவென்று புலவர் கூறியதும், சோழன் நாட்டை விட்டு வடக்கிருந்தான்; இறந்தும் நண்பர்க்கு இடம் கொடுத்தான்," என்று தமிழர் நம்பினர். **கரிகாற்பெருவளத்தான்** என்ற சோழன் அறம் வழங்குவதைப் பெரிதும் விரும்பினான். "நீ இளைஞன்; எவ்வாறு நீதி செய்யக்கூடும்?" என்று மக்கள் கூறிய போது, முதியோன் போலக் கோலம் பூண்டு அறம் வழங்கினான் அவன் என்று தமிழர் சொல்லி இன்புறுகின்றனர். பசுவின் கன்றைத் தன் மகன் கொன்றதற்காக அந்த மகனை, **மனுநீதிச் சோழன்,** தேரூர்ந்து கொன்றான் என்றும் தமிழன் கதை கூறுகிறான். பாரதப்போரில்

**பாண்டவர், கௌரவர்** என்ற இருவருக்கும் பெருஞ்சோறு கொடுத்து உதவினன் **உதியஞ் சேரல்** என்று உரை எழுதித் தம் பழம்பெருமையைத் தமிழர் பாராட்டிக்கொள்கின்றனர். சேரனது நடுவுநிலைமையின் சிறப்பு அது. வீரத்திலும் சிறந்தவர்கள் தமிழ் அரசர்கள். முதுகுபுண் தற்செயலாக நேர்ந்தாலும், அது புறங்கொடுத்து ஓடுவதற்கு நேராகும் எனக் கருதி, உயிர்விடுகிருன் **பெருஞ்சேரலாதன்** என்ற சேர அரசன்.

தமிழ் நாட்டின் எல்லையில் மோரியர் படை எடுத்தமையைப் பற்றிக் குறித்தோம். தமிழ் நாட்டினரும் வடநாட்டின்மேல் படை எடுத்தனர். இந்தியாவே அவர்கள் அறிந்திருந்த நாடு. இதனை முழுதும் கட்டியாளவேண்டுமென்ற ஆசை இந்திய அரசர் அனைவருக்கும் உண்டு.

பாரதத்தில் தருமர் இராசசூய யாகம் செய்ததனைப் படிக்கின்றோம். பேரரசராக முடி சூட்டிக்கொள்வோர் அதற்கேற்ற சடங்காகச் செய்யும் யாகமே இராசசூயம். இத்தகைய வடமொழிச் சடங்குகளும் யாகங்களும் தமிழ் நாட்டிலும் புகுந்தன. வெளி நாட்டுத் தொடர்பும் இந்தியாவின் ஒருமைப்பாட்டு நம்பிக்கையும் வளர்ந்தபின் வடநாட்டரசர் செய்வது போலத் தமிழ் அரசரும் செய்ய முயல்வது இயல்புதானே? அப்போதன்றோ வடநாட்டாரும் இவர்களைப் போற்றுவர்? **பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** என்ற ஒரு பாண்டியன் பல யாகங்கள் செய்தவனுகப் புகழப்படுகின்றுன். ஆனல், இராசசூயம் செய்தவனுகச் சோழன் ஒருவனே பாராட்டப்பெறு-

கின்றுன். இவன்தான் சோழன் பெருநற்கிள்ளி. சடங்குகளை நாம் நம்பாமற் போனாலும், இவற்றை ஆரிய வெற்றியென்றோ சூழ்ச்சி என்றோ கருதாமல், இந்திய ஒருமைப்பாட்டுணர்ச்சியின் பயனுக எழுந்த பழக்க வழக்க ஒற்றுமை விளக்கம் என்று கொள்வதே சிறந்த முறையாகும்.

இத்தகைய இந்திய அடிப்படை ஒருமைப் பாட்டில்[1] தமிழருக்கும் நம்பிக்கை இருந்தது. இமயம் முதல் குமரி வரை ஒரு மொழி வைத்து உலகாளும் பெருமையைப் புலவர்கள் பாடுகின்ருர்கள். தமிழ் நாட்டு மன்னர்கள் தங்கள் பொறிகளை எல்லைக்கல்லில் பொறிப்பது போல, இமயமலையிலும் பொறித்தார்கள் என்று கூறிக்கொள்வதில் தமிழருக்குப் பெருவிருப்பம் உண்டு. மௌரியர்கள் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய போது இந்தப் படையெடுப்பு நிகழ்ந்திருக்க முடியாது. கி. மு. முதலாம் நூற்ருண்டில், மௌரியர்களது வலி குன்றியது. மூன்ரும் நூற்ருண்டிற்குப் பின்னரே குப்தர்கள் வடக்கே தலையெடுத்தனர். இதற்கு இடைப்பட்ட காலமே சங்ககாலம் என்பதைக் கண்டோம். அப்போதுதான் தமிழரசர்கள் வடநாட்டின்மேல் படையெடுத்துச் சென்றிருக்க முடிந்திருக்கும். ஆந்திரர்கள் இந்தக் காலத்தில் விந்தியமலையின் தெற்கே ஆண்டுவந்தார்கள். வடவிந்தியாவின் மேலைப்பகுதியில் குஷான்கள் ஆண்டுவந்தார்கள். ஆந்திரர்கள் சோர்ந்த போது தமிழர்கள் வடவிந்தியாவின் கீழைப்பகுதியில்

1. Fundamental Unity of India

படையெடுத்துச் சென்றார்கள் போலும்! ஆனால், உறுதியாக ஒன்றும் கூறுவதற்கில்லை.

**கரிகாலன்** சோழர்களுட் சிறந்தவன்; காவிரிக்கு அணை கட்டியவன்; காடு திருத்தி நாடாக்கியவன்: இவ்வாறு இவனைப்பற்றித் தமிழர் இன்றும் கனவுகாண்கின்றனர். இவன் இளஞ்சேட்சென்னியின் மகனாம்; இளமையில் பகைக்கூட்டத்தாரிடமிருந்து தப்பி, அனைவரையும் அடக்கி, அரசனாய் நாட்டை ஒன்றுபடுத்தினானாம்; பெருஞ்சேரலாதனோடு '**வெண்ணி**' என்ற இடத்தில் போரிட்டானாம். முதுகிலே பட்ட புண்ணைக் கண்டதும் சேரன் வடக்கிருந்து உயிர் விட்டானாம். சோழன் வடக்கே நோக்கினானாம். ஆந்திரர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்த காலம் அது; ஆதலின், அவர்கள் தோற்றார்கள் என்பர் சிலர். ஆந்திர நாட்டில் சோழர் குடியினர் வாழத் தலைப்பட்டனர். கரிகாலனைப் பற்றி ஆந்திரரும் பேசிக்கொள்கின்றனர். சோழர் குடியைச் சேர்ந்த அவர்கள் அப்போதப்போது அரசாளவும் தொடங்கியதனை அடிக்கடி வரலாற்றில் கேட்கிறோம்; ஆதலின், கரிகாலனது ஆந்திரப்படையெழுச்சி கற்பனை அன்று என்பர். அவர்களை வென்ற பின் **வச்சிரம், மகதம், அவந்தி** முதலிய நாடுகளை ஆந்திரர்கள் உதவிகொண்டே கரிகாலன் வென்றான்; இமயமலை வரையில் சென்றான். '**சோளா பாஸ்**'[1] என்பது இவன் பெயரால் வழங்கியதோ என்று ஐயப்படுவாரும் உண்டு. இவை எல்லாம் இன்னமும் வரலாற்றுண்மையாக

1. Chola Pass

மலராமல் யூகங்களாம் மொட்டாகவே கிடக்கின்றன.

காரிகாலனுக்குப்பின் **நெடுஞ்சேரலாதன்** என்ற சேரன் **இமயவரம்பன்** என்ற சிறப்புப்பெயர் கொண்டு விளங்கினன். இவனும் வடநாட்டின்மேல் படையெடுத்துச் சென்றானும். கோவலன் காலத்துப் பாண்டியனே **ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** என்பர். இவன் பெயராலேயே ஆரியப்படையை இவன் வென்றமை தெளிவாகிறது. மற்றொரு சேரன் தண்டகாரணியத்தை வென்று தன் வயப்படுத்தியதனையும் அறிகிறோம். இந்த நெடுஞ்செழியனுக்குப் பிற்காலத்தில் இருந்தவன் **சேரன் செங்குட்டுவன்.** கண்ணகிக்குக் கோயில் கட்டியவன் இவனே.

செங்குட்டுவனின் மைத்துனனே **சோழன் கிள்ளி வளவன்.** சேரன் உதவியால் சோழன் அரசனானன். பாண்டியரும் அவனுக்கு அடங்கியே இருந்தனர். வடநாட்டு மன்னர் தமிழரைப் பழித்தது சேரன் காதில் விழுந்ததாம். சேரன், கண்ணகியின் உருவம் அமைக்க இமயத்தில் கல் எடுப்பதற்காக அந்த வடநாட்டார்மேல் படையெடுத்தான்; மேற்குக் கடலோரத்திலுள்ள கருவூரிலிருந்து நீலகிரிக்கு வந்து, அங்கிருந்து புறப்பட்டான். கருநடரும், ஓவியரும், குடகரும் உதவிசெய்தனர், ஆந்திரரும் வழிவிட்டனர் : மாளவ நாட்டு **நூற்றுவர்கன்னர்** என்ற அரசாட்சிக் குழுவினரும் உதவ முன் வந்தனர். **வில்லவன் கோதை** என்ற படைத்தலைவனோடு சேரன் கங்கையைக் கடந்து, **கனகன், விசயன்** முதலான ஆரிய அரசர்களைக்

**குயிலாலுவம்** என்ற இடத்தில் தோற்கடித்தான்; தோற்ற அரசர்கள் தலையில் கண்ணகிக்கு உருவமைக்கும் கல்லை ஏற்றித் தமிழ் நாடு கொண்டுவந்தான்; சோழ பாண்டியர்களின் ஊர்களிலும் ஊர்வலம் வரச்செய்தான். இதனைப் பெருங்கொடுமை என்று அவர்கள் இகழ்ந்தார்கள். சேரன், கல்லில் கண்ணகியின் வடிவத்தைச் செதுக்கச்செய்து, அதற்குக் கோயில் ஒன்றும் கட்டினான். அந்தத் திருவிழாவின்போது இலங்கைக் கயவாகுவும் தமிழ் நாட்டுக் கருவூருக்கு வந்திருந்தான் என்று சிலப்பதிகாரம் பாடுகின்றது. இவை எல்லாம், சிலப்பதிகாரப் பாட்டே அன்றி, வரலாறன்று என்று கூறுவாரும் உண்டு.

இவ்வாறு படையெடுத்துச் சென்றாலும் நிலையான அரசாட்சியை அவர்கள் நிலைநாட்டவில்லை. மின்னல் ஒளிபோலச் சில காலம் இருந்து மறைந்ததே இந்தப் படையெடுப்பின் பெருமை. தமிழ் நாட்டிலேயே ஒற்றுமையை நிலைநாட்டாதபோது வெளியில் எங்கே போய் வாழ்வது? இதனாலன்றோ இளங்கோவடிகள், தமிழ் நாட்டின் ஒற்றுமையைப் பாட வந்தவர், அரசர் ஒற்றுமை வழியே பாடமுடியாமல், கண்ணகி கோவலன் கதையாகத் தமிழ்க்குடி மக்களின் ஒற்றுமையைப் பாடுகின்றார்? கரிகாலன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் என்ற மூன்று பெருவேந்தர்கள் காலத்தினையும் அவர்கள் தலைநகரத்தினையும் புகழ்கின்ற புலவர், கண்ணகி கோவலன் கதைக்குப் பின்னணியாகவே அவற்றை அமைக்கின்றார். பொது மக்களில் ஒருவனாகிய **கோவலன்**, சோணாட்டிற் பிறந்து பாண்டி நாட்-

டில் இறந்துவிட, கண்ணகியின் கோயில் சேரநாட்டில் கட்டப்பட்டது. இந்த வகையிலேதான் மூவேந்தர்கள் சிலப்பதிகாரக் கதைக்குள் நுழைகின்றார்கள்.

மற்றொரு நெடுஞ்செழியனும் சிறந்து விளங்கினான். இவன், முன் நாம் கூறிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். இவன் சேரனையும் பாண்டியனையும் குறுநிலமன்னர்களையும் வென்ற சிறப்பினைச் சங்கப் புலவர்கள் பாராட்டுகின்றார்கள். இவன் கொங்கு நாட்டினையும் தன் செங்கோலின்கீழ்க் கொண்டுவந்தான். இவன் பாடிய பாட்டு, சங்கநூல்களில் இடம் பெற்றுள்ளது. **மாங்குடி மருதனார். மதுரைக்காஞ்சி** என்ற சிறந்த நூலில், இவன் புகழினைப் பரக்கப் பாடியுள்ளார்.

இந்தச் சங்க காலத்தில் குறுநில மன்னரும் வாழ்ந்து புலவர்களைப் போற்றிவந்தனர். இவர்கள் தமிழ் நாட்டின் ஒற்றுமையைக் குலைத்தவர்கள் என்றாலும், தமிழையும் கலையையும் வளர்த்தவர்கள் என்பதனை மறக்க முடியாது. **பாரி, பேகன், ஆய்அண்டிரன், காரி, ஓரி, நன்னன், அதியமான்** என்பவர்கள் கடையெழு வள்ளல்கள். **நல்லியக்கோடன், இளந்திரையன்** முதலியவர்களும் தொண்டை நாட்டில் தமிழை வளர்த்தார்கள். இந்தத் தொண்டைமான் இளந்திரையன் பல்லவனோ என்ற ஐயமும் உண்டு. **தொண்டையர்கோன்** என்பது பல்லவ அரசனது பட்டமன்றோ? இளந்திரையன் அரசாண்டதும் பல்லவர் தலை நகராகிய காஞ்சியில் இருந்துதான்.

## 5. பல்லவ பாண்டியர்

சங்ககால விளக்கத்திற்குப் பிறகு, தமிழ் நாட்டைப் பேரிருள் மூடியது என்பர். களப்பிரர் என்பவர் தமிழ் நாட்டினைக் கைப்பற்றிக்கொண்டனராம். களப்பிரர் யார் என்பது நன்கு விளங்கவில்லை. இவர்கள் வருவதற்கு முன்னிருந்த தமிழ் நாட்டினர் நிலையை மணிமேகலையிலிருந்தும் அறியலாம். சீனுவிலிருந்து வந்த **பாஹியான்** காலத்தில் பௌத்த விகாரைகள் தமிழ் நாட்டில் பரவியிருந்தன. பௌத்தர்களின் சமுதாயத்தொண்டு சிறந்து விளங்கியது. புத்தரது திருவடி நிலையைப் போற்றுகின்ற முறையை மணிமேகலையில் காண்கிறோம். புத்தரது வடிவம் வைத்து வழிபடும் மஹாயான புத்தமதம் அப்போது பரவவில்லை. பொதுமகளிர் குலத்தில் பிறந்த ஒரு பெண், உலக மக்களை வாழ்விக்கத் துறவியாய் உயர்ந்த கதையே, மணிமேகலையின் கதை.

தத்துவ சாத்திர ஆராய்ச்சி, அன்று நாட்டிற் பரவியது; வாதங்கள் எழுந்தன. அந்த வாதங்களைக் காவியமாகப் பாடும்வழக்கம், மணிமேகலையில் வித்தாகத் தோன்றி, நீலகேசி, குண்டலகேசி முதலிய நூல்களில் வேரூன்றி வளர்வதனைக் காணலாம். காவிரிப்பூம்பட்டினம் கடல் கொண்டது என மணிமேகலை பாடுகின்றது. ஆனால், மிகமிகச் சிறுபகுதியே அவ்வாறு கடலால் விழுங்கப்பட்டிருக்க வேண்டும். களப்பிர அரசனான **அச்சுதவிக்கந்தன்** அந்தப் பட்டினத்தில் ஆண்டதனைப் **புத்ததத்தர்** ஐந்தாம் நூற்றாண்டிற் பாடுகின்றார். இவர் இலங்கை சென்று புத்த மதத்தினை வளர்த்தார்.

அனுராதபுரத்துள்ள மகாவிகாரை அபய-விகாரை என்ற இரண்டன் போராட்டத்தில், மஹா-யான பௌத்தத்தினை இலங்கைக்குக் கொண்டு-வருவதில் தமிழப் பௌத்தரும் ஈடுபட்டனர். காஞ்சி மாநகர் பெரிய பௌத்த நிலையமாகி, இலங்-கைக்கும், சீனவுக்கும், வடநாட்டிற்கும் பௌத்தப் பெரியார்களை அனுப்பிவந்தது நாளந்தைப் பல்-கலைக்கழகத் தலைவர்களாய் வீற்றிருந்த திங்நா-கரும் தருமபாலரும் காஞ்சியிலிருந்து சென்றவ-ராவர். இன்று ஜப்பானில் செழித்தோங்கும் ஜென் பௌத்த மதத்தினைச் சீனவில் கி. பி. 5-ஆம் நூற்றுண்டில் சென்று நிலை நாட்டியவன் காஞ்சி நகர அரசனின் இளைய மைந்தனே.

எனவே, மேலே நாம் குறித்த மூன்றும் நூற்றுண்டையும் தாண்டிச் சென்றது போலும் சங்ககாலம்! தமிழ் நாட்டில் சிவபெருமானுக்கு எழுபது கோயில்களையும், திருமாலுக்குப் பல கோயில்களையும் கோச்செங்கணன் என்ற சோழன் கட்டினன் என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். இந்தக் கோயில்களுக்கு மாடக்-கோயில்கள் என்பது பெயர். யானை நுழையாதபடி மிக உயரமான அடிப்பட்டடையோடு கட்டப் பெற்றவை இவை. ஆனல், இவற்றை இந்தச் சோழன் செங்கல்லாலேயே கட்டினன். ஆதலால், இவை மறைந்தன. பின் வந்தோர், கல்லால் கட்டிப் புதுக்கினர். இவற்றைப் பெருங்கோயில்கள் என்றும் பாராட்டினர்கள். பௌத்தர்கள் கட்டிய விகாரைகள்போலச் சைவ வைணவர்களும் பெரிய கோயில்களைக் கட்டத் தொடங்கிய காலம் அது.

இந்தக் கோச்செங்கணான் சங்ககாலச் செங்கணானோ? தெரியவில்லை. ஒரு கோச்செங்கணான் **யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப்** போரில் வென்றான். இந்தப் போரினைப் **பொய்கையார்** என்ற புலவர் **களவழி நாற்பது** என்னும் நூலில் புகழ்கின்றார். அவர் இந்த நூலைப் பாடிச் சிறைப்பட்ட சேர அரசனை விடுவித்துச்சென்றார் என்று கதை வழங்குகிறது. களவழி நாற்பது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. அவற்றுள் நீதி நூல்கள் பல. நாலடியாரில் பல்லவர் காலத்துப் பாடலும் உண்டு என்பர் சிலர். திருக்குறளும் பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்று. மணிமேகலைக்கும் முந்தியது திருக்குறள். சங்க நூல்களைத் தொகுத்த பின் இந்தப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பல்லவர் காலத்தில் தொகுத்தனர் போலும்! சங்கப் பாக்களைத் தொகுத்துப் பாநயத்தில் திளைத்த தமிழரசு, இவ்வாறு, பின்னர் அறவுரைகளில் திளைக்கத் தொடங்கியது. திருக்குறளை **உலகப் பொதுமறை** எனலாம். நாலடியாரும் ஒரு சிறந்த நூலே.

நான்காம் நூற்றாண்டில் குப்தர்கள் அரசு, வடநாட்டில் செழித்தோங்கியது. **சமுத்திரகுப்தன்** தென்னாட்டின்மேலும் படையெடுத்து வந்தான். காஞ்சி அரசன், **விஷ்ணுகோபன்** என்ற பல்லவனை வென்றதாகச் சமுத்திரகுப்தன் பெருமை பாராட்டிக்கொள்கிறான். எனவே, யார் என்று அறிய முடியாத **களப்பிரர்** என்ற அரசர், சங்ககாலத்திற்கு முடிவு கட்டித் தமிழகத்தைக் கைப்-

பற்றிச் சோழ பாண்டி நாடுகளை ஆண்டு வந்த போது, ஆந்திரர்களுக்கு அடங்கியிருந்த பல்லவர்கள், காஞ்சியில் பேரரசராக வளரத் தொடங்கினார்கள் எனலாம். காஞ்சி, வடமொழிப் பல்கலைக் கழகமாக வளர்ந்தோங்கியது. பல பல்லவர்களின் பெயர்களைக் கேட்கின்றோம். முதலில் பல்லவர்கள் பிராகிருத மொழியில் சாசனங்களைப் பிறப்பித்தார்கள்; பின்னர், ஸம்ஸ்கிருதத்தில் எழுதிவந்தார்கள்; முடிவிலேதான், தமிழில் எழுதிவரக் காண்கின்றோம்.

இந்தப் பல்லவர்கள், தொடர்ச்சியாகச் சிறப்புப் பெற்று விளங்குவது **சிம்ம விஷ்ணுவின்** காலத்திலிருந்துதான். கி. பி. 575ல் அவன் அரசனாகின்றான். அவன் பாண்டியர்களோடு சேர்ந்து களப்பிரர்களை வென்றான். அவனுடைய மகனே **மகேந்திரவர்மன்**; **மத்த விலாசம்** என்ற நாடகம் எழுதியவன்; **தக்ஷிண சித்திரம்** என்னும் ஓவியக்கலை நூலும் எழுதினவன். அவனது **சித்தண்ணவாசல்** சித்திரம், **அஜந்தாச்**சித்திரம் போன்றது. குடுமியான் மலையில் அவன் கண்ட புதிய இசைமுறை, கல்வெட்டாகக் காட்சியளிக்கிறது. கல்லைக் குடைந்து குகைக்கோயில்களாக முதல் முதல் தென்னாட்டில் கட்டத் தொடங்கியவன் அவனே; **திருநாவுக்கரசு நாயனார்** ஆட்கொண்டு சைவனாக்கிய பல்லவனும் அவனே. கலையும் சைவமும் அவனால் நன்கு வளர்ந்தன.

இதற்குள் வடநாட்டில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. குப்தர்களது கலை மறையாமற் போனாலும், அவர்களுடைய அரசு மறைந்தது. காளிதாச-

னும் அஜந்தாச் சித்திரமுமாய்வளர்ந்த கலை இந்தியா முழுவதும் பரவியது. ஆனால், குப்தர்கள் மறைந்தார்கள். அவர்களிருந்த இடத்தில், 7-ஆம் நூற்றாண்டின் முதலில், **ஹர்ஷ சக்கரவர்த்தி** ஆளவந்தான். அசோகன், சமுத்திரகுப்தன் முதலியவர்களைப்போல, ஹர்ஷனும் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்தான் ஆனால், **சளுக்கியர்கள்** இதற்குள் தென்னிந்தியாவின் வடமேற்குப் பகுதியில் சிறப்புற்று விளங்கினார்கள். இவர்கள் அரசனான இரண்டாம் புலிகேசி, ஹர்ஷனைத் தோற்கடித்துத் தென்னாட்டில் கால் எடுத்துவையாது செய்துவிட்டான். ஆனால், வெற்றி வெறியால் **புலிகேசி** தென்னாட்டின்மேல் படையெடுத்தான்; பல்லவர்கள்மேல் பொறாமை கொண்ட மற்றைத் தென்னாட்டு அரசர்கள், புலிகேசியோடு சேர்ந்துகொண்டார்கள். மகேந்திரனிடமிருந்து **வெங்கி** நாட்டைப் புலிகேசி பிடுங்கிக்கொண்டான். வெங்கி நாடு புலிகேசியின் தம்பியின்கீழ்க் **கீழைச்சளுக்கிய** நாடாயிற்று.

மகேந்திரனுக்குப்பின், அவன் மகன் **நரசிம்மவர்மன்** அரசனாகிப் புலிகேசியைத் தோற்கடித்தான். நரசிம்மன், **சளுக்கியர்** தலை நகரமாகிய வாதாபி(Badami)யைப் பிடித்தான். இந்தப் போரில் சிறுத்தொண்டரே பல்லவப் படையின் தலைவராய் விளங்கினார். நரசிம்மனது வலிமை காரணமாக அவனுக்கு **மாமல்லன்** என்ற பெயர் வழங்கியது. அவன் பெயரால் **மாமல்லபுரம்** என்ற **மஹாபலிபுரம்** கடல்துறைப் பட்டினமாய்ச் செழித்தது.

குகைக்கோயில்களுக்குப்பின், குகை இல்லாத இடத்தும் பெரிய கல்லைக் குடைந்து கோயிலாக்கும் முறையை, அவன் வழக்கத்தில் கொண்டுவந்தான். மாமல்லபுரத்திலுள்ள **பாண்டவ ரதங்கள்** என்று பொது மக்கள் வழங்கும் கோயில்கள், அவனாட்சியில் எழுந்தனவேயாம். அவனுக்குப்பின்னும், சாளுக்கியர் பல்லவரை விட்டபாடில்லை. **பரமேசுரவர்மன்** காலத்தில் சாளுக்கியர் கைஓங்கியது. பின்பு, அவன் மகன் **இரண்டாம் நரசிம்மவர்மன்**, **இராசசிம்மன்** என்ற பெயரோடு பட்டத்திற்கு வந்து, சீரும் சிறப்புமாய் வாழ்ந்தான். பல்லவர் கை மேலோங்கியது. கற்களை அடுக்கிக் கோயில் கட்டும் முறையை நிலை நாட்டியவன் இவனே ஆம். மாமல்ல புரத்திலிருக்கும் கடற்கரைக் கோயிலும், காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலும் இவன் பெருமையை விளக்குகின்றன. குப்தர் கலை, மேலும் இவ்வாறு புத்துயிர் பெற்று வளர்ந்தது. கைலாசநாதர் கோயில் சிற்பமுறை, சளுக்கியர் நாட்டிற் பரவி, **எல்லோராவிலுள்ள** கைலாசக் கோயிலுக்கு வழி காட்டியது. கைலாசநாதர் கோயிலில் சிற்றண்ணவாசல் சித்திரங்கள் போன்ற ஓவியங்கள் இருந்திருத்தல் வேண்டும்; இன்று, சிலசில மூளிப்பகுதிகளே தோன்றுகின்றன இவன் சைவசித்தாந்தக் கொள்கையை அறிந்தவன் என்று தன்னைப் புகழ்ந்து கொள்கிறான். **சுந்தரமூர்த்தி நாயனார்** காலத்தவன் இவன். "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்" என்று இவனை அவர் நிகழ்காலத்தால் புகழ்கிறார்.

இவனுடைய கப்பற்படையின் பெருமையை இலங்கை வரலாறு கூறுகிறது. **மானவர்மன்** என்ற இலங்கை அரசன், பல்லவரோடு சேர்ந்து சாளுக்கியரை வெல்லத் துணை செய்தவன். இவனை இலங்கைக்கு அரசனாக்க வேண்டி நரசிங்கவர்மனது பல்லவப்படை கடல் வழியே இலங்கைக்கு வந்தது. ஆனால், மானவர்மன் துரத்தப்பட்டான். மறுமுறையும் 676ல் பல்லவக் கடற்படையோடு மானவர்மன் வந்தான். அப்போது அரசனின்றித் திகைத்த இலங்கை, இவனை வரவழைத்து அரசனாக்கியது. பல்லவர் கலையும், ஓவியமும், ஏரி கட்டும் திறனும் இலங்கையில் புகுந்தன.

சிம்மவிஷ்ணுவின் பரம்பரை ஆளாற்றுப் போனதால், புதிய பல்லவ பரம்பரை ஆளத் தொடங்கியது. **நந்தி வர்மன்** என்ற பல்லவன் தன் படைத்தலைவனான **உதயசந்திரனோடு** பகைவருடன் போரிட்டுச் சிற்சில போது வென்றும், சிற்சில போது தோற்றும், நாட்டினைப் பல காலம் ஆண்டுவந்தான். காஞ்சியிலுள்ள **வைகுந்தப் பெருமாள் கோயில்** இவன் கட்டியது. சாளுக்கியர்களும் பல்லவர்கள் நாட்டில் புகுந்தார்கள். சளுக்க அரசன் **வைரமேகன்** மகளைப் பல்லவ அரசன் மணந்தான். அவன் மகனான **தந்திவர்ம பல்லவன்**, தன் தாய்ப்பாட்டன் பெயரான வைரமேகன் என்ற பெயரையும் பூண்டான். இந்தக் காலத்தில் வாழ்ந்தவரே **திருமங்கையாழ்வார். வைரமேகன் தடாகம்** போன்ற ஏரிகளைக் கட்டியவன் இவன். இவனுக்குப் பின்னர்ச் சிறந்து விளங்கியவன் **தெள்ளாறு எறிந்த மூன்றாம்**

**நந்திவர்மன்** என்பவனுவன். பாண்டிய அரசரைத் தெள்ளாற்றில் வென்றவன் இவன். பாரதம் பாடிய பெருந்தேவனர் இவன் காலத்தவர் இவன்மேல் **நந்திக்கலம்பகம்** என்ற நூலும் ஒரு புலவர் பாடினர். **அவனி நாராயணன்** என்று இவன் பெயர் கீழைத்தீவுகளிலும் எட்டியது. தமிழும் நாகரிகமும் இவனுட்சியில் ஓங்கி வளர்ந்தன.

ஆனல், பல்லவரது வெற்றியை நீண்ட நாள் தொடர்ந்திருக்கப் பாண்டியர்கள் விட்டுவைக்கவில்லை பல்லவரும் அவரைச் சேர்ந்தவரும் தோற்றனர். ஆனல், நந்திவர்மன் மகன் **நிருபதுங்கன், அரிசில் ஆற்றங்கரையில்** பாண்டியன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொண்டான். இவன் மகன் **அபராஜிதன் திருப்புறம்பயத்**தில் பாண்டிய வன்மைக்கு ஒரு முடிவு கட்டினன். திருத்தணிகையில் **வீரட்டேசர்** கோயில் போன்றவை இவன் கட்டியவை. ஆனல், இந்தப் பெருமை நிலைத்து இருக்கவில்லை. சோழர் மேலோங்கினர். அவர்களுக்கு அபராஜிதன் தோற்ருன். பல்லவப் பேரரசும் முடிவடைந்தது.

பல்லவரோடு போராடிய பாண்டியர்கள் வரலாறும் பல்லவர் வரலாற்ருேடு சேர்ந்ததேயாம். களப்பிரரை வென்ற பெருமை **கடுங்கோன்** என்ற பாண்டியனைச் சேரும். பல்லவனுன சிம்மவிஷ்ணு காலத்தவன் இவன். இவனுடைய மகன் **மாறவர்மன் அவனி** சூளாமணி என்பான், பாண்டிநாட்டளவில் அமைதியை நிலைநாட்டி வந்தான். இவன் மகன் **சேந்தனும்**, பல்லவ நரசிம்மனுக்கு

எதிரே, மேலோங்க முடியாது அடங்கி நின்றான்: சேரர்களை வென்றதோடு நின்றுவிட்டான். **நின்ற சீர் நெடுமாறன்** என்பவன் இவனுக்குப்பின் ஓங்கி எழுந்தான். இவன் **அரிகேசரி** என்ற சிறப்புப் பெயர் பூண்டவன். **திருஞானசம்பந்தர்** கூன் தீர்த்த பாண்டியன் இவனே. இறையனார் அகப்பொருள் உரையில் வரும் கட்டளைக் கலித்துறைகள் இவனைப் பற்றியனவேயாம். இவன் மகன் **கோச்சடையன் இரணதீரன்**, மங்களூர் என்ற **மங்களாபுரம்** வரையில், தன் ஆட்சியைக்கொண்டு சென்றான். இவன் மகனே **முதலாம் இராசசிம்ம பாண்டியன்.** இவனே முதலாம் நந்திவர்மனை வென்றவன். இவன் சாளுக்கியரையும் கங்கரையும் வென்று தென்னாட்டுத் தலைமகனாய்ச் சில ஆண்டுகள் வாழ்ந்தான். இவன் இறந்ததும், கலகத்தால் பாண்டிய அரசு சிதறுண்டது. இருந்தாலும், இவன் மகன், **மாறன்காரி** என்ற படைத்தலைவர் துணையால் பல்லவர்களை வென்று அமைதியை நிலைநாட்டினான். இவனுக்குப் பகைவர் பல முறை தோற்றனர். இவன் கொங்குநாட்டினையும் பாண்டி நாட்டில் சேர்த்துக்கொண்டு, தெற்கேயும் வெற்றியோடு அரசாண்டு வந்தான். நம்மாழ்வார் இவன் காலத்தவர் என்பர்.

இவன் மகன் **சீமாறன் வல்லபனும்** சிறந்த வீரன். இவன், தெள்ளாற்றில், முதலில், நந்திவர்மனிடம் தோல்வியுற்றான். ஆனால், இந்த வெற்றி, முன்கண்டதுபோல நிலைத்து நிற்கவில்லை. பாண்டியனே பின்னர் வென்றான். இவன் காலத்திலேதான் **பெரியாழ்வார்** வாழ்ந்தார். சீமாறன் வல்லபன்,

தென்னாட்டரசோடு நின்றுவிடவில்லை: இலங்கையின் மேலும் படையெடுத்துச் சென்றான். **முதலாம் சேனன்** இலங்கையில் ஆண்ட காலம் அது. இலங்கை மன்னன் பெரிய தோல்வி அடைந்தான். தோல்விக்கு அஞ்சிப் பல ஈழத்து வீரர் தற்கொலை செய்துகொண்டனர். ஆனால், இலங்கையைத் தன்னாட்டுடன் சேர்க்கச் சீமாறன் விரும்பவில்லை: ஈழத்துப்படை தன்னை எதிர்த்து வாராமல் இருந்தால் போதும் என்றே கருதிப் படையெடுத்தான்; ஈழ மன்னன் அடி பணிந்ததும் அவனிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டுத் திரும்பினான். ஆனால், சீமாறன் வெற்றி, நிலைத்து நிற்கவில்லை. நாம் கண்டது போல இவனது கிழப்பருவத்தில் **நிருபதுங்கபல்லவன்** இவனை வென்றான். இவன், மனம் முரிந்து, முடிவில் இறந்தான். இவன் மகன் **வரகுணன்** அடங்கியே இருந்தான். இவன் காலத்தவரே **மாணிக்கவாசகர்** என்று ஒரு சிலர் கருதுகின்றனர். இவனே அபராஜிதனுக்குத் திருப்புறம்பயத்தில் தோற்றவன். இவ்வாறு பல்லவரும் பாண்டியரும், ஒருவருடன் ஒருவர் போரிட்டு, வலி ஒடுங்கி வீழ்ந்தனர். சோழர் தலையெடுப்பது எளிதாயிற்று.

---

## 6. இளங்காளைப் பருவம்

பல்லவர் முதலில் ஆண்ட தொண்டை மண்டலமும், அதன் தலை நகரமாம் காஞ்சியும் தமிழ் நாட்டின் வடவெல்லையில் இருப்பதால், தமிழர் வடநாட்டோடு தொடர்புகொள்வது எளிதாயிற்று : அங்கிருந்த துறைமுகங்களின் வழியே பிற நாடுகளோ-

டும் இயைபு பெறுவதும் இயைவதாயிற்று. காஞ்சி, பழைய காலம் தொடங்கியே, இந்தியப் பொது அறிவு நிலையமாய் விளங்கியது. பல்லவர்கள், காஞ்சியே அன்றிப் புதுச்சேரிக்கு அருகில் உள்ள **வாகூர்** முதலிய இடங்களிலும் அறிவாராய்ச்சியை வளர்த்தனர். ஆரியம் வென்றது என்று சொல்வதனைவிட, இந்திய ஒருமைப்பாடு இவ்வாறு வளர்ந்தது என்றே சொல்லுதல் வேண்டும். புராணக் கதைகள் தென்னாட்டில் பரவலாயின. ஆனால், இவை தமிழ் நாட்டிற்கேற்ப மாறலாயின. தமிழ் நாட்டுக் கதைகளும் இவற்றுள் புகுந்தன. இவற்றிற்கெல்லாம் தத்துவார்த்தம் கூறும் முயற்சி, தமிழ் நாட்டிற் சிறப்புற்றோங்கியது. எனவே, தமிழ் நாட்டிற் புகுந்தவை, தமிழ் மயமாய் மாறிவிட்டன. "திரிபுரம் எரித்தலாவது, மும்மலத்தை அழித்தல்," என்று **திருமந்திரம்** பாடவில்லையா?

சங்க காலத்திற்கும் மகேந்திரவர்மன் காலத்திற்கும் இடையில் புத்தமதம் செழித்ததனை முன்னரே கண்டோம். **காரைக்கால் அம்மையார், திருமூலர்** முதலிய சித்தர்கள் வாழ்ந்து, பல கலைகளினிடையேயும் ஓர் ஒற்றுமைக் காட்சியைக் காண முற்பட்டார்கள். சளுக்கியர் தொடர்பாலும், வடநாட்டுத் தொடர்பாலும் கணபதி வழிபாடு, காபாலி மதம் முதலியன தமிழ் நாட்டிற் பரவின. இவற்றை எல்லாம் அன்புருவமாக்கிய பெருமை தமிழரதே ஆம். காபாலி வடிவக் கொடுமை எங்கே, பிட்சாடன வடிவத்தின் அழகும் அன்பும் எங்கே? திருமாலின் வழிபாடும் பாஞ்சராத்திரக் கொள்கைப்படி பரவியது. முதலாழ்வார்கள் இந்தக் காலத்தில்

வாழ்ந்தவர்கள். இவர்களில் **திருமழிசையாழ்வார்** சிறந்த ஞானப்பேராசிரியர். இவரும் முதலாழ்வார்களும் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர்களாய் இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஜைனமும் வளரத் தொடங்கியது. **ஜைன காஞ்சி** எனத் **திருப்பருத்திக்குன்றம்** ஓங்கியது. மகேந்திரவர்மன், முதலில் சமணனாக அன்றோ இருந்தான்? மக்களுக்கு வேண்டும் நீதி நூல்களையும், இலக்கணங்களையும் சைனப் பெருமக்கள் எழுதிவந்தார்கள். **அவிநயம்** என்ற இலக்கணம் பல்லவர் காலத்து நூல் எனலாம். நன்னூலுக்கு இஃது ஒரு வகையால் முதல் நூல். **நம்பி அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை** முதலியன பல்லவர் காலத்தில் வெளியாயினவை எனலாம். ஜைனர்களுடைய காவியங்களான **சிந்தாமணி**யும் **சூளாமணி**யும் இந்தக் காலத்திலேயோ, அல்லது அடுத்தோ தோன்றியவை. தமிழ் இலக்கணங்களையும் வடமொழிக் கண்கொண்டு பார்க்கின்ற வழக்கம் உண்டாயிற்று. இதன் முற்றிய நிலை அடுத்து வரும் சோழர் காலத்தில் பயன்பட்டாலும், பல்லவர் காலத்திலேயே பக்குவப்பட்டுவிட்டது. **தண்டியாசிரியர்**, பல்லவர் அரண்மனைப் புலவர். அவருடைய '**காவியாதரிசம்**' என்ற அலங்கார நூல் தமிழ் நாட்டிலே தனியிடம் பெற்றுள்ளது. தமிழில் இன்று வழங்கும் தண்டியலங்காரம் வருவதற்கு முன், அதனையே **புத்தமித்திரரும் வீரசோழியத்**தில் மொழி பெயர்த்திருக்கக் காண்கிறோம். **வீரசோழியம்**, சோழர் காலத்து நூல். அது.

வடமொழி மரபினை ஒட்டித் தமிழிலக்கணம் கூறுவது; அப்படிக் கூறுவதும், பல்லவர் காலத்தில் தொடங்கிய மரபேயாம். வடமொழியையும் தமிழையும் சேர்த்து எழுதுகின்ற **மணிப்பிரவாளமும்** அப்போது சமணரிடையே தோன்றியது. இதனாலேயே **சம்பந்தர்**, 'ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலார்' எனச் சமணர்மேல் குற்றம் சாட்டுகிறார். **யாப்பருங்கலம்** என்ற சமணநூலும் அதன் **விருத்தியுரையும்**, அவிநயனார் கொள்கையையும் வடமொழிக் கொள்கையையும் பரக்கக் கூறுவன எனலாம். ஆனால், தமிழ் மரபினை அவை மறக்கவில்லை. அவையும் சோழர் கால நூல்கள். இருந்தாலும், பல்லவர் காலத்தின் மரபு பழுத்த நிலையையே அங்குக் காண்கிறோம்.

இந்தக் காலத்தின் தனிப்பெருஞ்சிறப்பு, அன்பு நெறி வளர்ந்தோங்கியதே ஆம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் உள்ளத்தை உருக்கும் பாடல்களைப் பாடி மக்கள் மனத்தினைக் கவர்ந்தார்கள். அவை பெரும்பான்மையும் இசைப்பாடல்கள். ஒவ்வொரு கோயிலிலும் அவற்றை வழிபாட்டின்போது பாடுவது வழக்கமாய்விட்டது. **திருநாவுக்கரையர்** மகேந்திரனைத் திருத்தியவர், உழவாரப்படைகொண்டு கைத்தொண்டு செய்து, தொண்டு நெறியை அன்பு நெறியின் சிறப்பியல்பாக வெளிப்படுத்தினவர். ஞானசம்பந்தர், பல வகை இசைப்பாடல்களைப் பாடி, அன்பு நெறி இன்ப நெறி என மனமுருகப் பாடிக் கூன்பாண்டியனைத் திருத்தினார். சுந்தரர், இந்த இருவர் வழியே சென்று இறைவனையே நம்பி வாழ்ந்து, குற்றமே செய்யினும் குணம்

எனக் கொள்ளும் ஆண்டவனது அருள் நெறியை விளக்கினர். **மாணிக்கவாசகனுர்**, தம் அன்புருக்கும் பாடல்களையே பாடி உய்யலாமென்று வழிகாட்டினர்.

**திருமங்கை மன்னர்**, இந்த நால்வர் பாட்டின் சிறப்பெல்லாம் தோன்றப் பாடிப் பல கோயில்களிலும் சென்று வழிபட்டு வந்தார். பெரியாழ்வார், '**தொண்டக்குலம்**' என ஆண்டவன் அடியாரை எல்லாம் ஒன்றெனக் கொண்டு. கண்ணன் குழவித் திருவிளையாடல்களில் தம் மனத்தினைப் பறிகொடுத்தார். **ஆண்டாள்**, கடவுள் மேல் காதல் கொண்டு பாடினள். **நம்மாழ்வார்** பாடல்கள் அனுபவமேலீட்டால் எழுந்தவை.

பின்னளில், தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்கள் தமிழிலே வழங்கக் காண்கிறேம். **கலம்பகம்**, **உலா**, **பிள்ளைத்தமிழ்** முதலானவை இந்தக் காலத்தில் முதல் முதல் தோன்றக் காண்கிறேம். தமிழ் நடை எளிதாய் வருவதற்கேற்பச் செய்யுள் நடையும் மாறக் காண்கிறேம். இன்று விருத்தம் என்று கூறுபவை, சந்த விருத்தங்களாகவும் பெரிய பாடல்களாகவும், தாண்டகங்களாகவும் பல வகையில் வளரத்தொடங்கின.

இசையும் வளர்ந்தது. மகேந்திரவர்மன் புதிய முறையை இசையில் நுழைத்ததனை அவனுடைய குடுமியான்மலைக் கல்வெட்டில் காண்கிறேம். தேவாரங்கள் இசைப் பாட்டுக்கள். இசைக்கலை, கடவுட்கலையாய் வளர்ந்து, மக்கள் உள்ளத்தினை உருக்கியது. அன்பர்கள் ஆடிப்பாடினர்கள். நாடகக் கலையும் வளர்ந்தது. அக்காலைய சிற்பங்-

களையும் ஓவியங்களையும் பார்த்தால், அபிநயக் குறிகளும் கூத்து நிலைகளும் காணலாம். சிவபெருமானது கூத்து, பலபல வடிவில் சிற்பங்களில் அமையக் காண்கிறோம்.

ஓவியங்களும் தமிழ் நாட்டின் பெருமையைப் பல்லவர்கள் காலத்திலேதான் காட்டின எனலாம். சித்தன்னவாசல் ஓவியம் சமணரது **சமவ சரணத்தினைக்** காட்டுவது. தாமரைக் கொடிகள்—நடமாடும் நங்கையின் அமைப்பு—இவை மிக அழகாகவும் மிடுக்காகவும் அமைந்துள்ளன; வளைவுகளும் கோடுகளும் உயிர் பெற்றுப் பேசுகின்றன எனலாம். கைலாசநாதர் கோயிலிலும் இரண்டு முகங்கள் ஒரு சிறு பகுதியைக் காட்டிக்கொண்டு இன்றும் விளங்குகின்றன: கண்ணமைப்பு மிக அழகாக இருக்கிறது. மகாபலிபுரத்திலும் சிற்சில இடத்திலே நிறங்களைக் காண்கிறோம். இவையெல்லாம் இப்போது சிதைந்த நிலையில் மூளியாகவே தோன்றுகின்றன. இவை, முதலில் முழுநிலையாகத் தோன்றிய காலத்தில், எவ்வளவு அழகாக இருந்திருத்தல் வேண்டும்! அஜந்தாச் சித்திரங்கள், இலங்கைச் சிகிரியாச் சித்திரங்கள், பல்லவர் சித்திரங்கள் என்பவை ஒரு குலத்தைச் சேர்ந்தவை எனலாம்.

சிற்பங்களும் இந்தக் காலத்தில் மிகச் சிறப்புற்று ஓங்கின. மகேந்திரவர்மனே கல்லால் கோயில் கட்டத் தொடங்கினன் என்பதைக் கண்டோம். குகைக்கோயில்கள், இரதக்கோயில்கள், கல் வைத்துக் கட்டிய கோயில்கள், கல்லாலேயே அமைந்த **தூங்கானை விமானங்கள்** என்று முறையே

பல தோன்றின. மகாபலிபுரம், காஞ்சி, யானைமலை, திருத்தணிகை, மடுகுபட்டு, திருச்சிராப்பள்ளி, பல்லவபுரம் முதலிய இடங்களில் பல்லவர்கள் கட்டிய கோயிலைக் கண்டோம். இந்தக் கலை, கீழைத்தீவுகளுக்குச் சென்றது காஞ்சீபுரத்துப் **பரமேச்சுர விண்ணகரம்**, கும்பகோணத்தருகே உள்ள **நந்திபுர விண்ணகரம்** முதலான திருமால் கோயில்களும் தோன்றின. ஜைனக்கோயில்களும் தோன்றின. பல கலைகளையும் பொது உடைமையாக வளர்க்கின்ற சமுதாய நிலையமாகக் கோயில் வளரக் காண்கிறோம். ஊரை ஆளும் சபைகட்கு இடமாகவும், கொடை முதலியவற்றைக் கல்வெட்டாகப் பதிந்து வைக்கும் இடமாகவும் கோயில்கள் அந்த நாளையிலிருந்தே விளங்கத் தொடங்கின. இதன் முதிர்ந்த நிலையை அடுத்து வரும் சோழர் காலத்தில் காணலாம்.

இந்தக் கோயில்களில் வரும் பல வகைச் சித்திரங்கள் அநுராதபுரத்திலுள்ள **ஈசுரமுனிய விகாரையை** நினைப்பூட்டுகின்றன. இரண்டும் ஒரே இனமான கலைகள். தமிழ்நாடு இலங்கை என்பவற்றின் போராட்டத்திற்கிடையே இவ்வாறு அறிவு விளக்கம் கலையுலகில் ஒற்றுமைப்பட்டு அழகாக ஒளிரக் காண்கிறோம். தமிழ் நாட்டிலும் அப்படித்தான். பல்லவரும் பாண்டியரும் போராடினாலும், இரு நாட்டிலும் கலைகள் ஓங்கின. நாட்டில் எழுந்த புத்துணர்ச்சியின் பயனாகவே எப்போதும் பல வகை முன்னேற்றங்கள் தோன்றுகின்றன. இந்தப் புத்துணர்ச்சி அரசியலிலும் தோன்றுகிறது. வெவ்வேறு பகுதி-

களாய் நாடு பிரிந்திருப்பது காரணமாகப் பலபல அரசுகள் வளர்கின்றன ; அவ்வளர்ச்சி, போராட்டத்தில் முடியும் போது மக்களது ஆற்றலைக் குறைத்துவிடுகிறது. ஆனால், அரசியல் அல்லாத துறையில் இப்புத்துணர்ச்சி, ஒற்றுமையை வளர்த்து, அழகைப் பரப்பி, இன்பத்தினைப் பெருக்கி, கலைகளாய் உருப்பெற்றெழுந்து, பண்பாட்டினையும் செல்வ வாழ்வினையும் வளர்க்கக் காண்கிறோம். புராணங்களே உயிர் கொண்டெழுந்தன போன்ற பல வகைச் சிற்பங்கள் இந்தக் கோயில்களிலெல்லாம் உள்ளன.

கலையோடு செல்வமும் கொழித்தது மக்கள் கீழைத்தீவுகளிலெல்லாம் சென்று வாணிகஞ் செய்து வந்தார்கள் ; அங்கும் அறங்கள் செய்தார்கள் ; கோயில்களைக் கட்டினார்கள். அரசர்கள், நாடு செழிக்கப் பல ஏரிகளைக் கட்டினார்கள். மலையையே கரையாகக் கொண்ட ஏரிகள், பள்ளத்தில் தண்ணீர் தேங்கக்கூடிய இடமாய் அமைந்த ஏரிகள் என்று பலபல வகையிலும் இந்தக் காலத்தில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அவை தோன்றின. பின்னே தோன்றிய பெருமைகளெல்லாம் பல்லவர் காலத்திலேதான் வளர்ந்தோங்கத் தொடங்கின. கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் வந்த காலத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் ‘ **இளங்காளைப் பருவம்** ’ எனலாம்.

## 7. சோழர்கள்

அபராஜித பல்லவன், பாண்டியனை வென்றான்: வென்றாலும், அவிவதற்குமுன் விளக்குப் பெருஞ்சுடராய்ப் பொங்கி எரிவதுபோன்றதே அந்த வெற்றி. இடைவிடாப் போராட்டத்தால் இருவர் வன்மையும் குன்றியது. இதுவரையில் ஒடுங்கிக்கிடந்த சோழர் குடி, புத்துயிரோடு வளரத்தொடங்கியது. **விஜயாலயனே** இவ்வாறு சோழரது புதுப்பெருமையை மேலோங்கச் செய்தவன். இவன் கி.பி. 880-இல் அரசனானான். இவன் மகன் **முதலாம் ஆதித்தன்** காலத்தில்,சோழர் கை மேலோங்கியது. அவன் அபராஜிதனைத் தோற்கடித்துப் பல்லவநாட்டைத் தனதாக்கிக்கொண்டான். இந்தப் புத்துணர்ச்சியின் பயனாகவே **கம்பராமாயணம்** தோன்றியது. கொங்கு நாட்டிலிருந்து பொன் கொண்டு வந்து தில்லையம்பலத்திற்குப் பொன் வேயத்தொடங்கினான் என்றும், இலங்கையிலும் படையெடுத்து வென்றான் என்றும் **நம்பியாண்டார்** இவனைப் புகழ்கிறார். இந்த இரண்டனையும் வெற்றியோடு முடித்தவன் இவனுடைய மகன் **பராந்தகனே**. அவன் கி.பி. 906-இல் அரசனானான்: பாண்டியன் அடியோடு மண்ணைக் கவ்வினான்; இலங்கைக்கு ஓடினான். ஆகையால், மதுரை கொண்ட பராந்தகன் என அச்சோழன் சிறப்பிக்கப்பெற்றான். ஈழநாட்டுப்படை காசிபன் காலத்தில் பாண்டியருக்கு உதவியாக வந்ததால், பராந்தகன், ஈழநாட்டினை ஒடுக்கினால்மட்டுமே தமிழ் நாடு ஒன்றுபடுமெனக் கருதி, **மூன்றாம் உதயன்**மேல் படையெடுத்து வந்தான். பாண்டியனது முடி தன்னி-

4

டம் அடைக்கலப் பொருளாக வந்ததனைத் தர மறுத்துத் தெற்கு நோக்கி ஓடினான் உதயன். அனுராதபுரம் சோழர் கையில் சிக்கியது என்றாலும், **ராஷ்டிரர்** என்ற **இரட்டர்** புதிதாகத் தமிழ் நாட்டின் எல்லையில் தோன்றிச் சோழர் அரசினைக் கவிழ்க்க முயன்றனராதலின், சோழன் தன்னாட்டிற்குத் திரும்பிப் போகவேண்டுவதாயிற்று. இரட்டர்களே மேலோங்கி வந்த காலம் அது. பராந்தகன் மைந்தர்களான **கண்டராதித்தனும் அரிஞ்சயனும்** ஒருவர்பின் ஒருவர் அரசர் ஆயினர். அரிஞ்சயன் மகன் இரண்டாம் பராந்தகன், பின்னர்ப் பட்டத்துக்கு வந்தான். இவன், வெற்றிகொள்ளாது போனாலும், கலைகளை வளர்த்த அறிஞனாய் விளங்கினான். **பண்டித சோழன்**, **சுந்தர சோழன்** என்று புலவர்கள் இவனைப் புகழ்ந்தார்கள். இவனுக்குப் பிறகு இவனுடைய பெரியப்பன் மகன் **உத்தம சோழன்**, மதுராந்தகன் என்ற பெயரோடு அரசனாயினான். இவர்கள் காலத்தில் எல்லாம் **ஈழர், பாண்டியர், இரட்டர்** என்ற இவர்களது தொந்தரவு பெரிதாய் இருந்தது.

சோழர் பெருமை தலையோங்கிய காலம், உத்தம சோழனுக்குப்பின் அரசனாகிய இராசராசன் காலமேயாம். இவன் சுந்தரசோழனுக்கு மகனாவன். இவன் கி. பி. 985-இல் அரசனானான். இரட்டர்கள் மேலைச்சளுக்கியர்களுக்குத் தோற்றார்கள். ஆதலால், தென்னெல்லையையே சோழன் அடக்கவேண்டியிருந்தது. இவன் **காந்தளூர்ச்சாலை** என்ற இடத்தில் கப்பற்படை கொண்டு வென்று, சேர நாட்டினைக் கைப்பற்றினான்; பாண்டி-

நாட்டினை வென்று சோணாட்டோடு சேர்த்துவிட்டான்; கீழைச்சளுக்கியர்களை வென்று, கோதாவரி வரை நாட்டினை அகலச் செய்தான்; பின்பு, கலிங்கத்தின்மேல் பாய்ந்து வென்றான். பின்னர், இலங்கையில் ஆண்ட ஐந்தாம் மகிந்தன்மேல் படையெடுத்து வந்தான். கூலிப் படையாய் அமர்ந்த சிங்களப்படை என்ன செய்ய முடியும்? இராசராசன் அனுராதபுரத்தைக் கைப்பற்றினான்: சிங்களரது படைவீடாய் இருந்த **பொலன்னறுவை** நடுவிடமாய் அமைந்திருந்ததால், அதனையே தன் தலை நகரமாக்கி, அதற்கு **ஜனநாதபுரம்** எனப் பெயரிட்டான். **'மால்டிவ், லக்கடிவ்'** முதலிய தீவுகளும் அவன் கைக்குக் கிட்டின. தென்னிந்தியா முழுவதும் ஓரரசன் கையில் வந்தது, முதல் முதல் இராசராசன் காலத்திலேதான். தஞ்சைப் பெரியகோயில், மாங்தோட்டக் கோயில், பொலன்னறுவாச் சிவாலயம் என்ற இவை இவன் காலத் தெழுந்தவை: திருமாலுக்கும் கோயில்கள் தோன்றின. நாகப்பட்டினத்தில் பௌத்த கோயிலும் கட்டப்பட்டது. இவன், நாட்டை அளந்து வரையறுத்தான்; வரிகளை ஒரு நியதிப்படி வாங்க ஏற்பாடுகள் செய்தான்; வாணிகம் நல்ல வழியில் நடைபெற, நிறைக்கற்கள், நாழிகள் முதலியவற்றையும் வரையறுத்தான்.

அலெக்ஸாண்டர் இந்தியா வரையில் படையெடுத்ததனை அறிவோம். அவனுடைய தகப்பன் **பிலிப்ஸ்** என்ற அரசனும் முதலில் கிரேக்க நாட்டினை ஒன்றாக்கி ஆண்டான். இவர்களைப்போலச் சோழநாட்டிலும் **இராசராசனும்**, இவன் மகன் **இராசேந்திரனும்** பெருவீரர்களாய் விளங்கினர்-

கள். தென்னாட்டினை ஒன்றுபடுத்திய இராசராசனுக்குப்பின், இராசேந்திரன், அலெக்ஸாண்டரைப்போலப் பிற நாடுகள்மேல் படையெடுத்துக் **கங்கைகொண்ட சோழன், கடாரம் கொண்ட சோழன்** என்று பெயர் பெற்றான்.

இவன் கி. பி. 1012-இல் அரசனானான்; இலங்கையில் சிறு கலகங்கள் விளைந்ததன் பயனாக, முதலில் ஈழத்தின்மேல் சென்றான். ஐந்தாம் மகிந்தன் சிறைப்பட்டான். பாண்டியர் முடியும் இராசேந்திரன் கையில் சிக்கியது. இவன் பாண்டி நாட்டையும் வென்று அந் நாட்டிற்குத் தன் மகனையே **சோழபாண்டியன்** என்ற பெயரோடு அரசனாக்கினான்; தன் தந்தை வென்ற **கலிங்கம்** சென்று, ஒரிஸ்ஸாவையும் வென்றான். அதற்கு வடக்கே இருந்த வடநாட்டின் நிலைமை யாது? இந்தச் சமயத்தில் மகமதியர் படையெடுப்பு லாகூர் வரை வந்தது. இவ்வாறு, இந்தியர் அந்தப் பகுதியில் ஒடுங்கிக் கிடந்தனர். கிழக்குப் பகுதியில் **பாலர்** ஆண்டுவந்தனர். இராசேந்திரன் பால அரசனைத் தோற்கடித்தான். வடமதுரை வரையிலும் செல்வது அந்த நாளைய நிலையில் இவனுக்கு எளிதாயிற்று. இதற்கு முன்னரே மகமதியர்கள் தாக்கிப் பாழ்படுத்திய இடம் அன்றோ வடக்கு? இந்த மகமதியப் படை எடுப்பினை இனி வாராது தடுக்கச்செய்த முயற்சியே இவன் படையெடுப்பு என்று நாம் வியக்கலாம்.

செங்குட்டுவன், கனகவிசயர்கள் தலையில் கல்லேற்றிவந்ததுபோல, இராசேந்திரன், தான் வென்ற அரசர்கள் தலையில் கங்கை நீரை ஏற்றி வந்து,

கங்கை கொண்ட சோழபுரத்துக் கிணற்றில் நிரப்பினான்; கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய கோயிலையும் தலைநகரையும் கட்டுவித்தான்; பின்னர்க் கீழைத்தீவுகளில் வெற்றி மாலை சூடச் சென்றான்; கப்பற்படையின் பெருமை விளங்கிற்று: பர்மா அரசனை **சங்கராம விஜயோத்துங்கன்** தோற்றான்: அங்குள்ள **மாப்பப்பாள**த்திலிருந்து **ஜாவா, சுமத்திரா** என்பவற்றின் பேரரசனை **ஸ்ரீவிஜய** அரசனைத் தாக்கி வென்றான். **நிக்கோபார்** போன்ற தீவுகள் இவன் வசமாயின. **பின்.** **கெடா** என்ற **கடாரம்** வரையிலும் சென்று வெற்றியோடு இவன் மீண்டான். தமிழ் நாட்டின் அரசியல் பெருமை உச்சநிலை அடைந்த காலம் இதுவேயாம். கி. பி. 1042-இல் இவன் இறந்தான்.

இவனுக்குப் பின்னர்ச் சோழ அரசு அசையத் தொடங்கியது. இவன் மகன் காலத்தில் பாண்டியர் எதிர்ப்பு, ஈழத்தினர் கலகம், கன்னோசி எதிர்ப்பு என்றெல்லாம் எழுந்தவற்றை இவன் மகன் **இராசாதிராசன்** அடக்கினாலும், முடிவாகச் சளுக்கியர் படையெடுத்தபோது, போரில் உயிர் துறந்தான். ஆனால், இவன் தம்பி **இரண்டாம் இராசேந்திரன்** அந்தக் கொப்பத்துப்போரிலே வீராபிஷேகம் சூடி வென்றான். இவன் காலத்தில், இலங்கையினர், மலைகளில் மறைந்து கலகம் செய்துவந்தனர். இவனுடைய தம்பி **வீரராசேந்திரன்,** சளுக்கியரை வெல்வதே கடன் என முனைந்து, கூடல் சங்கமப்போரில் வென்றான்; ஆனால், தோற்ற **விக்கிரமாதித்தனு**க்குத் தன் மகளை மணஞ்செய்து கொடுத்தான். கீழைச் சளுக்கிய அரசனும்

இராசேந்திரனுக்கு மருமகனே. வீரராசேந்திரன் இறந்ததும அவன் மகன் அதிராசேந்திரன் முடிசூடினன்; ஆனல் நோய்வாய்ப்பட்டு இறந்தான். கீழைச்சளுக்கிய இளவரசன் **இராசேந்திரன்,** சோழப் பேரரசின் உரிமை கொண்டாடி, அரசனுனன். அப்போது தோன்றிய இந்த உள்நாட்டுக் கலகங்களால், கலிங்கமும் தன்னுரிமை பாராட்டியது. ஈழத்தில் சோழர் ஆட்சி மறைந்தது. சோழப்படையின் வேலைக்காரர், ஈழவரசரது படையைச் சேர்ந்தனர். ஈழநாட்டு அரசன் **விஜயபாகு,** சோழருக்கு எதிரே துணைதேடவேண்டிக் கலிங்க அரசன் மகளை மணந்தான்; பாண்டிய மன்னனுக்குத் தன் தங்கையை மணஞ்செய்வித்தான். திருமணங்களின் வழியே அரசியல் சொக்கட்டான் ஆடிய திருவிளையாடலைப் பார்க்கின்றோம்.

கீழைச்சளுக்கிய இராசேந்திரன் **குலோத்துங்கன்** என்ற பெயரோடு அரசனுனபோது இருந்த நிலை இது. தன் பழைய சளுக்கிய நாட்டை விட்டுவிடாமல் அதனைத் தன் மகன் கையில் இவன் விட்டான். பாண்டியர் ஐவர் போர் செய்தனர். குலோத்துங்கன் அவர்களை எல்லாம் வென்று பாண்டி நாட்டைச் சோழமண்டலத்தின் ஒரு பகுதியாக்கினன்; சேரநாட்டினைக் கப்பற்படை கொண்டு வென்றான். இனி வெல்ல இருந்தது கலிங்கமே. இரு முறை இதனை வெல்ல வேண்டியதாயிற்று. கலிங்கப்போரே இவன் நாளைய போரில் தலைசிறந்தது. **கலிங்கத்துப்பரணி** இந்த வெற்றியையே பாடுகின்றது.

இவனுக்குப்பின்வந்த அரசர்கள் **ஒட்டக்கூத்-தரால்** புகழப்பெற்றவர்கள் ; கி பி 12- ஆம் நூற்-றுண்டில் அரசாண்டவர்கள். குலோத்துங்கன் மகன் **விக்கிரமசோழன்** கலிங்கப்போரில் பேர் பெற்ற-வன். ஆனால், அவன் காலத்தில் தென்னுட்டிற்கே சிறப்பியல்பான பஞ்சம் வந்தது. **போசளர்கள்** தமிழ்நாட்டின்மேல் படையெடுத்துத் தொந்தரவு கொடுத்தார்கள். **பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீவல்லபன்** தன் கொடியைப் பறக்கவிட்டான். விக்கிரமனுக்குப்பின் வந்த **இரண்டாங் குலோத்-துங்கன்** தில்லையை அழகுசெய்து பட்டம் கட்டிக்-கொண்டான்; தில்லைப் பெருமாளைக் கடலில் எறிந்-தான். இவன் மகன் **இரண்டாம் இராசராசன்** பின்னர்ப் பட்டத்திற்கு வந்தான். இவன் காலத்-திலேதான் **இராசராசமாபுரம்** என்ற **தாராசுரக் கோயில்** எழுப்பப்பட்டது. இதனைப்புகழ்ந்து ஒட்-டக்கூத்தர் **தக்கயாகப்பரணி**யை முடிக்கின்றார்.

இவன்பின் வந்தவன் **இராசாதிராசன்.** இப்போதெல்லாம் பாண்டியர் கையே மேலோங்கி இருந்தது பாண்டியன் மகளை இலங்கை அரசன் மணந்ததனை முன்னரே கண்டோம். கி.பி. 12-ஆம் நூற்றுண்டில் இந்தப் பாண்டிய இளவரசியின் பேரனுன **பராக்கிரமபாகு** இலங்கையில் பேரும் புகழுமாக ஆண்டுவந்தான். இவன், பட்-டத்திற்கு வரவேண்டியவனை ஓட்டிவிட்டு அரசனுனன்; கப்பற்படை ஒன்றை வளர்த்-திருந்தான். **ஸ்ரீவல்லவன்** இறந்தவுடன் அவன் மகன் **குலசேகரன்** பாண்டியனுனன். ஆனுல், **பராக்கிரமன்** என்ற மற்றொரு பாண்டி-

யன் அவனை எதிர்த்தான். பராக்கிரமபாகு, பராக்கிரமனுக்கு வேண்டியவன். பராக்கிரமபாகுவின் படை வருவதற்கு முன்னரே பராக்கிரமன் தோற்றுப்போய்ப் போர்க்களத்தில் உயிர் விட்டான். சிங்களப்படை, அவன் மகன் வீரபாண்டியனுக்குத் துணை செய்து குலசேகரனை ஓட்டியது. அவன், சோழனிடம் சரண் புகுந்தான். சோழப்படை குலசேகரனை மதுரையில் நிலை நிறுத்தி, ஈழப்படையைத் தோற்கடித்து, வெருட்டி ஓட்டியது. பராக்கிரமபாகுவினால் இதனைப் பொறுக்க முடியவில்லை : கப்பற்படை கொண்டு சோழநாட்டைத் தாக்குவது என்று திட்டமிட்டான். ஆனால், இவனால் துரத்தப்பட்ட ஈழவரசன் ஸ்ரீவல்லவன், சோழரிடம் சரண்புகுந்திருந்தவன், சோழரது கப்பற்படையோடு சிங்களப்படையையும் தாக்கிக் கடற்கரையூர்களைச் சூறையிட்டுத் திரும்பினான். ஈழநாட்டார் தென்னாட்டு அரசியலில் தலையிட்டதன் பயன் இது.

இந்த நிலையில் இராசாதிராசன் இறக்க, **மூன்றும் குலோத்துங்கன்** அரசனானான். குலசேகர பாண்டியன் இறந்ததும் பழையபடி விக்கிரமபாண்டியன் பராக்கிமபாகுவின் உதவியால் மேலோங்கினான். குலசேகரன் மகன் விக்கிரம பாண்டியன் குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகுந்தான். அவனையே பாண்டியனாக்கினான் சோழன். **வீரபாண்டியன்** சிறைப்பட்டு உயிர்ப் பிச்சை பெற்று ஓடிப்போயினான். இச்சோழன் வடநாட்டிலும் ஈழத்திலும் வெற்றி பெற்றதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சோழர் பரம்பரை

பெருஞ்சுடராய் விளங்கிய காலம் இது. தாராசுரக் கோயில் இவன் காலத்தில் முடிவடைந்தது. **திரிபுவனக் கோயிலும்** இவன் கட்டியதே. தாராசுரத்தில் 63 நாயன்மார்கள் சிலைகள் உண்டு. இதனை ஒட்டிச் **சேக்கிழார்** 63 நாயன்மார் புராணத்தினைப் பாடியருளினார்போலும்!

மூன்றும் குலோத்துங்கன் ஏறக்குறைய 40 ஆண்டுகள் வாழ்ந்தான். அன்று சோழரது பெருமை உயர்ந்தோங்கியது. ஆனால், அவனோடு சோழர் பெருமை முடிவடைந்தது. இடையறாது நடைபெற்ற போராட்டம் காரணமாகச் சோழர் வலி குன்றியது. இவனுக்குப்பின் அரசனான மூன்றும் இராசராசன், பாண்டியர் படைமுன் நில்லாது ஓடினான். அவனுடைய படைத்தலைவனான கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவனே அவனைச் சிறைப்படுத்தினான். சோழருடைய உறவினனான போசள அரசன் **வீரநரசிம்மன்** தலையிட வேண்டியதாயிற்று. போசளன், **சோழ குல ஸ்தாபனாசாரியன்** என்ற பெயர் பெறுகின்றான். பாண்டியனும் சோழனை நிலை நாட்டியதாக் கூறிக்கொள்கிறான். சோழன், பாண்டியனிடம் மறுமுறையும் தோற்றான். போசளர்கள் சோழநாட்டின் பகுதியைக் கைப்பற்றினார்கள்.

கங்கைக்கரை வரையிலும் கடாரம் வரையிலும் சென்று வெற்றி மாலை சூடிய சோழர் குடி, இவ்வளவு கீழ்நிலைமைக்கு வந்தபின் மறைந்தது. நிலையான தமிழரசு என ஒன்று ஓங்கி வளராமலே போயிற்று. ஒற்றுமையின்றித் தன்னலத்தால் ஒரு-

வரோடு ஒருவர் போராடும் அரசுகளின் கீழ்மையே இதற்குக் காரணம்.

---

## 8. காளைப்பருவம்

பிற்காலச் சோழர்களைக் கண்டோம். இவர்கள் காலத்தில் தமிழ் நாடு, என்றும் எட்டாத உயர்நிலையை எட்டியது; உலகம் புகழ வாழ்ந்தது. அப்போது தோன்றிய புத்துணர்ச்சி, பல்லவர் காலத்தில் தோன்றிய கலைத்துறைகளில் பெருவெற்றி கண்டது. பல்லவர் காலத்தில் பூத்தவை யெல்லாம் முற்றிப்பழுத்து இன்பங்கொழித்தது. இந்தச் சோழர்கள் காலத்திலேதான்

அறநூல், தத்துவசாத்திரம், காவியம், விஞ்ஞானம், சட்டம் என்ற துறைகளில் சீனமொழி, வடமொழி, கிரேக்கமொழி, இன்றைய மேனாட்டு மொழிகள், இலத்தின் மொழி என்பவை முறையே தலைசிறந்து விளங்குகின்றன. சிலவற்றில் தமிழ் மொழியும் தலைசிறந்து ஓங்கினாலும், இந்தத் துறைகள் தமிழுக்கே சிறப்பென்று சொல்வதற்கில்லை. தமிழிற்கே சிறந்த துறை யாது? அறிவும் உணர்வும் அழகும் அன்பும் குழைந்து இசையில் ஒன்றுகி வரும் கடவுள் இன்பப்பாடல்கள் தமிழிற்கே சிறப்பியல்பு எனலாம். தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம் போன்றவை பிற மொழிகளில் அருமையே; அன்பிசையே தமிழ்த்துறை. இவை பல்லவர் காலத்தில் தோன்றியவையே ஆனாலும், தமிழ் நாடு முழுவதும், இவை தெய்விகச் சக்தி வாய்ந்த பாடல்கள் என எல்லோராலும் பாராட்டப்பெற்ற

காலம் இந்தச் சோழர் காலந்தான். ஒவ்வொரு கோயிலிலும் இவற்றைப்பாடவேண்டும் என்ற வழக்கம் வேரூன்றிவிட்டது. காமிகாகமமும், ஒவ்வொரு நாளும் கோயிலில் தீபாராதனை ஆனதும், இவற்றைப் பாடிஆட வேண்டும் என்பதை விதிக்கின்றது. தனித்தனிப் பதிகங்களாக இருந்தவற்றை முயன்று தேடி ஒன்றாகத் திரட்டிய காலம் இந்தக் காலமேயாம். முதலாம் ஆதித்த சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி தேவாரங்களைத் திரட்டினாரென்பதை அறிகின்றோம். மூவர் பெருமைகளைப் பல நூல்களில் அவர் போற்றுகிறார் பின்னர் இராசராசன் காலத்தில் இவற்றினைப் பழமை தெரிந்து பாடப் பெருமுயற்சி தோன்றியது. தஞ்சைப் பெரிய கோயிலில் முறையாகப் பாடுவோர் பல இடங்களிலிருந்தும் அரசன் ஆதரவில் ஒன்று கூடினர் **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** என்ற வைஷ்ணவ ஆழ்வார்கள் பாடல்களும் **முதலாம் பராந்தகன்** காலத்தில் **நாதமுனிகள்** முயற்சியின் பயனாக ஒன்றாகத் திரட்டப்பெற்றன. இவற்றை இசையுடன் பாடி நடிக்க அரையர்களை ஏற்படுத்தினார் இராமாநுசர்.

அப் பாடல்களை ஒட்டித் தத்துவ ஆராய்ச்சிகளும் வளர்ந்தன. **சங்கராச்சாரியர்**, பல்லவர் காலத்தவர் எனலாம். இவர் மலையாள நாட்டில் காலடியில் பிறந்தவர்; ஆனால், அந் நாளில் மலையாளநாடு, **சேரமான் பெருமாளும் குலசேகராழ்வாரும்** தமிழில் பாடிய பைந்தமிழ்ச் சேரநாடே ஆகும். **சௌந்தரிய லஹரியில்**, சங்கராச்சாரியார், ஞானசம்பந்தரைத் "**தமிழ்க்குழவி**" என்று

பாராட்டி, அவர் அம்மையின் பாலுண்டு அழகிய பாடல்களைப் பாடியதனைப் புகழ்கின்றார். பின்னே, தமிழில் வளர்ந்த **சைவசித்தாந்தம்**, மூவர் முதலிகளையும் நாயன்மார்களையும் ஒட்டி வளருவதனைத் **திருக்களிற்றுப்படியாரில்** காண்கிறோம். **மெய்கண்டார்**, தேவாரங்களை ஒட்டி ஆகம வழிபாட்டுக் கொள்கைகளையும் சங்கரர் ஒருமைக்கொள்கையையும் ஒன்றுபடுத்தி விளக்கியமை, மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நிகழ்கிறது. அவரைப் பின்பற்றி ஆகமங்களை **அருணந்தியார்** விளக்குகிறார். **உமாபதி சிவம்**, இவற்றையும் நிட்டை அனுபவங்களையும் ஒன்று படுத்திப் பாடுகிறார்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் வைணவர்கள் வேதமாயிற்று. **இராமாநுசர்** காஞ்சியில் பிறந்தவர். இவர் தமது விசிஷ்டாத்வைதக் கொள்கையை ஆழ்வார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு உருப்படுத்தி வளர்த்தார். ஆழ்வார்களின் பல பாடல்களுக்கு இவர் அழகிய உரை கூறியுள்ளார். பின் வந்த வைணவப் பெரியோர்கள், ஆழ்வார்கள் பாடலுக்குப் பொருள் கூறுவதனைப் பெருங்கலையாக வளர்த்துவந்தார்கள். **திருவாய்மொழிக்கு**, 'ஈடு' என்ற உரை, உரை யுலகத்தில் தலைசிறந்து விளங்குகிறது. தென்கலை வைணவம், ஆழ்வார்கள் பாடல்களை உயிர் என்றுகொண்டு வளர்ந்தது.

இவ்வாறு உரை எழுதுகிற முயற்சி, பிற துறைகளிலும் காண்கிறோம். தொல்காப்பியர் மரபு, இதற்குமுன் மறைந்திருந்தது. இந்நாளில் புத்துயிர் பெற்று வளர்ந்தது. பலவிடங்களில் பொருள் விளங்கா-

இருப்பதனை அறிந்து, அந்த நூலுக்கு எழுந்த **இளம்பூரணர் உரை, பேராசிரியர் உரை, சேனாவரையர் உரை** முதலியன இந்தக் காலத்தனவேயாம். உரைகளாக இல்லாமல் சூத்திரங்களாகவும் நூல் இயற்றினர் பலர். நேமிநாதம் என்பது ஒட்டக்கூத்தர் காலத்து நூல்; தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்ற இரண்டன் சுருக்கம் இது. **யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவிருத்தி** என்ற நூல்கள் இன்றும் விரும்பிக் கற்கப்படுகின்றன. காரிகை பாடியதன் சிறப்பைக் "**காரிகைக் குளத்தூர்**" என்னும் ஊரின் பெயர் பாராட்டுகின்றது. இராசேந்திரன் காலத்தில் இந்த ஊரின் பெயர் இவ்வாறு வழங்கக் காண்கிறோம். **வீரசோழியம்** என்ற இலக்கண நூல் **வீரசோழன்** என்ற வீர இராசேந்திரன் காலத்தில் கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. மணிப்பிரவாள நடைக்கு இலக்கணம் கூறுகிறது இந்த நூல். மணிப்பிரவாள நடையில் வைணவ உரைகளும், பல சைன நூல்களும் எழுந்தன. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் இன்றும் சிறப்போடு வழங்கும் **நன்னூல்** என்ற இலக்கண நூல் தோன்றியது. தமிழ்த் தண்டியலங்காரம் தோன்றியது ஒட்டக்கூத்தர் காலத்திலேதான். கலம்பகம் முதலிய பிரபந்தங்களுக்கு இலக்கணங்களும் இந்தக் காலத்தில் ஒரு வரையறை செய்யப்பட்டனவாயின. **வெண்பாப் பாட்டியல்** என்ற நூல் இதனை விளக்குகிறது. பின்னையை தமிழ் செல்லும் நெறி, ஒரு வகையால் இந்தக் காலத்திலேதான் வரையறுக்கப்பெற்றது

எனலாம். ஆனால், பாக்களிலும் சாதி பிரிக்கத் தொடங்கிய காலம் இஃது; எனவே, பிற்காலத்திற்தப் பெருங்கேட்டினை உட்கொண்டிருந்தது என்பது கூறவேண்டுமா?

உரையாசிரியர் காலம் மட்டுந்தான் இந்தச் சோழர் காலம் என்று கருதிவிடலாகாது. முதல் நூல்களாகப் பல நூல்கள் இக்காலத்தில் எழுந்தன. கம்பரது **இராமாயணம்** சோழர் காலப் புத்துணர்ச்சியின் பயனாகத் தொடக்கத்திலேயே தோன்றியது தமிழ்நாட்டையும் தமிழ் மரபையுமே கம்பர் பாடினார் எனலாம். விருத்தப்பாடல் பெருமையடைந்தது. தேவாரம் போலப் பலரும்பாட முயன்றனர். **திருவிசைப்பாக்கள்** இவ்வாறுதோன்றின. சோழர்களது பெரும் போர்—போரின் கடுமை, கொடுமை, வீரம்—எல்லாம் மக்கள் மனத்தில் பதிந்தன. **பரணி நூல்** சிறப்பிடம்பெற்றது. கொப்பத்துப் போரைப்பற்றியும் பரணி தோன்றியது. அது கிடைக்கவில்லை. குலோத்துங்கன் கலிங்கத்தின்மேல் படையெடுத்துச் சென்றதனைச் **சயங்கொண்டார்** கலிங்கத்துப் பரணியாகப் பாடியது இன்றும் இனிக்கின்றது. ஒட்டக்கூத்தர், மூன்று சோழர்கள்மேல் உலாக்கள் பாடியிருக்கிறார்; இரண்டாம் குலோத்துங்கன்மேல் பிள்ளைத் தமிழும் பாடியுள்ளார். வரலாற்றுக் குறிப்புக்கள் நிரம்பியவை இவை. அரசன் உலா வரும்போது பல வயதிலுள்ள பொது மகளிர், அவன்மேற் காதல் கொள்வதாக வருவதே உலா. **தக்கயாகப் பரணி** என்ற நூலையும் இவர் பாடியுள்ளார். விக்கிரம சோழன்மேல் ஒட்டக்-

கூத்தர் பாடிய கலிங்கத்துப் பரணி நமக்குக் கிடைக்கவில்லை.

மூவர் முதலிகளுக்கும் அடியார்களுக்கும் பெரும் பெருமை உண்டு என்பதைக் கண்டோம். இவர்கள் உருவங்கள் கோயிலில் புகுந்தன. நாயன்மார்கள் தமிழ் நாட்டில் தோன்றியவர்கள் ; ஆனால், இந்தத் தொண்டர்கள் வாழ்ந்த தமிழ்நாடு துங்கபத்திரையை வடவெல்லையாகக் கொண்டது. எனவே, நாயன்மார்கள் கதை தமிழ்த் தேசியக் கதை எனலாம். இதனை விரித்துப் புராணமாகச் சேக்கிழார், பிற்காலச் சோழர்காலத்தில், பாடினார். சேக்கிழாரது பெயரை **அருள்மொழித்** தேவர் என வழங்கும் கல்வெட்டுக்கள் கிடைக்காவிட்டாலும், அவர் தம்பியாராகிய **பாலறாவாயரைப்**பற்றிய கல்வெட்டுக்கள் இந்தக்காலத்தில் கிடைக்கின்றன. ஒரு சிலர், கம்பரே மூன்றும் குலோத்துங்கன் காலத்தவர் என்றும், சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் என்றும் கூறுவர். **புகழேந்தியார்** இயற்றிய **நளவெண்பா** என்ற நூலும் இந்தக் காலத்திலேதான் தோன்றியது என்பர்

கோயில்கள் மிகமிகப் பெரியனவாய் ஊரினர் அனைவரும் வந்து தங்கக்கூடிய வகையில் பலபல மண்டபங்களோடு தோன்றின ; பல கலைகளுக்கும் இருப்பிடமாயின. மக்கள் தம் கலை வாழும் இடமாக இந்தக் கடவுள் நிலையங்கள் தோன்றியமை அருமைப்பாடேயாம். இராசராசன் தஞ்சாவூரில் திருநாவுக்கரையர் பாடிய தஞ்சைக்குள மாமணிக்கு அருகே பெரியதொரு கோயில் கட்டினான். பெரிய

இலிங்கம்! பெரிய நந்தி! பெரிய விமானம்! அவன் அன்புள்ளம் போல எல்லாம் பெரியன! விமானம் 216 அடி உயரம். அதன் சிகரத்திலுள்ள கற்குமிழ் ஒரே கல்: 80 டன் எடை உள்ளது. கோயில் 750 அடி நீளம்; 250 அடி அகலம். பெரிய கோட்டை போலக் கோயிலைக் கட்டினுன் இராசராசன்; தேவாரம் பாடுவோர், இசைக்கருவி வாசிப்போர், நடனம் ஆடுவோர்—எல்லாரையும் அங்கே குடியேற்றினுன்; சுந்தரர் பாடியது போன்ற தக்ஷிணு மூர்த்தி வடிவம், சுந்தரர் பாடிய **ஆடவல்லான்** என்ற பெயர் கொண்ட நடராசர் வடிவம் என்று இப்படிப் பல வடிவங்களை உலோகங்களில் அமைத்தான்; தான் வென்ற ஈழநாட்டு ஊர்களின் வருவாயையும் இக் கோயிலுக்கு நன்கொடையாகக் கொடுத்தான்.

இவனுடையமகன், இதனினும் அழகிற் சிறந்த கங்கைகொண்ட சோழபுரத்தைப் பெருங் கோயிலாகக் கட்டினுன். நடனமாதர் வடிவம், **சண்டேசர்** அருள்பெறுங் காட்சி—இவை மிக அழகாக அங்கே அமைந்துள்ளன. இரண்டாம் இராசராசன் கட்டிய **இராசராசேச்சுரமே** இன்று **தாராசுரம்** என்று வழங்குகிறது. இதுவும் ஒரு கற்சிற்பப் பெருவிளக்கம். மூன்ரும் குலோத்துங்கன் கட்டிய **திரிபுவனமும்** இத் தகையதே. சோழ நாட்டில் காவிரிக்கரையோரம் எல்லாம் கோயில்கள் ஓங்கின. பாண்டி நாட்டிலும் அப்படியே. அரசர்கள் இறந்த இடத்தில் பள்ளிப்படைக் கோயில்களும் எழுந்தன. ஆதித்தசோழன் விழுந்த இடத்தில் **ஆதித்தேச்சுரம்** எழுந்தது.

இவற்றில் வழிபாடியற்றச் சைவ அந்தணர் வடநாட்டிலிருந்து வந்தனர். வடநாடு சென்ற கங்கைகொண்ட சோழன் காலத்தில் இத்தகையவர் பலர் வந்திருத்தல் வேண்டும். இவ்வாறு வட-மொழி ஈடுபாடு மிகுதி ஆயிற்று. ஆகமங்கள் வளர்ந்தன; இவற்றில் பழைய பகுதிகள் பழங் காலத்தன ஆகலாம். ஆனால், பல பகுதிகள் பிற்-காலத்தனவேயாம். ஆடவல்லான் என்ற மரக்கா-லின் பெயரைக் **காமிகாகமம்** குறிப்பிடுகிறது. அந்த மரக்கால் இராசராசன் காலத்தில் வழங்கியது; ஆதலின், அதனைப்பற்றிப் பேசும் பகுதிகள், அவன் காலத்துக்குமுன் இருந்திருக்க முடியாதன்றோ? ஆதலின், இந்தச் சோழர் காலத்தில், ஆகமங்கள் மேலும் மேலும் வளர்ந்தன எனலாம். சோழரது வடமொழி ஈடுபாட்டைக் கண்டு, சோழஅரசிகளும் அஞ்சினர்கள். வடநாட்டு மதங்கள் பல தமிழ் நாட்டில் பரவின. வடநாட்டில் வன்மை குன்றிய கொள்கைகள் தமிழ் நாட்டில் இவ்வாறு புகுவன-வாயின. சோழர்களின் குலகுருக்களாகப் பலசிவா-சாரியர்கள் விளங்கினர்கள். இவர்கள் உருவங்-களும் கல்லில் செதுக்கப்பெற்றன. ஆனால், வட-மொழி யுறவால் தமிழும் வளர்ந்தது. மணிப்பிர-வாள நடையின் வளர்ச்சியைக் கொண்டே, வட மொழி தமிழ் நாட்டில் வளர்ந்த வரலாற்றை அறியலாம்.

## 9. சோழர் கால மக்கள்

கோயில்கள் சமுதாய நிலையங்களாக விளங்கின என்றோம். எகிப்து நாட்டுப் **பிரமிடுக் கோபுரங்கள்**, சவத்தினை அடக்கஞ்செய்ய எழுப்பியவை. **தாஜ்மஹால்**, மிக அழகியதொரு கட்டடம்; சலவைக் கல்லால் எழுந்த காவியம்; ஆனால், அதுவும் அத்தகையதே. மேல்நாட்டுக் கோயில்கள் கடவுள் வழிபாட்டிற்குமட்டும் அமைந்தவை. ஆனால், சோழர் காலத்துப் பெரிய கோயில்கள் கடவுளை வழிபடும் நிலையங்களாகமட்டு மன்றிப் பொதுமக்கள் நிலையங்களாகவும் விளங்கின. அவை, **நடமாடும் கோயில்கள்** வாழ எழுந்த **படமாடுங்கோயில்கள்.** ஏழை எளியவர் என்ற வேற்றுமை இன்றி, அனைவரும், அங்கே விலையுயர்ந்த நகைகளையும், உடைகளையும், கலவைச் சாந்துகளையும், மலர்மாலைகளையும், அம்மையப்பர்மேல் கண்டு களிக்கலாம்; நிவேதனஞ் செய்யப்பெற்ற சிறந்த உணவுகளை உண்டு களிக்கலாம்; இசைக்கலை, நடனக்கலை, சிற்பக்கலை, தமிழ்க்கலை, வேதக்கலை முதலியவற்றில் ஈடுபட்டுப் பண்பாடு பெறலாம். இதில் தனியுடைமை இல்லை; பொது உடைமையே வளர்ந்தது. ஆனால், பொது உடைமை பொது அனுபவமாக வளர்ந்ததே அங்குள்ள பெருமை!

அங்கே ஓவியக்கலை வளர்ந்தது, முன்பு தெரியாமற்போயிற்று. தஞ்சைப் பெரிய கோயிலின் கருப்பக் கிருகத்தினைச் சுற்றிய சுவரின் புறத்தே எழுதியுள்ள ஓவியங்களைக் காண்கிறோம். ஆனால், இவை மகாராட்டிரர் காலத்தவை. இவற்றிற்கும் கீழ்ப்படையாகச் சோழர் ஓவியம் விளங்கியதனைக்

காலஞ்சென்ற **கோவிந்தசாமியார்** கண்டு உலகிற்கு அறிவித்தார். சுந்தரரிடம் இராசராசனுக்குப் பெரிய ஈடுபாடு போலும்! அவரை, ஆண்டவன் தடுத்தாண்ட வரலாறு, அக் கீழ்ப்படையில் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கக் காண்கிறோம். கடவுட் காட்சிகளில் மட்டுமன்றி, உலகியற்காட்சிகளிலும் ஓவியரது மனம் ஈடுபட்டதனையும் காண்கிறோம். ஏழை மக்களின் காதற் குடிசை வாழ்வும், அங்கு ஒரு புதுமைக்கலையாகத் தோன்றக் காண்கிறோம். சோழர் கால ஓவியம் இவ்வாறு அங்குக் கிடைப்பது நமது நல்ல காலமேயாம். பல்லவர் காலத்தில் தோன்றிய ஓவியம் இவ்வாறு வளர்ந்தது.

நாடகக் கலையும் அங்கு வளர்ந்தது. தஞ்சைப் பெரிய கோயிலில் ஆண்டுதோறும் **இராசராச நாடகம்** நடைபெற்றுவந்தது என்பதைக் கல்வெட்டுக்களிலிருந்தும் அறிகிறோம். இராசராசன் புகழ் இவ்வாறு நாடகமாகவும் பரவியது. சோழர்கள் தங்கள் அரண்மனைகளை இவ்வளவு நிலையானவையாகக் கட்டிக்கொள்ளவில்லை. '**பொன் மாளிகை**' என்றும், '**ஆயிரத்தளிகள்**' என்றும் அவர்கள் அரண்மனைகள் பேர் பெற்றாலும், அவை செங்கல்லாற் கட்டப்பெற்றவைகளே. ஆதலின், அவை எல்லாம் அழிந்தொழிந்தன. சமுதாய நிலையமான கோயில்கள் கடவுள் பெயரால் நிலவ வேண்டுமென்று அந்த அரசர்கள் கல்லிற் கட்டினார்கள். குடிகளை நாட்டின் உயிர்நிலை என்று கம்பர் பாடியது இந்தச் சோழர் கால உண்மையை உணர்த்தவே ஆகும்.

இந்தக் கோயில்களைக் கண்காணிக்கின்ற சபையினராப் **பன்மாகேசுரர்**,கோயிலில்கூடுவது வழக்கம். சபையினர், பலரும் கொடுக்குங் கொடைகளை வாங்கிக் கோயிலுக்கு வேண்டும் பல தொண்டுகளையும் நடத்திவந்தனர். தூங்காவிளக்கு எரிப்பதற்கு நெய்க்காகப் பலர் ஆடுகளைத் தந்தனர். சோழ-அரசரே அன்றி, அரச குடும்பத்தினர் பலரும் பல பல நன்கொடைகளை வழங்கினர்: படை வீரரும் வழங்கினர்; கோயில்களைக் கட்டினர். பஞ்ச காலத்-தில், கோயில் பணத்திலிருந்து மக்களுக்குக் கடன் கொடுப்பதும் உண்டு: பஞ்சம் போக்கும் வழி இஃது. அரசர்களது ஆணையோலைகளைக் கல்லில் வெட்டிவைத்தனர். இன்று ஆவணக்களரிகளில்[1] பத்திரங்களைப் பதிவுசெய்வதுபோலக் கோயில் சுவர்களில் கல்வெட்டாக வெட்டிவைத்தார்கள். அந்த நாளையில் **கற்றளிப்பிச்சர்** என்ற அதிகாரி கோயிலில் இருந்தார். இந்த ஆணைகள் சரிவர எழுதுவதனைச் சரிபார்க்கத் **திருமந்திர நாயகர், திருவாய்க் கேள்வியார்** என்ற பல திறத்தினர் அரசாங்கத்தில் அமர்ந்திருந்தனர்.

ஒவ்வோர் ஊரிலும் ஊர்ச்சபைகள் ஊர்க்காரியங்களைத் திறமையுடன் மேற்பார்த்துவந்தன. தலசுய ஆட்சி[2] அன்று அப்படிச் சிறந்திருந்தது. ஊரில், வயது வந்தவர்களில், கற்றவர்கள் பெயரை எல்லாம் பனைஓலை நறுக்கில் தனித்தனி எழுதிக் குடத்தில் இடுவார்கள். இளஞ்சிறுவன் ஒருவன் எல்லாருக்கும் தெரிந்தாற்போல ஒரு நறுக்கினை எடுத்துத் தருவான். எல்லாரும் காணும்படியாக

1. Offices of Registration 2. Self Government

உள்ளங்கையை விரித்துவைத்துக்கொண்டு அந்த நறுக்கினைக் கையில் ஏற்கவேண்டும்: ஏற்றவர்கள், அந்த நறுக்கில் எழுதியுள்ள பெயருள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அறிவிப்பார்கள். ஊர் ஒவ்வொன்றும் பல **குடும்பாகப்** பிரிக்கப்படும்; ஒவ்வொரு குடும்புக்கும் ஒவ்வொருவர் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவர். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே ஊர்ப்பெருமக்களாகச் சபைகூடுவர். இவர்கள் சிறு சிறு குழுவாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வொரு வேலையை மேற்பார்த்து வந்தனர். இன்றைய நகராண்மைக் கழகங்களில் நிலையான குழுக்கள்[1] இருப்பதையொக்கும் இஃது. இக் குழுக்களுக்கு '**வாரியங்கள்**' என்பது பெயர்; பஞ்சாயத்து என்று இன்றும் வழங்குகிறோம். குழு ஒவ்வொன்றிலும் ஐவர் ஐவர் இருந்தனர். பொன் வாரியம், ஏரி வாரியம், பஞ்சவாரவாரியம் முதலிய வாரியங்கள் இருந்தன.

கோயிற் சபைகளையும் ஊர்ச் சபைகளையும் மேற்பார்வை பார்க்க, நடுவிடத்து அதிகாரிகள் நாட்டைச் சுற்றி வந்து, அவ்வவற்றின் கணக்குகளை ஆராய்வார்கள். ஒரு காலத்தில் இவை பிறழ்ந்து நடந்ததால், நாடு முழுதும் கண்காணித்து வரக் **கண்டராதித்தர்** என்ற சோழப் பெருமகனார் சென்றார் என அறிகின்றோம்.

அரசர்கள், விளை நிலத்தில், வரிகள் வாங்கினார்கள். இதில், ஒருமுறை இருத்தல்வேண்டி, இராசராசன், வயல்களை அளந்து தீர்வைத் திட்டத்தினை ஒழுங்குபடுத்தினான். பின்னர், முதலாம் குலோத்-

1. Standing Committee

துங்கன் காலத்திலும் ஆங்கில நாட்டில் நிலவரை யறைக் கணக்கு[1] எடுத்த அதே ஆண்டில் (கி. பி. 1088) சோழநாட்டிலும் நிலவரையறை நடை-பெற்றது. நிலவரியே **உயிர் நிலை**. ஆனால் பலபல தொழில் செய்வாரும் உரிமைக் கட்டணங்கள்[2] கட்டிவந்தனர். வாணிகஞ் செய்வாரும் விற்பனை வரி செலுத்திவந்தனர். முதல் குலோத்துங்கன் ***சுங்கந்தீர்த்த சோழன்*** எனப் பெயர் பெற்றான்.

வாணிகஞ் சரிவர நடப்பதற்காக, மரக்கால், நிறைகள் முதலியன நாடு முழுவதும் ஒரே அளவாக இருக்கவும், மாறுட்டம் இலஞ்சம் முதலியன நேரா-தபடியும் இன்று காக்கப்பெறுவதுபோல, அன்றும் வரையறை செய்யப்பெற்றன என்பதை முன்னரே குறித்தோம். வாணிகப் போக்குவரவில் **சுங்கம்** வாங்குவதும் உண்டு. இதனால் வாணிகத்திற்குப் பெரிய இடையூறு நேர்ந்தது போலும்! மக்கள், இடைவழியெல்லாம் அலைக்கழிக்கப்பெற்றார்-கள் போலும்! வாணிகரது முறையீட்டின்மேல், முதலாம் குலோத்துங்கன் சுங்கவரியை நீக்கினான். அதனால், ***சுங்கந்தீர்த்த சோழன்*** என்று அவனுக்குப் பெயர் வழங்குவதாயிற்று.

கோயில்களுக்கு நன்கொடையாக அளிக்கப்-பெற்றவை **தேவதானங்கள்**; பார்ப்பனருக்கு அளிக்கப்பெற்றவை **பிரமதேயங்கள்**. இவ்வாறு பலபல வகையான கொடைகள் அரசர்களால் வழங்கப்பெற்றன. மற்றவர்களும் இறையிலியாக நிலங்களைக் கோயில்களுக்குத் தந்துதவினர். இறை-யிலி நிலமாக்குவதற்கு இறைவரிக்காக மொத்த-

1. Domesday Survey 2. Licence Fees

மாகப் பணம் செலுத்திவிடலாம். இப்படி நன்கொடை அளித்தவர்கள், கல்லில் அதனை வெட்டி அறிவித்ததோடு, "இதனைக் காத்தவர் திருவடி எம் தலைமேலன" என்று எழுதியும் வைத்தனர். இவ்வாறு, எல்லாத் துறைகளிலும் அரசர்கள் அன்போடு அரசு செய்துவந்தனர் என்பது தெரிகின்றது.

அரசனுடைய நாடு பலபல மண்டலங்களாய்ப் பிரிந்துநின்றது. பாண்டியநாடு **சோழப்பாண்டி மண்டலம்** எனப் பெயர்பெற்றது கண்டோம். ஈழம் **சனநாத மண்டலம்** என்று பெயர் பெற்றது தொண்டை மண்டலம் **சயங்கொண்ட சோழமண்டலம்** எனப் பெயர்பெற்றது. இவற்றை ஆள்வோர் **மண்டலாதிபதிகள்.** அரசிளங்குமாரர், பெரும்பான்மையும் மண்டலாதிபதிகளாய் ஆண்டுவந்தனர். மண்டலங்கள் வளநாடுகளாகவும், வளநாடுகள் கோட்டங்களாகவும் கூற்றங்களாகவும், இவை ஊர்களாகவும் பிரிந்திருந்தன. சயங்கொண்ட சோழமண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிந்திருந்தது என்பதை நாம் அறிவோம். ஊரைக் குறிக்கும்போது, ஒவ்வொரு கல்வெட்டும் இந்தக் குறிப்புக்களையெல்லாம் விளக்கமாகக் கூறி, எல்லைகளையும் விளக்கக் காண்கிறோம். வேதங்களைக் கற்ற பிராமணர் வாழும் தனியூர்களுக்குச் **சதுர் வேதிமங்கலம்** என்பது பெயர். கொடை தரும் அந்த அந்த அரசன் பெயரோடு அவை வழங்கும்: **மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம்** முதலிய பெயர்களைக் காண்கிறோம் அடிக்கடி போர் நிகழும்போது, இவை பிறரால் கைப்பற்றப்-

படுவதும் உண்டு. அரசு நிலைத்ததும். அரசன் அவற்றைத் தன் பெயரோடு நிலைநாட்டித் திருப்பிக் கொடுப்பதும் உண்டு.

படைத்தலைவர்களுக்குத் **தண்டநாயகர்** என்பது பெயர். இராசேந்திர சோழன் விக்கிரம சோழன் முதலியோர் இளவரசர்களாய் இருந்த போது, தாமே படையை நடத்திச்சென்று, வாகை மாலை சூடிவந்தனர். யானைப்படை, குதிரைப்படை ஓட்டைப்படை, காலாட்படை என்ற இவை, வேல் வாள் ஈட்டி முதலியன ஏந்திப் போருக்குச் சென்றன. அந் நாளைய போரின் கொடுமையை இன்றும் பரணியில் பாடி அறியலாம். அப்போதப்போது, கூலிக்கு அமர்த்திக்கொள்ளும் படைகளே கூலிப்படைகள். இவற்றால் இலங்கை அழிந்ததனைக் கண்ட இராசராசன், நிலையாகப் படைகளை அமர்த்திக்கொண்டான். இவற்றிற்கு **நிலைப்படைகள்** என்பது பெயர். மெய்காப்பாக அரசனோடு சென்று அரசனோடே மடிகின்ற படையும் உண்டு. அப்படையினரே வேலைக்காரர் என்று பெயர் பெறுவர்.

தமிழ் நாட்டின் பண்பாடு தமிழ் நாட்டோடு ஒடுங்கி அடங்கிக் கிடக்கவில்லை. அது கீழைத்தீவுகளில் எல்லாம் பரவியது. வணிகர் கூட்டத்தினர்-ஆயிரவர், மணிக்கிராமத்தார் முதலிய கூட்டங்களாகப் பிற நாடுகளில் வாணிகஞ் செய்துவந்தனர். அவர்களுடைய தமிழ்க் கல்வெட்டுக்கள் அங்கும் கிடைக்கின்றன; தமிழ் நாட்டு விக்கிரகங்களும் அங்கே கிடைக்கின்றன. **சையாமில்** இன்றும் **திருவெம்பாவை-திருப்பாவை** என்றபெயரோடு பெரிய திருவிழா ஒன்று நடந்துவருகிறது. இரா-

சேந்திரன் காலத்தில் அவன் படையெடுத்துக் கீழைத்தீவுகளையெல்லாம் வென்றதனை அறிந்தோம். இதற்குப் பேருதவியாய் இருந்தது இராசராசன் வளர்த்த கப்பற்படையே ஆகும்.

சோழ அரசர்கள், சிலபோது பொறுமை நெறி பிறழ்ந்தாலும், பெரும்பான்மையும் எல்லா மதத்தினரையும் ஒரு கண்ணுகக் காத்துவந்தனர். இரண்டாம் குலோத்துங்கன் தில்லைக் கோவிந்தராசரைக் கடலில் எறிந்தான் என்று சொல்வது உண்டு. இராமாநுசர் போசள நாட்டிற்குப் போகவேண்டியதாயிற்று என்பர். பல வைணவக் கோயில்களும் சோழர்களால் கட்டப்பெற்றன; சைனரும் பாராட்டப்பெற்றனர். காரிகைக் குளத்தூர் என ஓர் ஊர்ப்பெயர் வந்தது கண்டோம். யாப்பருங்கலக்காரிகையால் வந்த பெயர் இஃது. இந்த நூலினை எழுதியவர் சமணர். வீரசோழன் காலத்தில் அவன் பெயரால் எழுதப்பெற்ற வீரசோழியத்தினை எழுதியவர் **புத்தமித்திரனார்** என்ற பௌத்தர். இராசராசன், பர்மா அரசருக்கும் ஸ்ரீவிஜய அரசருக்கும் நாகப்பட்டினத்தில் பௌத்தக் கோயிலைக் கட்டிக்கொள்ள உத்தரவு கொடுத்ததோடு **ஆனைமங்கலம்** என்ற ஊரினையும் அதற்கு முற்றூட்டாகக் கொடுத்தான். இதனை அவன்மகன் **இராசேந்திரனும்** உறுதிசெய்தான். சோழர் கல்வெட்டிலிருந்து புத்தர்களும் சமணர்களும் வைணவர்களும் சைவர்கள்போலச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தமை அறிகிறோம்.

## 10. விளக்கு எரிந்து அவிகிறது

பாண்டியர் சோழரைச் சரண் அடைந்த கதை எல்லாம் போயிற்று. சோழர் பெருமை பாண்டியர் காலில் விழுவதாக முடிந்து மறைந்ததனைக் கண்டோம். ஆனால், தமிழரிடம் எழுந்த புத்துணர்ச்சி இன்னும் மறையவில்லை. குலசேகர பாண்டியனுக்குப் பின்வந்த **சுந்தர பாண்டியன்** 1216 முதல் 1238 வரை ஆண்டு மூன்றும் இராசராசனை ஒடுக்கியது கண்டோம். அடுத்து வந்த **இரண்டாம் குலசேகர**னுக்குப்பின் **இரண்டாம் சுந்தரபாண்டியன்** 1253 வரை ஆண்டான். போசளருக்குப் பாண்டியரும் உறவினரானமையையும் முன்னரே கண்டோம். போசள வீரசோமேசுவரனை மாமடி (மாமனார் அடிகள்) என்று பாண்டியன் பாராட்டினான். போசளர் தலையீடு தமிழ்நாட்டில் அப்போதப்போது எழுந்தாலும் அதுவரையில் போர் எழவில்லை. பின்வந்த **மூன்றும் சுந்தர பாண்டியனுக்கு** இத் தலையீடு சிறிதும் பிடிக்க வில்லை. பாண்டியர் புகழை நிலைநாட்ட வேண்டுமென்று அவன் உறுதிகொண்டான்; போசளர்களைத் தோற்கடித்து அவர்களோடு போர் புரிந்து வந்தான். ஆனால், அவர்கள் ஸ்ரீரங்கத்தினைக் கைப்பற்றினர். **கோப்பெருஞ்சிங்கன்** பாண்டியரது அடிபணிந்தான். காஞ்சியில் ஆண்ட **கண்டகோபால**னும் பாண்டியருக்குத் தோற்றான். காஞ்சி, பாண்டியர் கைக்கு வந்தது. பாண்டியன் தெலுங்கு அரசர்களையும் வென்றான்; நெல்லூர் வரையில் பாண்டியர் ஆட்சி பரவியது. பாண்டியன் இலங்கைமேலும் படை-

யெடுத்துச் சென்றான். இலங்கை, வடவரசு என்றும் தென்னரசு என்றும் இரு பிரிவாய் அன்று இருந்தது. சிங்கள மன்னன் மணந்த கலிங்க இளவரசியோடு தொடர்பு பாராட்டி வந்தவர், பின் ஆரிய அரசர் என யாழ்ப்பாணத்தினை ஆளத் தொடங்கினராம். இவர்கள், தங்கள் அரசினைப் பரப்பியது காரணமாகச் சிங்களவர் இலங்கையின் நடுவிடத்திற்குச் சென்று அரசாண்டனர். சுந்தர பாண்டியன்பேரால் இலங்கைமீது படையெடுத்த **வீர பாண்டியன்** இந்த இரு அரசையும் வென்றான்; வடக்கே **திரிகோணமலையில்** தன் கயற்கொடியைப் பறக்கவிட்டான்; தெற்கே **திரிகூடகிரியில்** கயற்கொடியை உயர்த்தினான். திரிகோணமலையில் இப்போதுள்ள கோட்டையில் பாண்டியர் இலச்சினை பொறித்த கற்களை இன்றும் காணலாம்.

சுந்தரபாண்டியனுக்குப் பிறகு மூன்றும் குலசேகரன் 1268 முதல் 1310 வரை நாற்பது ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்து, பேரும் புகழும் பெற்று, நாட்டில் அமைதியை நிலைநாட்டினான். இவன் காலத்திலேதான் வெனிஸ் நகரத்திலிருந்து புறப்பட்டு உலகினைச் சுற்றிப் பார்த்த **மார்க்கோ போலோ** என்றவன் தமிழ் நாட்டிற்கு வந்தான். அவன், பாண்டியன் பெருமையை எழுதி வைத்துள்ளான்; பாண்டியர் செல்வத்தினையும் அணிகலன்களையும் கண்டு வியந்துள்ளான்; தமிழ் மக்கள் கள்ளருந்துபவர்களையும் புலால் உண்பவர்களையும் பாராட்டுவதில்லை என்று எழுதியுள்ளான். ஆனால், இவ்வாறு புலால் உண்ணாத வீரர்களைப்பற்றி அவனுக்கு மதிப்பு ஏற்படவில்லை. அரசனுக்கு மெய்-

காப்பாளராய் இருந்து, அவன் இறந்தால் உட-னிறக்கும் வேலைக்காரப் படையினரைப் பற்றியும் அவன் சுட்டியுள்ளான்; குதிரைகளை ஆண்டுக்குப் பதினாயிரமாக வாங்கி அவற்றிற்குச் சரியாக உணவு தரத் தெரியாமல் அவற்றை இறக்க விடுவதனையும் குறித்துள்ளான், பாண்டியனும் தம்பிமாருமாக ஐவர் வெவ்வேறு பகுதியில் அரசாண்டமையையும் எழுதி வைத்துள்ளான்; முத்துக் குளிக்கும் முறைகளையெல்லாம் விளக்கமாக எழுதியுள்ளான்: கிடைத்த முத்தில் ஒரு பகுதி பாண்டியரைச் சேருமாம்: இதனோடு அமையாது, சிறந்த முத்தினை அரசர் விலை கொடுத்து வாங்கினராம். இந் நாட்டில் காளைப் பருவத்தினர் தம் தந்தை கையைப் பாரா-மல் தம் காலிலேயே நின்று வாழ முயலுவதனையும் அதற்காக முத்து வியாபாரஞ் செய்வதனையும் அவன் எழுதியுள்ளான். முத்துக் குளிக்கச் செல்-லும்போது மந்திரத்தால் மீன்களைத் தடுக்கவும் முத்துக் குளித்துத் திரும்பியபின்னர்த் தம் பின்னே வந்து பிறர் முத்துக்குளியாதபடி மீன்கள் அவர்-களை விழுங்க மந்திரத்தால் ஏவவும் பார்ப்பனர் துணை கிடைத்ததாம். கோவில்களில் பரத நாட்டி-யம் நடப்பதனை அவன் அறிந்துகொள்ள முடியா-மையால், "பிசாசம் உண்டபின் பெண்கள் கையை-யும் காலையும் ஆட்டிக்கொண்டிருக்கிறார்கள்," என்று எழுதிவைத்துள்ளான்; உடன்கட்டை ஏறு-வதனைப் பற்றியும் குறித்துள்ளான்.

'**வாசப்**' என்ற அந்த நாளைய ஆசிரியர் எழுதிய சரிதத்திலிருந்தும் இந்தப் பாண்டிய அரசி-னைப் பற்றி அறிகிறோம். கீழைத் தீவுகளுக்கும்

சீனுவுக்கும் போய் அங்கிருந்து வரும் கப்பல்களும், வடக்கே சிந்நநதி வரையில் போய் வரும் கப்பல்களும், மேல் நாடுகளுக்குப் போய் வரும் கப்பல்களும், அவ்வந் நாட்டுப் பொருள்களைக் கொண்டுவந்து காயற்பட்டினத்தில் குவித்தனவாம். நாடு நாற்பதாண்டு வரை இவ்வாறு செழித்தோங்கியது.

இலங்கையில், குலசேகரவர்மன், சிறிது முயன்றே, மீண்டும் தன்னுட்சியை நிலைநிறுத்த வேண்டுவதாயிற்று. உள் நாட்டுக் கலகங்களும் பஞ்சமும் நாட்டினைச் சீர்குலைத்தன. வடவிலங்கையை ஆரியச் சக்கரவர்த்தியே குலசேகர பாண்டியன் படைத்தலைவனுகப் **புவனேகபாகு**வின்மேல் **படை**யெடுத்து வென்ருன். புத்தர் பெருமானுது திருப்பல், புனிதமாக வைக்கப்பெற்றிருந்ததனைப் பாண்டி நாட்டிற்கு அவன் எடுத்துச் சென்ருன். இலங்கை துன்பக்கடலில் மூழ்கியது. **பராக்கிரமபாகு** என்ற இளவரசன் பாண்டியனிடம் இரந்து, புனிதமான திருப்பல்லைக் கொண்டுவந்து, இலங்கையில் நிலையாக வைத்தான். நிலையாகத் திறைசெலுத்துவதாக உறுதி கூறியபின், இலங்கை அரசனுன பராக்கிரமபாகுவிடம் இலங்கை அரசினைப் பாண்டியன் ஒப்படைத்தான்.

விளக்கு அவிவதற்குமுன் சுடர்விட்டெரிவதுபோலக் குலசேகரனுடைய ஆட்சி இவ்வாறு சிறந்தோங்கி விளங்கியது. ஆனுல், அப்போதே வீழ்ச்சிக்கு வழி யேற்பட்டுவிட்டது எனலாம். பாண்டிய அரசரில் ஒருவன் காதலியை அவன் அண்ணன் கொண்டுபோய்விட்டதனையும், அதனைப் பொறுக்க மாட்டாமல் தம்பி கொதித்து எழுந்த போதெல்-

லாம் அவர்களுடைய தாய் அவர்கள் போருக்குப் போனால் தான் இறப்பதாக அச்சுறுத்தியதனையும், அது காரணமாகத் தப்பி அடங்கியிருந்ததனையும் மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளான். குலசேகரனுக்கு அவனுடைய அரசியிடம் சுந்தரபாண்டியன் பிறந்திருந்தாலும், அவனுடைய வைப்பாட்டியிடம் பிறந்திருந்த மூத்த மகனும் வீரபாண்டியனையே அரசனுக்கக் குலசேகரன் விரும்பினான். இதனை அறிந்ததும் இளையவனாகிய சுந்தரபாண்டியன் குலசேகரனைக் கொன்றான் காமமும் கொலையும் இவ்வாறு தாண்டவமாடின. ஆனால், அமைதியை நிலை நாட்டிய குலசேகரனிடம் நாட்டு மக்கள் பேரன்பு பூண்டிருந்ததால், அவனைக் கொன்றவன்மேல் நாடு சீறி எழுந்தது. சுந்தரபாண்டியன் தோற்றோடினான். ஆனால், அவன் மனம் தோல்வியைப் பொறுது வாடியது. மகமதியர் இதற்குள் வடநாட்டினைப் பிடித்துக்கொண்டு, டில்லியில் ஆண்டுவந்தனர். அல்லாவுதின் தன் படைத்தலைவன் மாலிக்காபரைத் தென்னாட்டின் மேல் படை எடுக்க ஏவினான். போசளர் தமிழ்நாட்டின் வடக்கே இருந்தனர். முஸ்லிம் படையைத் தடுக்க வீரபாண்டியன் பாண்டியப் படையையும் அனுப்பியிருந்தான். இருந்தும் என்ன? நாட்டினைக் காட்டிக்கொடுப்பவர் இருக்கும்பொழுது நாடு எப்படி வாழும்? இந்தப் பெரும்படை இருந்த இடத்துக்குப் போகாமல், நேரே எதிர் பாராத வகையாகப் பாண்டி நாட்டிற்குள் பாய்வதற்குச் சுந்தரபாண்டியன் மாலிக்காபருக்கு உளவு சொன்னான். பழி வாங்கவேண்டுமென்ற இவனது

இழிந்த நோக்கத்தால், நாடே உரிமை இழந்தது. மதுரையினுள் புகுந்தான் மாலிக்காபர். வீரபாண்டியன் பின்வாங்கிப் பின் பெரிய யானைப்படையுடன் மதுரையைத் தாக்கியதும், மாலிக் காபர் தான் சூறையாடிய பொருள்களையெல்லாம்கொண்டு வடநாடு திரும்பினான். நாடு குழப்பத்தால் சீர் அழிந்தது. சேரஅரசன் **இரவிவர்மன் குலசேகரன்**, அதுதான் சமயமெனப் பாண்டியர்களைத் தனித்தனியே தோற்கடித்துக் காஞ்சியிற் பட்டங்கட்டிக்கொண்டான். சுந்தரபாண்டியன் இறந்தவுடன், வீரபாண்டியன், நாட்டைச் செம்மைப்படுத்த முயலும்போது 1319-இல் **குஸ்ரூகான்** தென்னாட்டைக் கொள்ளையடிக்கப் படையெடுத்து வந்தான். சமுதாய உயிர்நிலையங்களாம் கோயில்கள் சிதைக்கப்பெற்றன. 1330-இல் **மகமது பின் தோக்லாக்கு** என்ற டில்லி அரசன், தென்னாட்டைத் தன் அரசினுக்குள் சேர்த்துக்கொள்ள **ஜலாவுதீன் அஷன்ஷா** என்பவனை அனுப்பினான். அவன் மதுரைச் சுல்தானாயினன்.

யாழ்ப்பாணத் தமிழ் அரசும் 1385-இல் ஒழிந்தது. கோனூர்கள் என்ற தமிழ் இனத்தவர்களைச் சேர்ந்த **அரசக்கோன்** என்ற சிங்களப் படைத்தலைவன் யாழ்ப்பாணச் சிங்கபுரி அரசனை வென்றான்.

தமிழர்கள் உரிமையோடு ஆண்ட காலம் இவ்வாறு பதினான்காம் நூற்றாண்டோடு முடிவடைந்தது. முஸ்லிம் படையைத் தடுக்க இந்துக்கள் ஒன்றுனார்கள். விசயநகர இராச்சியம் தோன்றியது. அது மதுரைச் சுல்தான்களை மதுரையி-

லிருந்து ஓட்டியது. விசயநகர இராச்சியத்தின் ஒரு பகுதியாகத் தமிழ் நாடு விளங்கத் தொடங்கியது. அப்போதும் இங்குள்ள தலைவர்கள் ஒருவரோடு ஒருவர் பகை கொண்டு. நாட்டினைக் காட்டிக்கொடுத்து, முஸ்லிம்களிடமும், பின் ஆங்கிலேயரிடமும் நாட்டினை அடகு வைத்து, உரிமை இழந்தார்கள். தமிழர்கள் ஒற்றுமைப்படாமையால் இந்த அரசர்களை நீக்கியே ஒற்றுமைப்படுத்த வேண்டும் என இயற்கை அன்னை கருதினள் போலும்!

அசோகனுக்கும் அடங்காது, உலகெலாம் புகழ் பெற்ற தமிழ் உரிமைத் தமிழரசு—சமுத்திரகுப்தனும் கால் எடுத்துவையாத தமிழரசு—இவ்வாறு உரிமை இழந்து அடிமையாயிற்று. அடிமையான வரலாறு வேறொரு வரலாறு. அந்தத் துன்பக் கதையினை இன்று நாம் கூறவில்லை. துன்பத்தின்பின் விடுதலை பெற்றுள்ளோம்; ஒற்றுமை மிக்கு விளங்குகிறோம். ஆதலின், அடிமை வரலாற்றினை விடுதலை பெற்ற வரலாறு என வேறே ஆராய்தல் வேண்டும். மேற்கேயும் கிழக்கேயும் கப்பலோட்டிப் பாட்டினையும் செல்வத்தினையும் வளர்த்துக் கங்கை வரையிலும் தென் கடலின் கீழ்க்கோடி வரையிலும் ஆட்சி புரிந்த தமிழரசு வளர்த்த கலைகளும், தமிழும், சிற்பங்களும், ஓவியங்களும், பண்ணும், நாட்டியமும் இன்றும் வாழ்ந்து, பழைய பெருமையைப் பாடி நமக்குப் புத்துயிர் அளிக்கின்றன.

# II. சைவம் சிறந்த கதை[1]

அன்பர்களே,

வணக்கம் பலப்பல. இன்று என் வாழ்வில் ஒரு விளக்கம் மிக்க நாள். அன்று, அறிவுச் சுடர் ஏற்றிய நாட்டில் இருந்துவருகின்றேன்: இன்று, அறிவு விளக்கத்தில் சிறந்து வாழும் உங்களிடம் நிற்கின்றேன். பழைய அறிவுச் சுடர்கொண்டு, புதிய அறிவு விளக்கத்தில், "அறிவை அறிவது பொருள்" என அருளிய பெருமானின் அருளை இங்கு அறிந்து உலகமும் நாமும் உய்யும் வழியைக் காண இங்குக் கூடி, உடலும் உள்ளமும் உயிரும் குழைந்து குலாவுகின்றோம். இத்தகைய தொண்டிற்கு ஒரு வகையாலும் உதவாத என்னை அன்பு ஒன்றே கருதி வரவேற்று உயர்த்திய உங்கள் பெருந்தன்மைக்கு எந்த வகையால் நான் நன்றி செலுத்தக் கூடும்?

உங்களைக் காண்பதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி. பழந் தமிழ்ப்பெருமை எல்லாம் வெறுங்கனவாய்ப் பொய்க்கதையாய்க் கழிந்தொழிந்த நாட்டிலிருந்து வருகிறேன்; புத்துலகில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக முன்னணியில் நிற்கும் இலங்கைத் தமிழ் மக்களைக் காண்கிறேன். கதை எல்லாம் வரலாறாகிறது; கனவெல்-

1. கொழும்பு சைவசித்தாந்த மகா சமாஜம் 44-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், சைவர் மாநாட்டில், 7—1—'50ல் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

லாம் நனவாகிறது. "திரைகடலோடியுந் திரவியம் தேடு." என்று இளங் குழவிகள் இன்றும் தமிழ் நாட்டில் கற்கின்றன. அதன் உண்மைப் பொருள் இங்குத்தான் விளங்குகிறது. தமிழன் இலங்கை வந்தான்; பர்மா சென்றான்; கீழைத் தீவுகளுக்குப் போனான்; சீனாவிற்குள்ளும் எட்டிப்பார்த்தான். பழைய சீன நூல்கள் இவனறிவைப் புகழ்கின்றன. இவனுடைய நாகரிகம் இங்கெல்லாம் ஓங்கி வளர்கின்றது. மேலைக்கடலிலும் இவன் கப்பலோட்டினான். பாபிலோனியா நாகரிகம் இவன் அறியாததன்று. இவன்பேசிய தோகை, கவி முதலிய சொற்கள் விவிலியத்திலும் இடம்பெற்று இவன் பழம்பெருமையைப் பரக்கப் பேசுகின்றன. எகிப்து நாட்டுப் பிரமிடு கோபுரங்களில் இவன் கொண்டுசென்ற தமிழ் நாட்டுத் தேக்கு மரங்கள் இன்றும் அவற்றின் முதுகெலும்பாய் நின்று நிலவுகின்றன. இவன் உரோமாபுரிக்கும் சென்றான். அந் நாட்டு மங்கையர் இவன் கொண்டுசென்ற முத்துக்கும் பட்டுக்கும் அடிமையாய்த் தம் பழைய எளிமையை மறந்தனரே என அந் நாட்டுப் பெரியோர் மனம் வருந்தினராம். இவ்வாறு உலகெங்கும் திரைகடலோடித் திரிந்தவன் தமிழன்.

பலவகை மதப் போராட்டங்கள் இந்திய நாட்டில் புயற் காற்றென வீசிநின்றபோதும் அவற்றிடையே அமைதியாய் வாழ்ந்தவன் தமிழன். அசோகனும் பாராட்டிய பெருமை தமிழனுக்கு உண்டு. அசோகனுடைய பாட்டனான சந்திரகுப்தன், துறவியாய்த் தென்னாடு போந்து, அன்று தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் இருந்த எருமை நாட்டில்

(மைசூரில்) வாழ்ந்தானும். வடக்கே போராட்டம் மிக்கபோது அமைதி தர முந்தியது தமிழ் நாடே. பௌத்தர்களும் தமிழ்நாட்டிற்கு வந்தனர். தருக்க-நூலை வளர்த்த பெருமை தமிழனுக்கு உண்டென்-பதனை மணிமேகலையில் காண்கிறோம். மணிமேகலை தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதையில் வரும் தருக்க நூலின் மொழி பெயர்ப்பாகச் சீனமொழியில் ஒரு நூலை உலகம் இன்று கண்டுள்ளது. தமிழ் நாட்டுத் **தருமபாலர்** இயற்றிய அந் நூல், தமிழ்-மரபினைப் பின்பற்றியதே எனலாம். அவருடைய ஆசிரியராம் **திங்நாகரும்** காஞ்சிபுரத்தில் பிறந்து உலகெங்கும் புகழ்பெற்ற நாளந்தாப் பல்கலைக்கழ-கத்தில் வீற்றிருந்தார். ஆசீவகர் முதலிய மதத்தின-ரும் தமிழ் நாட்டிற் புகுந்தனர். அவர்களைப்பற்றிய குறிப்புக்களைத் தமிழ் மொழியில் அன்றி வேறெங்-கும் தெளிவாகக் காணுதல் அரிது. உபநிடதக்-கலை பிறந்த இடம் எதுவாயினும், அதற்கும் புத்-துயிர் கொடுத்து வாழவைத்த நாடு தமிழ் நாடே ஆம். **சங்கரர்** பிறந்தது அந் நாளைய தமிழ்ச் சேரர் நாட்டிலேதான். ஞானசம்பந்தப் பெருமானுடைய பாட்டில் தாம் ஈடுபட்டதனை அப் பெரியாரே தம்-முடைய **சௌந்தரியலகரியில்** தம்மை மறந்து பாடுகிறார். **இராமாநுசரும்** சென்னைக்கு அருகில் உள்ள திருப்பெரும்பூதூரில் பிறந்தவரே ஆவர். அவர், ஆழ்வார்கள் தமிழில் பாடிய அருளிச்செயல் அமுதங்களைப் பின்பற்றியே, தம் வடமொழிப் பேருரையை இயற்றினர் என வைணவர்கள் இன்றும் நம்புகிறார்கள். தமிழ் நாட்டுத் தலைசிறந்த வீரனும் **இராசேந்திர சோழன்** — கடாரமும்

கங்கையும் கொண்ட சோழன்—வட நாட்டிலிருந்த சைவ ஆகமப் பண்டிதர்களையும் கொண்டுவந்தான். காஷ்மீரச் சைவத்தோடு கன்னியா குமரிச் சைவமும் ஒன்ருய், இலங்கைச் சைவமாய்ப் பொங்கிவழிந்தது. மகமதியர், தமிழ்க் கப்பலோட்டிகளோடு ஒன்றுசேர்ந்து கடலைக் காத்துவந்தனர்; தமிழரோடு தமிழராய்ப் போர்த்துக்கேசியரை எதிர்த்துக் கடற்போர் புரிந்தனர். வீரமா முனிவர் (Beschi) போன்ற கிறிஸ்தவர்களும் தமிழரொடு தமிழராகித் தமிழுடை பூண்டு துறவிக்கோலத்தில் தமிழ்க் காப்பியங்கள் பாடித் தமிழை வளர்த்தனர்! சிலுவையில் கிறிஸ்து நின்ற காட்சியைப் பழந்தமிழரது மடலேறுதல் என்ற சொற்ருடர்கொண்டு கிருஷ்ணப் பிள்ளை பாடுகின்றனர். தஞ்சைப் பெரிய உடையார் மதிலுக்குள்ளாகவே கிறிஸ்தவக் கோயில் கட்டச் **சரபோஜி** உரிமை அளித்த காட்சியை இன்றும் நாம் கண்டு களிக்கலாம்.

இவ்வாறு எந்நாட்டினரோடும் எக் கொள்கையினரோடும் ஒத்து வாழப் பழகியவன் தமிழன். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," என்று **கணியன் பூங்குன்றனர்** பாடியதில் புதுமை யாது? வேறு எவ்வாறு தமிழன் பாடியிருக்க முடியும்? "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்," என்று முகமது நபி பாடுவதற்கு முன்னரே தமிழ்ச் சித்தராம் திருமூலர் பாடவில்லையா? இந்த உண்மையைக் காண்பதன்ருே அறிவு விளக்கம்? கல்வியின் பயன்? இதனாலன்ருே திருவள்ளுவர்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு,"

என்று வயிறெரிந்து கேட்கின்றார்? இத்தகைய கல்வி, இன்றேனும் நாகரிகம் மிக்க நாட்டில் நிலவு-கிறதா? குடியரசு கூத்தாடும் **அமெரிக்காவில்** வெள்ளையரும் கறுப்பரும் முட்டிக்கொள்வது என்று முடியுமோ! தென்னாப்பிரிக்காவில் நிகழும் நிறவெறியாட்டினைக் கண்டு உலகமே திடுக்கிட்டுப் போகவில்லையா? இன்றைய நிலையை நினைக்கும்-போதன்றோ பழந்தமிழ் நாகரிக மனப்பான்மை உலகெங்கும் பரவவேண்டும் என்பது தோன்று-கிறது? கடவுள் பெயரால் போராட்டம் எழுவ-தனை என் என்பது? இதனை அடியோடு அழிக்க அன்றோ தமிழன், ஏதேதோ கடவுளுக்கு இலக்-கணம் கூற முற்படாது, தானறிந்த அன்பினையே கடவுள் என வாழ்த்தி வணங்கி வழிபடத் தொடங்கினான்?

**" அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் ;**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார் ;**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே,"**

என்பதன்றோ உலக அமைதிக்கு அடிப்படையா-வது? இவ்வாறு அன்பினை வற்புறுத்தும்-போதன்றோ உலகம் ஒரு குடும்பமாகும்? " சென்ற காலத்தும், நிகழ் காலத்தும், எதிர் காலத்தும், அந்த அன்பு நெறி நின்றார் எந்த நாட்டில் எந்த உலகில் தோன்றினாலும், அவர்க்கெல்லாம் நான் அடிமை" என்று வாயார மனமார வணங்கிநிற்கும் **சுந்தரர்** நிலைமையை என் என்பது! "அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்று ஆயிர ஆண்டுகளுக்கு முன்னரே பாட முடிந்த

பொதுமை மனப்பான்மையை அன்றோ இன்று உலகம் வேண்டுகிறது? மகமதியரோடு போராடிய விஜயநகரத்தரசர்கள் காலத்தில் வாழ்ந்த **அருணகிரிநாதர்**, "உலகெங்கும் மேவிய தேவாலயந்தொறும் கோவில்கொண்ட பெருமாளே," எனப் பாடியதும் தமிழப் பொதுமையின் வீறுப்பே அன்றோ? மேனுடும் கீழ்நாடும் எதிர்த்துநின்ற சென்ற நூற்றுண்டின் முடிவில் தமிழ் இராமலிங்கர் அன்றோ, "அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை" எனச் சமரச சன்மார்க்கத்தினை வளர்த்தார்? இன்று **திரு. வி. க.** வளர்க்கும் பொதுமை அறமும் இதுவே அன்றோ?

போராட்டத்திடையே பொதுமை கண்டு அமைதியை நிலை நாட்டுவதே தமிழன் இயல்பாகிவிட்டது. அந்தப் பொதுமை நெறிக்கே **சித்தாந்தம்** என்பது பெயர். சித்தாந்திகள் எனத் தமிழ் நாட்டில் வழங்கிவரும் வழக்கினை உற்று நோக்கவேண்டும். சைவசித்தாந்தம், வைணவசித்தாந்தம். வேதாந்த சித்தாந்தம், பௌத்த சித்தாந்தம் என்ற வடமொழி வழக்குப்பற்றி இதற்கும் பொருள் கொள்ளுதல் கூடாது. சித்தர் நெறி, சித்தர் வைத்தியம் முதலியனபோலச் சித்தாந்தமும் தமிழ்மரபேயாம். "வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்கணமே." எனத் **தாயுமானவர்** வேதாந்தத்தினையும் சித்தாந்தத்தினையும் வேறுபடுத்திப் பின் சமரசப்படுத்துவதனைக் காண்க. வடமொழி நெறியும் தமிழ்மொழி நெறியும் ஒன்றுபடும் சமரசக் காட்சியே சித்தர் காட்சியாம். முடிந்த முடிபு என்ற பொருளில் அன்றிச் சித்தர்-

கள் கண்ட முடிபு என்ற பொருளில் தமிழில் சித்தாந்தம் என்ற சொல் வழங்குவது கண்கூடு. இந்த உண்மைப் பொருளைத் திரு. வி. க. அவர்கள் திரு அதிகையிற் கூடிய சமாஜத்தின் தலைமையுரையில் விளக்கிவைத்துள்ளார்கள். ஆதலின், சித்தாந்த நெறியைப் பொதுநெறி எனக் கொள்ளாது பல வேறு சமயங்களோடு ஒருங்குவைத்து எண்ணுவது தவறும்

அறநெறியைப் பொதுமை வழியே விளக்கிய பெருமை தமிழ்த் திருவள்ளுவருக்கு உண்டு. சாதி மத பேதம் கூத்தாடிய காலத்தல் இவ்வாறு வேற்றுமையால் இடர்ப்படாது ஒற்றுமையைக் கடைப்பிடித்து உலகினைத் தேற்றியதே அவரை உலகு உள்ளளவும் வாழச்செய்கிறது. அவ்வாறே **மெய்கண்டார்** கண்ட சிவஞானபோதமும் பொதுமை நெறியைக் கடைப்பிடித்து உண்மையை உரைத்துப்போகின்றது. சாதி மத விகற்பப் பேச்சில் மெய்கண்டார் ஈடுபடவில்லை; தீக்ஷை முதலிய சடங்குகளைப் பற்றியும் வெளிடபடையாகப் பேசவில்லை. அதற்கு உரையாக எழுந்த நூல்களே இவற்றினை எல்லாம் விரித்துரைக்கின்றன. பின்னுாலோர் தத்தங் காலத்திற்கு ஏற்பத் தத்தங் காலத்தினர்க்கு விளங்கும் முறையில் எழுதினர். ஆதலின், அவர்களைக் குறை கூற வேண்டுவதில்லை. அத்தகைய நிலையிலும் இவற்றைப் பற்றிப் பேசாது திருவள்ளுவர்போல அடிப்படையான உண்மையைப் பேசியது மெய்கண்டார் பெருமையன்றோ? இந்த மரபினைச் சிறிது உற்று நோக்குதல் வேண்டும்.

ஐந்திணை ஒழுக்கத்தின் அன்பினை இறையனூர் அகப்பொருட்கு உரை கண்ட **நக்கீரனூர்** நன்கு விளக்கியுள்ளார்.

" அதுவே,
தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயி னொத்தல்."

என்ற சூத்திரத்தின் உரையில் அன்பு நெறியின் பெருமை எல்லாம் காணலாம். " அவனே தானே ஆகிய அந்நெறி" என்று சிவஞான போதம் கூறு-வதனோடு அந்தச் சூத்திரத்தினை ஒத்திட்டுப் பார்த்-தல் வேண்டும். அங்கும் அத்துவித நெறியே வற்-புறுத்தப்பெற்றுளது. 'நான்' என்ற முனைப்பற்று, புனல் வழியோடும் மிதவை போல, பால் வழி என்-னும் இறைவன் வழியோடுவதே அன்பு என்பர் நக்கீரர். எல்லாவற்றையும் இயக்கும் ஆற்றலை எதிர்த்து நிற்காமல் முனைப்பற்றுத் திருவருள் வழி நிற்றலையே மெய்கண்டார் "இறைபணி நிற்றல்" என்பர். " உமது இராச்சியம் வருவதாக" (Thy Kingdom Come) என்ற கிறித்தவ வேண்டுகோளும் இதுவே ஆம். இந்த அன்பினையே காதலன் காதலி வரலாறுகளாகப் புனைந்துரைத்துச் சங்க நூற்கள் பரக்கப் பேசின. இந்த அன்பு நெறியின் வளர்ச்சி " தான் பிறர், தன் குடும்பம் பிறர் குடும்பம், தன் நாடு, பிறர் நாடு" எனப் பேசும் இல்லற வளர்ச்-சியாகவும், இந்த வேற்றுமைக்கு இடம் இன்றி 'யான் எனது' என்ற செருக்கறுத்த துறவற வளர்ச்சியு-மாகத் திருவள்ளுவர் பேசிப்போயினர். இந்த அன்-பின் தூய நிலையைத் திருமூலர் **சிவம்** என்றே வற்புறுத்தினர். **காரைக்காலம்மையார்** இந்த

அன்பிற் கடிமையாகி, எங்குமாம் ஆண்டவன் திருவிளையாட்டினைக் கண்டு பாடி, அறிவுலக உண்மைகளைத் தத்துவ சாத்திரிகள் இன்றும் வியக்கின்ற வகையில் வெளியிட்டருளினர். சமணப்பெரியோர் அருளறத்தினையே பேரறமாகப் போற்றினர். அவர்கள் கொள்கையிற் பழகிய **திருநாவுக்கரையர்** சிவ நெறி நுழைந்ததன் பயனாக, அருள் நெறிக்கே ''**சிவ நெறி**'' என்ற பெயர் வரலாயிற்று. இன்று, தமிழ் நாட்டில், ''சைவம்'' என்றால் அருள்நெறியாம் புலால் உண்ணாமையையே நினைவிற்கு வருவது இங்குக் குறிப்பிடத் தக்கது. கிறிஸ்தவர்களிலும் மகமதியர்களிலும் வைணவர்களிலும் பலர் இவ்வாறு சைவர் எனப் புகழப்படுவது வியப்பன்றோ? ''தயாமூலதன்மன்'' என **அப்பர்** தம் கடவுளைப் புகழ்வது பின்வந்தோருக்குப் பெருந்துணையாயிற்று. பௌத்தர்கள் அறவாழி யந்தணனைப் போற்றி அறநிலை பிறழ்ந்தோர்க்கும் மனம் பரிந்துருகிச் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு வந்ததனை, ''இன்பச் செவ்வி மன்பதையெய்த அருளறம் பூண்ட ஒருபெரும் பூட்கை'' என **மணிமேகலை** போற்றுவது அறிவோம். தனியவர் நோன்பும், கூடி-வழிபடுபவர்தம் கோயில் நோன்பும் இவர்கள் வழியே தமிழ் நாட்டில் வளர்ந்தன. கூட்டுறவு வழிபாடு கோயிலாய் ஓங்கியது. கலை வாழ்வில் ஈடுபட்ட தமிழர்கள் கோயில்களை அழகு நிலையங்களாக்கினர்கள். சொக்கன், அழகன், முருகன் அழகிய மணவாளன், திரைலோக்கிய சுந்தரம் முதலான பெயர்கள், தமிழர்களது அழகு வழிபாட்டை உள்ளங்கை நெல்லிக்கனி என விளக்கிவைக்கின்றன. அறமும்,

அன்பும், அருளும், மன்னிக்கும் பொறுமையும், இரக்கமும், அழகும், அறிவும் இவ்வாறு சைவப் பேராருய்ப் பாய்ந்தோடின.

இந்தப் பேராற்றில் கலந்தோடும் ஓடைகளை எல்லாம் காண்பது நல்லது. சித்தாந்தம் பொது-நெறியாதலின், பொது நூலாம் திருக்குறளையே அது பின் பற்றுவது; எனவே, அறத்தினையே அடிப்-படையாகக் கொள்வது. மெய்யுணர்தலும் அறமாக அன்றோ திருவள்ளுவர் பொது நெறி வகுத்தார்? "சமயக் கொள்கை அறத்திற்கு அப்பாற்பட்டது" என்ற கருத்திற்கே இடம் இல்லாதபடி சமய-நிலையையே பேரறமாகப் பேசிய வள்ளுவர் மாண்-பினை என் என்பது! சுந்தரர், திருவள்ளுவர் சொற்றொடர்களைப் பொன்னேபோலப் போற்றி ஆண்டு சைவத்தினை வளர்க்கின்றார். **திருஉந்தி-யா**ரும், **திருகளிற்றுப்படியா**ரும் திருக்குறள் வழியே சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகலையும், பற்றற்றான் பற்றினைப் பற்றிப் பற்றறுப்பதனையும் சித்தாந்தக் கருத்துக்களாகப் பாடிச்செல்கின்றன. அருகரும் பௌத்தரும் வளர்த்த தமிழில் வளர்ந்த சைவம், அறநிலை ஆகவே ஓங்கி வளர்வது வியப்-பன்று.

சித்தாந்தம் மூடநம்பிக்கையும் அன்று; பழ-மைக்கு அடிமையு மன்று "பழக்கந் தவிரப் பழகு-வதன்றி உழப்புவது என்பெணே உந்தீபற." எனப்-பாடும் சித்தாந்தம் பழமைக்கு அடிமையாவது எங்கே? அறிவாராய்ச்சியின் சிறந்த நிலையே சித்-தாந்தமாம். குருட்டிற்குக் குருடு வழி காட்டும் குருட்டாட்டம் அன்று சித்தாந்தம்.

**தொன்மையவாம் எனும்எவையும் நன்ருகா; இன்று**
**தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா; துணிந்த**
**நன்மையினுர் நலங்கொள்மணி பொதியும்அதன் களங்**
**[கம்**
**நவையாகா தெனஉண்மை யாய்ந்திடுவர் நடுவாந்**
**தன்மையினுர் பழமைஅழ காராய்ந்து தரிப்பர்**
**தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்**
**இன்மையினுர் பலர்புகழில் ஏத்துவர்ஏ திலர்உற்(று)**
**இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனஒன்**
**[றிலரே,''**

எனச் **சிவப்பிரகாசம்** கூறுவது, இன்று அறிவா-ராய்ச்சியில் முன்னணியில் நிற்போர் கூறுவதே அன்ருே?

ஆனுல், இந்த அறிவாராய்சி, ''மெய்க்குத் தொன்மை ஆதாரமா, தொன்மைக்கு மெய்யாதா-ரமா?'' என்ற ஏட்டுச்சுரைக்காய் ஆராய்ச்சி அன்று. 'சித்தாந்தம்' பன்னிரு திருமுறைகளை அடிப்-படையாகக் கொண்டது; ஆதலின், அனுபூதிப் பெருமக்களின் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டது; வெற்றறிவின் ஆரவாரமன்று. ''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா; சுடர் விட்டுளன் எங்கள் சோதி,'' என **ஞானசம்பந்தப் பெருமான்** கூறு-வது காண்க. வெற்றறிவுக் குழப்பத்தில் இடர்ப்-படுதலைச் சங்கரரும் விளக்கியுள்ளா ரல்லரோ?

சுந்தரர் பாடிய **திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார்** பாடிய **திருத்தொண்டர் திருவந்தாதியாய்** வளர்ந்து, **சேக்கிழாரது திருத்தொண்டர் புராணமாய்** மலர்ந்துள்ள-

தனை நாம் மறக்க முடியாது. இந்த அறுபான்மும்மை நாயன்மார்களிடையே ஏற்றத் தாழ்வு கற்பிப்பார் சித்தாந்த நுட்பத்தினை அறியாதாரே யாவர். இவர்களை எல்லாம் மெய்ஞ்ஞானிகள் எனத் திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் எடுத்துக் காட்டுவதனை நாம் மறத்தலாகாது. திருக்கூட்டச் சிறப்பில் இவர்களைச் சேக்கிழார் சீவன் முத்தர்களாகப் புகழ்வதும் காண்க. எந்த நிலையில் நின்றாலும், எந்தச் சாதியிற் பிறந்தாலும், சிவனை மறவா வாழ்வு வாழ்வார் எத்தகைய வாழ்வு வாழ்ந்தாலும், சீவன் முத்தரே என்பது சுந்தரரது உறுதிப்பாடு. சேக்கிழாரது முடிந்த முடிவு மிதுவே. பெரியபுராணம் பாடும் அடியார் அனைவரும் தமிழ் நாட்டினரே யாவர். ஆதலின், தமிழ் நாட்டுக் கடவுள் மரபினைச் சேக்கிழார் புராணம் விளக்குகின்றதெனல் வேண்டும். புறக் கோலத்தினையும், சாதி மத வேறுபாடுகளினையும் பொருளற்றன என ஒழித்து, அகநிலை வாழ்வினையே சைவத்தின் உயிர்நிலை எனக் காட்டுவதே பெரியபுராண உண்மையாம்.

இந்த அகநிலைக் கடவுள் வாழ்வு கசிந்து தொண்டாக வெளிவருவதனை அந்த அடியார்கள் வரலாறெல்லாம் விளக்குவது காண்க. உழவாரப்படை கொண்டு, தமிழ் நாடு முழுதும் தொண்டர்கள் போய்வரும் தெருக்களைப் படைத்துத் தந்த திருநாவுக்கரையரை இன்றும் உழவாரப் படையோடன்றோ வழிபட்டு வருகின்றோம்! அவருடைய அடியாரான **அப்பூதி அடிகள்** அவரிடம் பெற்ற பேருண்மை என்ன? தண்ணீர்ப் பந்தரும்

குளமும் காவும் உணவிடலுமே அல்லவோ? இதுவே **சிவஞானபோதம்** கூறும் இறைபணி நிற்றலாம்; **சித்தியார்** கூறும் முனைப்பற்ற கசிந்த தொண்டாம்.

அப்பர் கைலை காணச் சென்றார். ஆனால், உண்மைக் கைலைக் காட்சியைத் திருவையாற்றில் காட்டுவதாக இறைவர் கூறினார். அப்பர் கண்ட காட்சி என்ன? "காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்-கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன்" என்று உலகப் பொருள்களிடையே எல்லாம் அம்மையப்பனைக் காணலே கைலைக் காட்சியாம். பஞ்ச பூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டிடத்தும் சிவபெருமானது விளக்கத்தினைக் காண்பதே சைவம் என மணிமேகலை கூறுகின்றது. இயற்கை அழகில் ஈடுபடுவதற்கும், புறவுலகைச் சுகாதார முறைப்படி தூய்மையாக வைத்து வாழ்வதற்கும், **காந்தியார்** காட்டிய தரித்திரநாரயண வழிபாட்டிற்கும் இதனினும் சிறந்த நெறி யாது? இந்த உண்மையே அப்பர் கண்ட சிறந்த உண்மை எனப் பாராட்டும் தாயுமானவர் எடுத்துக்காட்டும் தேவாரந்தான் யாது?

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி

*நெருநலையாய் இன்றாகி நாளை யாகி*
*நிமிர்ந்தபுன் சடையடிகள் நின்ற வாறே,"*

என்பதன்றோ?

*" எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்*
*விட்டா ருலகம்என் றுந்தீபற [றார்*
*வீடேவீ டாகும்என் றுந்தீபற,"*

என்பது திருவுந்தியார். ஆதலின், இது சைவ-சித்தாந்தக் கருத்துமாம். இந்த ஒற்றுமைக் காட்-சியைக் கீதை 'சமதரிசனம்' என்று புகழும். சாதி-பற்றி இழிவு கூறச் சைவத்தில் இடமில்லை. நந்த-னும், பெற்றான் சாம்பானும் வீடு பெற்ற பெருமை-யைப் பேசுவதன்றோ சைவம்? காந்தியார் தீண்-டாமை ஒழியப் பாடு பட்டதெல்லாம் உண்மைச் சைவத்தினை வற்புறுத்தியதே ஆம்.

பெண்ணுக்கு இழிவு பேசும் புன்கண்மையும் இங்கு இல்லை. காரைக்கால் அம்மையாரினும் சிறந்த தத்துவசாத்திரியை உலகம் கண்டிருக்க முடியாது. **மங்கையர்க் காசியார்** இல்லையானால், சம்பந்தர் புகழ் வெளியாகி இருக்குமா? **திலகவதியார்** இல்லையானால், திருநாவுக்கரசரைச் சைவம் பெற்-றிருக்க முடியுமா? பெண்ணுக்குப் பெண் பிறவியில் வீடு பேறில்லை என்று கூறிய கொள்கையை மறுக்க அன்றோ இந்த இரு பெருமக்களும் தோன்றினர்? அம்மையப்பனை வழிபடும் சைவர் பிற்காலத்தில் பெண் இழிவு கூறியது காலத்தின் கூத்தே ஆம்.

கோயிலை மறந்து சித்தாந்தம் வாழ முடியாது. வியவகார உலகினைக் கலை வாழ்வாகக் கடவுட்-காட்சியாகக் காணும் நுட்பம் இங்கு விளங்கு-கிறது. கலைக்கும் சமயத்திற்கும் இத்தகைய நெருங்-

கிய தொடர்பு உண்டாகிவிட்டது. ஒரு வகையால் அஷ்டமூர்த்த வழிபாட்டின் முதிர்ச்சியன்றோ கோயில் வழிபாடும், அடியார் வழிபாடும்? சிவன் முத்தர்களும் இதில் ஈடுபட்டிருப்பது இதனாலன்றோ?

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே,"

என்பதன்றோ சிவஞான போதத்தின் முடிவு? ஆனால், கலைப்பொருளே கடவுள் என்ற கண் மூடி நிலை இங்கு இல்லை. கலை எல்லாம் த்வனி என்னும் குறிப்பால் விளங்கும் நிலையே ஆம். கலைப்பொருள்கள் அருளடையாளங்கள். கலை விளக்கும் பொருளோ கலைக்கும் அப்பாற்பட்டது; மாற்ற மனங்கடந்த மறைப்பொருள் இலிங்கம் என்பதற்குப் பொருள், அடையாளம் என்பதே அன்றோ? விக்கிரகாராதனை எனப் பழிப்பார்க்கு இங்கு இடம் இல்லை எனக் கூறவும் வேண்டுமா?

நால்வர் பெருமக்கள் தங்கள் அனுபூதியை, உலகம் உய்யக் கோயில்களில் பாட்டாகப் பாடினர். "குன்றுடை யானைக் கூற என் உள்ளம் குளிருமே," என்றும், "உளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்துவந்துஉரைப்பனே,"என்றும் பாடிய பாக்கள் நம்முள்ளத்திலும் அப் பேரின்பத்தினை விளைவித்தல் இயல்பே ஆம். ஓவியமும் காவியமும், கற்சிலையும் பொற்சிலையும், ஆடலும் பாடலும் அழகும் அறிவும், அன்பும் இன்பமுமாய்க் கோயில்கள் வானளாவ ஓங்கின. அரசர்களும் இந்த முறையில்

தங்கள் அரசினையும் உயிரினையும் தூய்மைப்படுத்தினார்கள். கலை வாழ்வின் நுட்பம் மண்ணைப் பொன்னாக்கும் சித்தே ஆம்; சீவனைச் சிவனாக்கும் சித்தேயாம்; கல்லைக் கடவுளாக்கும் சித்தேயாம்.

தில்லைத் திருநடனத்திற்கு உருகாதார் யார்? "உலகம் பொய்," என்ற கொள்கையைத் தமிழ்நாட்டில் பிறந்த சங்கரர் மறுத்துரையாடி, "அனைத்தும் ஆனந்தமாம் பிரமமே," என நிலை நாட்டுவது எளிமையாயிற்று. 'சண்மதத் தாபனர்' என அவர் பெயர்பெற்றது தமிழ் மரபுக்கு ஒட்டியதேயாம். "வியவகார உண்மை" உலக நிலை உண்மை என்றும், "பாரமார்த்திக உண்மை" வீட்டு நிலை உண்மை என்றும் அவர் கூறிய பாகுபாட்டினை மறந்து, "பிரமம் அன்றி ஒன்றும் இல்லை; அறமேது, வீடேது?" என மன்றாடும் நிலைமையும் ஏற்பட்டது கலையுலகில் திளைத்த இராமாநுசர், உலகநிலை உண்மையும் கடவுளின் திருவிளையாடல் என்று கண்டு மகிழ்ந்தார்; நம்மை ஆண்டவன் திருத்தியமைக்க ஏற்படுத்திய நிலையம் எனக் கண்டார்; கலை வடிவங்கள் கடவுளின் தனி அவதாரங்கள் எனக் கொண்டு மகிழ்ந்தார்; 'அர்ச்சாவதாரம்' எனப் புகழ்ந்தார்; அருளிச் செயலமுதங்களைப் பாடி ஆடினார். பத்திப் பெருவெள்ளம் புரண்டோடியது. இங்குத் திளைக்கும் இன்பப் பெருங்கூத்தினைக் கண்டுகொண்டிருப்பதுபோலவே அங்கும் கண்டுகொண்டிருக்கவே பலர் விரும்பினர். சங்கரர் கூறிய வியவகார உலகம் இவ்வாறு லீலா விபூதியின் ஆனந்தத் தாண்டவமாய்க் கலையின் உயர்நிலையாய்ச் சிறந்தோங்கினாலும், பாரமார்த்திகக் கலையின் உண்மை வற்-

புறுத்தப்பெறாது மறைய இருந்தது. இந்த நிலையில், மெய்கண்டார் தோன்றினார். வியவகார நிலையின் கலையழகினையும் வற்புறுத்திப் பாரமார்த்திக நிலையின் உயர்வினையும் மறவாதபடி நிலைநாட்டினார். பொது, சிறப்பு எனச் சித்தாந்த நூல்கள் கூறும் வேறுபாடு இதனை ஒட்டியதே ஆம்.

வியவகார நிலையைப் பொய்யெனக்கொண்டு, கண்டதே காட்சி கொண்டதே கோலமாகப் போயலையாதபடி அதனை வற்புறுத்த வேண்டுவதாயிற்று. பொது நிலையில் நின்று அறம் செய்யப்பாவம் தேயும்; இரு வினை ஒப்பு உண்டாம். நன்றாகத் துடைக்கப்பெற்ற கண்ணாடியில் சூரிய ஒளி பாய்ந்து ஒளிர்வது போல, மனம் இரு வினை ஒப்பினால் தூயதாகி அவாவற்று நின்றபோது அருள் அங்கே பாய்கின்றது. இதுவே **சத்திநிபாதம்** ஆம். ஆன்மா, சிறப்பு நிலையில் படிப்படியாய் உயர்ந்து, சீவத்துவ இழிவு நீங்கி, மூனைப்படங்கி இறைபணி நின்று சிவமாகி உயர்கிறது; "சிவமாக்கி எனையாண்ட அத்தனெனக் கருளியவாறார்பெறுவார் அச்சோவே," என்று பாடுகிறது.

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
 திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றுநீ அல்லை; அன்றிஒன் றில்லை;
 யாருனை அறியகிற் பாரே?"

எனச் சிறப்பு நிலையாம் பாரமார்த்திகம் அகண்ட

பரிபூரணமாய் விளங்குகிறது. "எல்லாமாய அந்த வியத்தகு வியப்பில் எல்லா முரண்பாடுகளும் அழிவதில் வியப்பு என்ன?" என்கிறார் இந் நாளைய **அரவிந்தர்.** முன்னின்ற முப்பொருள்களும் முத்தி நிலையிலும் விளங்கினாலன்றி வியவகாரப் பொது நிலையின் பெருமையும் உலகவழக்கும் சிதையும் எனக் கருதுகின்றார் போலும் மெய் கண்டார்! ஆனால், பாரமார்த்திக நிலையின் பெருமையும் குலை-தல் கூடாது. சச்சிதானந்த நிலையே முத்தி நிலை என்பர். "அங்குச் சத்தான அடிப்படையாய் அமைந்து இன்பத்தினை ஊட்டுவதே பதி; சித்தாகி அதனை உணர்ந்து துய்ப்பதே பசு; ஆனந்தமாய் விளைவதே பாசம்," எனக் கொண்டால், முத்தி-யிலும் முப்பொருள் உண்டு எனக் கூறத் தட்டில்லை அன்றோ? அகண்ட சச்சிதானந்த நிலையும் இங்குக் குலைவதில்லை. இவ்வாறு சமரசப்படுத்துவதனை மெய்கண்டாரது மாணவரான **மனவாசகம் கடந்தார்** தம் குரு தமக்கு விளக்கிய உண்மை-களாக **உண்மை விளக்கத்தில்** கூறுகின்றார்:

**"முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்:**
**சுத்தஅனு போகத்தைத் துய்த்தல்அணு;—மெத்தவே**
**இன்பங் கொடுத்தல் இறை; இத்தைவிளை வித்தல்மலம்;**
**அன்புடனே கண்டுகொளப் பா!"**

என்ற பாட்டின் நுட்பத்தினை உய்த்துணர வேண்டும்.

சித்தாந்தம் என அடை ஒன்றும் இன்றித் தனித்து நின்றே பண்டைநாள் முதல் வழங்கிய வழக்கினை மறுபடியும் வற்புறுத்த வேண்டும். சிவ-ஞான சித்தியார் பாடியருளிய **அருள் நந்தியார்**

இதனைக் குறிக்கின்றார்; பிற எல்லாம் பூருவபட்சமாக, ஈதொன்றே சித்தாந்தமாக முடிதலின், இது சித்தாந்தம் எனச் சிறப்பிக்கப்படும் என்கிறார். ஆனால், ஒவ்வொரு சித்தாந்தமும் பிறர் கொள்கைகளைப் பூருவ பட்சமாகக் கொண்டன்றோ மறுக்கின்றது? பின் என்ன சிறப்பு? ஆகமம், தந்திரம் முதலியன சித்தர் வளர்த்தவைகளாம். சித்தர் என்பது அருகர் பௌத்தர் முதலியோர் அறிந்த சொல்லேயாம். குறைவிலா நிறைவினைப் பெற்ற நிலையே சித்தர் நிலையாம். 'சித்தன்' என்பது தமிழ் நாட்டில் கடவுளுக்கும் பெயராயிற்று. 'எல்லாம் வல்ல சித்தன்' எனப் புராணங்கள் பலபடப் பேசவில்லையா? 'சித்தன் வாழ்வு' என முருகன் கோயிலை நக்கினார்க்கினியர் கூறவில்லையா? சைவசித்தாந்தத்திற்குத் திருமூலர் திருமந்திரமும் அடிப்படையாய் இருப்பது சித்தர் நிலைக்கும் சித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பினை நன்கு விளக்குகிறது. உடம்பினை வளர்ப்பதே உடம்பினுள் உத்தமனை வளர்ப்பதற்கு வழி எனக் கொள்வது சித்தர் நெறி. மண்ணுலகினையே பொன்னுலகாக்கி, உடலினையே சிவமாக்க முயலுவதும் அவர்கள் நோக்கமாம். இந்த ஆராய்ச்சியின் பயனாக வைத்தியமும் யோகமும் விஞ்ஞானமும் தமிழ் நாட்டில் வளர்ந்தன என் என்று சொல்லுவோம்? மேனாட்டில் விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் நேரிடும் போராட்டம் சித்தாந்தத்தில் இல்லை எனலாம். விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தினையும் ஒன்றுக்குவ தன்றோ சித்தாந்தம்? திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் முதலிய

நூல்கள் சித்தர் பரிபாஷைபோல வருவதே "சித்தாந்தம், சித்தர்கள் முடிபு" என்பதற்குச் சான்றும்.

சித்தர்கள் சமரசத்தை வற்புறுத்துவோர் எனத் தாயுமானவர் கூறியதனை முன்னரே கண்டோம். அந்தச் சமரசத்தினைச் சன்மார்க்கம் எனப் பண்டையோர் வழங்கிவந்தனர். பழங்காலத்தில் தமிழில் வழங்கிய தத்துவ சாத்திரங்களிலிருந்து செய்யுட்களைத் திரட்டிச் **சிவப்பிரகாசர், பெருந் திரட்டு** என்ற சிறந்த தொகைநூலைத் திரட்டிவைத்துள்ளளார். அங்கு, இவ்வாறு பல கொள்கையினிடத்தும் ஒற்றுமை காண்டலே சன்மார்க்கம் எனக் கூறப்பெறுதல் காண்க. இந்தச் சன்மார்க்கத்திற்குச் **சிவஞானம்** என்றும் பெயருண்டு என அந் நூல் விளக்குகிறது. ஆதலின், சிவஞானபோதம் என்பது, இந்தச் சமரச சன்மார்க்கத்தினை வெளியிடுவது எனலாம் அன்றோ ?

பிற மதங்களை மறுத்துரையாடும் சிவஞான சித்தியாரே "நூல் என்றால், அனைத்தினையும் சமரசப்படுத்துவதே" எனக் கூறுதல் காண்க.

"ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதுஇங்கு என்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவைஎல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்"

எனக் கூறுவது காண்க. "**வினா விளக்கம்**" எனச் சிவப்பிரகாசர் பெருந்திரட்டில் எடுத்துக்காட்டும் நூல்,

"அறைந்தளச் சமயக் கலையினும் எடுத்துக்
காட்டலாய் அருமறை முடிவிற்
சிறந்தநற் பொருளாய்ச் சிவனரி யயனுற்
செப்பிய அருத்தமு மாகித்
துறந்துமற் றவிரோ தத்தையே துணிந்தோர்
சொல்லிடும் பொருளுமாம் ஒன்றை
நிறைந்தகைத் தலத்தின் மணிஎனக் காட்டும்
நீதிசன் மார்க்கத்தி னியல்பே"

என இதனையே "சன்மார்க்கம்" எனப் போற்றிப் புகழ்தல் காண்க.

பல வகைக் கொள்கையிடையேயும் ஒற்றுமை காண்பதே சித்தாந்தம் என்பதனை **உமாபதி சிவ**மும் சுட்டுகின்றார் :

"புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருளொளிபோற் பேதமுஞ்சொற் [பொருள்போல்
பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவறும் அத்துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம்."

என்பது பிறமத கண்டனம் போல இருந்தாலும், பேதவாதம், அபேதவாதம், பேதாபேதவாதம் என்ற இவற்றோடும் சித்தாந்தத்தினை ஒற்றுமை காண முயல்கின்றது.

"துவிதமத் துவிதஞ் சொல்லிய வுபயந்
தோற்றிய அத்திநாத் தியெனும்
விவிதளப் பொருட்கும் வெறுக்கவேண் டாமல்
விளம்பிய அவற்றினுக் கவையாய்த்

*தவலறத் திகழுஞ் சற்சினற் சுகத்தைத்*
*தனக்கனு போகமாய்க் காட்டும்*
*பவிசுடைத் தூய வழிஎது ? அதுவே*
*பழுதில்நற் பரமமா நெறியே.''*

*பேதமென் பதுவும் அபேதம்என் பதுவும்*
*பிறிதுள மதங்களும் அவற்றில்*
*நீதிஎன் பதுவும் நிகழ்த்துதத் துவங்கள்*
*அவத்தைகள நிரைத்தகோண் முழுதும்*
*ஏதமொன் றறவே எவற்றையும் இடங்கண்*
*டிதுவிது எனவுரைத் திடலாய்*
*ஓதுமொன் றுலும் உணர்ந்திடப் படாத*
*அதுமுத்திக்கு உண்மையாம் நெறியே.''*

என அந்த நெறியினையே சன்மார்க்கமாம் பரமநெறி அல்லது உண்மை நெறி எனப் பெருந்திரட்டுக் கூறுதல் காண்க.

திருவள்ளுவர்,

*'' யாம்மெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்*
*வாய்மையி னல்ல பிற ; [றும்*

*'' பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற ;*

*'' ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவற் றுணிபு ''*

என, எல்லாக் கொள்கைகளிலும் அடிப்படையான உண்மைகளைக் கூற முற்படுவதுபோலச் சமரசம் காண்பதே சித்தாந்தமாம் என்பது.

*'' எல்லா அறிவுகளின் தாற்பரியம் என்னறிவு*
*செல்லு மிடத்தளவும் சென்றிருந்தேன்-வல்லபடி*
*வாதனையை மாற்றும் வகையிதுவே; மற்றவற்றுள்*
*ஏதமறக் கண்ட விதம் ;''*

"அன்பேயென் அன்பேஎன் றன்பா லழுதரற்றி
அன்பே அன் பாக அறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்"

எனத் திருக்களிற்றுப்படியார் கூறுவதால் விளங்குகின்ற தன்றோ?

சித்தாந்தத்தினைப் பொதுமை நெறி எனப் பன்னிப் பன்னிப் பேசுவானேன்? உலகம் போராட்டத்தில் புழுங்குகிறது. ஒருவரை ஒருவர் அஞ்ச நெஞ்சு நடுங்கிக் குமுறுகிறது. ஒன்றுதிரண்ட நாட்டினர் நிலையமும்[1] போர் நின்று பல ஆண்டுகள் ஆகியும், அமைதியை நிலைநாட்ட முடியவில்லை இந்தக் கேடெல்லாம் தீர வேண்டுமானால், சமரச மனப்பான்மை வளரவேண்டும். கொள்கையும் எதிர்க்கொள்கையும் முடிவில் சமரசக் கொள்கையுமாய் முற்றி, இவ்வாறே கொள்கைகள் வளர்ந்துவருவதனைச் சென்ற நூற்றாண்டில் மேனாட்டு ஞானியாரான **ஹேகல்** விளக்கிக் கூறிய சமரசத் தருக்க முறையை[2] இன்றைய பொது உடைமைக்கொள்கையினர் வற்புறுத்துகின்றனர். முதலில், சிறுவனுக்குப் பொய் சொல்லவே வாராது. "நீங்கள் வீட்டில் இருக்கும் போது உம்மைத் தேடிவருவாரிடம் இல்லை என்று எவ்வாறு கூறுவது?" என்று கேட்கிறான். இங்கு இவன் உண்மை கூறுவது பொய் கூற முடியாமையாலேயாம்; பின்னர்ப் பொய்கூறும் திறமை வளர்கிறது; பொய்யாநிலை என்ற ஒன்றிலிருந்து அதன் எதிர்த் தட்டாகிய பொய்க்கும் நிலைக்கு வருகிறான்;

---

[1] United Nations Organisation

[2] Dialectics

இங்குப் பொய் சொல்லுந்தோறும் தன்னெஞ்சே தன்னைச்சுடுதலால், பொய் சொல்லும் ஆற்றலின்றல், அதனை விட்டொழித்துப் 'பொய்யாமை, பொய்' என்ற இரண்டனையும் கடந்து, மெய்ம்மை நிலையை அடைகின்றான். பொய்சொல்லும் ஆற்றல் எழுந்தால் அன்றி, அதனை விட்டொழிக்கும் நிலை எழுவதற்கு இடம் இல்லை; பொய்ம்மையின் வழியேதான் மெய்ம்மையை எட்ட வேண்டி இருக்கின்றது. பொய் சொல்லாத முன்னைய நிலையும், பொய் சொல்லும் திறமை விளங்கும் பின்னைய நிலையும் ஒன்றாய் இயைய, மெய்ம்மை நிலை அவற்றின் சமரசமாக எழுகிறது. இவ்வாறு எதிர்த்தட்டான இரண்டும் வளர்ந்து, மேலானதொரு சமரச நிலையாய் உயர்வது காண்கிறோம். இதுவே ஹெகல்கூறும் சமரசத் தருக்கம்.

நம் நாட்டுச் சமய வளர்ச்சி எல்லாம் இத்தகைய சமரச வளர்ச்சி என்றே கூறிவிடலாம். அதுவே சித்தாந்த நெறி எனக் கூறுவதால், இந்நாட்டில் எழுந்தஒன்றும் பொய்படாதபடி எல்லாம் மெய்யாகி வளர்ந்துவந்த வரலாறு விளங்கும். சங்ககால ஐந்திணை அன்பு, விலங்கு நிலைக் காமத்தினும் வேறாகப் **பரிபாடல்** காணும் கடவுட்காமமாகி, நக்கீரர் வழியே திருமூலர் கண்ட சிவ அன்பாய்த் திருக்கோவையாரில் வரும் காதலாய்க் கடவுள் வடிவாய் அமைகின்றது. இன்று அன்றாட வாழ்வில் காதலியிடம் கடவுளைக் காணும் கட்டாயம் எழுகிறது. திருக்குறள் கண்ட அறம்-அருகர் கண்ட கொல்லாமை-தன்னுயிர் போல மன்னுயிரை எண்ணுதல்-பௌத்தர்கள் கண்ட தனக்கென

வாபூராப் பிறர்க்குரியாளனும் அறவாழி நிலை-இவை இறைபணி நிற்றலாய அஷ்ட மூர்த்த வழிபாடாய்க் கைலைக்காட்சியாய்த் தரித்திர நாராயண பூசையாய்ப் புரட்சியாய் முடிவது காண்க. பாடல்களும் பண்களும் கோயில்களும் அழகு வழிபாடாய்க் கலை வாழ்வாய்ச் சமுதாயக் கூட்டுறவாய் உலக ஒற்றுமையாய் வளர்தலும் வேண்டும். திருமுறைப் பாடல்கள் அனுபூதிப் பிழம்பாய் நம்மை மேலும் மேலும் உயர்த்திவருகின்றன. சங்கரர் கூறும் பாரமார்த்திக உண்மையும், இராமநுசர் வற்புறுத்தின வியவகார உண்மையின் அழகும் ஒன்றுக்கொன்று முரண்படாது மெய்கண்டார் கண்ட உண்மையாய் விளங்குவது காண்க. மகமதியர், கிறிஸ்தவர், விஞ்ஞானிகள், சீர்திருத்தக் கொள்கையினர், மேனாட்டினர், கீழ்நாட்டினர் முதலியோர் கூறும் கொள்கைகள் எல்லாம் சித்தர் கொள்கைகளாகச் சித்தாந்தத்தில் நுழைவதும் காண்கிறோம். இன்று **அரவிந்தர்** கூறும் பூரண யோகமும் இவ்வாறு அனைத்தினையும் ஒன்றாகக் கொண்டு விளங்குகிறது.

தமிழறிவுப் பேராறு தங்குதடையின்றி இவ்வாறு ஓடிக்கொண்டே இருக்கிறது. இதில் ஒரு நிலையை மட்டும் பிரித்துச் சித்தாந்தம் என்று கூறி நின்றுவிடுதலாகாது. 14 சாத்திரங்களில் சிவஞான போதம் தலை சிறந்தது என்பதில் ஐயம் இல்லை. அடிப்படை உண்மைகளை இவ்வளவு சுருக்கமாகக் கூறும் நூல் வேறு ஒன்றும் உலகில் இல்லை. இவற்றோடு சித்தாந்தம் முடிந்துவிட்டது எனக் கூறுவது வரலாற்றுண்மைக்கு மாறுபடக் கூறலாம். **தாயுமானவர்** இந்தச் சமரச சித்தாந்தத்தினைத் தமிழர்

உலகம் உள்ள அளவும் மறவாதபடி நம் இரத்தத்தில் எல்லாம் ஓடவிட்டவர். **போகர், நந்தி, வாமதேவர், வள்ளுவர்** என்பவர்கள் பெயரால் எழுந்த பல சித்தர் நூல்கள் அரேபிய நாட்டுக் கொள்கைகளையும் விஞ்ஞானத்தையும் இந்த நாட்டுக் கொள்கைகளையும் சமரசப்படுத்தியவை. **சிவப்பிரகாச சுவாமிகள்** முதலியோர் கன்னட நாட்டு வீர சைவக் கொள்கையினையும் தமிழ் நாட்டுக் கொள்கைகளையும் ஒற்றுமைக்கண்கொண்டு விரித்தவர்கள். **கண்ணுடைய வள்ளலார், சாந்தலிங்கர்,** இவர்கள் நூல்களுக்கு உரை கண்ட **சிதம்பர சுவாமிகள்** முதலானோர் எல்லாக் கொள்கைகளுக்கும் இடையே தோன்றும் அவிரோத அழகினைப் பாட்டிலும் உரையிலும் கூட்டி வளர்த்தவர்கள். சித்தாந்தத்தோடுள்ள இந்தத் தொடர்பினை அறிந்தே உங்கள் நாட்டுத் தமிழ்ப் பெருமகனார் **ஆறுமுக நாவலர்** அவற்றினை அச்சிட்டு உலகிற்கு வழங்கினார் **தத்துவராயரும்** இத்தகைய ஒற்றுமையை வளர்த்தவரே. கிறிஸ்தவத்தோடு நம் நாட்டுக் கொள்கைகளை ஒற்றுமைப்படுத்திப் பாடும் **சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளும்** இந்த வழியே செல்வனவாம். முடிவாகச் சமரச சனமார்க்கம் என்றே பொதுமை நெறியைப் பரப்பிய **இராமலிங்கர்** உலகிற்கே வழிகாட்டி எனலாம். இவற்றினை எல்லாம் சித்தாந்தம் அல்ல என ஒழித்துவிடுவது அழகாகுமா?

மேல் நாட்டிலும் பலபல கொள்கைகள் தோன்றி வந்துள்ளன. அவற்றிடையேயும் சமரசம் காணவேண்டும். ஒரு சிலர், இவற்றினை எல்லாம்

சித்தாந்தம் என மன்ருடுவதும் உண்டு. உண்மை அடிப்படையினை மறந்து இவ்வாறு வாயளவில் பொதுமை பேசுவதால் பயனில்லை. உறுதியான அறிவின்றி, மேல்வாரியாக, "இதுவும் சரி; அதுவும் சரி," எனத் தலையசைத்துப் போவது சித்தாந்தம் ஆகாது. உள்ளத்துறுதி, அறிவின் தெளிவு, நெஞ்சின் ஈரம் இவற்றேடு எழும் சமரச மனப்பான்மையே உண்மையைக் காண உதவுவதாம். அடிப்படையான தத்துவ ஆராய்ச்சி, உலகில் அருகி வருகிறது. மேல் போக்கான காட்சியிலேயே உலகம் மயங்கியிருக்கிறது. அந்த மயக்கந் தெளிய மருந்தொன்று உண்டு. எதற்கும் அஞ்சாமல் எந்தப் பேற்றினையும் பொருட்படுத்தாமல், உண்மையை எந்த நிலையிலும் அறிந்துணர முன் வரும் வீரம் வேண்டும்; அறியாமையால் அல்லல் படும் உலகினைக்கண்டு அந்த அறியாமை இருளிலிருந்து விடுதலை பெறத் துடிதுடிக்க வேண்டும். அதற்கேற்றபடி மனம் பண்பட்டிருத்தல் வேண்டும். '**சாதன சதுட்டயம்**' என முன்னேர் கூறியது இத்தகைய அறிவு வீரமாம் ஒன்றே இன்று உலகிடையே சமரச அமைதியைப் பரப்பி ஒற்றுமையை நிலை நாட்டக் கூடும். அத்தகைய பொதுமை நிலை தமிழின் இரத்தத்தில் ஊறியுள்ளது. ஆகையால், சித்தாந்த நெறியைப் பரப்பும் வகையால் நாமும் உய்ந்து உலகிற்கும் வழி காட்டுதல் நம் இரத்தத்தோடு பிறந்த கடமையாகும்.

# III. ஆலயங்களில் தமிழ்

தமிழ் நாடு பரந்த உள்ளம் படைத்த பழம்பெரு நாடு; வந்தவரை எல்லாம் விருந்தினராக வரவேற்றுத் தன்னையே மறக்கும் பண்பாடு பழுத்த நாடு. தமிழிசையையும் மறந்து இது தெலுங்கில் பாடும்; ஆங்கிலத்தில் பேசும்; வட மொழியில் வழிபடும்; இந்தியில் ஜிலேபியும், கன்னடத்தில் உப்பட்டும், மலையாளத்தில் அவியலும் உண்டு களிக்கும். இந்த நிலையில் தமிழ் நாட்டில் தமிழில் பாட வேண்டும், பேச வேண்டும், வழிபட வேண்டும் என்று இயக்கங்கள் தோன்றக் காண்கிறோம். உலகில் வேறு எங்கும் காணாத காட்சி இஃது. இதனினும் வியப்பு, இந்த இயக்கங்களுக்கும் எதிர்ப்பு இருப்பதே ஆம். இதனினும் பெருவியப்பு, தமிழ் நாட்டுப் பெருமக்களில் சிலர் இந்த எதிர்ப்புக்குத் தலைமை பூணுவதே ஆம்.

தமிழரில் சிலர் தம் உயிர்க்கிழத்தியாம் மனைவியோடு அன்பால் ஒன்றுகலந்து பேசுவதே ஆங்கிலமானால், உயிருக்கு உயிரான கடவுளோடு வேறு மொழியில் பேசுவதனைக் கேட்க வேண்டுமா? எல்லா மொழியையும் அறிந்தவர் அன்றோ ஆண்டவனார்? அறிந்தவர்தாம். ஆனால், எதிர்ப்பாளர் பேச்சை நம்பினால், அவருக்குத் தமிழ்தான் தெரியாதது போலத் தோன்றுகிறது. இங்கு வருகிற சிக்கல் எல்லாம் மொழிச் சண்டையைக் கிளப்பி விடுவதாலேதான் எனலாம். தமிழிசை, தமிழ் வழிபாடு,

தமிழரசு என்றவுடன் பிற மொழிமேல் வெறுப்பு என வெடிப்புடன் பலர் பேசுகின்றனர். தமிழ்க் குழவி தாய் மடியில் தமிழ் பேசுவது பிற மொழி-மேல் உள்ள வெறுப்பாலா? சூழ் நிலையின் சூழ்ச்சி அது. தாய் மொழியன்றி வேற்று மொழி பேசினுல் அன்றோ திடுக்கிடுவோம? "ஆராரோ ஆரரிரோ" என்று தமிழிசை பாடுவதா பகைமை பாராட்டு-வது! "ஆண்டவனே! அட கடவுளே!" என நம்மையும் அறியாமல் நம் மனம் கதறுவது வட-மொழிமேல் உள்ள வெறுப்பாலா?

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஆண்ட-வனிடம் முறையிடவேண்டும். இயல்பாக ஒருவன் இவ்வாறு எந்த மொழியில் முறையிடுவான்? தாய் மொழியில்தானே! நம்மையும் அறியாது நம் உள்-ளத்தின் உள்ளிருந்து வெளிவருவது தாய் மொழி. உள்ளத்தின் உண்மைக் குரலையே ஆண்டவன் விரும்புகிருன். நாமும் அதனைத்தானே கேட்க விரும்புகிறோம்? அதனை ஆண்டவனிடத்திலுமா மறைக்கவேண்டும்? வெளிப்பகட்டும் வெற்ருர-வாரமும் கடவுளையுமா ஏமாற்ற வேண்டும்?

"மந்திரங்கள் வடமொழியில் மட்டுமே உள்-ளன. அவற்றைத் தமிழில் எவ்வாறு கூறமுடி-யும்?" என்று பலர் கேட்கின்றனர். இங்கு ஒன்று எடுத்துக்காட்ட வேண்டும். மந்திரங்களைத் தவ-றின்றி ஒலிக்கவேண்டும். இல்லையானுல், பெருந் தீங்கு நேரிடும் என்பர். "இந்திரன் சத்ரு கெடுக," என்ற மந்திரம் பாடினுன் விருத்திராசுரன். இந்திரன் சத்துரு என்பதனை ஒரு வகையாக ஒலித்தால் 'இந்-திரனுடைய சத்துரு' என்றும், வேறு வகையாக

ஒலித்தால் ‘இந்திரனாகிய சத்துரு’ என்றும் பொருள்படும். இரண்டாம் பொருளைத்தான் விருத்திராசுரன் விரும்பினான்; ஆனால், அறியாமையால் முதலாம் பொருள்படும்படி ஒலித்தான். என்ன நேர்ந்ததாம்? இந்திரனுடைய சத்துருவாகிய தானே கெடுக என்று மந்திரம் பாடித் தானே அழிந்தானாம். மந்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் பதஞ்சலியார் காலத்திலிருந்து கூறிவரும் கதை இது. “நம்முடைய நாட்டில் உள்ள கோவில்களில் வழிபாடு இயற்றுவார் யார்? வடமொழியில் பயின்றவர்களா? தந்தையின் மகனா?” என்பதுதான் கேள்வி. வடமொழிப் பயிற்சி உண்டா என்று கேட்கலாமா? இன்றுள்ள சட்டப்படியோ வழக்கப்படியோ வடமொழிப் பயிற்சி இல்லாதவருக்குக் கோயில்களில் வழிபாடு இயற்றுவிக்க உரிமை இல்லை என்று சொல்ல முடியுமா? முடியாதானால், வழிபாடு இயற்றச் செல்வதன்நிலை விருத்திராசுரன் நிலையிலும் கொடியது அன்றோ? தன்னை நம்பிக் கெடுவதிலும் பிறரை நம்பிக் கெடுவது பெருங்கொடுமை! பெருங் கொடுமை! கோயில் திருநீர்—தீர்த்தம்—தருகிறார் ஒருவர். “ஆண்டவன் திருவடி நீர் மறங்களை அழித்தலைச் செய்வது” என்ற பொருளில் மந்திரம் ஓதுகிறார்; “பாப க்ஷயகரம்” எனவரும் சொற்றொடரை மிக வற்புறுத்தி அழுத்தம் திருத்தமாக ஒலிக்கின்றார். கரம் என்பதில் உள்ள ககரம் Kh என்ற ஒலி பெறுகின்றது. “செய்வது” என்ற பொருள் போய்க் கழுதை என்ற பொருளே அங்குத் தோன்றும். திருநீரைக் கழுதை என்று புகழ்கின்ற

தாக வழிபாடு முடிகின்றது.'பாப க்ஷயஹரம்'என்று மற்றொருவர் ஓதுகிறார். "பாவத்தினை அழிப்பதனை அழிப்பது" அதாவது "பாவத்தினை அழியாது நிறுத்துவது" என்று பொருளாம். இவை எல்லாம் விருத்திராசுரன் வரலாற்று வழியேயல்லவா? நூற்றெட்டுத் திருப்பெயர், ஆயிரம் திருப்பெயர் என்று கூறப்பெறுவனவற்றில் நிகழும் இத்தகைய மொழிக் கொலைத் திருவிளையாடல்களுக்கு அளவே இல்லை. சொல்வார்க்கும் கேட்பார்க்கும் தெரிந்த மொழியில் இருந்தால் இந்தக் கேடு நேரிடாதே! இத்தகைய கேடுகள் எல்லாம் தீர்ந்து ஆண்டவன் ஒளி விளங்கப் பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறையேனும் குடமுழுக்குத் திருவிழா (கும்பாபிஷேகம்) செய்ய வேண்டும் என்பர். அந்தத் திருவிழாவில் மட்டும் மந்திரம் அறிந்த பெரியாரைக்கொண்டு வழிபாடியற்றி மற்றைய நாட்களில் தமிழிலேயே ஓதி வரலாம் அன்றோ?

கோயிலுக்குள் ஓதப்பெறுவன எல்லாம் மந்திரம் ஆவதில்லை. மூலமந்திரம், பீஜ மந்திரம் என்று கூறப் பெறுபவை ஒரு மொழிக்கும் உரியவை அல்ல; அவை ஒலியாலேயே சிறப்புப் பெறுவன. "ஹஸ்க்ள்ப்ரேம்" என்பது ஒரு பீஜ மந்திரம்; அது கடவுளாற்றலின் வித்தாக நிற்பது என்பர். இதற்கு எந்தமொழியில் என்ன பொருள் கூறுவது? வலிந்து பொருள் கூறலாம். ஆனால், இவை மொழிக்கும் அப்பாற்பட்டன என்று கூறிவிடுவதே எளிதாம். இனி, சில வேதப்பாடல்களும் ஆகமப் பாடல்களுள் மந்திரமாக ஓதப்பெறுகின்றன இவை போக எஞ்சி நிற்பன மந்திரமே அல்ல. வெறும்

பேச்சுக்களே ஆம். சங்கற்பம் என்று சொல்வதனை யார் அறியார்? "இந்த இடத்தில் இந்த நாளில் யானும் என் குடும்பமும் வாழ ஆண்டவனை அவன் நூற்றெட்டுத் திருப்பெயர் சொல்லி வழி பட முற்படுகிறேன்." என மேற்கொள்வதில் என்ன மந்திரம் உண்டு? இதனைத் தமிழில் சொல்லுவதில் என்ன கேடு?

"பரத கண்டத்தில்" எனப் பொருள்படும் "பரத கண்டே" என வரும் தேசிய மணம் கமழும் தொடரை வடமொழியறியார் ஒலிப்பது கண்டு நம் இளஞ் சிறுவர்கள் "வறுத்த கண்டே மீனே" என்று எள்ளி நகையாடுவதனை நாம் அறியோமா? இளைஞரது தவறா இஃது? இனித் 'தீர்க்காயுஷ்யம் அஸ்து,' 'சத்ஸந்தான விருத்திர் அஸ்து' ("நீடு வாழ்க, நற்பிள்ளைகள் பெருகுக") என வருவனவற்றை நல்ல தமிழில் "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க" என்று வாழ்த்தினால் வாழ்த்துப் பயன் பெருதோ? பொருளறியாது வாயில் நுழையாத மொழியில் வடமொழியறியாமல் வாழ்த்துவதினும், பொருளறிந்த தம் தாய் மொழியில் வாழ்த்துவது வாய்க்கும் இனிக்கும்; காதுக்கும் இனிக்கும்; கருத்துக்கும் இனிக்கும்; கடவுளுக்கும் இனிக்கும்.

தமிழில் மந்திரம் இல்லை என்போமா? மூல மந்திரங்களும், பீஜ மந்திரங்களும் மொழிக்கு அப்பாற்பட்டவை ஆதலின், அவற்றை அப்படியே எந்த மொழியிலும் கூறலாம்; எந்த மொழி என்றும் கூறலாம். அந்த வகையில் அவை தமிழே என்ருல் தவறு ஒன்றும் இல்லை. "நமச்சிவாய

வாழ்க," "நமோ நாராயணாய" என்று பெரியோர்கள் பாடவில்லையா? இவை போக மிகுதியுள்ள மந்திரங்களுக்கு நேரான தமிழ் மந்திரங்கள் கிடையாவா? "நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப." என்று மந்திரத்திற்குத் **தொல்காப்பியர்** இலக்கணம் கூறுகிறார். மந்திரச் செய்யுள் தமிழில் அமைவதாலேயே செய்யுளியலில் தொல்காப்பியர் இவ்வாறு இலக்கணம் கூற வேண்டுவதாயிற்று. பார்ப்பனப் பெரியாராகிய **நச்சினார்க்கினியர்** இதற்கு உதாரணமாக எதனைக் காட்டுகிறார்? வட மொழி உயர்ந்தது, தமிழ் தாழ்ந்தது என்று கூறியவனை நக்கீரர் சாவப் பாடிப் பின் அவன்மேல் அருள் கூர்ந்து வாழப் பாடிய பாட்டையே காட்டுகிறார். தமிழ்மறை, தமிழ் வேதம் என்று நாலாயிரப் பிரபந்தத்தையும் தேவார திரு வாசகங்களையும் தமிழர் போற்றி வருகின்றனர். பார்ப்பனப் பெரியாராகிய **அழகிய மணவாள நாயனார்**, தம் **ஆசாரிய ஹிருதயத்தில்** வடமொழி வேதத்தினும் நம்மாழ்வார் பாட்டு மிகமிக உயர்ந்தது என்று சுவைபட எழுதுகிறார். இப் பாடல்களை மந்திரமாகப் பாடுவது வழக்கத்தில் உள்ளது. தேவார திருவாசகங்களோ, அற்புதங்கள் இயற்றிய பாடல்கள் என்பர். இவற்றில் உள்ள பாடல்களையும் சிவபூசையில் அவ்வப்போது ஓதிவரக் காண்கிறோம். தீபாராதனை நடந்ததும் தமிழ் மறை ஓத வேண்டும் என்று காமிகாகமம் வற்புறுத்துகின்றது. ஆனால், இன்று இவ்வளவு கூட நிகழக்காணோம். அம்மட்டுமா? இவ்வாறு தீபாராதனைக்குப்பின்

தேவாரம் ஓதுவதற்கு முன், திருநீறு வழங்க மறுத்த பெருங்குறைக்காகக் குருக்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அதுவும் சிவலோகமான தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலியில்! ஆகமத்திற்கும் எதிராகப் போவது மொழிப்பகை அன்று!!! தமிழ் என்று சொன்னால்தான் மொழிப் பகை!!!

கோயிலில் நடப்பன அனைத்தும் தமிழில் நடக்கவேண்டும் என்று யாரும் கூறவில்லை. கடவுளும் குருக்களுமாக ஓதுவன வடமொழியில் அமைவதனை யாரும் தடுப்பார் இல்லை. கோயிலுக்கு வருவார் பலபல மொழியில் ஆண்டவனை வழிபடுவதனையும் தடுப்பார் இல்லை. குருக்கள் வழியே வழிபாடாற்றுவார்க்கு வடமொழி தெரிந்திருந்தால் வடமொழியில் வழிபாடாற்றுவதனையும் தடுப்பார் இல்லை. வடமொழி அறியாதிருந்தாலும் நாம் முன் காட்டிய கெடுதிகளையும் அஞ்சாது வடமொழியிலேயே வழிபாடாற்றுவித்துக்கொள்ளுதலையும தடுப்பார் இல்லை. உரிமை பெற்ற நாட்டில் இந்த உரிமைகளைத் தடுப்பார் இல்லை. ஆனால், இத்தகைய கேடுகளுக்கு அஞ்சித் தமிழிலே வழிபாடியற்ற வேண்டும் என ஒரு சிலர் விரும்பினால், அந்த உரிமையை மறுக்க வேண்டுமா? தமிழ் அருச்சனையைப் பற்றித்தான் இன்று எழும் கிளர்ச்சி எல்லாம். நாற்றெட்டுத் திருப்பெயர் என்று வழங்குவன தமிழ் மறையினும் பழையனவா? தமிழ் மறை அவ்வளவு ஆற்றல் அற்றதா? திருநாவுக்கரையர் பாடிய போற்றித் திருத்தாண்டகங்கள் ஓதி அருச்சனை செய்தலாகாதா? மணிவாசகனாரது போற்றித்திருவகவல் ஓதி

அருச்சனை செய்த லாகாதா ? இவற்றினும் சிறந்த மந்திரம் உண்டு என ஆதிசைவக் குருக்கள்மார் மனமாரக் கூற முடியுமா ? "அருச்சனை பாட்டே ஆகும்," என்று ஆண்டவன் வழி நின்று சுந்தரர் துணிந்ததனை இவர்கள் நம்ப வில்லையா? இவ்வாறு நால்வர் செய்த அருச்சனை எல்லாம் தமிழ் அருச்சனைகள் அல்லவா ? வேதம் ஓதுவாரோடு தமிழர் தமிழில் ஓதி அருச்சனை புரிந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடவில்லையா ?

*"செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு*
*நற்கலை தெரிந்த அவரோடு*
*அந்தமில் குணத்தவர் அருச்சனைகள்*
*செய்ய அமர் கின்ற அரனூர்*
*வெந்திறல் விளங்கிவளர் வேதியர்*
*விரும்புபதி வீழி நகரே."*

எனவே, தமிழ் அருச்சனை மிக மிகப் பழைய தமிழ் நாட்டு நால்வர் மரபு ; புதிய தலைக்கிறுக்கு அன்று.

வடமொழி வெறுப்பால் எழுவதன்று இந்த விருப்பம். நால்வர், வடமொழியை வெறுத்தனரா ? ஆழ்வார்கள் வெறுத்தனரா ? பொருளறிந்து வழிபடுவதே வழிபாடாகும் எனக் கருதித் தமிழில் பாடி வழிபட்டனர். அவர்கள் முயற்சியால் தமிழும் சமயமும் தமிழ்நாட்டில் நிலைத்தன. இல்லையானால், என்ன ஆகி இருக்கும் ? விவிலிய நூலை இலத்தீன் மொழியிலேயே ஓதிவந்ததனை எதிர்த்துத் தம் தம் மொழியில் மொழிபெயர்த்து ஓதவேண்டும் என்று எழுந்த மேனாட்டுக் கிளர்ச்சியை ஒரு சிலர் எதிர்த்ததால் அஃது ஒரு பெரிய புரட்சியாய் அங்கு முடிந்ததனை வரலாறு கூறுகின்றது. அன்பினையும்

அறிவினையும் எதிர்க்கலாமா? வீணாக வட மொழிக் கற்றுக்குட்டிகள் வடமொழிக்குப் பரிவது போலப் பேச வந்து, தமிழ் நாட்டில் வடமொழி வெறுப்பினைத் தீயைப் போலப் பரவவிட்டு வருகிறார்கள். தமிழர் வளர்த்த வடமொழியை இந்த நிலைக்கு இவர்கள் கொண்டுவந்தது மிகமிக வருந்தத் தக்கதே ஆம். தமிழோடுதான் வடமொழியை முட்டவிட வேண்டுமா? தமிழ் அருச்சனையால் என்ன கேடு நேர்ந்துள்ளது? ஈரோட்டில் உள்ள கோயிலில் தமிழ் அருச்சனை நடைபெறுகிறது. இங்கெல்லாம் வடமொழி வழிபாடு நின்று போகவில்லை என்பதனைப் போலி வடமொழி அன்பர்கள் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். காமகோடி பீடம் அருட்பெருந்திரு சங்கராச்சாரிய அடிகளாரும் தமிழருச்சனையைத் தடை செய்யவில்லை என்பதனை மக்கள் அறிந்து மகிழவேண்டும்.

# IV. சுங்குவார் குடும்பம்[1]

கடலில் போகும் கப்பலுக்கு எல்லாம் வழி காட்டுகிறது நமது சென்னை நகரின் கலங்கரை விளக்கு; அதனை முடிமேல் தாங்கி, வானளாவ ஓங்கி, அறம் வழங்குகிறது ஹைகோர்ட்டு என்னும் நீதி மன்றம். எனவே, இங்கே சென்னையின் இந்த நூற்றாண்டின் பெருமையே உரு எடுத்து ஒளிர்கிறது எனலாம். இதன் எதிரே தப்பு செட்டித்தெரு நீண்டும், **சுங்குராம செட்டித்தெரு** குறுகியும் பதினெட்டாம் நூற்றாண்டின் பெருமைக்கு அடையாளமாக—வரலாற்றின் அறிகுறியாக—இன்றும் ஓடுகின்றன. இன்று உரிமை பெற்ற இந்தியாவின் அறக்காவல் நீதி மன்றம், அன்று உரிமையிழக்க முந்திய நம்மவரது அறக்கேட்டிற் பூத்த நினைவு மலர்கள் இந்தத் தெருக்கள்.

கடையை விரித்துக் காசு தேட வந்தவர்கள் ஆங்கிலேயர்கள்; ஆனால், கப்பற்படை கொண்டு கடலை ஆண்டார்கள். அவர்கள் கடலைக் கட்டியாண்டதால் அன்று இந்தியாவை வேறு பிறர் ஆளுவது எங்கே? குழப்பமும், கலகமும், குணக்கேடும், சீர் கேடும் உரிமை பெற்ற இந்தியாவை அடிமைப் படுகுழியில் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்தன. நம் கையைக்கொண்டே அவர்கள் நம் கண்ணைக் குத்தினார்கள்; நம்மைப் போராட விட்-

---

[1] சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் 14-8-52 இரவு 7-30 மணிக்கு ஒலி பரப்பிய பேச்சு.

டார்கள்: ஆட்டுக்கிடாய்ச் சண்டையில் நரியார் இரத்த விருந்துண்ட கதைதான்.

18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர் "கும்பினியாராக" வாணிகமே செய்துவந்தனர்; ஆனால், கோட்டைக்குள்ளிருந்து பீரங்கி பலம் கொண்டு வாழ்ந்தனர்; நம் நாட்டு அரசியற் சிக்கல்களில் சொக்கட்டான் ஆடவும் செய்தனர். உள் நாட்டில் வணிகர்கள் துணையும் அவர்களுக்கு வேண்டும் அல்லவா? இடையே வியாபாரிகளைக் கூட்டாக அமைத்து ஆங்கிலேயர் அவர்களுடன் வாணிகம் செய்துவந்தனர்; இதனால் நேர்ந்த கேடுகளைக் கண்டனர்; கூட்டுப் பொறுப்பினைவிடத் தனிப்பொறுப்புடையவர்களே தமக்கு அடங்கி நடப்பார்கள் என்பதை உணர்ந்தனர்; தனித்தனியே ஒப்பந்தம் செய்யத் தலைப்பட்டனர். 1705-இல் அவ்வாறு விளங்கிய இந்திய வியாபாரிகள் பலருள் **சுங்குராம செட்டியாரும்** ஒருவர்.

இவர் **வலங்கையைச்** சார்ந்தவர். சாதி வெறி தலை விரித்தாடிய அந்த நாளில், **'வலங்கை'** என்றும் **'இடங்கை'** என்றும் சாதிகள் பிரிந்தன. ஊர் வலம் முதலியன கொண்டு ஒரு பிரிவு இருக்கும் இடத்தில் மற்றொரு பிரிவு வருதலாகாது என்பது முதலாகப் பல முறையில் இவை மோதிக்கொண்டன. "**பெத்துநாயக்கன் பேட்டையில்** வலங்கையர் வாழ வேண்டும்; **முத்தியாலுப் பேட்டையில்** இடங்கையர் வாழ வேண்டும்," என்று கும்பினியார் ஒரு தீர்ப்புக் கூறினர். **வலங்கையினர்** இதற்கு உடன்படாமல் மயிலைத் தோமையார் கோவிலருகே திரண்டனர். படையாளரைக்

கொண்டு இவர்களை அடக்கக் கும்பினி எண்ணியது. அந்நாளைய பெத்துநாயக்கர் இந்த ஊர்க் கலகத்தினை அமைதியாகத் தீர்த்துவைத்தார். ஆரிய வைசியர்கள் குடும்பத்தினைச் சேர்ந்த சுங்குவார், வலங்கைக் கூட்டத்தினைச் சார்ந்தவராய் விளங்கினர். ஊர் இரண்டுபட்டால் உரிமை பறிபோவதனைக் கூற வேண்டுமா?

"தூங்கியவன் தொடையில் திரித்த வரையிலும் கயிறு" என்பதே அந்நாளைய அரசியல் கொள்கை. ஆனல், முடிவில், வல்லான் எடுத்ததுதானே வாய்க்காலாகும்? எழுமூர், புரசைப்பாக்கம், தண்டையார்ப் பேட்டை முதலியவற்றைப் பழைய நவாபுவிடமிருந்து கும்பினியார் கொடையாகப் பெற்றிருந்தனர். **தாவுத்கான்** நவாபுவானதும் கருநாடகத் துணைநவாபுவாகச் **சதுதுல்லாகான்** நுழைந்தார்; அந்த ஊர்களுக்காகக் குத்தகைப் பணம் நவாபுவுக்குக் கொடுததல் வேண்டும் எனக் கும்பினியாரை வெருட்டினர். தங்கள் பட்டயத்தைக் காட்டினல் அதனைக் கிழித்தெறிவாரோ என அஞ்சினர் குப்பினியார்: ஆகையால், காட்டாது படையாளரைக் கொண்டு சதுதுல்லாகானை வென்றுவிட முடிவு செய்தனர். கோமளீசுவரன் கோயில் பாலத்துக்குப் பெயர் தந்த **ஹாரிஸ்** என்ற கவர்னர் திரப் இது. சுங்குவார் இந்தப் போர் மூளாதபடி, சதுதுல்லாகானேடு திறமையாகப் பேசி, அமைதியை நிலை நாட்டிக் கும்பினிக்குத் துணை செய்தார் என்ருலும், சதுதுல்லாகான் வாயை அடக்க இவர் பணம் பெரிதும் தந்தே இருக்க வேண்டும்.

இவ்வாறு சுங்குராம செட்டியாரின் பெருமை, வாணிகத்துறையி லன்றி, அரசியல் துறையிலும் வளர்ந்துவந்தது. செட்டியார் 1711-இல் பெரிய வணிகர் ஐவருள் ஒருவராயினர். வலங்கை இடங்கைச் சண்டையில் சேர்ந்தவர்களும் வேறு வகையில் அவமானப் பட்டவர்களும் வேலையிலிருந்து நீக்கப்பெற்றபோது, இவருக்குச் சுக்கிரதசை அடித்தது எனலாம். சென்னையில் வெள்ளையர்களே வாழ்ந்தது **வெண்ணகர்**; நம்மவர் வாழ்ந்தது அதனைச் சுற்றியுள்ள நகரம். வெள்ளையின் சாதி வெறி அதனைக் **கறுப்பு நகர்** என வழங்கிவந்தது. சுங்குராம செட்டியார் செய்த உதவிக்காக வெள்ளை நகரிலே வீடு வாங்கவும், அதில் துணிக்கிடங்கு வைக்கவும் கும்பினியார் இவருக்கு உரிமை வழங்கினர். வெள்ளையராகவும் அவர்கள் ஆக்கி விட்டு இருப்பார்கள் போலும்!

சததுல்லாகான் எழுமூரை விட்டுத் திருவொற்றியூர், சாத்தங்காடு வேசாரவெளி முதலியவற்றைத் தம்முடையவை என்று கூறி உள் நுழைந்தார். கும்பினியாரது படை சென்று, திரும்பவும் இவற்றைக் கைப்பற்றியது. அந்த ஊர்களை இந்தக் குழப்பத்தில் குத்தகைக்கு எடுப்பார் யார்? சுங்குராமசெட்டியார் கும்பினியாரின் நல்ல பிள்ளையாய் வந்தார்; ஆண்டுக்கு 1200 வராகனுக்கு 12 ஆண்டுகளுக்குக் குத்தகை எடுத்துக்கொண்டார். இதனால், அவருடைய பல வகையான திறமைகளும் வெளியாகின்றன அல்லவா? சததுல்லாகானை வழிபடுத்தும் வகை தெரியும் செட்டியாருக்கு. தமக்கு 2000 வராகனும், மந்திரிக்கு 1000 வராகனும் தந்-

தால், பழையபடி இந்த ஊர்களின் கொடைப்பத்திரத்தை நவாபுவிடம் வாங்கித் தருவதாகச் சததுல்லாகான் செய்தி அனுப்பினர். செட்டியார் வழியாகக் குப்பினியார் இதனை ஒப்புக்கொண்டு, அமைதியைத் தமக்காகவும் செட்டியாருக்காகவும் விலைகொடுத்து வாங்கினர். இது நடந்தது. 1718-இல்.

சென்னையின் வடவெல்லை இவ்வாறு பகைவருக்குப் பாலும் பழமுமாய் இருப்பதனைத் தடுக்க அங்கே கஞ்சித்தொட்டிகள் போலக் கட்டிப் போர்மூளும்போது பீரங்கி நிலையமாக மாற்றக்கூடிய வகையில் காவல் அமைக்கக் கும்பினியார் முற்பட்டனர்; வரிசையாக நான்கைந்து கஞ்சித்தொட்டிகள்—சத்திரங்கள்—பாட்டரி மேடாகக் கட்டினர். கஞ்சித்தொட்டி ஆஸ்பத்திரி, **மணியகாரர் சௌல்ட்ரி, டாக் சரித்திரம்** என்றெல்லாம் இன்றும் நாம் பேசிக்கொள்ளவில்லையா! இவற்றில் ஒன்று சுங்குராம செட்டியார் பெயர் கொண்டு விளங்கியது. கும்பினியாரிடம் அவருக்கு இருந்த செல்வாக்கு இதிலிருந்தே நன்கு விளங்கவில்லையா?

சுவை கண்ட பூனை விடுமா? கைப்பணம் வாங்கிப் பழகிய சததுல்லாகான் 1723-இல் மறுபடியும் பழையபடி வரிகளைக் கேட்டார். தோமையார் கோவிலருகே தங்கினர்; கும்பினியார்மேல் பழியைச் சுமத்தினர்; பதில் கேட்டார். பாப்பையரும், சுங்குராம செட்டியாரும் குப்பினியாருக்காகச் சென்றனர். சததுல்லாகான் அவர்களை அடைத்து வைத்தார்; பின் குழப்பம் தெளிந்து 3 நாளானதும் விட்டுவிட்டார். இவ்வளவும் பட்ட செட்டியார்,

அங்நாளைய கும்பினிக் குகந்த பெரிய வியாபாரிகள் இருவருள் ஒருவரானார். மற்றொருவர், **தம்பு செட்டியார்.** இவ் விருவர் பெயராலும் நீதி மன்றத்திற்கு எதிரே தெருக்கள் ஓடுகிறதன் நுட்பம் இப்போது விளங்குகிற தன்றோ?

இதற்குச் சற்று முன்னர், முன்னே சததுல்லாகானை வழிப்படுத்தியதற்காகக் கவர்னர் இவருக்கு ஒரு பரிசு தந்தார். காலடிப்பேட்டைக்குப் பெயர் கொடுத்த **காலட்** என்ற கவர்னரே இவர். இவர் இப்போது **சிந்தாதிரிப்பேட்டை** என வழங்கும் இடத்தைச் செட்டியாருக்குத் தானமாகத் தந்துவிட்டார். 2520 அடி நீளம், 1500 அடி அகலம் உள்ள பெரிய தோட்டமாக இந்த வெட்டவெளியை மாற்றிக் கிளி கொஞ்சச் செய்தார் செட்டியார்: மரங்கள் வளர்ந்தன; 15 ஆண்டைய மரங்களாகத் தழைத்தன.

"முப்பதாண்டு வாழ்ந்தவரும் இல்லை; முப்பது ஆண்டு தாழ்ந்தவரும் இல்லை," என்பது பழமொழி. 5 புதிய ஊர்களைப்பற்றிய போராட்டத்தினைக் குறித்தோம் அல்லவா? **மஹாதேவர்** என்பவர், இந்த ஊர்களின் குத்தகையைப்பற்றிக் கோளாறு ஏற்பட்ட போது சுங்குராம செட்டியார் தம்மிடம் முன்னரே கைப்பணம் வாங்கியதாக அறமன்றத்தில் பழி தூற்றினார். சத்தியம் செய்யச் செட்டியார் மறுத்தார் இவர்மேல் இருந்த நம்பிக்கை எல்லாம் பழங்கனவாய் ஒழிந்தன. கும்பினியாருக்கு உழைத்தது போலக் குடிகளுக்கோ கடவுளுக்கோ உழைத்திருந்தால், இந்த நிலை வந்திருக்குமா? இவர் கும்பினி வாணிகர்

வேலையிலிருந்து 1731-இல் தள்ளப்பெற்றார். தம்பு செட்டியார் மட்டுமே பழைய புகழுடன் வாழ்ந்தார். கும்பினியார் நம் செட்டியார்மேல் வழக்குத் தொடர்ந்தனர் மேல் கோர்ட்டில் இவருக்கு மாறாக வழக்கு முடிந்தது. இவர்மேல் நடவடிக்கை எடுப்பதற்காக ஆணை பிறந்தது. இன்று நகராண்மைக் கழகம் இருப்பதுபோல அன்றும் இருந்தது. 'மேயர்' என்ற அதன் தலைவரும் 'ஆல்டர்மென்' என்ற சிறப்புறுப்பினரும் அறமன்றமாய் விளங்கினர். இவர்களே இந்த ஆணையை நிறைவேற்றவேண்டும். சுங்குராம செட்டியாரிடம் வைத்த பெருமதிப்புக் காரணமாக அந்த மேலிடத்தார் ஆணையை நிறைவேற்றாது, மேயர் காலம் தாழ்த்தினர். வெள்ளையர்களும் இவ்வாறு அவரிடம் நன்மதிப்புக் காட்டியது அவரது பெருமையையே விளக்குகின்றது. அந்தக்காலத்தில் மேயர் முதலியோரிடம் நண்போடு இவர் பேசிவருவது கும்பினித்துரைத்தனத்தார் கண்ணைக் குத்தியது. இவர். வெள்ளை நகர்க்குள் வரலாகாது என்று அவர்கள் தடுத்தனர். வெள்ளை நகரில் செட்டியார் வீடு வாங்கத் தந்த உரிமை எல்லாம் பறிபோயிற்று. 1744-இல் 'கறுப்பர்கள் வெள்ளை நகரில் வீடு வாங்கலாகாது," என்ற விதியும் வந்தது. தென்னாப்பிரிக்காவில் இன்று நடப்பது அன்று சென்னையிலும் நடந்தது.

துரைத்தனத்தார் அவ்வளவோடு நிற்கவில்லை; நன்றி எல்லாம் மறந்தனர். கோயம்புத்தூர் முதலிய இடங்களில் குழப்பம் காரணமாகக் கும்பினியாருக்குத் துணிகள் கிடைக்கவில்லை. ஆமாம்;

அன்று நம்முடைய துணிகளை வாங்கித் தங்கள் ஊருக்கு ஏற்றுமதி செய்வதுதான் கும்பினி வாணிகம். அஃது ஒரு காலம்; இஃது ஒருகாலம். அவர்கள், வியாபாரம் தம் கலகம் காரணமாகத் தடைபடாதிருக்க ஒரு சூழ்ச்சி செய்தனர். நெய்வோரைச் சென்னைக் கோட்டையின் நிழலிலே குடியேற்றிக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. சிந்தாதிரிப்பேட்டை இதற்கு நல்ல இடமாகக் காட்சி அளித்தது. சுங்குராமசெட்டியாருக்குக் கொடுத்திருக்கிறார்களே! எழுத்தைக்கொண்டு போராடுவதுதானே அவர்கள் வழக்கு? சுங்குவாருக்குக் கொடுத்த பட்டயத்தில் கவர்னர்மட்டுமே கையெழுத் திட்டிருந்தார். ஆதலால், அது செல்லாது என்று கும்பினியார் முடிவுசெய்தனர்; தோட்டத்தைச் செட்டியாரிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். நான் பிறந்தது சிந்தாதிரிப்பேட்டையில். இதனை நான் மறக்கவே முடியவில்லை. **வாரன் ஹேஸ்டிங்ஸின்மேல் எட்மண்டு பர்க்கு** கொண்டு வந்த பழிகளின் நிலையமாகக் கும்பினியார் தொடக்கத்திலிருந்தே விளங்கியது இதனால் வெளியாகிறது. இத்தகைய அறவழியிலேதான் ஆங்கிலேயர் இந்த நாட்டை வென்றனர்! என் போன்றாரது மனத்தில் உரிமை வேட்கையை வளர்த்தது இந்தக் கதைதான். இந்தச் செட்டியார் பெயரால் **சுங்குவார் அக்ரஹாரம்** என்ற ஒன்று சிந்தாதிரிப்பேட்டையில் இன்றும் விளங்குகிறது.

1735-இல் இவ்வாறு ஏமாற்றமடைந்த சுங்குராமசெட்டியார் இறந்தார். ஆனால், இவரோடு இவர்

புகழ் மடியவில்லை. இவருடைய பிள்ளை போலும்! ஒருவர் சுங்குராம செட்டியார் என்ற பெயரோடு 1752-இல் துரைத்தன அறிக்கையில் வருகின்றார். அந்த ஆண்டில் சென்னை நகராண்மைக்கழகம் தங்கள் சிறைச்சாலையைச் சீர்திருத்த இவருடைய வீட்டினை வாங்கியதாக அறிகிறோம். ஆர்ம் என்பவர் வரலாற்றுப் புலவர். அவருடைய நண்பர் இந்த இளைய சுங்குராம செட்டியார். வரலாற்றுப் புலமையோடு கைப்பணம் வாங்கும் பெருமையும் கும்பினியில் அவருக்குப் பழக்கமாகிவிட்டது. நாவாபுவிடம் பணம் கேட்டதாக அவர் சுங்குவாரைக் கொண்டு எழுதிய கடிதம் அறமன்றத்தில் வந்தது. தம் நண்பரைக் காப்பாற்றச் சுங்குவார் பெரிதும் உழைத்தார். அந்தக் கடிதத்தினை ஆர்ம் என்பவருக்குத் தெரியாமல் தாம் எழுதியதாகக் கூறினார். தம்மையும் அழிப மாறி உதவும் உயர்வு இஃது. அறமன்றத்தார் இதனை ஒப்புக்கொண்டாலும், ஆர்ம் என்பவர் கைப்பணம் வாங்குபவரே என முடிவுசெய்தனர். ஆர்ம் இங்கிலாந்துபோய்விட்ட பின்னும், அவருக்கு அப்போதைப்போது கடிதம் எழுதுவது இவருக்கு வழக்கமாய் இருந்தது. அதில் ஒன்றில் கும்பினியின் "சாயம் வெளுக்கக்" காண்கிறோம். '**பிகாட்**' என்ற கவர்னர் நாவாபுவிடம் 40,000 சவரன் கைப்பணம் வாங்கிய செய்தி ஊரெல்லாம் அடிபடுவதனை இவர் எழுதியுள்ளார். ஆர்ம், பின் வரலாற்றுப் புலவராய் வந்தார். அவர் திரட்டிய குறிப்புக்கள் இன்றும் பாராட்டப்பெறுகின்றன. அவர் பெயரால் கீழ்ப்பாக்கத்தில் ஒரு தெருவும் வழங்கவில்-

லையா? சுங்குவார் குடும்பம், இவ்வளவோடு நின்று விடவில்லை. கும்பினியார் கணக்கில் கண்டவை-களை மட்டுமே இதுவரை கூறினோம். பார்த்தசாரதி கோயில் எதிரில் உள்ள பாலம், **சுங்குவார் பாலம்** என வழங்குகிறது காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீ பெரும்-பூதூர் போகின்ற வழியில் **சுங்குவார் சத்திரம்** என்ற ஊரும் இவர் புகழை இன்றும் பாடிக்-கொண்டே இருக்கின்றது. இன்றும் இக் குடும்பம் சிறந்து வாழ்கின்றது. இக் குடும்பத்தின் அறமா-கச் சென்னை நகராண்மைக் கழக நூல் நிலையம் **சுங்குவார் நூல் நிலையம்** என்ற பெயரோடு விளங்குகிறதன்றோ?

# V. இந்தியாவின் ஒருமையும் தேசீய இனங்களின் உரிமையும்

தரைப் பரப்பே உடலம்; தரையில் வாழும் மக்களே அதற்கு உயிர். மக்களில்லாத பாழுந்-தரை உயிரற்ற பிணம்; தரையில் நிலையாக வாழாத நாடோடி மக்களே உடலற்ற பேய். நாட்டில் நிலைத்து வாழும் குடிகளே உடலோடு உலாவி வரும் உயிர் விளக்கங்கள். அரசியல் ஆராய்ச்சியாளர் இவற்றை வேறு பிரித்து ஆராயும்போது பல முறை மயங்குகின்றனர்; தரையை விட்டுவிட்டு மக்களைத் தனித்து ஆராய்ந்து காண்கின்றனர்: அவர் பண்பாடு, மொழி, வாழ்வு இவை-யெல்லாம் தோன்றுகின்றன. இந்த இன ஒற்று-மையில் ஈடுபட்டுப் பிறவற்றை யெல்லாம் மறக்-கும்போது அடிப்படையான பூகோள ஒற்றுமை கண்ணிலும் கருத்திலும் படாமல் மறைகிறது. மக்கள் வாழும் இயற்கைப் பரப்பு அவர்கள் வாழ்-வினை இயக்கி உருப்படுத்தி வரும் உண்மையே நினைவிற்கு வாராமற்போகிறது. இயற்கைப் பரப்-பின் இயல்பினையும், புதையலையும், செழுமையினை-யும் ஆராயும்போது நாட்டின் ஆக்கம் எல்லாம் மக்களது பண்பாட்டிற்கேற்ப மாறிநிற்பது மனத்-திற்கு வருவதில்லை; மக்களின் வேறுபாடுகள் அப்போது மறைகின்றன; பூகோள ஒற்றுமை மட்டுமே தோன்றுகிறது; இன ஒற்றுமை வேற்-

றுமை தோன்றுவதில்லை. இவ்வாறு தரை சமுதாயம் என்ற இவற்றில் ஒன்றினை விட்டு ஒன்றினை வற்புறுத்துவதால் உலகில் எழுந்த அரசியற்குழப்பங்கள் பல.

பூகோள ஒற்றுமையை மட்டும் கண்டால், சுரண்டற்கொள்கையில் எழுந்து உலகினை அளக்கும் சாம்ராஜ்யமே—பெரு வல்லரசே—வளரும். இன ஒற்றுமையை மட்டும் கண்டால், இனவேற்றுமையால் உலகம் சிதறுண்டு போக, இனப்போரே மூளும். இவை இரண்டனையும் ஒன்முக இயைபவைத்துப் பார்த்து அரசியல் வழி அமைப்பதே அறிவுடைய செயலாகும். இதற்கு ருஷியாவைச் சிலர் எடுத்துக் காட்டுகின்றனர். பூகோள ஒற்றுமையோ, வரலாற்று ஒற்றுமையோ குலையாது ருஷியா விளங்குகிறது; இயற்கைச் செல்வஞ் சிதையாது சிறந்தோங்குகிறது. ஆனல், ருஷியாவில் வாழும் மக்கள் பலபல மொழி பேசுவார்கள்; பலபல பண்பாட்டினர்கள். முன்னெல்லாம் அந்த வேறுபாடுகளை ஒழிப்பதனையே ருஷியத் துரைத்தனம் கடமையாகக் கொண்டது. ஆனல், லெனினே, ஒவ்வொரு மொழிபும், ஒவ்வொரு பண்பாடும் வளர ஒவ்வோர் இனத்தினையும் ஒவ்வொரு நாடாகப் பிரித்தார். அவையும் சுயநிருணய உரிமைபெற்று வளர்ந்தன. தம்மை நசுக்கி அழிக்கும் முயற்சி நடுவிடத்தே இல்லாதது கண்ட இந்த நாடுகள் முழு உரிமை பெற்ற பின்னரும் தாமாகவே ("கட்டாயம் இன்றி" என்பர் சிலர், "கட்டாயம் இல்லாமல் அங்கு என்ன நிகழும்" என்பர் வேறு சிலர்) வந்து ருஷியக் குடி-

யரசு கூட்டுறவில் கலந்துகொண்டன என்பர். 150 பேர் பேசும் மொழிக்கும் அங்கு ஒரு தனியிடம் உண்டாம். பொதுவாக மக்கள் வாழ்வு மொழி வழியாக அன்றோ நாகரிகப் பண்பாடு பெற்று உயர்ந்தோங்குகிறது? மொழியை வளர்த்து, இன உணர்ச்சியைப் பெருக்கி, வாழ்வினைச் செம்மை செய்து,பண்பாடு புத்துயிர் பெற்று உலகிற்கு வழிகாட்ட வரும்போதன்றோ அரசியலின் பெருமையும் உலகின் ஒற்றுமையும் என்றென்றும் அழியாமல் இருக்கும்? இதனைக் கண்ட—**லெனின்** கண்ட துரைத்தனம், 150 பேர் மட்டும் பேசும் மொழியிலும் நூல்கள் வெளியிட்டு அதனை வளர்க்கின்றதாம், ருஷிய நாட்டு இயற்கைப் பரப்பின் ஒருமையையும், அந் நாட்டு மக்களது இனப்பன்மையினையும் தம் பரந்த அறிவுகொண்டு ஒற்றுமைப்படுத்திய பெருமை **லெனினைச்** சாரும். இன உணர்ச்சியை உலக ஒற்றுமைக்குப் பயன்படும் வகையில் வளரவிட்டு உருப்படுத்தித் திருத்தாது, இன உணர்ச்சி என்ற எரிமலை கீழே புகைவதனையே அறியாமல், "உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்," என்று கூவிக் குலைவது வெற்றாரவாரமே என்பதனை லெனின்வழியே **ஸ்டாலினும்** அறிந்திருந்தாராம்.

**காந்தியடிகள்** விடுதலைப்போரில் நுழைவதற்கு முன்னர் இந்தியாவின் பூகோள ஒற்றுமையே எதிர் தோன்றியது. உடையிலும் உணவிலும் மொழியிலும் வழியிலும் வேறுபட்டால், வேறு எந்த ஒற்றுமையைக் காணமுடியும்? வேற்றுமையை வளர்த்து அவற்றிடையே ஒற்றுமை

காணும் ஆற்றல் அந் நாளில் இல்லை. உலகிடை வாழ வந்தாலன்றோ பல வகை மொழிகளிலே எழும் பல வகை ஏழைக் குரல்களும் பட்டினிப் பண்ணையே பாடுகின்ற துன்ப இசை கேட்கும்! பல சிற உடைகளிடையேயும் கந்தைப் புராணக் காட்சி தோன்றும்! பல வகை உணவிடையேயும் வயிற்றுக்குப் போதாத "சப்பிட்ட" சுவை தோன்றும்! விடுதலை என்பது, இவற்றினின்றும் பெறும் விடுதலையே: பலபல மொழியில், பலபல பேசிப் பலபல இன்பப்பாடல் பகரும் விடுதலை; பலபல உடைகளும் அணிய விடுதலை; பலபல வகையான பல பல சுவையுள்ள உணவினை உண்ண விடுதலை. பல வகை மணிகளை அழகுபடப் பதிக்கக் கைத்திறம் வேண்டும். பல வகை மணமலர்களைப் பாங்காகக் கோக்க மலர் வாழ்விற் பழக்கம் வேண்டும். பல வகைச் சுவையும் வாய்க்கினிக்கச் சமைப்பதற்குக் கைப்பாகமும் செய்பாகமும் வேண்டும். மக்களோடு மக்களாய்த் தோளோடு தோள் உராய வாழ அஞ்சி, மேடை மேலேயே வாழ்வோருக்கு இவை எல்லாம் தெரியுமா? மேடைப் பேச்சாளர் தம் பூகோளப் படத்தில் இமயமுதல் குமரி வரை விளங்கும் பரப்பினைக் கண்டனர். ஒரு புறம் உலகிலேயே உயர்ந்து விளங்கும் இமயமலைச் சுவர் நிற்க மற்றைப் புறங்களில் பெருங்கடலே அகழியாக இயற்கையிலே அமைந்திருக்கும் அழகினை அவர்கள் கண்டனர்; இந்த ஒருமைப்பாட்டினையே கருதி வாழ்ந்தனர்; இந்திய விடுதலைப் போரில் இந்தியாவில் வாழும் பல வகைப் பண்பாடுகளையும், பல வகை மொழிகளையும் அடியோடு

மறந்தனர். சென்னை மாநில வட்டம், பம்பாய் மாநில வட்டம் என்றே தனித்தமிழ் பேசுவோரும் எண்ணவும் பேசவும் தொடங்கினர். சென்னை மாநில வட்டம் என்பது இயற்கைப் பரப்பன்று; செயற்கைக் குழப்பமேயாம். ஆந்திர நாடும், தமிழ் நாடும், கன்னட நாடும், மலையாள நாடும் சேர்ந்தது அஃது. அந்த மொழிகளின் கழுத்தை இறுகப் பிடித்துக்கொண்டு ஆங்கில மொழி ஆரவாரஞ் செய்து கொக்கரித்தது. சுரண்டற்பேயாய் நாடுகளை ஒரே வாயாய் விழுங்கி வந்த பெருவல்லரசுக்கோ, வாயிற்புகுவதெல்லாம் ஒருவாயாக ஒன்ருய்ப் போவதற்கேற்ப ஒரே விழுங்காய் விழுங்கச் சென்னை மாநில வட்டம் ஒன்றே எனத் தோன்றியது. ஆண்டான் பேச்சையே அடிமையும் பேசுவது வழக்கம். அந்த அடிமைக் குடிவெறி ஒழியாமையால், இன்றும் சென்னை மாநில வட்டத்தினைத் 'திராவிட நாடு' எனப்பேசி நிலை நிறுத்தும் முயற்சிகள் விடுதலையின் பேரால் எழுகின்றன அன்ருே?

இந்த அடிமைக்கோலத்தின் அடிப்படை என்ன? இன உணர்ச்சியை எழ விடாமல் அழித்தொழிப்பதே ஆம். "செந்தமிழ் நாடு எனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே; எங்கள் தந்தையர் நாடு என்ற பேச்சினிலே ஒரு சத்தி பிறக்குது மூச்சினிலே." இந்த இன்பமும் சக்தியும் பிறந்தால் மட்டுமே மக்களைத்தட்டி எழுப்பி அடிமைக் கோட்டையைத் தகர்த்தெறிய முடியும். வறட்டு ஆங்கிலப் பேச்சு உள்ளத்தில் ஊருது; இரத்தத்திற் பாயாது. மொழி என்ற அடிப்படையில் எழும் இன உணர்ச்சி வழியே தமிழ் நாடு.

ஆந்திர நாடு என இந்தியாவை மொழி வகை நாடுகளாகப் பிரிக்கவேண்டும் என்றார் காந்தியார். உடனடியாக அந்தப் பிரிவினையையே அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸ் தன் அமைப்பை வளர்க்க வேண்டுமே அன்றி அடிமையின் அடையாளமாம் மாநில வட்டங்களின் பெயரையும் வழங்கலாகாது என்றார்.

இந்த உண்மையை உணராமையாலேதான் எங்கும் ஐயம் எழுந்தது; வெறுப்புப் பொங்கியது; சண்டை மூண்டது. இந்திய நிலப்பரப்பின் இயற்கை ஒற்றுமையை மட்டும் மனத்தில் வைத்துக்கொண்டு மக்களுணர்ச்சியைப் பிறர் மறந்ததன் பயனாக இந்திய நாடு இன்று இரு துண்டாகித் துடிதுடிக்கிறது. இவ்வாறே இன உணர்ச்சியின் ஆற்றலை உணர்ந்து மொழி வகை நாடுகளைப் பிரியாமல் வற்புறுத்தி வாட்டினால், ஆந்திரர்—"மதராஸ் சலோ," "க்விட் மதராஸ்" எனத் தாமறியாத வேறு மொழிகளில் வெறிகொண்டு கூவியலறுவது போல, நாடு முழுதும் வெறியேறி நாட்டினைப் பல பல துண்டுகளாக வெட்டிப் பிளக்கின்ற கொடுங்காட்சியைக் காணும் காலமும் வரும். "தண்ணீர் விட்டோ வளர்த்தோம் இந்தப் பயிரை—சர்வேசா! கண்ணீர்விட்டே வளர்த்தோம் கருகத் திருவுள்ளமோ?" என்ற பாரதியார் பாட்டு எவ்வளவு பொருத்தமானது? இயற்கை ஒற்றுமையை மறப்பது பெருங்கேடாம்.

ஆனால், இயற்கை ஒற்றுமைக்காக மக்கள் வாழ்வின் இன்ப விளக்கங்களாம் மொழிகளையும் பண்பாடுகளையும் அழித்தொழித்தல் அழகன்று;

அறிவும் அன்று. அத்தகைய இருட்டடைப்பிலேயன்றோ இந்தியப் பாகுபாடு இன்று வளர்ந்துள்ளது? அவற்றை அவிக்கும் முயற்சிகள் எங்கும் வெற்றி பெற்றதில்லை. ஜெர்மனியும் ருஷியாவும் அடிபோடு தேய்த்தொழிக்க முயன்றும் போலந்தின் மொழியோ கலையோ மறைந்தொழிந்ததா? புத்துயிர் பெற்றன்றோ பொலிகிறது? இந்த உண்மையைக் காந்தியடிகளும் தாம் உணர்ந்ததன் பயனாக, இதனை இன்றும் வற்புறுத்துகின்றார். இந்தியாவின் இயற்கை ஒற்றுமையையும் உடனுக்குடன் அப்பெரியார் வற்புறுத்தி வருவதால் இன உணர்ச்சியின் உண்மையை அவர் வற்புறுத்துகின்றார் என மக்கள் நன்கு உணராமற்போகின்றார்கள்.

இன உணர்ச்சி இனியது; இன வெறி கொடியது. மக்கட் பண்பாட்டின் வேற்றுமை இந்திய இயற்கை ஒற்றுமையை மாற்றி அமைக்க முடியாது. இமயமலை பாஞ்சாலத்தின் இடையே வந்து விழ முடியாது; விந்தியமலை வங்காளத்தின் இடையே வந்து மேலோங்கி வளர முடியாது. ஆறுகள் மாறிப் பாயா. சுரங்கங்கள் உள்ளுக்குள்ளாக ஓடிப் பாய முடியாது. உலகம் ஒன்றாய் இயைந்து விளங்குகிறது என்று அறிஞர்கள் வற்புறுத்தும் இந்தக் காலத்தில் இந்தியாவின் இயற்கை ஒற்றுமையை மறக்க முடியாது. வயிற்றிற்கு உணவின்றிப் பட்டினி வருமோ என அஞ்சித் தடுமாறும் இந்தத் தறுவாயில், உலகம் எல்லாம் ஒரு குடும்பமாய் உணவைப் பங்கிட்டு வாழ வேண்டும் என வற்புறுத்தும்போது, உலகத்தின் உதவியை நாடும் இந்தியாவிலும் அவ்வாறு வற்புறுத்-

தாமல் இருக்க முடியுமா? ஆந்திர நெல்லைத் தமிழ் மந்திரிக்குத் தரலாகாது என்ற இன வெறியை வளர்ப்பது தகுமா? ஆகையால் காந்தியடிகள் இந்திய ஒற்றுமையை வற்புறுத்துவதனைத் திரித்துப் பொருள் கொள்வதில் பயனில்லை. அந்தப் பேச்சன்று அவர் கண்ட புதுப் பேச்சு. அஃது அவருக்கு முன் உள்ளோர் எல்லாம் பேசிய பழம்பேச்சேயாம். என்றாலும், அதிலே பெரியதோர் உண்மை உண்டு என்பதனை மறத்தல் கூடாது.

அவர் பேசும் புதுப்பேச்சு மொழி வகை நாட்டினைப்பற்றியதே ஆம். "பீகார் பீகாரிகளுக்கே என்று கூறுவது சரியே," என்கிறார்; ஆனால், "பீகார் இந்தியாவுக்கும் ஆம்," என்று ஒரு திருத்தப் பாட்டும் பாடுகிறார். ஆதலின், காந்தியார், "தமிழ் நாடு தமிழருக்கே" என்று ஆனந்தப் பள்ளுப் பாடுவார் எனச் சொல்ல வேண்டுமா? ஆங்கிலம் வீற்றிருந்த இடத்தில் நாட்டு மொழிகள் சிறந்தோங்க வேண்டும் என வற்புறுத்தும் காந்தியார், தமிழினை முதன்மொழியாக்கப் பெருந்தொண்டு செய்பவர் அல்லரோ? இந்தியாவில் உள்ள அனைத்து மொழிக்கும் அனைத்து நாட்டிற்கும் இவ்வாறு தொண்டு புரியும் பெருமை அவருக்கே உண்டு. பிறர் எல்லாம் இவ்வாறு செய்யாததன் காரணம், உண்மை இந்தியாவின் உயிர் நாடியாம் ஒற்றுமையை இவர்போல அவர்கள் அறியாமையேயாம். பாகிஸ்தான் தனியே பிரிந்ததனை அவர் ஒப்புக்கொண்டது சுய நிருணயக் கொள்கையில் அன்றிருந்து இன்று வரை வாழ்ந்ததன் பயனே ஆம். அஸ்ஸாம் தனியே பிரிய வேண்டும் என அந்நாடு

ஒரு முகமாக விரும்புமானால், அது தனி நாடாகத்தான் அமைதல் வேண்டும் எனத் தெள்ளத்தெளிய அறுதியிட்டுக் கூறவில்லையா? பட்டாணியர் தனி நாடாக அமைய விரும்புவதனைப் பாகிஸ்தான் ஒப்புக்கொள்ளுவதே தக்கது என்று அவர் அறிவுரை கூறியதனையும் உற்று நோக்குதல் வேண்டும். இவை இடத்திற்கேற்ற பேச்சுக்கள் அல்ல. உள்ளத்துறுதியிலிருந்து தோன்றும் உண்மை நம்பிக்கைகள். "ஒரு கண்ணிற் சுண்ணாம்பு, ஒரு கண்ணில் வெண்ணெய்," என்பது அவரிடம் இல்லை. இன உணர்ச்சி வழியே சுய நிருணய உரிமை உண்டு என்பதனை இவரினும் பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாகக் கூறினவர் யார்?

இவ்வாறு கூறினால், இவர் கண்ட ஒற்றுமைக் காட்சி என்ன ஆயிற்று என்று கேட்கலாம். உரிமை வாழ்விலேதான் ஒற்றுமை விதை விட்டு முளைத்துக் காய்த்துப் பூத்திடும் எனக் காந்தியாரும் அறிவார்; அதனாலன்றோ ஒரு நாள் இந்தியா ஒன்றுபடும் என உறுதியுடன் நம்பி வாழ்கிறார்? இன உணர்ச்சி இன வெறியாக மாறுதலாகாது என்றே இந்திய ஒற்றுமையைக் காந்தியார் வற்புறுத்துகின்றார். அஸ்ஸாமிலிருந்து பிறர் கடையை மூடி ஓட்டுவதும், பீகாரிலிருந்து பிறரை வெருட்டியடிப்பதும் தமிழன் கனவிலும் காணாத செயல்கள். 'தமிழ் நாடு தமிழருக்கே.' என்று வானம் பிளக்கக் கூவும் எந்தத் தமிழனும் தமிழ் நாட்டில் வந்த குடிகளைக் கடலில் வீசி எறிய மறந்துங்கூட எண்ணியதில்லை.

கடலெலாம் கப்பலோட்டி, உலகொடு பழகி, உலகெலாம் வாழும் தமிழன், இந்த வெறியை

அறியவும் முடியாது. அஸ்ஸாமியரும் பீகாரினரும் கொண்ட மனப்போக்கினைக் காந்தியார் வெறுத்தது போல எந்தத் தமிழன் போக்கினையும் அவர் வெறுப்பதற்கில்லை. வெறியரிடமே இந்தியாவின் ஒற்றுமையைப்பற்றிப் பேசவேண்டும். அதற்காகவே பேசுகிறார் காந்தியார். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," என்று அன்றும் இன்றும் பாடும் தமிழனிடம் அதனைப் பேச வருவது கொல்லன் தெருவில் ஊசி விற்கும் கதையாய் முடியும். பீகாரைப் பற்றிப் பேசும்போதும் இன உணர்ச்சியின் உண்மை இயல்பினை வற்புறுத்திப் பேசாது காந்தியார் விடவில்லை. இந்தியாவிலுள்ள பிற நாடுகளிலிருந்து பீகாரில் வருவார் சுரண்டற்கொள்கையைப் பின்பற்றிப் பீகாரை நடுத்தெருவில் விடுதலாகாது என்கிறார் அவர்; முதலாளிகள் முதலானோருடன் சேர்ந்துகொண்டு ஒன்ற வந்த பேய் ஊர்ப்பேயை ஓட்டுவது போலப் புதியவராக வருவோர் பாட்டாளிகள் உழவர்கள் முதலிய பழங்குடிகளது வயிற்றில் அடித்தல் கூடாது என்கின்றார்; ஆங்கிலேயரை நோக்கிக் கூறிய பேச்சினையே இந்தியப் பிற நாட்டிலிருந்து பீகாருக்கு வருவோருக்கும் கூறுகின்றார். "மொழி இன வகையான நாடு, மொழி இன வகையே உயர வேண்டும்; அந்த மொழி இனம் சாவப் பார்த்திருக்க முடியாது, ஆதலின், மொழி இன வகையான நாட்டின் முன்னேற்றமே இத்தகைய ஆராய்ச்சியின் அடிப்படை." என்பதனை ஐயத்திற்கிடமின்றிக் காந்தியார் விளக்குகின்றார். ஆனால், இவ்வாறு மொழி இன வகையாக வெறியின்றி முன்னேறினால் மட்டுமே இந்தியா முழு-

துக்கும் இன்பமாய் உதவ முடியும் என்பதனை இவரையன்றி யார் உணர்கின்றனர்?

மொழி இன உணர்ச்சியின் நுட்பத்தினை இவர்போல அறியாத பிற அரசியல் அறிஞரும் அரசியலமைக்கத் தொடங்கியுள்ளனர். வடநாட்டினர்க்குத் தமிழ் நாட்டின் நெஞ்சினைத் திறந்து காட்ட அஞ்சி நடுங்கும் பெருமௌனப் பெரியோரும் அரசியல் நிருணய மன்றத்தில் வீற்றிருக்கின்றனர்; ஏட்டுச் சுரைக்காய்களும் தளபொள என மேலெழுந்து வேகின்றன. "நடுவிட அமைப்பு வன்மையுற வேண்டும்," எனப் பலர் பேசுகின்றனர். இதில், "தென்னாடு வடநாட்டிற்குச் சோறு தாராதோ" என்று அண்டை வீட்டினை நம்பாது கேட்கும் வெட்கக் கேடும் உண்டு. இனஉணர்ச்சி வகையாக வளரும் நாடுகள் தாமே ஒத்துழைக்க வரும்போது நடுவிட அரசியல் அமைப்பு வலுப் பெறுமே அன்றி நாடுகளின் உரிமைகளைக் குறைப்பதனாலும் பறிப்பதனாலும் வலுப் பெறாது.

# VI. புதுப் பொங்கலில் பழைய உப்பு

பழையது செத்த பிணம்: புதியது இதோ பிறந்த பச்சிளங் குழந்தை. பழமை சாவிற்கு வழி: புதுமை வாழ்விற்கு வழி. பழமை, உலகத்தினை எங்கே கொண்டுபோய் விட்டிருக்கிறது? இதற்கு அறிவாராய்ச்சி வேண்டா. வயிறு, "பசி பசி" என்கிறது. உடம்பு, வாடி வதங்கி, "நோய், நோய்." என்று கதறுகிறது. மனம் அமைதியின்றி அலை-கிறது. மனிதனை மனிதன் பிடுங்கித் தின்னும் பேயாட்டம், ஏமாற்றம், வஞ்சம், மங்கப்மாள் சந்தை (Black Market) இத்தனைக்கும் வெற்றி, வீறு, செல்வம், நாகரீகம் என்று பெரிய பெரிய பெயர்களிட்டு, அடிமை நோய், போர், பட்டினி, அறியாமை என்ற இவற்றினை எல்லாம் ஆரவார வெளிப் பகட்டுக்குள் மறைக்க முயல்வதனைப் பண் பாடு எனச் சிலர் பாராட்டித் தம்மையும் பிறரை-யும் மயக்குகின்றனர். மனிதனை மனிதனைப் பார்க் கும் கண் குருடாய்விட்டது. அவனும், தன்னை மறைத்துக்கொண்டு கிடக்கும் தோல்,சட்டை, வீடு, ஒலி முதலியவற்றையே மனிதன் என நம்புகிறான்; அந்த மாய மான் பின்சென்று ஏமாற்றம் அடைந்து உண்மைச் சீதையைப் பறி கொடுக்கிறான்.

மனிதனை மனிதனைக் காணும் கண் திறக்க வேண்டும். உலகம் ஒரு குடும்பம் என்ற உணர்ச்சி

ஓங்க வேண்டும். மீன் போலக் கடலினை எல்லாம் மறித்து வைத்து ஆண்டாலும் மீனாகலாமே அன்றி, மனிதனாகி விட முடியாது. பறவையைப் போலக் காற்றில் பறந்து வானை எல்லாம் கட்டி வைத்து ஆண்டாலும் பறவை ஆகலாமே அன்றி, மனிதனாகிவிட முடியாது. எந்திரங்களை எல்லாம் புதிது புதிதாகப் படைத்து ஓட்டினாலும் எந்திர-மாகலாமேயன்றி,மனிதனாகிவிட முடியாது. இவற்றால் மனிதனைக் கண்டறிய முடியவில்லை. மனிதன் மனிதனாக வாழ்வதுதான் வாழ்வு; கடவுள் வாழ்வு. **வையத்து வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.** வயிறே வாயாக உண்டு களித்தால், கவந்தனாகலாம்; மனிதனாக முடியாது. உண்பதும் உறங்குவதுமே இன்பமென்றால், கும்பகருணனாகலாம்; மனிதனாக முடியாது இயற்கையை வெலலும் மாயம் கை-வந்தாலும் இந்திரசித்தாகலாமேயன்றி, மனிதனாக முடியாது. எல்லாம் அறிந்தான் என்றாலும், பயன் இல்லை; ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. பிர-கஸ்பதியார் தம் பெண்டாட்டியோடு வாழத் தெரி-யாது. சந்திரனால் தமக்கு வசைகொண்டு நிற்கவில்-லையா? அறிவு ஆற்றல், கலைப் பண்பாடு இருந்தும் வீணைக்கொடி ஏந்திய இராவணன் வாழ அறிந்தானோ? அறிவும் வேண்டும்; அன்பும் வேண்டும்; ஆற்றலும் வேண்டும். இத்தனையும் அறத்தின் வழியே இயங்கவும் வேண்டும். தன்-பத்திற்கு அஞ்சாது பிறர் துன்பத்தினைக் குறைக்க முயன்று வாழும் பேராற்றல் பெற்றவனே மனி-தன்: **இராமன்.**

துன்பமே இன்பம் என்று வாழ்வதுதான் இன்பத்திற்கு வழி. இடுக்கண் வருங்கால் நகுக. இன்பத்தைத் தேடிச் செல்லுவது கானல் நீரை நாடிச் செல்லுவது போலும்! அற வழியில், எடுத்த செயல் வெற்றியோடு முடியும்போது தழைப்பதே இன்பம். இயற்கை கற்றுக்கொடுத்த சில உளவுகளை அறிந்ததும், ஏழை மனிதன், "இயற்கையை ஆள்கின்றேன்" என்கிருன். இப்படி இறுமாந்து திரியும் இரணியனை ஒரு நாள் இயற்கை நரசிங்க வடிவுகொண்டு பிய்த்தெறிகிறது. அங்கும் அன்புக் குழந்தை பிரகலாதனைய் இயற்கையைத் தெள்ளிய சிங்கமாகத் தழுவிக்கொள்கிறது, அண்டத்தில் ஒரு கொசுகு போன்ற மனிதன், அண்டத்தை எடை இடுகிருன். செத்தும் பிழைத்தெழுந்து உயிர் வாழ்கிற வித்தைதான் மனிதன் செய்யும் அற்புத வித்தை. உடலை மண்ணின் வாயில் வீசி எறிந்து, தன் உயர்வால் எந்நாளும் வாழ்கிற வித்தை மனிதனுக்குத் தான் தெரியும். புத்தர், கிறிஸ்து, சாக்கிரடீசு, காந்தி, ஆழ்வார்கள், நாயன்மார்கள், கம்பன் முதலான பாவாணர்கள் கற்பிக்கும் வித்தை இதுதான். சாவித்திரி எமனுடன் மன்ருடி உயிரை இங்குக் கொண்டுவரும் வரலாறு இதுதான். இதனையே திருவள்ளுவர் 'புகழ்' என்கிருர்.

**நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்-**
**காடும் வித்தகர்க் கல்லால் அரிது.**

சாகாக் கலை இங்குத்தான் முளை விடுகின்றது.

வாழ்வின் உட்கோள் வாழ்வினை வாழ்வதே ஆம்: சாவது அன்று. உண்மைக்கு என உல-

கெலாம் திரிந்து உயிரையும் பறிகொடுத்து உழைக்கும் பேராசை, அழகுக்கு என அனைத்தினையும் இழக்கும் அன்பு, ஒழுக்கமே உயிராகக் கொண்டு இம்மியு மதில் பிறழாது உலகினை ஒரு குடும்பமாக வைத்து வாழும் உறுதி, அறிவுத் தினவு எடுக்க அறியாமையை எள்ளளவும் பொறுக்க முடியாது புழுப்போலத் துடிக்கும் துடிப்பு, சத்தியம் ஞானம் சிவம் அநந்தம்—அறம் பொருள் இன்பம் வீடு—இவற்றிற்கு என வாழ்வதே வாழ்வு. இவற்றைக் கடவுள் வடிவம் என்று மறந்துவிடாது, நம் ஒவ்வொருவர் வாழ்வினையும் இவ்வாறு மதிப்பிடுவதே பெருவாழ்வாம்; புது வாழ்வாம்.

இந்தப் புது வாழ்வுக்குப் புத்துயிர் உலகில் பரவ வேண்டும். அதற்கு வழி என்ன? அதற்கு ஏற்ற சுற்றுப்புறச்சூழல்கள் பரவவேண்டும். நம் பெற்றோரிட மிருந்து உடலைப் பெறுகின்றோம். பண்பாடு, உடல் வழியே நாம் பெறுவது ஒன்று அன்று. சமுதாயச் சுற்றுப்புறச் சூழலாகப் பண்பாடு அமைந்துவிடுகிறது. சுற்றுப் புறத்தாரது ஒவ்வொரு பேச்சு வழியாலும், ஒவ்வொரு நடை வழியாலும், ஒவ்வொரு காட்சி வழியாலும் நம்மிடம் படிந்துவிடுகிறது. அந்தப் பேச்சினைப் பேசி, அந்த நடையினை நடந்து, அந்தக் காட்சியினைக் கண்டு பழகும்போது, பண்பாடு நம்முள்ளத்தில் படிந்து உடம்பில் ஊறிவிடுகிறது. பண்பாட்டுப் பழக்க வழக்கத்தில் நம்மையும் அறியாமல் பழகிவிடுகின்றோம். எனவே, புது வாழ்விற்கு ஏற்ற பழக்க வழக்கங்கள் பரவவேண்டும் என்பதாயிற்று.

பழக்கம் என்றால் பழமை அன்றோ! மறுபடி-யும் பாழ்ங் குழியிலா வீழ்வது? புதியன எல்லாம் உயிரா? புதிய குழந்தையும் செத்துப் பிறக்குமே! பழமை எல்லாம் செத்த பிணமா? அல்ல. நமக்கு மிகமிகப் பழைய பாட்டனான சூரியன், செத்த பிணமா? இன்றும் இளஞ்சூரியன்தானே? பழமை புதுமை எனும் கேடு சிறுமையும் பெருமை-யுமே ஆம். உயிரில்லாமையன்றோ செத்த பிணத்-தின் கொடுமை? பழக்க வழக்கங்களிலும் பழமை என்பதால் மட்டும் கேடொன்றும் இல்லை. உறங்-கும் வழக்கம் எவ்வளவு பழையது! உண்ணும் வழக்கம் எவ்வளவு பழையது! இந்த வழக்கம் உயிர் உண்டானபோதே உண்டானதன்றோ? பழக்க வழக்கங்களிலும் உயிரில்லாத போதுதான் கேடு விளையும். பொருளில்லாத பழக்க வழக்கங்-களே உயிரில்லாத பழக்க வழக்கங்கள். எலி மிகுந்த ஊரில் விருந்து பண்ணும்போது பூனை-யைக் கட்டி வைத்து விருந்து வைப்பது பொரு-ளுள்ள வழக்கம்; உயிருள்ள வழக்கம். பல நாட்கள் இப்படிச் செய்து வந்ததன் பயனாக எலி-கள் இல்லாத போதும் பூனையைக் கட்டி விருந்து வைப்பது பயனற்ற வழக்கம்; பொருளற்ற வழக்-கம்; உயிரற்ற வழக்கம். மண் வீட்டைச் சாணி யிட்டு மெழுகுவது பொருளுள்ள வழக்கம்; உயி-ருள்ள வழக்கம். தாஜ்மஹாலைச் சாணியிட்டு மெழுகச் செய்வது பொருளற்ற வழக்கம்; உயி-ரற்ற வழக்கம். சாதி வழக்கம் ஒரு காலத்தில் பொருளுள்ள வழக்கம்; பல பல வகையில் வந்த பல பல குடிகள் தங்கள் தங்கள் வரலாற்றுக்கேற்ப

வீட்டில் வாழ்ந்தாலும், ஒரு சமுதாயமாய்ப் பல பல தொழில் புரிந்து வாழ்வதற்கு ஏற்றதாய் அமைந்த வழக்கம்; எல்லோரும் இந்தியக் குடிகள் என்று ஒன்றுபடுவதற்கு வழியாக அமைந்த வழக்கம். ஆனால், வானொலி வழியே உலகம் முழுதும் ஒரே விநாடியில் நமக்குக் கேட்கும் இந்த நாளில் சாதி வழக்கத்திற்கு என்ன பொருள் உண்டு? **அம்பேத்கார்** போன்றோர் இக்கால மனுவாக விளங்கும்போது தீண்டாமைக்குப் பொருள் ஏது? அதனைக் கட்டிக்கொண்டு அழுவது சாவுக்கு வழி-யாம்; வாழ்விற்கு வழியாகுமா?

பழமை புதுமை என்று பிரித்துப் பேசிப் பயன் இல்லை. "பொருள் உண்டா, இல்லையா? உயிர் உண்டா, இல்லையா?" என்றே கேட்டு வர-வேண்டும். மக்கள் கூடி வாழும்போது சில நடை-முறைகள் வேரூன்றிவிடுகின்றன. இவையே வழக்-கங்கள். இந்த வழக்கங்கள் நம்முடைய வாழ்வினை எளிதாக்குகின்றன. நீந்தப் பழகுகிறோம். முதலில் கண்ணும் கருத்துமாகக் கற்கிறோம். பழக்கமான-பின் கருத்தை வேறிடத்தில் செலுத்தி நம்மை யறியாமலும் நீந்திப் போகலாம் அறிவுக்கு விடுதலை ஏற்படுகிறது. செயல் செய்வதும் எளிதாகிறது.

இவ்வாறே அந்த அந்த நாட்டில் அந்த அந்த மொழிக்கு ஏற்பப் பேசுவதும் பழக்கமாய்விடுகிறது. எழுவாயை முதலிலும் பயனிலையை முடிவிலும் வைத்துப் பேசிவருவது தமிழ் நாட்டில் வழக்க-மாய்விட்டது. இதனை வேறு வழியாகப் பேசுவ-தால் நரகத்திற்குப் போக மாட்டோம். ஆங்கிலத்-தில் பயனிலை இடையிலே வருவதால் என்ன கேடு-

விளைகிறது? இப்படித்தான் மற்ற இலக்கண வழக்குகளும். இராமன் வந்தாள்; சீதை போனான்; நாய் வந்தார் என்று பேசுவது பாவமன்று; பித்த வெறியாம். அவ்வாறு பேசினால் மற்றவர்கள் நம் பேச்சினை அறிந்துகொள்ள முடியாது.

சில இயற்கை உண்மைகளை அறிந்து வேறு சில வழக்கங்கள் எழுந்துள்ளன. வாயிற்படியை முன் வைத்து வாயிலை வீட்டின் முன்னர் இடைவெளியாக விடாது வீட்டின் நடுவேயே இடைவெளியை அமைக்கின்றனர் சென்னை நகரத்தினர், முன்னர், முன் வெளியை வாயில் என்றதை ஒட்டிப் புதிய இடை வெளியை வாசல் (வாயில்) என்று பெயரிட்டு வீடு கட்டி வருவது சென்னையில் பெருவழக்கமாகிவிட்டது. பொதுவாக வீடு கட்டுவது என்றால், சிற்பமறிந்தார் வேண்டும். ஆனால், ஒரு வகையாக வீடு கட்டுவது என்பது வழக்கமாகிவிட்ட பின் சிற்பியைத் தேடாது எந்தக் கொற்றனும் இப்படி எளிதாக வீடு கட்டி விடுகின்றான். இப்போது "பங்களா" வீடுகள் அல்லது தோட்ட வீடுகள் கட்டுவது வழக்கமாய் வருகிறது. இந்த வழக்கங்களைப் பழிப்பானேன்? ஆனால், சூரியனும் பெண்களைக் காணாதபடி கற்பினைக் காக்க இருட்டறைகளை வீடு என்று கட்டுவதுதான் வழக்கம் என்றால், அதுதான் சாவு வழி என்று எதிர்க்கவேண்டும்.

தனித்தனியாளாகப் போட்டி போடுவதும், அந்தப் போட்டியிடையே நன்மை கண்டு சமுதாயம் வாழ்வதும் பழைய வழக்கம். போட்டியில் இதனால் தன்னலமும் போராட்டமுமே பெருகிவந்-

துள்ளன. பள்ளிக்கூடத்திலேயே இதற்கு வித்திடுகின்றோம்: முதலில் வருபவனுக்குப் பரிசில், எல்லோரையும் வெல்லுவோனுக்குப் பரிசில்—என்பதே பேச்சு. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். இவ்வாறு பழகிய உலகில் ஹிட்லரும் முசோலினியும் உலகினைக் கட்டியாள முயன்றதில் என்ன வியப்பு? எல்லாத் துறையிலும் போட்டி! உலகம் முழுதும் போராட்டம்! இப்படி முடிகிறது. விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று விளையுமோ? புதிய பழக்கங்கள் பரவ வேண்டும். கூட்டுறவுப் போட்டிகள், கூட்டுறவு விளையாட்டுக்கள் பரவவேண்டும். முதல் வருவோனுக்குப் பரிசில் என்றால், தான் அறிந்ததனைப் பிறருக்குத் தெரிவியாமல் ஒருவன் முன்னுக்கு வரவேண்டும்; இருட்டில் வாழ வேண்டும்; இருட்டில் வாழ்வதே வெற்றிக்கு வழி என்று ஒருவன் பழகியபின் இருட்டில்தானே அவன் கடையும் வைத்து விற்பான்! "இருட்டுக் கடை, மங்கம்மாள் சந்தை, பிளாக் மார்க்கட்" என்று பழி தூற்றிப் பயன் என்ன? பழியை விதைத்தவன் பழியை அறுவடை செய்துதானே தீர வேண்டும்? தனக்குப் பரிசில் என்றில்லாமல் வகுப்புக்குப் பரிசில் என்றால், ஒருவன் தான் மட்டும் சிறப்புற்றிருந்தால் பரிசு வர வழியில்லை. தன் வகுப்பில் பிற்பாடானவரும் சிறப்புறவேண்டும். ஆதலின், அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து முந்திவரச் செய்து கூட்டிச் சென்றால்மட்டுமே வகுப்பிற்குப் பரிசில் வர வழியுண்டு. '**நாடெல்லாம் வாழக் கேடொன்றும் இல்லை**,' என்ற உண்மை அன்றாட வாழ்க்-

10

கையில் அப்போதுதான் இரத்தத்தில் ஊறி வரும்.

இப்படி வளரும் புதிய மக்கள் கூட்டத்திலே அழகினை வளர்க்கும் வழக்கங்கள் பரவவேண்டும். தட்டு முட்டுக்கள் எல்லாம் அழகு விளக்கமாய் இருந்தன. பழங்காலத்தில் பழைய பானைகளைப் பாருங்கள்! நம் பழைய தட்டு முட்டுக்கள் மேனாட்டார் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இப்போதோ, எந்திரங்கள் கோடிக் கணக்கில் ஒன்று போலத் தட்டு முட்டுக்களை அமைத்து வீசி எறிகின்றன. அழகினைப்பற்றிய கவலையே காணவில்லை. இந்த எந்திர அலங்கோலத்தில் பழகிய குழவி, உலகினையே அலங்கோலமாக்குகிறது. இந்த நிலை ஒழிய வேண்டும். எந்திரம் எந்த மந்திரம் போட்டாலும் ஒழியாது. ஆதலின், எந்திரப் பொருள்களிலும் அழகு நாட்டம் வேண்டும்; இன்ப அன்பு வேண்டும். உயிர் வாழ உதவுவனவே பொருள்கள் என்ற எண்ணம் பரவவேண்டும் ; அதற்கு ஏற்ப முயலவும் வேண்டும். உலகில் எல்லாம் அழகு, மனித அழகே. ஆதலின், நோயற்ற பசியற்ற மக்கள் சமுதாயத்தின் அழகே அழகு என்ற கருத்து எல்லோர் உள்ளத்திலும் வேரூன்ற வேண்டும். எல்லோரும் எளியோராதல் வேண்டும் என்பது முதலாளி உலகினரின் ஏமாற்றப் பேச்சு. எளிமை மட்டும் போதாது. அழகோடு இனிக்கின்ற எளிமையே வேண்டப்படும். அறம் பொருள் இன்பம் வீடென்ற நான்கனையும் வெவ்வேறு பிரிக்க முடியாது என்பதே புதிய வாழ்வின் நுட்பம்.

இதனை உணர அறிவு வழக்கம் பரவவேண்டும். அறியாமை என்றால் எல்லோரும் கூசி நாணவேண்டும். "அம்மை" என்றால் நமக்கு வந்தால் மட்டுமா அலறுகிறோம்? யாருக்கு வந்தாலும் அலறுகிறோம். ஒட்டுவார் ஒட்டியன்றோ அஃது? அதுபோல அறியாமையும் ஓர் ஒட்டுவார் ஒட்டிப் பெருங்கொள்ளை நோய்; நம்மையும் அறியாமல் நம்மை அலங்கோலமாக்கி விழுங்கிவிடுகிறது. நம்மைச் சுற்றி இந்த அறியாமை நோய் எங்கிருந்தாலும் நாம் அலறவேண்டும். இதை ஒழிக்க முற்படவேண்டும். "கற்காமல் என்ன தலை முழுகிப் போய்விட்டது? பெண் என்ன வேலைக்குப் போகப்போகின்றாளா?" என்று பேசின பேச்சுக்கள் ஒழியவேண்டும். கல்வியே கண்; கல்லாதவனே விலங்கு என்றெல்லாம் திருவள்ளுவர் பாடினார்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு?"

என்ற குறள் நடைமுறையில் வரவேண்டும். வெற்றறிவின் ஆரவாரம் அன்று கல்வி. ஒழுக்கத்தில் உயரவைப்பதே அறிவு. பலருக்கும் பயன்படுவதே அறிவு. வெறுஞ் சொல்கொண்டு வெருட்டுகின்ற மனப்பான்மை ஒழியவேண்டும். பணத்தினைக் கண்டு வாயினைப் பிளந்து கும்பிடுகிற வழக்கம் ஒழிய வேண்டும். 'பட்டுடுத்துப் பகடேறி வாழ்வார்தம் சொற்கேளேம்,' என்றவர் வழி வந்தவர் அல்லமோ நாம்? உண்மைக்கும் அறிவுக்கும் கும்பிடு—ஒழுக்கத்திற்கும் அழகிற்கும் அடி வணக்கம்—அல்லாதவற்றைப் பொருள்படுத்தாத வணங்கா முடி மன்னர் வாழ்வு—இப்படி வழக்கமாதல்

வேண்டும். காந்தி பிறந்த நாட்டில், ஆவிற்கு நீர் என்று இரப்பினும் இழிவு என்ற நாட்டில்—கள்ளக்கடையில் பணம் சேர்த்தவர் மதிப்புப் பெறுவது கண்டு, நாக்கினைப் பிடுங்கிக்கொள்ளும் நல்லறிவு வேண்டாவா? பன்னிப்பன்னிப் பல பேசுவானேன்! உண்மை, அறிவு, நன்மை, அழகு—இவற்றை வளர்க்கும் அறம் பொருளின்ப வீட்டு வழக்கம்—சிறந்த கடவுள் வழக்கம் வளரவேண்டும். நன்மை என்றால் திருவள்ளுவர் திருக்குறள்; அழகு என்றால் கம்பன் பாட்டு; அறிவு என்றால் சர். சி. வீ. இராமன் விஞ்ஞானம்; உண்மை என்றால் நால்வர் ஆழ்வார் கண்ட உண்மை யனுபவங்கள்—இவை எல்லாம் நம் அனுபவங்களாக வரும் வழக்கங்கள், இவர்கள் வாழ்ந்த—வாழும் நாட்டில் வேரூன்ற வேண்டும்.

பழக்கம், ஒருவன் பழகுவது. முதலில் ஒன்றைச் செய்யும்போது உடலும் உள்ளமும் உயிரும் ஒன்றாய் ஈடுபட்டுவர மிகமிக முயன்று செய்கிறோம். குழந்தை, நடை கற்பது எவ்வளவு அருமை? ஆனால், நடக்கும்போதெல்லாம் அப்படியே முயன்று வந்தால், வாழ்வில் நடப்பதற்கு அன்றி வேறொன்றற்கும் இடம் இல்லாமற் போகும். நடை, பழக்கமாய்விடுவதால் பிறவற்றில் ஈடுபட இடம் ஏற்படுகிறது. பழக்கமாகப் பழக்கமாகப் பல பலவற்றில் ஈடுபடுகிறோம். வாழ்வு, வளம் கொழிக்கிறது. உரிமை, பல வேறு துறையில் வீறு பெறுகிறது. பழமை எனப் பழக்கத்தினை வெறுப்பவர் யார்? புது வாழ்வு வாழவேண்டும் என்றால், காலால் நடந்த பழக்கத்தினைவிட்டுத் தலையால் நடக்கப் பழகுகிறோமா?

இங்குப் பழக்கம் நமக்கு அடிமையாகவேண்டுமே-யன்றி, நாம் பழக்கத்திற்கு அடிமையாதல் கூடாது. புதுமை ஒளி வீச, உரிமை மணம் கமழ நாம் வாழவேண்டும். பழக்கம் பழக்கம் என இருட்டறையில் புழுங்கிப் புழுக்குதல் கூடாது. கால் நடையாகக் குழவியிலிருந்து பழகிய பழக்கத்-தால் ஆகாயவிமானத்தில் பறக்க நேரு மறுப்-பாரா ?

ஆனல், பழக்கம் பகட்டிற்கு அன்று; பண்-பாட்டிற்கு, வாழ்விற்கு. "பட்டுப் புடைவை கட்டு-வதுதான் பழக்கம். வைரம் அணிவதுதான் வழக்-கம். அனைத்திற்கும் பிறரை வேலை வாங்குவதே வழக்கம்," என்று வாழ்வது புழுத்த வாழ்வு; பிண-வாழ்வு. பட்டும் வைரமுமா அழகு? "நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி யழகே அழகு." உண்மை, கல்வி அறிவு, நடுவு நிலை, ஒழுக்கம், அழகு என்பவை எல்லாம் அழகு என ஒன்ருகப் பாடப்பெறுவது ஒரு பெரிய அழகன்ருே? நன்மையிற் பழகவேண்டும் ; உண்மையிற் பழக-வேண்டும்; அறிவிற் பழகவேண்டும்: இவையே அழகெனப் பாராட்டப் பழகவேண்டும். அறத்திற்-பழகவேண்டும் ; பொருளிற் பழகவேண்டும் ; இன்-பத்திற் பழகவேண்டும் : இவையே வீடுபேறென உணர்ந்து வாழப் பழகவேண்டும்.

" உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் ; உயிரினும் ஆண்டவனை வளர்த்தேன்," என்ற உண்மை விளங்கவேண்டும். உடல் உழைப்பி-லேயே உயிர் நிலைத்து உள்ளது என்று உணர-வேண்டும். படைக்கும் ஆற்றல் பல்கிப் பெருகும்

இடம் உழைப்பே ஆம். தன் கையே தனக்கு உதவி. எத் தொழிலும் செய்யப் பழகுதல்வேண்டும். **"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்; வீணில், உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்,"** என்பது புது வாழ்வுப் பாட்டு. தொழில் செய்து வரும்போதுமட்டுமே மனிதனிடம் கடவுட் படைப்பு வெளியாகி வருகிறது. இந்த உண்மையனுபவம் பெருக வேண்டும். சேர்த்து வைப்பதன்று சிறப்பு. முதலாளி உலகத்தின் கேடு அது. படைப்பதே பெருமை. அதுவே உலகினை இன்பமாக்குவது. சேர்த்து வைப்போர் பிறர் வயிற்றிலடிப்போரே ஆவர். படைப்போர், பிறர் வயிற்றினை வளர்ப்போர். உழைப்பில் ஊன்றிப் பழகவேண்டும். அதுவே கைத்தொண்டு ; சிறந்த வழிபாடு. பள்ளியிலிருந்தே கைத்தொழில் வழிபாட்டுக் கல்வி தொடங்கவேண்டும். செய்து பார்த்துக் கற்றது உடலில் வழக்கமாகப் படிந்துவிடும். வாயளவில் உருப்போட்டது உதடோடு மறைந்துவிடும். உலகம் போற்றும் **காந்தி யடிகள்** கண்ட அடிப்படைக் கல்வித் திட்டம் இதுவன்றோ? "உலகம் முழுவதும் ஆண்டவன் வடிவம், உயிர்கள் எல்லாம் ஆண்டவன் கோயில்," எனக் கருதி வாழப் பழகிக்கொள்வதே காந்தி வாழ்வு. இத்தகைய பழக்க வழக்கங்களின் உயிரியக்கமே புது வாழ்வு.

# VII. ஆசிரியர்கள் நிலை[1]

*ஆரம்ப ஆசிரியத் தோழர்களே!*

*வணக்கம்! ஒரு பெரிய கோபுரம்—தஞ்சைப் பெரிய கோபுரத்தினும் மிகப் பெரிய கோபுரம்— என் மனக்கண் எதிரே தோன்றுகிறது. எத்தனையோ பிரிவுகள்! எத்தனையோ சித்திரங்கள்! எத்தனையோ வேலைப்பாடுகள்! கீழே பெருத்துப் பல்கி மேலே சிறுத்து ஒரு முகப்பட்டுப் பொற்குடத்தை மணி முடியாய்க் கவித்து விளங்குகிறது இஃது. இந்தப் பெரிய கோபுரத்தைத் தாங்குவது எது? கோபுரந்தாங்கிப் பொம்மையா? இல்லை, இல்லை. கோபுரத்தைவிட அகலமாக ஆழத்தே கண்ணுக்குத் தோன்றாது பூமிக்குள் மறைந்து கிடக்கும் கடைக்கால் என்ற அடிப்படையே இந்தப் பெரிய கோபுரத்தை உண்மையில் தாங்கிநிற்கிறது.*

*நம்முடைய பாரத சமுதாயம் 45 கோடி மக்கள் நிறைந்த பெரிய பண்பாட்டுக் கோபுரம்; உயிர்க்கோபுரம்; அழியாத கோபுரம். இதில் அரசியல் துறை, பொருளியல் துறை, அனுபவத் துறை என்று எத்தனையோ துறைகள்! எத்தனையோ ஆறுகள், மலைகள், கடல்கள், காடுகள், சுரங்கங்கள்!—இத்தனையையும் பயன்படுத்தவேண்டும்! இங்கிருக்கும் உயர்வு, கண்டதனை உண்டு காலத்தி-*

---

1. சென்னையில் 27—1—52-இல் மெமோரியல் ஹாலில் தமிழ் நாட்டு ஆரம்ப ஆசிரியர் இரண்டாம் மாநாட்டில் ஆற்றிய தலைமையுரை.

னைக் கழிப்பது அன்று. இயற்கையைத் துணை கொண்டு மனிதனது உடலையும் உள்ளத்தினையும் உயிரையும் உலகினையும் கடவுளையும் வளர்த்து வாழும் வாழ்வே இங்குள்ள பண்பாட்டு வாழ்வு. இந்த வாழ்வுக்கோபுரத்தில் பலப்பல அதிகார நிலைகள் மேலே தோன்றலாம்; மணி முடி தோன்றலாம்; அதிகாரிகள் காட்சி அளிக்கலாம். அழகிய மரத்தின் பூவும் காயும் பழமும் போன்ற அழகிய காட்சிகள் இவை. ஆனால், இத்தனைக்கும் ஆணி வேர் எது? அஃது இல்லையானால் பூ ஏது? பழம் ஏது? கிளையும் இலையுந்தாம் எங்கே? கோபுரத்தின் அடிப்படையன்றோ இந்தக் காலங்கண்ட உயிர்க்கலைக் கோபுரத்தைத் தாங்கி நிற்கின்றது? கோபுரந் தாங்கிகளைக் கண்டு ஏமாற்றம் அடைந்துவிடலாகாது. இந்த அடிப்படையை அமைப்போர்கள் ஆரம்ப ஆசிரியர்களே. அடிப்படைக் கல்வி ஆசிரியர்கள் என்ற பெயரே இதனை விளக்கவில்லையா?

பாரத சமுதாயம் பல கோபுரங்களை ஒழுங்காக அமைப்பதாலேயே ஓங்கி வளரும் பெருங்கோபுரமாம். மேனாட்டுக் கோபுரம் ஒரே கோபுரமாக ஓங்கி வானத்தே எழும். நம் நாட்டுக் கோபுரங்களைக் கண்டால் மூலைக்கு மூலை, நிலைக்கு நிலை கோபுரங்கள் சிறு சிறு வடிவில் பெருங்கோபுரத்தினுள்ளே அமைந்திருக்கக் காணலாம். பாரத அரசில் பல நாடுகளின் ஒற்றுமை அரசியல்-சமஷ்டி—பண்பாடு வளர்வது மொழியால். பண்பாடு நம் உடலமைப்பைப்போல இரத்தத்திலூறித் தலைமுறை தலைமுறையாக வருவதில்லை. பாலூட்டும் தாய் நம்மோடு கொஞ்சிக் குலாவிப் பேசிய பேச்சு வழியாக,

அவள் அறிந்த பண்பாட்டினை நாமும் அறிந்து முன்னேறுகிறோம். மொழி வழியாக வளர்கிற பண்பாடு, மொழி வழியாகப் பிரிந்து விளங்கும் சமுதாய அரசியலையே அடிப்படையாகக் கொள்ளும்; ஆதலின், இந்தப் பாரத சமுதாயப் பெருங்கோபுரமோ மொழிவழிச் சமுதாய அரசியல் கோபுரங்களின் தொகுப்பாகவே விளங்குகிறது. பண்பாட்டின் ஆணி வேரான ஆசிரியர்கள், அறிவோடும் ஆற்றலோடும் நாட்டினை வாழ்விக்கின்ற தம் வாயால் வாழ்கின்றவர்கள். பேசுகின்ற விலங்கு, மனித இனம் ஒன்றே ஆம், அவனுக்கு வாய் வழியாக அன்றி எப்படிக் கற்பிப்பது? வாய் வழியாகக் கற்பிப்பதென்றால், மொழி வழியாகத்தானே கற்பிக்க வேண்டும்? ஆதலின், அடிப்படை ஆசியர்களும் மொழிவழியாகப் பிரிந்து காட்சி அளிக்கின்றார்கள். பிரிவது, போரிட அன்று; தத்தம் மொழியின் சிறப்பியல்புகளுக்கும், மரபுக்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் ஏற்பக் கல்வி முறையை வளர்க்கவே ஆம். ஆந்திர ஆரம்ப ஆசிரியர்கள் ஒருங்கு திரண்டுவிட்டார்கள். கேரள ஆரம்ப ஆசிரியர்கள் ஒன்று கூடிவிட்டார்கள். இன்று தமிழ் ஆரம்ப ஆசிரியர்கள் மாநாடு கூடுகின்றீர்கள். அடிப்படையான உங்கள் வாழ்வும் வெற்றியும் தமிழ்க் கலைக்கோபுரத்தின் வெற்றி; பாரதக்கலைக் கோபுரத்தின் வெற்றி!

அடிப்படைக்கும் கீழே ஒன்றும் இல்லை, எந்தத் துறையை நினைத்தாலும் உங்கள் நினைவே வரும். அதனால், எல்லா வேலையும் முடிவில் உங்கள் தலைமேல்தான் விழும். அஞ்சாது மேற்-

கொள்ளுங்கள். 35 கோடி மக்களும் கண் திறந்து வாழவேண்டும். அத்தனை பேருக்கும் யார் கல்வி கற்பிப்பார்? உங்களை அன்றி வேறு யார்? வயிறார உண்ணவேண்டும் என்றாலும், விஞ்ஞானம் வளர்கிற இந்த நாளில், அறிவாக உழுது அறிவாகத் தொழில் செய்து அறிவாக உண்டு அறிவாக வாழ்ந்தாலன்றி முடியாது; அதற்கும் அடிப்படையாக நிற்பவர்கள் நீங்களே. டிஸ்ட்டிரிக்ட் கலெக்டர் என்ற மாவட்டத் தலைவர் தலையில் எல்லாச் சுமையும் விழுவது போல, அந்த அந்த மாவட்டத்தின் அடிப்படை நிலையாய் உள்ள உங்கள் தலைமேலேயே அந்தச் சுமை கடைசியில் வந்து விழுகிறது. கட்டாயக் கல்வி, நூல் நிலைய இயக்கம், முதியோர் கல்வித் திட்டம், கிராமச் சீர்திருத்த இயக்கம், கூட்டுறவு இயக்கம், உணவுப் பெருக்க இயக்கம்—எண்ணிக்கொண்டே போனால் எழுத ஏடு இடம் தாராது—இத்தனையும் உங்களையே எதிர் பார்க்கின்றன. பண்பாட்டுத் தூதர்கள்—உண்மைப் புரோகிதர்கள் நீங்களே. கற்பதென்றால் வாழ்வது என்பதன்றோ பொருள்? எல்லாத் துறையுமாய் விளங்கி ஒவ்வோர் ஊரினையும் வாழவிப்போர் நீங்களே என்பதனை நீங்கள் உணர வேண்டும். இன்று நாம் பெற்றுள்ளது அரசியல் உரிமை மட்டுமே. பொருளாதார உரிமையும் சமுதாய உரிமையும் ஒவ்வொருவரிடையேயும் இனித்தான் வளர்ந்து ஓங்கிப் பரவவேண்டும். அந்த உரிமையின் வடிவங்களாக அதனை வாழ வைப்பது உங்களது உரிமையும் கடமையுமாகும். அனுமார் தம் பெருமையைத்

நாம் அறியோம். அது போல, உங்கள் பெருமையை நீங்கள் உணராமல் கோபுரந்தாங்கிகளைப் பார்த்துப் பார்த்து ஏமாற்றம் உறுகின்றீர்கள்! விழித்தெழுங்கள்!

இன்று நாடு இருக்கின்ற நிலையில் நம் வறுமை ஒரு சில நாட்களிலோ—ஏன் ஒரு சில ஆண்டுகளிலோ—மறையாது. ஒரு சில வெள்ளிக் காசுகள் மேலும் உங்கள் கையில் வந்தால்மட்டும் வறுமை தீராது; வறுமை மிகுந்தாலும் மிகும். நாட்டில் நாம் அனைவரும் பங்கிட்டுக்கொள்ளப் பொருள்கள் வளரவேண்டும். மந்திரத்தால் மாங்காய் விழுவதில்லை. செல்வம் எல்லாம் உழைப்பின் பெரும்பயன். உணவில்லாத நிலையில் எப்படி உழைப்பது என்பதுதான் இந்த நாட்டுக் கூக்குரல். இவை எல்லாம் நீங்கள் அறிந்தனவே. என்றாலும், இந்த நாடு வாழ வேண்டுமானால், நீங்கள் முயன்றாக வேண்டும். உங்கள் பள்ளிகளுள் ஒவ்வொன்றும் ஊராருக்கு வழி காட்டியாக அமைய வேண்டும். இந்த ஊக்கத்தோடு உங்களிடம் கற்றுச் செல்கின்ற மாணவர்களை வருங்காலக் காந்திகளாக இந்த நாட்டில் வாழ்விக்கவேண்டும். இந்தத் தொண்டினை உங்களையன்றி வேறு யார் செய்யக்கூடும்? வசிஷ்டர் முதலானோருக்கும் இல்லாத வாய்ப்பு இன்று உங்களுக்கு உண்டு.

இன்று நீங்கள் படுகிற பாட்டில், பெண்டாட்டி புடைவைக்கு மன்றாட, குழந்தை நோய்க்கு மருந்தின்றி வாட, பெண் சீதனத்திற்கு வழி இன்றி மாப்பிள்ளை கையில் உதைபட, பையன மேல் வகுப்பு நூல்களை வாங்கப் பணமின்றி

முணுமுணுக்க, வேலை மேல் வேலை உங்கள் தலை மேல் வீழ, கூரை ஒழுகும் குடிசையிலோ, மூச்சு விட முடியாதபடி புழுத்த அறையிலோ, வயிற்றினை இறுக்கிக் கட்டிக்கொண்டு, படிப்பு என்றாலே அஞ்சி ஓடுகின்ற பட்டினிப் பட்டாளச்சிறுவரோடு எவ்வாறு ஈடுகொடுப்பது! ஒரே நாளில் முடியாது! முடியாது ! முடியாது ! ஆனால், எண்ணிப்பாருங்கள். இந்த நிலையில் அன்றோ இவ்வளவு வெற்றியும் கண்டுள்ளோம்? அதில் ஊக்கம் கொள்ளுங்கள். மனிதனது உண்மை உழைப்பிற்கும் ஊக்கத்திற்கும் அத்தகைய பெருமை உண்டு. அஞ்சாது முன் செல்லுங்கள். நம் இன்பக் கனவு நம் நாளிலேயே நனவாகாது போனால் போகட்டும்; கனவு கண்டு உழைத்தோம் என்ற பெருமையேனும் நாம் அடைதலாகாதா? பொருளாதார நிலை மாறாமல் பண்பாடுவளராது என்பது உண்மையே யானாலும், அலை ஓய்கிற வரையில் குளியாமல் இருக்க முடியுமா? நம் குறைகளை நாமே அறிவோம். ஆதலின், அவற்றை மேலிடத்தாருக்கு எடுத்துரைப்பது நம் கடமை; அவற்றை நீக்குவது அவர்கள் கடமை. ஒவ்வோர் ஊரிலும் பண்பாட்டுத் தூதராக நின்று வழியமைத்து வைப்பதும் உங்கள் கடமையே ஆகும். வருங்கால அதிகாரிகளையேனும் நல்வழிப்படுத்தலாமே!

வறுமை மிக்க இந்த நாட்டினைத் திருவள்ளுவரும் கண்டார்: ஒருபுறம் முணுமுணுத்துப் போகின்ற பட்டினிப் பட்டாளம்—அம்மட்டுமா?—பிச்சைக்காரர் என்று ஏசியிடும் நிலைக்கும் தாழ்ந்து "வாழ்கின்றவர்"களையும் ஒருபுறம் பார்த்தார். மற்-

ெருரு புறம் வேறொரு கூட்டம் உண்டு. அவர்களுக்கும் ஒன்றும் இல்லை ; பிறர் கூப்பிட்டு உணவிட்டால் வயிறு நிரம்பும்; ஆனால், இந்தக் கூட்டத்தினை அனைவரும் வாழ்த்தி வணங்கி வரவேற்றுப் புகழ்ந்தார்கள். இவர்களே துறவிகள். போலித் துறவிகள் அல்லர்; போலித் துறவிகள், பட்டினிப் பட்டாளத்தினைச் சேர்ந்தவர்கள். இரண்டு புறத்திலும் வறுமைதான் விளங்குகிறது ; ஆனால், ஒரு புறத்தே விலங்கின் நிலை ; மற்றொரு புறத்தே பண்பாட்டின் நிலை. "ஏன் ஐயா இந்த வியப்பு!" என்கிறார் வள்ளுவர் ; "எல்லோரும் காலில் விழுந்து வணங்க, ஏன் எல்லோரும் துறவிகளாக மாறவில்லை!" என்கிறார்; "தவம் செய்கிறவர் சிலரே. ஆதலால், துறவிகளும சிலரே," என முடிவு கட்டுகிறார். துறவு என்றால் காவித் துணியை எண்ண வேண்டா. தொண்டு நிலையே துறவு. "யான், எனது" என்ற செருக்கறுப்பதே துறவு. அதுதான் உண்மைத் தொண்டு. காந்தி அடிகளை நாம் பார்க்கவில்லையா ? குடியரசில், உரிமை அனைவர்க்கும் ஆகும். துறவு நிலை மனப்பான்மையும் தொண்டுள்ளமும் எல்லோருக்கும் உரிய உண்மை. மணந்து வாழலாம் ; குடும்பமாகத் தொண்டு செய்யலாம்; செய்வது எப்படி என அஞ்சலாம். ஆனால், தொண்டு செய்ய முயலவுமா முடியாது ? பின், எல்லாம் தாமே வரும். பணம் அன்று வேண்டுவது ; தொண்டர்களே வேண்டும். பட்டாளமாக முணுமுணுத்துக்கொண்டே நில்லாமல், தொண்டர் கூட்டமாக வாழ முயலுங்கள் ; இந்தத் தொண்டு மனப்பான்மையை உங்கள் மாணவரிடம்

வளர்த்துவிடுங்கள். ஆசிரியர்கள் வயிற்றில் மட்டும் பச்சைத் தண்ணீர்த் துணியை நனைத்துக் கட்டிவரப் பிறர் செல்வத்திற் புரளவேண்டும் என நான் சொல்லவில்லை. இந்த வெற்றர்கள் வாழ்வு நாட்டிற்குப் பெருங்கேடு. ஆனால், வருகின்ற சமுதாயத்திலேனும் இந்தக் கேட்டிற்கு வழியின்றித் தொண்டுள்ளத்தினை வழிகாட்டி வளர்க்கவேண்டாவா? உங்கள் பொருளாதார வாழ்க்கைத் தரம் உடனடியாக உயரவேண்டும். இஃது அரசியலின் கடமை; சமுதாயத்தின் கடமை.

எல்லோரும் ஓட்டுப் பெற்றுவிட்டோம்; ஓட்டுரிமையின் வன்மையையும் காட்டிவிட்டோம். ஆனால், தேர்தல் திருவிளையாட்டில்மட்டும் மகிழ்ந்து பயனில்லை. அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்து பண்பாட்டு வாழ்வில் திளைக்க வேண்டாவா? எழுதப் படிக்கத் தெரிந்தவர் நம் நாட்டில் எத்தனை பேர்? உங்கள் முதற்கடமை இங்கே தோன்றுகிறது. இதன் முழுச்சுமையும் உங்கள் தலைமேல் விழுவதனை ஏற்றுத்தான் தீரவேண்டும். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்," என்றன்றோ நீங்கள் கற்பிக்கின்றீர்கள்!

ஆனால், இங்கு ஒரு பெருங்கேடு விளைகிறது; கல்வி எல்லாம் எழுத்தினை அறிவதே எனப் பலர் மருள்கின்றனர். மாணவர்கள் பலர் இவ்வாறு மருண்டு, உலகினை மறந்து, வாய்ப்பந்தர் போடுவதே சிந்தனைச் சிற்பிகளின் இயல்பென நம்பிவிடுகின்றார்கள். தச்சு வேலை கற்கின்றவன் இவ்வாறு மருள முடியாது. தான் கற்றதும் கற்காததும் அவனுக்கே தெரியும். வீணான அலங்கோல வாழ்-

விலும் வெற்று எழுத்தறிஞர் மயங்குகின்றனர். "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்பதனை மறந்து விடுகின்றோம். வாழவே கற்கவேண்டும். ஆதலின், இயற்கையைக் கற்கவே முயல வேண்டும். பழைய வரலாற்றையும் வாழ்க்கையோடு ஒட்டியே உணர்தல் வேண்டும். இதுதான் விஞ்ஞான முறை. வாய் வழிக் கல்வியினும் கண் வழிக் கல்வியே சிறந்தது. பேசி வாழ்வதினும் செய்து வாழ்வதே வாழ்வு. செயல்முறைக் கல்வியின் நுட்பம் இதுதான். இவை புதிய கொள்கைகள் அல்ல; காலம் கண்ட கொள்கைகள். இவற்றை எப்படி நடைமுறையில் கொண்டுவரக் கூடும் என்பதனை நீங்களே அறிவீர்கள்.

உண்மையாய் உழைத்தால், உண்மைதானே விளங்கும்? நகர வாழ்வினை எண்ணி, நாட்டுப்புற வாழ்வினை மறத்தலாகாது நாட்டுப்புற வாழ்விற்கேற்ற கல்வி முறையை முற்ற முடிய வகுக்க வேண்டியவர்கள் நீங்களே. 'அடிப்படைக் கல்வி' என்பது முதலான பெயர்களைக் கண்டு மருள வேண்டா. "கல்வி வாழ்விற்கே." என்பதனை உணர்ந்தால் எல்லாம் விளங்கும். நீங்கள் வழிகாட்டிகள் என்பதனையும் உறுதியாக நீங்களேனும் நம்பவேண்டும்

ஒரு பூஞ்செடியை எவ்வளவு அக்கறையாகப் பாதுகாத்து வளர்க்கிறோம்! நம்மிடம் வரும் ஒவ்வொரு குழவியும் ஓரழகிய பூஞ்செடி. பூஞ்செடிக்குக் காட்டும் அக்கறையேனும் காட்ட வேண்டாவா? அன்பு வேண்டும். செல்வம் கொஞ்சுதல்

அன்று அன்பு. சீறி விழுவது போலச் செல்வம் கொஞ்சுவதும் வீணே ஆம். அறிவோடு ஒத்துழைப்பதே அன்பு. அன்போடு உறுதிப்பாடுடைய கலைகண் ஆகவும், குழவிகளுக்கு, ஆசிரியர்கள் விளங்க வேண்டும். பரந்துபட்ட உலகில் திகையாதபடி வாழவே பள்ளியிற் சிறுவன் புகுகின்றான். உலகத்திலும் தன்னிடத்திலும், குழவி, உறுதி கொண்டு வாழப் படிக்கும்போது, அந்த உறுதியின் வடிவமாகவே பள்ளியில் ஆசிரியன் இருத்தல் வேண்டும். ஆனால், கோமாளிக் கூத்தாகப் படிப்பு முடிதல் ஆகாது. ஆசிரியனது பெருமை, காம்பீரியம்—இவை மாணவரது மேல் வரிச் சட்டமாக அமைதல் வேண்டும். தீக்காய்வோன் நெருப்பினை விரும்பினாலும், அதிலே கை இடுவதில்லை. அது போன்ற நிலையில் மாணவர் நிற்க ஆசிரியர் வாழ வேண்டும். முன்னோர் இதனாலேதான் ஆசிரியர்களை 'ரிஷிகள்' எனப் பாராட்டினார்கள். இந்த இயல்புகள் பெற்ற ஆசிரியர்களைவிடச் சிறந்த தொண்டர்கள் உலகில் இல்லை. இவர்கள் தங்கள் தங்கள் சுற்றுப்புறச் சூழலுக்கேற்ப உலகினையும் வாழ்வினையும் நேர் முகமாகத் தங்கள் மாணவர்களுக்குக் காட்டிக் கற்பித்துவிடுவது எளிது.

முறையும் வேண்டும்; அதனைவிட மனிதத் தன்மை வேண்டும்; அடிப்படையான தொண்டுள்ளம் வேண்டும். இவை இருந்தால், பிற எல்லாவற்றையும் நீங்கள் வெற்றியோடு வீறு பெறச் செய்யலாம். எத்தனை நாள் கற்பது? எத்தனை ஆண்டு கற்பது? எவற்றைக் கற்பது? எங்கே கற்பது? எப்படிப் படிப்படியாகக் கற்பது? எத-

னைப் படிப்பது? இவற்றிற்கு எல்லாம் காந்தியின் அடிப்படைக் கொள்கைக்கு ஏற்ப அனுபவத்தினை ஒட்டி முடிவான விடை அளிக்கத் தக்கவர்கள் நீங்களே. உங்களுக்கு ஆற்றல் இல்லை என எண்ணிவிட வேண்டா. எண்ணிப்பாருங்கள். அனுபவத்தினை ஒட்டி ஆராயுங்கள். நம் நாடு உலக நாடுகளொடு சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்பதனையும் மறவாதேயுங்கள். வழி தெரியும். வாழ்வோம்.

அடிப்படை ஆசிரியர்கள் பெருங்கேட்டின்மேல் நிற்கின்றார்கள்; எப்போதும் தம்மிலும் அறிவு விளக்கம் குறைந்தவர்களிடையே வாழ்கின்றார்கள். அந்தக் குழவிகள் எதிரே இவர்கள் அறிவின் பெருமையாகக் காட்சியளிக்கிறார்கள். தம்மைத்தாமே உயர்வாக எண்ணுவது அங்கு எளிது. "அட முட்டாளே," என அடிக்கடி பேசுவது இவர்களுக்குப் பழக்கமாய்விடும்; அறிவுச் சுடர்களோடு தொடர்பு அறவே ஒழிகிறது. இஃது ஒரு பெரிய படுகுழி. ஆசிரியர்கள் தங்களை இந்தப் பெருங் கேட்டினின்றும் காத்துக்கொள்ளுதல் வேண்டும். உலகினைப் பார்த்தாலோ, தம்மிடம் கற்றவர் மந்திரிகளாகத் தம்மையாளத் தாம் அடங்கி ஒடுங்கி வாழும் நிலையே வயிற்றினைக் கலக்குகிறது. ஆகையால், உலகினைப் பார்க்க மனம் இல்லை. உலகப் பெருமக்களின் நூல்களை அடிக்கடி ஓதி அறிவு விளக்கத்தில் வாழ முயல வேண்டும். அறிவின் முன்னேற்றத்தோடு நாமும் முன்னேறி வர வேண்டும். நம் தொண்டு உலகத்தோடு தொடர்பினை உண்டாக்கிவிடும். இதற்கு எல்லாம் மேலாக

நாம் தொடர்பு கொண்டாடும் குழவிகளின் உள்ளத்து வளர்ச்சியினையும், நாம் கற்பிக்கும்போதே ஆராய்ந்து வருவோமானால், இயற்கை அறிவின் பேரொளிப் பிழம்பாக ஒவ்வொரு குழவியும் விளங்கக் காண்போம். அடிப்படை இயற்கைப் பேரொளியோடு தொடர்பு கொண்டு வாழ முடியும்; ஆசிரியத் தொழிலும் இன்பமாக முடியும்: உண்மைகள் விளங்கும். அந்த உண்மையைப் பின்பற்றி நடந்தால், குழவிகள் வாழும்; நாமும் வாழ்வோம்; உலகமும் வாழும். அவ்வாறு வாழ இந்த மாநாடு வழி காட்டுவதாக!

# VIII. எழுதப் படிக்கக் கற்பிக்கும் விளையாட்டு

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் இன்று சமுதாயத் தொண்டில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் எளிதாகச் செய்யக் கூடிய தொண்டு, பள்ளிக்கூடம் போக முடியாத எளிய குழந்தைகளுக்கு எழுதப்படிக்கக் கற்பிப்பதேயாம். குழந்தைகளுக்கும் விளையாட்டில் விருப்பம்; மாணவர்களுக்கும் அதில் விருப்பம் மிகுதி. ஆதலின், விளையாட்டின் வழியே கற்பிப்பது நல்லது. இப்படிக் கற்பிப்பதால் கற்பிப்பார் அறிவும் நிலைபெறும். இந்த முறையைப் பின்பற்றும்போது கற்கின்ற குழந்தைகளுக்குக் கற்கும் சொற்கள் வெற்றொலியாகக் காற்ருேடு காற்ருய்ப் பறந்துபோய்விடாமல், என்றென்றும் மறவாத விளையாட்டாய் மனத்திலும், வாழ்க்கையிலும் இனித்துப் பொருள் நிறைந்து தோன்றும்.

செயலிலேதான் குழந்தைகளுக்கு விருப்பம் மிகுதி. செயலை உணர்த்துவன வினைச்சொற்கள். அவையே வாக்கியத்தின் உயிர்நிலை. ஆதலின், அவற்றை வற்புறுத்துவதற்கு விளையாட்டைப் போல வேருெரு சிறந்த முறை இல்லை எனலாம். "சொன்னபடி செய்தல்" அல்லது "சொன்னுல் செய்" என்ருேர் ஆட்டம் அமைக்கலாம். குந்து, நில், ஓடு, குதி என்று சொல்லிக்கொண்டே போகவேண்டும். இரண்டு கூட்டமாகக் குழந்தைகளைப் பிரிக்கலாம். சொன்னதும், முதல் கூட்டம் சொல்லியபடி செய்ய

வேண்டும். சரியாகச்செய்தால் ஒரு பழம்; தவறி-னால், தவறினவன், பின் ஆடாமல் வெளியே போக-வேண்டும். எதிர் நிற்கும் கூட்டம் தவற்றைச் சொல்லிக்கொண்டு வரவேண்டும். மாறிமாறி இரண்டு கூட்டமும் விளையாடும். எந்தக் கூட்டத்-தில் அனைவரும் முதலில் வெளியேறிவிடுகிறார்-களோ அந்தக் கூட்டம் தோற்றது; மற்றையது வென்றது. இந்த ஆட்டத்தில் சொல்லிக்கொண்டு வரும்போதே, கற்பிப்பவர் கரும்பலகையில் சொன்ன சொல்லை எழுதி வைத்துப் படிப்பிக்கவும் செய்யவேண்டும். முடிவில் இந்த ஆட்டத்தினை "எழுதியபடியே செய்தல்" என்ற ஆட்டமாக விளையாட வேண்டும். முதலில் படமெழுதி விளை-யாட வைக்கலாம். முடிவில் சொல் எழுதி விளை-யாட வைக்கலாம்.

வினைச்சொற்கள்மட்டும் மொழியாகி விடுமா? பெயர்ச்சொற்களும் வேண்டும். பல வகை விளை-யாட்டுப் பொருள்களைச் சேர்த்துக் கடை விளை-யாட்டு விளையாடலாம். ஒரு பொருளை வாங்குவ-தற்கு விலையாகத் தரவேண்டுவது அப் பொருளின் பெயர் எழுதிய அட்டைக் காசேயாகும். பழகிய-தும் பொருள்களை நீக்கிவிட்டுச் சொல் எழுதிய அட்டைகளையே வைத்து விளையாடலாம். காசுக்-காகக் காலணா, அரை ரூபாய் என்று எழுதிய அட்-டைகளைப் பயன்படுத்திக் கணக்கும் தெரிந்து கொள்ளலாம்.

நம் தலை, கை, கால் முதலிய உறுப்புக்களின் பெயர்களை அறிந்துகொள்வதிலும் குழந்தை-களுக்கு விருப்பம் உண்டு. "தொடுகிற ஆட்டம்"

ஒன்று இதற்காக ஆடலாம். ஆசிரியர் 'தலை.' 'கால்' என்று சொல்லிக்கொண்டே போவார். குழந்தை தொட்டுக் காட்டவேண்டும்.

"மாமா சொல்கிறார்", "மாமா எழுதுகிறார்" என்ற விளையாட்டின் வழியே 'உள்ளே', 'வெளியே', 'மேலே', 'கீழே' முதலிய தொடர்பு விளக்கும் சொற்களைக் கற்பிக்கலாம். "மாமா சொல்கிறார்; கையை மேலே தூக்கு"–"கீழே போடு"–"வலம் திரும்பு"– "இடம் திரும்பு" என்று கூறிக் கொண்டேவந்தால் குழந்தைகள் அப்படியே செய்யவேண்டும். பின்னர்ச் சொற்களைமட்டும் எழுதிக் காட்டி ஆடச் செய்ய வேண்டும்.

விலங்கினிடத்தும் பறவையிடத்தும் குழந்தைகளுக்குப் பெரிய ஈடுபாடு உண்டு. ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விலங்காகவோ, பறவையாகவோ விளையாடப் பெயர் இடப்படவேண்டும். 'சுழல் தட்டு விளையாட்டு' என்று ஒன்று விளையாடலாம். ஒரு குழவி தட்டை முதலில் சுழற்றிக்கொண்டிருக்கும். ஆசிரியர் 'பசு' என்றதும், பசு என்று பெயர் பெற்ற குழந்தை உடனே வந்து தட்டை வாங்கிச் சுழற்றவேண்டும். இல்லையானால் அந்தக் குழந்தை தோற்று வெளியேறும். முதல்குழந்தையே சுழற்றிக்கொண்டிருக்கும். பசுக் குழந்தை வாங்கிக்கொண்டால், அது சுழற்றும். இப்படியே விலங்கின் பெயர்களையும், பறவையின் பெயர்களையும் மாணவர்கள் கற்றுக்கொண்டபின், ஆசிரியர் அப் பெயர்களை வாயால் சொல்லாமல், கரும்பலகையில் எழுதிக் காட்டி விளையாட வைப்பார். இந்த ஆட்டத்தின் வளர்ச்சி மற்றொரு விலங்-

காட்டம் ஆகும். அதில் "காக்கை பற" என்றதும் பறப்பது போலக் காக்கைக் குழந்தை நடிக்கும். 'மானே துள்ளு'—'குதிரையே ஓடு' என்று கூறியதும் குழந்தைகள் விளையாடும். குருளைக் குழுவினர் (Cubs) இவ்வாறு விளையாட நாம் பார்த்ததில்லையா? இனி அவ் விலங்குகளும் பறவைகளும் எழுப்பும் ஒலியை உண்டாக்கி விளையாடுவதும் இத்தகைய ஆட்டத்தினைச் சேர்ந்ததேயாம். காக்கை என்றதும் அந்தக் குழந்தை 'கா கா' என்று கத்தவேண்டும். 'குயில் கூ கூ', 'வாத்துக் குவ்வா குவ்வா', 'ஆடு மே மே', 'பசு மா மா' என்றெல்லாம் கத்தி விளையாடலாம். அல்லது, 'கா கா' என்றதும் காக்கைக் குழந்தை எழுந்து நிற்கவேண்டும். இப்படியே மற்றவையும். பின், எழுதிக் காட்டவேண்டும். இதற்குமேல் ஒன்றும் செய்யலாம். "பற பற பாப்பா" என்று இந்த ஆட்டத்திற்குப் பெயரிடலாம். "காக்கை பறக்கிறது, குருவி பறக்கிறது" என்று சொல்லிக் கொண்டே வந்தால், குழந்தைகள் பறப்பதுபோல நடிக்கவேண்டும். ஆனால், இடை இடையே, ஆசிரியர். "பசு பறக்கிறது. மரம் பறக்கிறது" என்று கலந்து சொல்லுவார். அப்போது பறந்தால், பறந்த குழந்தை தோற்று வெளியேறும். இவ்வாறே பெயரைப் பலகையில் எழுதிக் காட்டியும் ஆடச் செய்யலாம்.

இதனினும் சுவையுள்ள ஆட்டமும், வகுக்கலாம். முக்கோணம் ஒன்று பெரிதாகத் தரையில் கீறி, மற்றொரு விலங்கு விளையாட்டும் விளையாடலாம். மேலே கோணத்தில் '**புலி**' என்று ஒரு குழந்தையை இருத்த வேண்டும். கீழிரண்டு கோணத்-

தில் ஒன்றில் **'உழவன்'** என ஒரு குழந்தையை அமர்த்தவேண்டும் ; மற்றொன்றில் கூப்பிட்டதும் ஒவ்வொரு விலங்காக அந்த அந்த விலங்கின் பெயர்கொண்ட குழந்தை வரவேண்டும். உழவனுக்கு எந்த விலங்கு வேண்டும் என்று ஆசிரியர் தெரிந்துகொண்டு அந்தப் பெயரைக் கரும்பலகையில் எழுதுவார். உடனே அந்த விலங்கு உழவனிடம் போகவேண்டும். அதனைப் பிடிக்கப் புலி பாயும். அதன் கையில் சிக்காமல் விலங்கு உழவனிடம் போய்விடவேண்டும்.

நிறங்கள் குழந்தைகளின் கண்ணையும் கவரும்; கருத்தையும் கவரும். அந்த நிறங்களின் பெயர்களையும் விளையாட்டின் வழியே குழந்தைகளுக்குக் கற்பிக்கலாம். போர் விளையாட்டில் குழவிகளுக்கு விருப்பம் மிகுதி. மணலைக் குவித்துக் கோட்டை என்று கூறலாம். ஊதா, நீலம், கருநீலம், பச்சை, மஞ்சள், காவி, சிவப்பு என்ற நிறமுள்ள கொடிகளைக் காகிதத்தில் வெட்டி, ஈர்க்கில் சுருட்டி வைத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகள் எதிர் எதிர் நிற்கும் இரண்டு படைகளாகப் பிரியவேண்டும். ஒரு பிரிவு கொடியை நாட்டும் ; மற்றொன்று கொடியை எடுத்துவிடும். "நாட்டுவோம் நாட்டுவோம் ; வெள்ளைக் கொடியை நாட்டுவோம் !" என்று ஆசிரியர் பாடியதும், வெள்ளைக் கொடியை அந்தப் படையில் உள்ள எந்தக் குழவியானாலும் எடுத்துக்கொண்டு போய்க் கோட்டைமேல் நாட்டவேண்டும். நாட்டாமற் போனால் வெள்ளைக் கொடி தோற்றது என்று கணக்கிடப்படும். கொடிகள் நாட்டியபின், நாட்டாத கொடிகளை ஆசிரியர்

நாட்டுவார். "பிடிப்போம் பிடிப்போம் கோட்டையை; எடுத்தெறிவோம் வெள்ளைக்கொடியை!" என்று ஆசிரியர் பாடியதும், 'எதிரில் நிற்கும் படையில் உள்ளவர் அந்தக் கொடியை எடுத்துவிடவேண்டும். பின் படையினர் மாறி விளையாடுவர். முடிவில் கணக்கெடுத்துப் பார்த்து வெற்றி தோல்வி முடிவு செய்யப்பெறும்.

பின்னர் மௌனமாக இதனை விளையாடும்போது ஆசிரியர் நிறங்களின் பெயர்களைக் கரும்பலகையில் எழுதிக் காட்டுவார். அதனைப் படித்து, அந்த நிறக்கொடியை நாட்டவோ எடுக்கவோ குழந்தைகள் வரும்.

நிறச்சொற்களைக் கற்பிக்க மற்றொரு விளையாட்டும் உண்டு. ஈர்க்கினை வளையமாக வளைத்துக் கட்டி, ஒவ்வொரு வளையத்திற்கும் ஒவ்வொரு நிறமாகக் காகிதத்தினை ஒட்டிவிடலாம். "சிவப்பு வளையம் கொண்டுவா" என்பதுபோலக் கூறி விளையாடலாம். கண் பொத்திக் கண்ணாமூச்சு விளையாட்டும் விளையாடலாம். குழந்தை, கண்ணை மூடிக்கொள்ளும். ஒரு சிலர்மட்டும் வளையங்களை வைத்துக்கொண்டிருப்பர்; அவர்கள் மறைத்துக்கொள்வார்கள். மறைத்ததும், "சிவப்புக்கொண்டுவா" என்று ஆசிரியர் கூறுவார். குழந்தைகள் கண்ணைத் திறந்து தேடத் தொடங்கும். சிவப்பு நீங்கலாக வேறொன்றையும் தொடலாகாது. சிவப்பினைத் தொட்ட குழந்தைக்கு ஒரு பழம் என்று கணக்கிடப்படும். இதனை மௌனமாக விளையாடும்போது, ஆசிரியர் நிறங்-களின் பெயர்களைக் கரும்பலகையில் எழுதிக்காட்டுவார்.

இதனை நாடகம் போலவும் ஆடலாம். பச்சை, சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிறமுள்ள இலைகளை, ஒவ்வொரு குழந்தையின் சட்டையிலும் தலைக்கு ஒன்றாகக் குத்திவிடலாம். காற்று என்று ஒரு குழந்தை நடிக்கும். நிறத்தின் பெயரை ஆசிரியர் எழுதுவார். காற்று அந்த நிறமுள்ள இலையைத் தொடவேண்டும். "மெல்ல வீசு, விரைந்து ஓடு" என்றும் கூறியோ எழுதியோ ஆடலாம்.

இப்படியே ஐம்புலனுக்கும் ஏற்றவற்றை மாண்டிசோரிப் பள்ளிகளில் வைத்துப் பழக்குவது போல அமைத்து விளையாடிப் பல சொற்களைக் கற்பித்துப் பின் மௌன விளையாட்டில் எழுதிக் காட்டிப் படிக்க வைத்து விளையாடலாம்.

# IX. குழந்தைகள் கற்பது

தமிழிலே கேட்பது வேறு; கற்பது வேறு. எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டு அந்த வழியாக அறிவை வளர்ப்பதே கல்வியாம். இஃது ஒரு செயற்கை வழியாகும். இதற்கெனச் சில பழக்கங்கள் படிதல்வேண்டும். சொல், ஒரு பொருளைச் சுட்டுகின்றது என்பது முதலாம் உண்மை. இரண்டாவது, அச் சொல் அவ்வாறு சுட்டுகின்றதொரு கருவி என்பதாம். எனவே, முதல் உண்மை நம் இரத்தத்தில் ஊற வேண்டுமானால் சொல்லைக்கொண்டு பொருளை நாடுகின்ற ஊக்கம் எழுதல் வேண்டும். "என்ன சொல்லுகிறது இந்தச் சொல்?" என்று அறிவித்தற்காகச் சொற்களைப் பார்க்கின்ற பழக்கம் வளரவேண்டும். இங்கு எழுவது பொருளின் நாட்டம். அதுமட்டும் போதாது. சொல்லினைக் கருவியாகப் பயன்படுத்தும் திறமையும் பழக்கமாகப் படிதல் வேண்டும். உளியைக் கண்டதும் மரத்திலே நாற்காலி முதலியவற்றைச் செய்யக்கூடும் என்ற ஊக்கம் தச்சனுக்கு எழுவது போலச் சொல்லைக் கண்டதும் நம் உள்ளத்திலே அதனைக் கருவியாகப் பயன்படுத்திப் பொருளை அறியலாம் என்ற முயற்சி மேலிடவேண்டும். எழுத்துக்களையும், எழுத்துக்களின் தொடரையும் கண்டு, அவற்றின் ஒலியையும் பொருளையும் உணர்ந்து, அச் சொல் என்ன சொல்லுகிறது என்று கண்டுபிடித்துவிடலாம் என்ற ஊக்கத்தோடு முனைந்து, சொல்லில் ஈடுபடுகிற பழக்கம் வளரவேண்டும்.

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் **பொருள்** தரின் பதமாம்" என்பது நன்னூல். ஆதலின், பொருளை நாடும் பழக்கம் எழவேண்டும். பொருள் தரும் கருவி என்று உணர்ந்து, கருவியாகப் பயன் படுத்தும் வழக்கம் வளர்தல்வேண்டும். நாம் இங்குக் கூறுவது இந்நாளைய மனநூல் உடையார் கூறும் கொள்கைகளேயானாலும் பழைய இலக்கண ஆசிரியர்கள் வற்புறுத்திக் கூறிய கொள்கைகளேயாம்.

இந்த இரண்டு பழக்கங்களையும் உண்டாக்குவது எப்படி? நிலைபெறச் செய்வது எப்படி? சில செயல்களைக் குழந்தைகளைச் செய்யுமாறு சொல்லி விளையாடுகின்ற விளையாட்டுக்கள் பல. ஓடு, குந்து, குதி, தட்டு என்று சொல்லிக்கொண்டே போகும்போது அவ்வவற்றிற்கு ஏற்ற செயல்களைக் குழந்தைகள் செய்துவருவது ஒரு விளையாட்டு. ஒன்றும் சொல்லாத போது ஏதேனும் செயலைச் செய்தாலோ, சொல்லுதற்கு மாறாகச் செய்தாலோ, தோற்றவரைக் குட்டுவது அல்லது செத்தவர் என்று தள்ளுவது—இந்த விளையாட்டின் முறையாகும். இத்தகைய விளையாட்டுக்களின் வழியாகச் சொல், பொருளைக் காட்டுகின்றது என்ற உணர்ச்சி படிவதோடு, பொருள் நாட்டத்தோடு சொற்களை ஊன்றிப் பார்க்கக் குழந்தைகள் தொடங்கும். விடுகதை, கதை, பாட்டு என்பவற்றின் வழியே இந்தப் பழக்கத்தை நிலைபேறடையச்செய்யலாம்.

சொல்லைக் கருவியாகக்கொண்டு பயன்படுத்தமுந்தும் பழக்கத்தை எவ்வாறு உண்டாக்குவது? எழுத்துக்களை எழுதி அவற்றின் ஒலிகளைச் சந்த இன்பத்தோடு கூடிப் பாடலாம். லலலா, லலலா,

லலல என்றெல்லாம் பாடலாமன்றோ? குழந்தை-களே புதிய சொற்களைப் படத்தின் உதவியால் படிக்கின்ற விளையாட்டு விளையாடலாம். பலகை-யில் எழுதியதும் அந்தச் சொல்லை வாயினல் சொல்லுவது என்ற விளையாட்டு விளையாடலாம். பழகியபின் எழுதப்பட்ட வினைச் சொற்களைக்-கொண்டு, அதன்படி செயல்செய்வது என்றோ, எழுதிய விலங்குகளின் பெயரைக் கண்டு அந்த விலங்குபோல் ஒலிப்பது அல்லது செயலாற்றுவது என்றோ விளையாடி வரலாம். பின்னும் புதிய சொற்களை வைத்துக் கதை சொல்லிக்கொண்டு போய்ப் புதிய சொற்களை மட்டும் பலகையில் எழு-திக் காட்டிக்கொண்டுபோகலாம். புதிய சொற்களை அவ்வாறே பழைய ஆட்டத்திலும் புகுத்திவிட-லாம். இத்தகைய விளையாட்டில் கலந்துகொள்ளு-கிற குழந்தை எழுத்துக்களைக் கண்டதும் அவை என்ன சொல்லுகின்றன என்று கண்டு பிடிக்க முழுமனத்தோடு முயன்று, சொல்லில் ஈடுபடுவதால் சொற்கருவிப் பழக்கம் நிலைபெறடைகிறது.

இந்தப் பழக்கங்கள் குழந்தையினிடத்தே படிந்துவிட்டன என்று தெரிந்ததும் பாட புத்த-கங்களைப் படிக்க அவர்களிடம் கொடுக்கலாம். அங்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற பழக்கங்கள் எவையென அறிதல்வேண்டும்.

(1) பாட புத்தகத்தின் ஆசிரியர் கூறுகின்ற பொருளினை அறிந்து கொண்டு, குழந்தை அவரு-டைய உள்ளத்தோடும் கலந்துவிடவேண்டும். இந்த வழக்கத்தையே முதலில் வளர்க்கவேண்டும். புதை-யலைக் கண்டுபிடிக்கின்றவன்போலக் குழந்தையைப்

பழக்கி விட்டால்தான் இத்தகைய உணர்ச்சி வளர்ந்து பழக்கமாகும். பாடத்தின் முதலிலே படத்தைக் காண்கிறோம். அவற்றைப் பற்றி-யெல்லாம் குழந்தை என்ன சொல்ல முடியும் என முயலுமாறு குழவியைத் தூண்டிவிட வேண்டும். மேலும் என்ன கூறக்கூடும் என்ற ஆவலோடு குழவி பிறகு பாடத்தைப் படிக்கின்றது. படிப்ப-தற்குமுன் பாடத்தைக் கூத்தாக நடிப்பது நல்லது. பேச்சுக்களாக வருமானால் நாடகமாக நடிப்பது நல்லது. கேள்வியும் விடையுமாக வருகின்ற பாடத்-தைக் குழந்தைகளே முயன்று கேள்வி கேட்டு விடையளிப்பது சிறந்த முறையாகும். ஒலியார-வாரத்திலேயே ஈடுபட்டுப் படித்துக்கொண்டே போகாதபடி,ஒவ்வொரு பத்தி முடிந்ததும் பொருள் நாட்டத்தில் குழவிகளை ஈடுபடச் செய்து, இந்தப் பத்தி என்ன கூறுகிறது என்று தெளிவாக வெளி-யிடுமாறு பழக்கிவிடவேண்டும். கடினமான பகுதியில் குழவி சிக்கி அலையாதபடி, அதனை முன்-னரே படித்தோ, விளக்கியோ காட்டியபின் குழவி-களை அப் பகுதியில் ஈடுபடச் செய்தல்வேண்டும். பால பாடம் என்று ஆசிரியர் புறக்கணித்தலாகாது. அந்தச் சிறு வகுப்பில் அவற்றின் மனத்தில் படி-கின்ற கருத்துக்கள் கொண்டே தாம் சாகின்ற வரையிலும் கேட்கின்றவற்றையோ, படிக்கின்ற-வற்றையோ பொருள் பண்ணி வாழப்போகின்றன என்ற பேருண்மையை உணரும்போது, பாலர் வகுப்பு ஆசிரியரின் பெருங்கடமை நன்கு விளங்கும்.

(2) மற்றொரு பெருங்கேடும் உண்டு: சொற்-கள் விளங்காத போதும், ஒலியாரவாரத்தில் ஈடு-

பட்டுப் படிகின்ற பழக்கமே ஈதாம். இந்தக் கொடிய பழக்கத்தைத் தடுத்தல்வேண்டும். விளங்காத பகுதியைப் பற்றி நாணமின்றிக் கேட்டறிகின்ற வழக்கத்தை வளர்ப்பதே இங்கு ஆசிரியர் செய்யக்கூடியதாகும்.

(3) சொற்கள் பிறர் கருத்தை அறிவிக்கும் கருவி யாவதோடு தன்னுடைய கருத்தை அறிவிக்கும் கருவியுமாகும் என்பதைக் குழவி அறியவேண்டும். தாய் மடியில் வளர்கின்ற குழவி ஒரு சிறிதும் கூசாது தன் கருத்தைத் தாயிடம் கூறிவிடுகிறது. அதுபோல, வகுப்பில் வரும் குழவியும், தான் படிக்கின்றவற்றைப்பற்றி அச்சமின்றி ஆசிரியரிடம் தெரிவிக்கவேண்டும். அடிக்கடி ஆசிரியர் "இதனைப்பற்றி நீ என்ன நினைக்கின்றாய்?" என்று குழவிகளைக் கேட்டு வருவது நல்ல பயனைத்தரும்.

(4) "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது." என்பது பழமொழி. சொல்லாரவாரத்தில் மட்டும் ஈடுபடும்போது குழவி வெளியுலகை மறந்து விடுகிறது. குழந்தை படித்து வரும்போது ஆசிரியர் "இஃது எதை நினைப்பூட்டுகிறது?" என்று அடிக்கடி கேட்டுவருதல் வேண்டும். அப்போதுதான், தான் முன்னரே கேட்டோ, படித்தோ, அனுபவித்தோ வந்ததனையேதான் படிக்கின்ற பாடம் கூறுகின்றதென்ற உண்மை விளங்கும். உலகத்தோடும் தன் அனுபவத்தோடும் படிப்பினைத் தொடர்பு படுத்தி உணர்கின்ற பழக்கம் குழந்தைக்குப் படிந்து விடும்.

(5) எல்லாவற்றையும் ஆசிரியரிடமே உணர்வது நல்லதன்று. கற்றுச் சொல்லியாய்க்

கிளிபோல் வாழ்வதில் என்ன பயன்? அறியாத சொற்களின் பொருளும், அந்தச் சொற்கள் வருகின்ற இடத்தை நோக்க விளங்கக் காண்கின்றோம். இவ்வாறு புதிய சொற்களின் பொருள்களை அறிகின்ற பழக்கமும், குழந்தையிடம் வளர்தல் வேண்டும். தன் முயற்சியில் கண்ட பொருளைக் குழவி எந்நாளும் மறவாது. அதிலோர் இன்பமும் அது பெறுகிறது; மேலும், படிப்பதற்கு அஞ்சாது ஊக்கங்கொண்டு செல்லுகிறது.

(6) தட்டுத் தடையின்றிப் படிக்கின்ற பழக்கமும் குழவியினிடம் வளரவேண்டும். பாடத்தைப் படிப்பதற்குமுன் சொற்களைத் திருத்தமாக ஒலித்து விளக்குவது ஆசிரியரின் கடமையாம். பாடம் முடிந்தபின்னும் அருமைப்பாடு உடையவற்றைக் கேள்வி கேட்டு, மாணவர் வாய் வழியே வரச்செய்து வற்புறுத்துவதும் வேண்டும். நூலைத் திறந்து ஏதேனும் ஒரு பக்கத்தில் காணும் தலைப்பினைப் படித்ததும் நூலை மூடிவிட்டு அத் தலைப்பினைக் கூறுவதற்குக் குழந்தைகளைப் பழக்கிவிடலாம். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு நூலிலிருந்து விடையைக் கண்டுபிடிக்கத் தூண்டிவிடலாம். ஒரு பத்தியைப் படித்ததும் அதன் கருத்தினைக்கூறுமாறு செய்யலாம். இத்தகைய முயற்சிகளால் விரைந்து படிக்கும் பழக்கம் குழந்தைகளிடத்தில் படியும்,

(7) படிப்பிலே ஒரு கலை உணர்ச்சியும் ஈடுபாடும் தோன்றப் படிக்கின்ற பழக்கமும் படிதல் வேண்டும். படிக்கின்றபோதே தோன்றுகின்ற கலை உணர்ச்சியை வெளியிடுகின்றதற்குத் தகுந்த

வாய்ப்புக்களை ஆசிரியர் அமைத்துத் தருதல் வேண்டும். குழவி எளிதாகப் படிக்கக்கூடிய நூல்கள், உற்சாகத்துடன் படிக்கக்கூடிய நூல்கள்-இவற்றை ஆசிரியர் தேடித் தருதல் வேண்டும். குழந்தைகள் படிப்பதையோ சொல்லும் கதையினையோ அன்பாகக் கேட்டு ஆதரவளிப்பவர் வேண்டும். இவர்களை வெளியே போய்த் தேடிப் பிடித்து அலைய வேண்டா. வகுப்பில் உள்ள மாணவர்களே தலையாட்டிக் கைகொட்டி ஈடுபட்டுக் கேட்டு ஆதரவளித்து இன்புறுவார்கள். ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பிற்கு நாடகமாடிக் காட்டலாம்; கதை சொல்லிக் களிக்கச் செய்யலாம்.

(8) விரைந்து படித்தல் மட்டும் போதாது. திருத்தமாகப் படிக்கின்ற பழக்கமும் வேண்டும். அதுமட்டுமா !

(9) படிக்கும்பொழுது நேரே நின்று புத்தகத்தைச் சரியானபடி பிடிப்பதற்கும் பழக வேண்டும்.

(10) இவற்றிற்கெல்லாம் மேலாக வேண்டப்படுவது, பள்ளிக்குப் புறத்திலும் குழந்தை படித்துவருகின்ற வழக்கமேயாம். கதையை முற்ற முடியக் கூறுமல் குழந்தைகளின் ஆவலைக் கிளப்பிவிட்டு நல்ல இடத்தில் ஆசிரியர் நிறுத்திவிட்டால், மிகுதி யிருக்கின்ற பாகத்தை வீட்டில் போய்ப் படிக்க அக் குழவிகள் துடிக்கும். இவ்வாறு செய்துகொண்டே வந்தால் பள்ளிக்குப் புறத்தே படிக்கின்ற வழக்கம் படிந்துவிடும்,

இந்தப் பத்துப் பழக்கங்களும் படிந்துவிட்டால்தான் நூலினை ஓதுகின்ற வழக்கம் வந்ததெனக் கூறலாம்.

# X. ஊழிய அரசியல்

## 1. செயலரசு

***ஊழிய அரசு :*** "முடியரசு, குடியரசு." என்று பரக்கப் பேசுகிறார்கள் அரசியல் அறிஞர்கள். "தனியுடைமை, பொதுவுடைமை" என்று போரிடுகின்றார்கள் பொருளியல் அறிஞர்கள். ஆனால், இவை எல்லாம் மேலாரவாரங்களேயாம். உலகம் தோன்றிய நாளாக, அன்று உலகினை உண்மையில் ஆண்டவர்களும் அரசியல் ஊழியர்களே ; இன்று ஆள்கின்றவர்களும் அரசியல் ஊழியர்களே ; நாளை ஆளப்போவார்களும் அரசியல் ஊழியர்களே. முடியரசு மாறலாம் ; குடியரசு மாறலாம் ; ஊழிய அரசு (Bureaucracy) மாறுவதில்லை ; வளர்ந்துகொண்டே வருகிறது. அலுவலகம் இன்றி அரசியல் ஏது ?

***செயலாளர் அரசு :*** நாட்டின் பொருள் நிலைமை தனியுடைமைக் கொள்கையாய் விளங்கினாலும், தனியாள் என்ன செய்ய முடியும் ? முதலாளி பணம் கொடுப்பதோடு முடிகிறான். உடைமையை வைத்து நடத்துபவர் ஆர் ? அங்கும் எல்லாத் துறைகளிலும் ஊழியர்களே பின்னின்று எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றிவருகின்றார்கள். ஆயிரக்கணக்கில் பங்கெடுத்தவர்கள் பங்காளர் எனத் தம்மைப் பாராட்டிக்கொள்ளலாம் ; வரும்படியை வாரிக்கொள்ளலாம் ; ஆண்டுக்கு ஒரு முறையோ, சில முறையோ கூட்டத்தில்

தலை காட்டலாம்; முழு உரிமையாளராய் இருந்தால் நாள்தோறும் வரலாம். இவற்றில் எல்லாம் என்ன நடைபெறப்போகிறது? எந்திரம் உருளுமா? தொழிற்சாலை சிறக்குமா? வாணிகம் பெருகுமா? பெயரளவில் இவர்களது உடைமையே எல்லாம். ஆனால், உண்மையில் ஆள்பவர்கள் ஊழியத் தலைவர்களே. பணத்திற்குப் பெருமை இல்லை என்பதன்று இங்குக் கூறுவது. பணத்தினைக் கொண்டு ஊழியத் தலைவர்களை இன்று வாங்கலாம். ஆனால், ஊழியத் தலைவர்கள் திறம்பெற வெற்றி பெற்றதும் பணம் அவர்கள் சொல்படி ஆடத் தொடங்கும். பொது உடைமை வந்தாலும், இந்த ஊழியத் தலைவர்கள்தாமே உண்மையில் ஆள வருகின்றார்கள்? ஆதலின், ஆழ நோக்கினால் உண்மையில் விளங்குவது செயலாளர் ஆட்சியும் செயலாளர் அரசுமே ஆம் (Managerial State).

**மும்மூர்த்திகளுள் நடு மூர்த்தி:** நாடென்றால் சட்டங்களை இயற்றும் பாராளும் மன்றம் (Legislature) ஒருபுறம் உண்டு. அந்தச் சட்டப்படி வழக்குக்களில் தீர்ப்புக் கூறும் அறமன்றங்கள் (Judiciary) ஒரு புறம். அனைத்தினையும் நடத்திவைக்கும் நிறைவேற்று நிலையம் (Executive) மற்றொரு புறம். இந்த நிறைவேற்றுத் துறையினைப் பொதுவாக மக்கள் 'துரைத்தனம்' என்றும், 'அரசாங்கம்' என்றும் பேசிவருகின்றார்கள். இதுதான் ஊழிய அரசியல். பாராளும் மன்றங்கள் சட்டங்கள் இயற்றலாம். சட்டம் தவறுவோர்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாவா? எடுப்பவர் யார்? அறமன்றம் சட்டங்களின்படி தீர்ப்புக்

கூறலாம்? ஆனால், அந்தத் தீர்ப்புக்களை நிறைவேற்றி வைப்போர் யார்? அறமன்றம் இடும் தண்டனையை நிறை வேற்றுவோர் யார்? நிறைவேற்றுந் துறையினரே அல்லரோ? இந்த ஊழிய அரசியல் இல்லையானால், ஊமைமூடவன் கண்ட கனவாக அன்றோ அரசாங்கம் எல்லாம் முடியும்? அம்மட்டுமா? பாராளுமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவோர் யார்? அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வோர் யார்? அறமன்றம் தொண்டாற்றுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருவோர் யார்? நிறைவேற்றுந் துறையினரே (Executive) ஆவர். இவற்றிற்கு அடங்கியே இஃது இவற்றினைக் காக்கும் வியப்பே வியப்பு!

**கிளைச்சட்ட அரசியல்:** பாராளும் மன்றம் சட்டத்தின் வழி பொதுக்கொள்கைகளையே வற்புறுத்த முடியும். அக் கொள்கைகளை நிறைவேற்றி வைக்கும்போது பல வகையான கட்டுத் திட்டங்களை ஏற்படுத்தவேண்டி வரும். ஏதோ ஓர் எல்லையைக் குறித்துக் குறிப்புக்களை மட்டுமே சட்டம் தரக்கூடும். அதற்குள் ஒவ்வொன்றனையும் முற்ற முடிய விளக்கி வைத்தல் முடியாது. எத்தனையோ வகையில் எத்தனையோ வடிவில் வரும் உலகத்தினை முற்ற முடிய முன்னரே கூறிவிடுவது கடவுளால் அன்றி மற்றையோரால் ஆகாது. கடவுளின் எண்ணமும் நிறைவேறுதபடி மனிதன் ஏமாற்றிவிடுகிறான் என ஆண்டவன் அடியார்கள் பாடுவார்களானால், மக்கள் சட்டம்மக்கள் முன்னே என்ன ஆகும்? மாறி மாறி வளரும் உலக நிலையை மாறுது நிற்கச் செய்தல் நல்லதும் அன்று: நம்மால்

முடிவதும் அன்று. காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு நடைமுறைகளை ஏற்படுத்தும் குட்டிச் சட்டங்களை அப்போதப்போது அமைத்துக்கொள்ளும் உரிமையை, இதற்கென்றே இன்றைய சட்டங்கள், அரசியல் நடத்துவோரிடம் ஒப்படைக்கின்றது. பாராளும் மன்றம், சட்டமியற்றும் நேர்முக உரிமை பெற்றது: நிறைவேற்றுந் துறையினரோ, அம் மன்றத்தினிடமிருந்து இந்த உரிமையைச் சட்டங்களின்படி கொடையாகப் பெறுகின்றனராதலின், இவர்கள் அதிகாரம் கொடைவழி அதிகாரம் (Delegated Powers) ஆகும். ஆனால், சட்டங்கள் இன்று ஒருபங்கென்றால், இத்தகைய குட்டிச் சட்டங்கள் நூறாயிரம் பங்காக விளங்கக் காண்கிறோம். சட்டங்கள் மக்கள் உரிமை பறிபோகாத சில வரையறைகளையும், பொது நோக்கினையும், வகையினையும் வரையறுப்பதோடு நின்றுவிட, குட்டிச் சட்டங்களே விவரங்களையும், குறிப்புக்களையும், புள்ளிகளையும் நடைமுறைக்கு ஏற்றவாறு ஒவ்வொன்றாக விளக்குகின்றன. கூட்டுறவுக் கழகச் சட்டம் முதலியனவற்றை நோக்கினால் இது விளங்கும். வரிச் சட்டங்களும் இவ்வாறே ஆம். அனுபவம் வளர வளரக் குட்டிச் சட்டங்கள் வளர்ந்து திருந்திக்கொண்டே வரும். இன்றைய அரசியல், பல்கிப் பெருகி இருப்பதால் அவ்வத் துறையில் தலைசிறந்தார் உதவிகொண்டே பல பல குட்டிச் சட்டங்களை நிறைவேற்ற வேண்டும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் சொற்றொடர் சொற்றொடராக ஆராயப் பாராளு மன்றத்தினருக்குப் பொழுதும் இராது; ஆற்றலும் இராது.

எனவே, பொதுக் கொள்கையை வரையறுப்ப-தோடு மன்றம் நின்றுவிடுகிறது. இன்றைய நிலை-யில், நம் அரசியலைச் 'சட்ட அரசியல்' (Rule of Law) என்று சொல்லுவதனைவிடக் 'கிளைச் சட்ட அரசியல்' (Rule of regulations) என்று வழங்கு-வதே பொருத்தமாகும். இந்தக் கிளைச் சட்டங்-களையும், துணைச் சட்டங்களையும் அமைச்சரே இயற்றுவர் எனச் சட்டம் கூறினாலும், உண்மை-யில் இவற்றினை இயற்றுவோர், தலைமை ஊழியர்-களும் ஊழியப் படைகளுமே ஆவர். "செருப்பணி-வோர்க்கு அன்றோ செருப்பு எங்கே கடிக்கின்றது என்பது தெரியும்?" என்பது ஓர் ஆங்கிலப் பழ-மொழி. ஊழியர்களுக்கு அன்றோ அந்த நெளிவு-சுளுவுகள் தெரியும்.

**மூவுளவிளக்கு:** ஆகையால் சட்டத்தினை ஆக்கித்தரும் அதிகாரமும் அவர்கள் கையில் சிக்கி-யுள்ளது. அது மட்டும் அல்லாமல் அறமன்றத்-தில் வீணே வழக்குத் தொடுத்துக் காலத்தினையும் பொருளையும் பாழாக்கி, மயிரைப் பிளப்பது-போலச் சொல்லைப் பிளந்து உண்மை நிலையை நழுவவிடுவதனை இன்று பலர் விரும்புவதில்லை. ஆதலின், இந்தப் புதிய சட்டங்களில் எழுகின்ற புதிய சிக்கல்களைத் தீர்த்து அறம் வழங்கும் உரி-மையை இந்த ஊழியத் தலைவர்களே பெறுகின்-றார்கள், இவற்றிலும் அடிப்படையான அறத்தினை-யும் உரிமையினையும் காக்க அறமன்றங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், மணிதோறும் எழும் சிக்கல்களை அறமன்றத்திற்குப் போய்த் தீர்த்துக்-கொள்ள வேண்டுவதில்லை. ஆதலின், அறமன்றத்-

தின் உரிமைகளையும் ஊழிய அரசுபெற்று விளங்குகிறது. அம்மட்டுமா? சட்டத்தினை ஆர அமர எண்ணிப் பழைய அனுபவத்திற்கேற்பச் சொற்கோவையாக்கித் தருவோர்களும் ஊழியர்களே. ஆதலின், அவர்கள் தந்த உருவில் அன்றோ பாராளும் மன்றமும் அறமன்றமும் அவற்றை ஆராய்ந்து முடிவு செய்கின்றன? அவர்கள் இயற்றித் தரும் குட்டிச் சட்டங்கள் இந்த ஊழியர்கள் செயல்களையும் வரையறுத்து முறை செய்து வழி காட்டுகின்றன. ஆதலின், ஊழிய அரசியல், சட்டமியற்றல், தீர்ப்பளித்தல், நிறைவேற்றுதல் என முத்திற அரசியலின் ஒன்றுபட்ட விளக்கமாய் இன்று ஒளிர்கிறது.

**2. சிக்கல் நிலையும் மக்கள் தொண்டும் பல கிளை விளக்கு:** இவ்வளவு சிக்கலான ஊழிய அரசின் முறைகளை அறிந்துகொள்வதே ஒரு பெரிய அரசியற்கலையாய் இன்று முற்றி வளர்ந்துள்ளது. இதற்கென ஒவ்வொரு துறையிலும் எத்தனை எத்தனை தேர்வுகள்! போர் ஊழியம் (Military Service) என்றும், அமைதிஊழியம் (Civil Service) என்றம் இவை வெவ்வேறு பிரியும். இவற்றிலும் எத்தனை எத்தனை பிரிவுகள்! கடற்படைத்துறை, (Navy), வானப்படைத்துறை (Air force), நிலப்படைத்துறை (Army) என்று போர்த்துறையும் பல பல பிரிவுகளாகும். அலுவலகத்திருந்தே கருவிகளைத் திரட்டி உணவு உடை முதலிய வசதிகளைத் தாராமற்போனால், போரில், படைகள் வெற்றிபெற முடியுமா? இங்கும் அணுக்குண்டினைவிடப் பேனைக்

கிறுக்கே வன்மைபெற்று விளங்குகிறது. அமைதித் துறையிலும் எத்தனை துறைகள்! அம்மம்ம! உள் நாட்டுப் பாதுகாவல்துறை, உணவுத்துறை, தொழிற்றுறை, கல்வித்துறை, அறமன்றத்துறை, பாராளுமன்றத்துறை, சிறைக்கூடத்துறை, பாசனத்துறை, போக்குவரத்துத்துறை, மருத்துவத் துறை, உடல் நலத்துறை, மின்சாரத்துறை, தொழிலாளர் துறை, அஞ்சல் துறை என்று எத்தனை எத்தனை துறைகள்! இவற்றிற்குள்ளும் எத்தனை எத்தனை பிரிவுகள்! வேலை நடத்தல் மட்டும் போதுமா? இவை எல்லாம் செலவுத் துறைகளே. வரவுத்துறை ஒன்று வேண்டாவா? இத்தனைக்கும் பணம் வேண்டும் அன்றோ? இந்தப் பணம் தேடத் திட்டமிட்டுப் பல வகை வரிகளையும் வாங்கித் திரட்டும் பொருள்துறையும் நாடு முழுவதும் தன் வலையை விரித்துக் கிடக்கின்றது அன்றோ? நாட்டு மக்களின் நன்மைகளையே நோக்கமாகக் கொண்ட "பொது நல அரசியல்" வழங்கும் நாட்டில் (Welfare State) இந்தத் துறைகள் மக்கள் வாழ்வு போலப் பல்கிப் பெருகி விரிந்து கிடக்கும் அல்லவா? எனவே, ஒரு பெரிய கிளை விளக்கு எனலாம்.

**ஆலமரம்:** உலகம் இன்று பல துறையிலும் முன்னேறி நிற்கின்றது. இந்த நிலையில் அரசியல் எல்லாத் துறைகளையும் கண்காணித்து வருவது இன்றியமையாது வேண்டப்படும். ஒவ்வொரு துறையிலும் கைதேர்ந்த செயல்முறை ஊழியத் தலைவர்களே அவ்வத் துறையினை நலம் பெற நடத்தமுடியும். அத்தகையாரே நடத்தி

வரவும் காண்கின்றோம். அரசியலிலும் இத்துறை-களைக் கண்காணிக்க அத்தகைய செயல்முறைத் தலைவர்களே வேண்டும். அவர்களும் நாளுக்கு நாள் பெரிதும் அரசியலில் இடம் பெற்று வரவும் காண்கிறோம். உலகம் பலவகை; அதில் ஒவ்-வொருவருக்கு ஒவ்வொன்று எளிது. இன்று உலகம் வளர்ந்துள்ள நிலையில் எல்லாத் துறைகளி-லும் ஒருவர் துறை போகக் கை தேர்ந்து இருப்ப-தென்பது கனவிலும் காண முடியாததொன்று. நாட்டுத் தலைவர்கள்மட்டும் இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட கடவுளர்களா? இல்லை—இல்லை. அவர்களும் அவ்வத் துறையில் சிறப்பறிவும் தேர்ச்-சியும் பெற்ற ஊழியத் தலைவர்களைக்கொண்டே அரசாள முடியும். அவ்வாறுதான் அரசியல் இன்று நடைபெறுகிறது. இது சிறப்பிய லறிஞர்களது (Specialist) காலம் அன்றோ? ஆதலின், முன் நாளில் இருந்ததனைவிட **ஊழிய ஆட்சித் தலை-மைச் செயலாளர் அரசு** இன்று நிலைபெற்று வேரூன்றி விழுதுகள் விட்டு உலகெல்லாம் பரந்து நிற்கிற ஊழி கண்ட ஆலமரமாகக் காட்சி அளிக்-கிறது.

**சிவப்பு நாடா:** இவ்வாறு சிறப்புத்துறை-கள் பல பலவாய் விரிவதனால், இவை எல்லாம் கழற்சிக்காய் போலச் சிதறி ஓடாதபடி இவற்றினை ஒன்று திரட்டும் ஆற்றல் படைத்த பொதுத் துறை ஊழியர்களும் வேண்டும். தலைமைச் செயலாளர் (Chief Secretary) என்ற பெயர் வழங்குகிறது அன்றோ? பல பல துறைகளை ஒன்றுபடுத்தும் துறை ஒன்றிருந்தாலன்றி, அரசியல் ஒரு முகப்படு-

வது ஏது? அம்மட்டுமா? மக்களோடு தொடர்பு கொள்ளும் துறையும் வேண்டும். இதுவே ஒற்றுமைத் துறையின் சிறப்பியல்பாகும்; அரசியல் வளர்ச்சியினை அளந்து காட்டும் அளவுகோலும் ஆகும். மக்கள் மனநிலையை அறிந்து அரசியலை நிறைவேற்றி வைக்கும் மன இயல் முறைகளை ஆராய்வதில் மேனாடுகள் ஈடுபட்டுள்ளன. பொது மக்கள் மனத்தினைக் கட்சிச் சார்பற்ற முறையில் அறிந்து அரசியலை நடத்துகின்ற இந்தத் துறையின் பெருமையைச் சொல்லவேண்டுமா? மக்கள் கல் அல்லரே, வேண்டியபடி உளி கொண்டு செதுக்கி உருவாக்குவதற்கு! மக்கள் உள்ளத்தினை அறிவது இந்த நாளில் அரசியற்கலையில் தனிப்பெருங்கலையாய் வளர்கிறது. பொது நிலைத் துறை இவ்வாறு ஊழிய அரசியலின் ஆணி வேராய் அமைகின்றது. இதனாலேயே இது வரை துரைத்தனத்தைப் பற்றி மக்கள் கொண்டுள்ள தீய எண்ணங்கள் ஒழிதல் வேண்டும். உயிர் போகின்ற நிலையில் ஒருவன் கிடந்தாலும் முறையாகப் பல பல துறைகளிலும் எழுதிக் கேட்ட பின்னரே துரைத்தனம் இயங்கும்; ஆதலின், மற்றொரு பிறவியிலேதான் உதவி கிட்டும் என்று பொது மக்கள் எள்ளி நகையாடுவது எந்த நாட்டிலும் இயல்பாகிவிட்டது. 'சிவப்பு நாடா' (Red tape) "செங்கச்சு" என்ற பெயர் இதனால் பெருவழக்காகத் துரைத்தனத்திற்கு வழங்கிவருகிறது. இதனால் துரைத்தனம் கல்லே அன்றி, இளகிய நெஞ்சற்றது என்றும், குருடு செவிடு என்றும் பழிக்கின்ற நிலைமையும் ஏற்படுவது உண்டு. அதி-

காரச் செருக்கில் மக்களைப் பொருட்படுத்துவதில்லை என்று கூக்குரல் இடுவாரும் உண்டு.

**மக்கள் தொண்டு:** இந்த நிலை இன்று மாறி வருகின்றது. திருவள்ளுவர் பொருட்பாலில் அரசனுக்கும் அமைச்சனுக்கும் கூறிய மனிதப் பண்புகளின் இன்றியமையாமையை இந்தப் புதிய துரைத்தனத்துறை அறிந்துவருகிறது. விஞ்ஞான முறையில் குற்றங்குறைகளை ஆராய்ந்து தீர்த்து விரைவில் மக்கள் நலன் அடையச் செய்வதனையே நோக்கமாகக்கொண்டு இன்று துரைத்தனம் பொச்சாப்பு இன்றி உழைக்கின்றது. ஆண்டுதோறும் இதற்கெனப் புள்ளிகளைத் திரட்டி அறிஞர் ஆராய்கின்றனர். மக்களிடம் கண்ணோட்டமாக நடந்து வர, ஊழியர், கண்ணோட்ட வாரம் கொண்டாடுகின்றனர். அதிகாரச் செருக்கு வெளிபட்டுத் தோன்றாமல் உள்ளுக்கோடி மறைகிறது. துரைத்தனத்தின் கண்ணும் நெஞ்சுமே மாறி, மனிதப் பண்பாட்டிற்கு ஏற்பக் கனிந்தும் வருகிறது என்று சுருங்கச் சொல்லிவிடலாம். உலகினில் பொதுவாகக் கண்டு வரும் இந்த மாறுதல், நமது இந்தியாவிலும் விரைந்து நன்மையைப் பயந்தே தீரும். இதன் பயனாகத் துரைத்தன நிலையை விளக்கி மக்களிடையே அப்போதப்போது, ஊழியத் தலைவர்கள், வெளியீடுகள் வழியாகவும் வானொலி வழியாகவும் பேசிவருகின்றார்கள். திருவள்ளுவர் இந்தத் துறையினருக்குச் சொல் வன்மை வேண்டும் என்பது, இப்போது புலனாகிறது

**தொண்டர்தம் பெருமை:** ஒரு கலியாணத்திற்குத் திட்டம் இட்டு ஏற்பாடுகள் செய்து

முடித்துவைப்பது என்றால், எவ்வளவு திண்டாடுகிறோம்! இந்தியாவில் உள்ள 40 கோடி மக்களது அன்றாட வாழ்வினை எல்லாம் கண்காணித்து வரும் இந்திய நாட்டின் அரசியல் நிறைவேற்றுத்துறை (Executive)ப் பொது ஊழியர்களின் (Public servants) செயல் முறை விளக்கத்தினை என் என்று புகழ்வது! ஆங்கிலேயர் வந்தனர், போயினர்; நாடு நலம் பெற நடக்கிறது; எத்தனையோ பூகம்பங்களுக்கும் ஈடு கொடுக்கிறது. அரசியலின் எஃகுச்சட்டம் என ஊழியத்துறையைப் போற்றுவது பொருத்தமேயாம். அரசியலின் என்புக் கூடாக ஊழிய அரசியல் தொடர்ந்துவருகிறது. இன்று ஆள் மெலியலாம்; நாளை பருக்கலாம். இன்று ஒரு சட்டை இடலாம்; நாளை ஒரு சட்டையைக் களையலாம். ஆனால், என்புக் கூடு மாறாது நிலைத்து நிற்கவேண்டும் அன்றோ? ஊழியத் துறையினரே, பொது மக்கள் உண்மைத் தொண்டராவர். "தொண்டர்தம் பெருமை சொல்லொணாதது." என்று பாடியதெல்லாம் உண்மையில் இந்தப் பொது ஊழியத்துறை (Public service) யைச் சேர்ந்த தொண்டருக்கே மிகமிகப் பொருத்தமாகும்.

### 3. அக அதிகாரமும் புற அதிகாரமும்

**சூத்திரதாரிகள்:** இவ்வளவும் செய்கின்ற ஊழிய அரசியலை அன்றோ உண்மை அரசியல் எனப் பொதுவாகத் தெருவில் போவான் கருதுகின்றான்? இதில் உண்மை இல்லாமல் இல்லை. "புறஞ்சுவர்க் கோலம் செய்வது" என்று ஒரு புலவர் பாடுகின்றார். நம் நாட்டுக் கொடி கோட்டையின்மேல் காற்றில் இன்பச் செருக்கோடும்

பறக்கிறது. கண்டு மகிழ்கிறோம், அது புறக்காட்சி. கொடியானது களித்துப் பறப்பது போல மக்கள் உள்ளமும் உடல் வாட்டமின்றி உரிமையோடும் ஊக்கத்தோடும் இன்பத்தில் திளைத்து அறிவோடும், திருவோடும், அன்போடும், ஆற்றலோடும் பலரும் புகழப் பொங்கினால் அன்றோ கொடி பறப்பது கண்டு மகிழ்வதில் பொருள் உண்டு? அந்த உண்மை அகக்காட்சி இல்லையானால், இந்த வெறும் புறக்காட்சியில் என்ன பயன்? உள்ளே தூசும் தும்பும் புழுவும் சேறும் நெளிந்துவரப் புறத்தே மட்டும் அழகற் சுவரினைப் பூசி மெழுகி ஓவியந்தீற்றி அழகு செய்தலால் என்ன பயன்? வேண்டுவது புறஞ்சுவர்க்கோலம் அன்று; அகநிலை இன்பமே ஆம். அது போல அமைச்சர்கள், முதலமைச்சர்கள், நாட்டுத் தலைவர் என்று பேசுவன எல்லாம் நாட்டின் கொடி போலப் புறநிலை அதிகாரத்தின் அழகே ஆம். அந்த அதிகாரத்தின் உண்மை நிலை, ஊழிய அரசின் அகநிலை அதிகாரமாய் விளங்குகிறது. புறநிலை அதிகாரத்தினை நாம் வானளாவப் புகழ்கின்றோம். இவர்களைக் கோபுரந்தாங்கிப் பொம்மைகள் என்று சொல்லிவிட முடியாது. செங்கோல் என்ற அடையாளத்தின் அழகோடு அகநிலை அதிகாரப் பெருமக்களை முழுதும் நாட்டிற்கு எனப் பயன் படுத்தும் உயர்ந்த நோக்கும், அகன்ற அறிவும், ஆழ்ந்த அனுபவமும், நீண்ட பயிற்சியும் அங்கு ஒளிர்தலைக் காண்கிறோம். ஆனால், அரசியல் அமைப்பாம் தோற்பாவைக் கூத்தினைக் கயிறு பிடித்து இழுத்து ஆட்டுவிக்கும் மறைமுகச் சூத்திரதாரிகள் அகநிலை

அதிகாரிகளாம் பொது ஊழியர்களே (Public servants).

**புறநிலை அதிகாரமும் அகநிலை அதி-காரமும் :** ஒரு பெண்ணின் சொற்படி அரசன் அரசு செலுத்துகிறான். புகழ் எல்லாம் அரச-னுடையது. புண்ணியம் எல்லாம் பெண்ணி-னுடையது. இவ்வாறு புறநிலை அதிகாரம் அகநிலை அதிகாரம் என்று பிரிவதில் ஒரு நன்மை உண்டு. வெளியாரவாரம் தலைக்கிறுக்கினை வாங்கித் தரும். உண்மைத் தொண்டியற்றுவாருக்கு இந்தத் தலைக்-கிறுக்கு ஏறுதலாகாது. வெளியாரவாரத்தில் காலம் போனால் வேலை செய்ய இடம் ஏது? வெளியார-வாரம் இல்லையானால், பொது மக்கள் மனம் மகிழ்-வது இல்லை. ஆதலின், புறநிலை அதிகாரம் அதில் திளைத்து வரவேண்டும். அகநிலை அதிகாரம் அந்த ஆரவாரத்தில் தலையிடாமல் வேலையைச் செய்து-வர வேண்டும். கட்சி வெற்றியோடு மாறி மாறி வரும் புறநிலை அதிகாரம், மக்கள் மனமினிக்கப் பேசிப் போகலாம். செயலில் ஈடுபட்டுள்ள அகநிலை அதிகாரம், எல்லோருக்கும் இனிக்க இவ்வாறு வாய்ப்பந்தர் போட்டுச் சர்க்கரை வழங்க அனை-வரையும் செயலளவில் மகிழ்விக்க முயல்வது, கிழவனும் மகனும் பொதுமக்கள் பேச்சினை எல்-லாம் கேட்டுக் கழுதையினை ஆற்றில் இறக்கவிட்ட கதையாகவே முடியும். அரசியல் நடத்துபவர்க்கும் பொது மக்களுக்கும் இடையே ஒரு திரை இருப்பது நல்லது. மக்கள் நேரே இவர்கள் மேல் சீறிப்பாய்-வதற்கு இடம் இல்லை. புகழ்ச்சியையோ இகழ்ச்சி-யையோ கேட்டு மகிழப் புறநிலை அதிகாரிகளாம்

அமைச்சர்கள் இருக்கின்றார்கள். அகநிலை அதிகாரிகள் அவர்கள் வழியாகப் பொதுமக்கள் கருத்தினை அறிந்து, உணர்ச்சியின் வயப்படாமல் அறிவின் வயப்பட்டுத் திறம்படச் செயலாற்றிவரமுடிகிறது. புறநிலை அதிகாரிகள் சில ஆண்டுக்கு ஒரு முறை மாறி மாறி வந்தாலும், அகநிலை அதிகாரிகள் மாறாமல் ஒரே நிலையில் தொடர்ந்து தொண்டாற்றி நாட்டிற்கு உதவுவது இயலுவதாகிறது.

### 4. மனச்சாட்சியும் ஊழியமும்

**தேர்தலும் ஊழியரும்:** இதற்கு ஏற்ற ஒழுக்க முறையும் இங்கு உருவாகி உள்ளது. அகநிலை அதிகாரிகளுக்கு மனச்சாட்சி ஒன்றிருக்கலாம்; தனிக்கொள்கை ஒன்றிருக்கலாம். அதன்படி அவர்கள் பொதுத் தேர்தல் வரும்போதெல்லாம் வேண்டியவரைத் தேர்ந்தெடுக்கத் தத்தம் உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த உரிமையை ஊழியருக்கு மறுப்பது அடாததாகும். குடிமக்களது பொது உரிமையாம் தேர்தலுரிமையைக் குடிமக்களில் ஒருவராகும் இவருக்கு மறுப்பான் ஏன்? நாட்டின் முடி மணியாக விளங்கும் இத்தகைய மக்கள் தேர்தலில் ஈடுபடவில்லை என்றால், அத்தகைய தேர்தல் உண்மையான பொதுமக்களின் தேர்தலாகுமா? ஆனால், இந்தத் தேர்தல் உரிமையை அவரவர் கையாளும் முறை அவரவர்களுக்கும் அவரவர்கள் மனத்திற்குமே தெரிந்ததொன்றாகும்; வாய்ப்பறை அறைவது ஒன்றன்று. ஆனால், வெளியே தேர்தலில் நிற்கவோ, தேர்தலுக்காகப் பிறருக்கு உழைக்கவோ, தேர்தல் சொற்பொழிவுகள் செய்யவோ

துரைத்தன ஊழியர் வருதல் கூடாது. ஏன்? தேர்தலைப் பொது நிலையில் நடத்துகின்றவர்கள் துரைத்தன ஊழியர்களாதலின், தேர்தலில் நேர்முகமாகக் கலந்துகொண்டால் இவர்கள் எவ்வாறு நடுவுநிலைமை பூண முடியும்? இவர்கள் நடுவுநிலைமையைப் பிறர் எப்படி நம்பமுடியும்? அகநிலை அதிகாரிகள் புறநிலை அதிகாரத்தினையும் கைப்பற்றுவது அனைத்தாட்சியாம் சர்வாதிகாரத்திலேயே முடியும்.

**தனிநலமும் பொது நலமும்:** ஆதலின், அலுவலகம் புகுந்ததும் துரைத்தன ஊழியர்கள் தத்தம் தனிக்கொள்கைகளையும், சார்புகளையும், பற்றுக்களையும், விருப்பு வெறுப்புக்களையும் அடியோடு மறந்து, துரைத்தனப் பொதுநலத்தோடு ஒன்றுகிவிட வேண்டும். '**தெரிந்து தெளிதல்**' என்ற அதிகாரத்தில் இந்த நிலைமையைத் திருவள்ளுவர் நன்கு விளக்குகின்றார். தன்னலத்திற்கு அங்கு இடம் இல்லை; பொதுநலமே அங்கு உள்ளது. தனி மகன் கருதும் நலம் அன்று அது. பொதுமக்கள் தேர்ந்தெடுத்த புறநிலை அதிகாரிகளாம் அமைச்சர்களின் கொள்கைப்படி அரசியலை நடத்த எல்லா வகையாலும் உதவுவதே ஊழியர்களது தலைசிறந்த ஒழுக்கமாகும். '**மன்னரைச் சேர்ந்தொழுகல், குறிப்பு அறிதல்**' என்ற அதிகாரங்களில் திருவள்ளுவர் இந்த ஓர் ஒழுகலாற்றை நன்கு விளக்குகின்றார். தம் கருத்தினை ஒளிவு மறைவு இன்றி எடுத்துரைக்கும் பொறுப்பு ஊழியருக்கு உண்டு. ஆனால், கொள்கையை இறுதியாக முடிவு செய்யும் பொறுப்புப் பொது மக்கள்

தேர்ந்து எடுத்த அமைச்சர்களதே ஆம். அந்த அமைச்சர்கள் கொள்கையினை நிறைவேற்றுவது ஊழியர்களது பொறுப்பாகும். இங்கே மனச்சாட்சி இந்த அளவிலேதான் விளங்குகிறது. இதனை மீறித் தத்தம் தனிக் கருத்தினை ஊழியர் நிலை-நாட்ட முற்படுவது உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வதாக முடியும்.

**வழக்கறிஞர் மனச்சாட்சி :** வழக்கறிஞர்-களது ஒழுகலாறு இதனை நன்கு விளக்கும். அறம் வழங்க அறவாளர் (Judges) இருக்கின்றனர். மெய் பொய் கண்டு தீர்ப்பளிப்பது அவர் பொறுப்பு ; வழக்கறிஞர் பொறுப்பு அன்று. இரு திறத்தினர் வழக்கினையும் எவ்வளவு விளக்கமாகக் காண முடியுமோ, அவ்வளவும் கண்டு உண்மை கடைப்பிடிப்பது அறவாளர் கடமை. தத்தம் திறத்தினர் நிலையினை எவ்வ-ளவு சிறந்த நிலையில் தத்தம் கட்சியினர் சார்-பாக எடுத்துக் கூறமுடியுமோ, அவ்வளவும் கூறு-வதே வழிக்கறிஞர் கடனாகும். கட்சியாளர் கூற்-றினை விளக்குவது இவர்கள் கடனே அன்றி, வழக்-கினை விளக்குவது இவர்கள் கடமை அன்று. இஃது இருவர் கூற்றினையும் முற்ற முடிய அறவாளர் அறி-வதற்குச் செய்யும் பெருந்துணையும் சிறந்த தொண்டு மாகும். மெய் பொய் காணுதல் வழக்கறிஞர் கடன் அன்று. ஆனல், இவர்கள், தாமே பொய்யைத் தம் கற்பனையால் கண்டு, பொய்யைச் சொல்லுமாறு தம் கட்சியாளரைத் தூண்டுவது பெருந் தவருகும். தம் திறத்தினர் கூறுவதனை அறவாளர் மனங்-கொள்ளத் தெள்ளத்தெளிய வற்புறுத்திக் கூறுவது

தவறுகாது. இங்கு ஏமாற்றுதல் என்பதற்கு இடம் இல்லே. அனுபவம் நிறைந்த அறவாளர், ஏமாற்றம் அடையக் குழந்தைகள் அல்லர். வழக்கறிஞர், தம் திறத்தினை நம்புகின்றனரா இல்லையா என்ப தன்று இந்தக் கேள்வி; இவரது கடமை அன்று அஃது; அறவாளர் கடமை. தம் கட்சியாளருக்கும் துணை-யானவற்றை எல்லாம் விளக்குதலே இவர் கடமை. இந்தக் கடமைக்கு ஏற்பத் தம் நெஞ்சறிவது பொய்-யாமல் நடப்பதனை மேற்பார்க்கவே மனச்சாட்சி வேண்டும். அவ்வாறன்றித் தம் பொறுப்பல்லாத அறவாளர் கடமையில் தலையிட்டுத் தொண்டாற்-றுவது, வண்ணார் வீட்டில் நாய் செய்ய வேண்டிய வேலையைக் கழுதை செய்ததுபோலாம். பிறர் கருமத்தில் தலையிடாது, தத்தம் கருமத்தைச் செய்-வதே தலைசிறந்த கரும யோகம் என்று பகவான் **கிருஷ்ணன்** கூறவில்லையா? தத்தம் நிலைக்கு ஏற்பக் கடமையை வெற்றிபெறச் செய்வதே **வாகை** என்று தொல்காப்பியரும் விளக்குகின்-றார். அறவாளருக்கு உள்ள வாய்ப்பு இவருக்கு இல்லாமையால், அரசியல் அமைப்பின் போக்கிற்கு மாறுக அவரது செயலில் வழக்கறிஞர் தலைப்படு-வது அறியாமையே ஆம்; தன்முனைப்பே ஆம்; அறப் பிறழ்ச்சியும் ஆம். அவரவர்கள் அவரவர்-கள் தொழிலையும் கடமையையும் செய்து வர, நாடு நல்ல வகையில் நடைபெறும். ஒருவர் கடமையை ஒருவர் செய்தால், குழப்பமே பெரிதாகும். கொலை-யைக் கண்ணாரக் கண்ட வழக்கறிஞர், சாட்சியாக வாராமல், பணம் ஒன்றே கருதிக் கொலைஞனது வழக்கறிஞராகப் போவது, குடிகள் செய்ய வேண்-

டும் கடமையைச் செய்யாது போகும் பெரும் பாவமாகும்; தம் மனச் சாட்சியைக் காசுக்கு விற்ற கதையாகும். ஆனால், இந்த நிலை வேறு: இந்த நிலை இல்லாத இடத்தில், வழக்கறிஞர், கொலைஞனது வழக்கினை விளக்க வருதல் வேறு.

**ஊழியர் மனச்சாட்சி:** இவ்வாறே பொதுமக்கள் கருத்தினை அறிந்து,கொள்கையைத் தெளிவுசெய்வது, புறநிலை அதிகாரிகளாம் அமைச்சர்கள் கடமையும் உரிமையும் ஆகும். இங்கு அவர்களுக்குப் பொது ஊழியர்கள், வழக்கறிஞர் போன்று தம்மறிவும் திறமையும் கொண்டு உதவுவதற்கு அமைந்துள்ளனர். எந்தக் கட்சி அரசாள வந்தாலும் அதன் கொள்கையை நடைமுறையில் நிறைவேற்றி வைக்கும் வழியை மறைப்பின்றித் திறப்பாகச் சொல்லுதற்கு இவர்கள் கட்டுப்பட்டுள்ளார்கள். தம் நெஞ்சறிவது பொய்யாமல் உதவுவதே மனச்சாட்சியின் கடமை. பொதுநிலையன்றித் தனிநிலை இவர்களுக்கு இல்லையாதலின், மனச்சாட்சி வேறு வகையில் எழ இடம் இல்லை. பொறுப்பிற்கேற்பப் பொய்யாது நடப்பதன்றோ மனச்சாட்சியின் கடமை? ஆதலின், புறநிலை அதிகாரிகளோடு அகநிலை அதிகாரிகள் மாறுகொள்வது என்பது, அரசியலில் நேரிடாத தொன்றாகும்; அது மட்டுமா? பெரும்புரட்சியுமாகும். ஆனால், பொய் பேசுவது, அமைச்சர்கள் தனி நிலையில் கைக்கூலி பெறுவது முதலிய கேடுகளுக்கும் ஊழியர்கள் உளவாக இருக்கவேண்டும் என்பதில்லை; இத்தகைய கேடுகள் எழும்போது தனி மனிதனுடைய மனச்சாட்சிக்கு இடம் உண்டு. ஆனால், அங்கும் பொது-

நலனை மறவாத வகையில் தமது மனச்சாட்சிக்குப் பொய்யாது நடத்தல் வேண்டும்.

### 5. வாயிலும் வயிறும்

**கட்சியாளரா ?**—இன்று அரசியல், மக்கள் வாழ்க்கை முழுவதனையும் உட்கொண்டு பரந்துகிடக்கின்றது. இதற்கு உதவும் ஊழியரும் தலைசிறந்தவராக இல்லையானால், நாடு சீர்கேடு அடையும். இவர்களை வேலைக்கு அமர்த்துவதில் நிலையான கொள்கையை ஒரு நாடு கைக்கொள்ளவேண்டும். அரசியற்கட்சியினாட்சி மாறும்போதெல்லாம் இந்த ஊழியர்கள் மாறுவது என்ற ஏற்பாடு அமெரிக்காவில் இருந்தாலும், அத்தகைய நிலையின் சீர்கேட்டை நோக்கி அந்த முறையைப் பெரும்பாலும் அந்த நாடே கைவிட்டுவருகின்றது. புரட்சி வெற்றிபெற்ற நாட்டில், புரட்சிக் கட்சியன்றி வேறொரு கட்சிக்கு இடமின்றி ஆளும் ருஷ்யா முதலிய இடங்களில், அக் கட்சியினரை அன்றிப் பிறரை அரசியல் ஊழியராய் அமைப்பது இயலாது. பொது ஊழியத் துறை, நிலையான தொன்றாக வேண்டுமாதலின், அதனைக் கட்சி ஆட்சியில் பணயமாக வைத்து அரசியற் சொக்கட்டான் ஆடி, அரசினையே சூதாட்ட மாக்குதல் அழகு அன்று. நடுவு நிலைமையும் அரசியல் ஒருமைப்பாடும் அங்கு எவ்வாறு விளங்கும்? தகுதியினையும் திறமையினையுமே நோக்கிச் சிறந்தவர்களைக் கட்டிளமையிலேயே வேலையிலமர்த்திப் பழக்கி, வாணாள் எல்லாம் பின்பற்றும் ஒரு தொழில்முறை யாக்கிவிடுவதே சிறப்பாகும்.

**வேலைக்கமர்த்தும் குழு :** இதற்கு வேண்டும் முறைகளைப் பல நாடுகளும் அனுபவத்தின்

வாயிலாக வரையறுத்து வருகின்றன. வேண்டும்போது வேலையில்லாது, வந்தவர்களையோ, தமக்குத் தெரிந்தவர்களையோ வேலைக்கு அமர்த்துவது என்பது விஞ்ஞான முறை யன்று. எல்லோருக்கும் எல்லா வேலையும் வாரா. அவ்வத் துறையினர் தனித்தனியே ஆள் பொறுக்குதல் ஒரு வகையால் நல்லதாயினும், ஒவ்வொரு துறையினரும் இந்தக் கலையில் வல்லவராதல் முடியாது. வேலைக்கு ஆள் பொறுக்குதல் என்பது தனிப்பெருங் கலையாய் வளர்ந்து உள்ளது. ஆதலின், அதற்கெனத் தனித்துறையை ஏற்படுத்தி, எல்லோரும் நம்பிக்கை கொள்ளும் ஒரு சிறு குழுவினிடம் அப் பொறுப்பினை ஒப்படைப்பதே இன்று உலகில் பெரு வழக்காகப் பரவிவருகின்றது. இந்தக் கலை வளர்வதற்கும், இஃது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

**ஆளைத் தேர்ந்தெடுக்கும் முறை :** ஆட்களை நேரே பார்த்தால்மட்டும் எல்லாம் விளங்கிவிடுமா? அவர்களது முன்னைய வரலாறு வேண்டும்; அறிந்து பழகிய நன்மக்களது சான்று வேண்டும்; அறிவுத் திறமையும் வேண்டும். எழுத்துத் திறமையும் வேண்டு மன்றோ? ஆதலின், பண்டை நாள் முதல், எழுத்துத் தேர்வுகளே சிறந்த முறையாய் வழங்கிவந்துள்ளன. எழுதினால் மட்டும் போதுமா? எழுதக் கற்றால் மட்டும் போதுமா? அறிந்தால் மட்டும் போதுமா? எழுதக் கற்றால் மட்டும் எந்திரத்தினைச் செய்து முடித்து ஓட்ட முடியுமா? ஏணி ஏறத் தெரியாதவன் கோபுரம் கட்டுவது எங்கே? ஆள் ஆரவாரமும் வேண்டும்;

மக்களோடு பழகிப் பழகும் திறமையும் வேண்டும்; ஆதலின், எழுத்துத் தேர்வோடு மனத்தேர்வும் (Mental test), ஆளுமைத் தேர்வும் (Personality test) வேண்டும். எழுத்துத் தேர்விற்குப் பொது அறிஞர், சிறப்பறிஞர் என்ற இரு வகையாரது துணை வேண்டியிருப்பதோடு, மனத்தேர்வும் ஆளுமைத் தேர்வும் நடத்த மனஇய லறிஞரின் உதவியும் வேண்டும். கல்வி நிலையங்கள் முதலிலிருந்தே மாணவரின் உடல் நிலை, அறிவு நிலை, ஆளுமைத்திறம், கல்வி முதலியவற்றைப்பற்றிய குறிப்புக்களை எடுத்துவருதலின், இக் குறிப்புக்களும் பெருந்துணை செய்யும். இத்தனை உதவியும் பெற்றே **பொது ஊழியரை அமர்த்துங்குழு** (Public Service Commissson) செயலாற்ற முடியும். இத்தனை துணையும் இருந்தாலும், இக் குழுவினரின் அனுபவமே சாலச் சிறந்ததாய் முடிகிறது. ஆதலின், அவர்கள் செய்யும் முடிவே முடிவு.

**இன நோக்கம்:** இங்கு இனத்தினைக் கருதியோ கட்சியைக் கருதியோ ஆட்களை அமர்த்தாமல், வேலைக்கு ஏற்ற திறமை கருதியே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் ஒப்பமுடிந்த உண்மை. ஆனால், கட்சியைக் கருதாமலும் இருக்க முடியாது. வெளிப்படையாகப் புரட்சிக் கட்சியினைச் சேர்ந்தவர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க முடியும்? அவ்வாறே இனத்தினையும் கருதாது இருக்க முடியாது. ஒரு நாட்டின் உயிர்நாடியான மறை உண்மைகளை அறிய வேண்டும் ஊழியர்கள் மற்றொரு நாட்டினராக இருப்பது நல்லதாகுமா? திறமையே கருதி, வேற்றினத்-

தாரை எல்லாத் தொழிலிலும் நிலையாக அமர்த்த முடியாது. அந்த அந்த நாட்டின் இனத்தவரே வேலையில் அமருவது இதனாலேயே ஆம். அது மட்டுமே அன்றி, அந்த அந்த நாட்டிலும், பல பல இனத்தவர் கூடி வாழும்போது, ஓரினத்தவர் மட்டும் நிறைவேற்றும் துறையைக் கைப்பற்றினால், புரட்சியிலே அன்றோ முடியும்? எல்லா இனத்தவரும் அரசியலில் இருக்கின்றனர் என்ற நல்ல மனப்பான்மையும் நம்பிக்கையும் மக்களிடையே வளரவேண்டும் அன்றோ? எல்லா இனங்களும் ஒருசேர முன்னேறும் நாடே சிறந்த நாடு: அங்குத்தான் இனவெறியும் இனப்பூசலும் தலைகாட்டமாட்டா? பல பல காரணத்தால் மலைவாணர் போன்ற பிற்பட்ட இனத்தினர் இந்த நாட்டில் இருக்கின்றனர். இவர்களும் முன்னேறி வாராமற் போனால், நாடு, காலழுகிய, கையழுகிய, கண்ணழுகிய உடலம்போன்று தோன்றும் இவர்கள் இனத்தினரும் அரசியலில் இருக்கின்றனர் என்ற ஊக்கம் மேலும் மேலும் அந்த இனத்தினை உயர்த்துவதோடு, அரசியலைப்பற்றிக் கவலை கொள்ளாது வாழ்கிற இவர்களும், அரசியலைத் தங்களது என்று கொண்டு உறவு பாராட்ட இடமேற்படுகிறது. ஆனால், இதுகொண்டு பொது ஊழியத்துறையை இன வெறிக் காட்சிச் சாலையாக ஆக்கிவிடுதல் கூடாது. இங்குக் கூறிய பல குறிப்புக்களையும் நாட்டின் நலத்திற்கு வேண்டும் வேலைத் திறத்தின் சிறந்த பயன் கருதி ஆராய வேண்டுமே அன்றி, வேறு நோக்கத்தோடு கருதுவதால் தீங்கு அன்றி நலம் விளைய இடம் இல்லை.

**கடமை :** வேலையில் அமர்த்திவிடுதல் போதுமா? சட்டத்தின் வழியே சில கடமைகளையும் உரிமைகளையும் நாட்டின் உயிர்நிலையான இவர்களுக்கு வழங்கவேண்டும். தாங்கள் அறிந்ததனை வெளியிடாதபடி ஊமையர்களாக அன்றோ இவர்கள் இருத்தல் வேண்டும்? அரசியல், மறைச் செய்திகளை வெளியிட்டால் நாடழியு மன்றோ? பல தொழில்களில் வரி விதிக்கப்போவதனை முன்னரே அறியக்கூடிய இவர்கள், வாணிகத்துறையில் ஈடுபட்டால், கொள்ளைக் கூட்டமாக அன்றோ மாறுவார்கள்? கட்சிப் பூசலிலும் சேர்தலாகாது அன்றோ? ஆதலின், இவர்கள் அல்லும் பகலும் பொது ஊழியம் அன்றி வேறொன்றும் செய்பவராக விளங்கவிடுதல் கூடாது. இவற்றை எல்லாம் காக்க, விதிகளும் தண்டனைகளும் கடுமையாய் இருப்பது இயல்பே.

**உரிமை :** இந்தக் கடமைகளுக்கு ஏற்ற உரிமைகளும் வேண்டும்; பாதுகாவலும் வேண்டும். இவர்கள், தத்தம் துறையில் செய்துவரும் தொண்டிற்காக இடர்ப்படுதல் ஆகாது. இவர்களைச் சட்டம் பிறர் கையிலிருந்து காப்பாற்றுதல் வேண்டும். புகழோ இகழோ, பேறோ இழவோ இவர்களைத் தாக்குதல் கூடாது. புறநிலை அரசியலே அவற்றினை எல்லாம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். சட்டத்தினை நிறைவேற்றுவதில் பிறருக்குப் பணக்கேடு வருமானல், அதற்கு ஈடு செய்ய வேண்டுவது நாடே அன்றி இவர்கள் அல்லர். ஆனல், அறநெறி பிறழ்ந்த செயலுக்கு இவர்களே பொறுப்பாளிக ளாவார்கள்.

**வசதிகள் :** ஊழியம், வாழ்நாள் தொழிலாக ஆதல் வேண்டும் என்பதைக் கண்டோம். ஆதலின், இவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றிவரும் வரையிலும் 55 அல்லது 60 வயது வரையிலும் தம் நிலைக்கு இடையூறின்றித் தொழில் செய்து வாழ இடம் இருத்தல் வேண்டும். இல்லையானால், நடுத்தெருவில் அன்றோ நிற்கவேண்டி வரும்? இதனாலன்றோ கட்சி மாறுதலொடு இவர்கள் மாறுதல், என்ற முறையினை உலகம் பழிக்கின்றது? அதனால், தண்டனைக்கு இடம் இல்லை என்பதில்லை. தண்டனை எழுந்தாலும், நல்ல வழியில் எழுதல் வேண்டும்; நன்கு ஆராய்ந்தபின் எழுதல் வேண்டும். பல நிலை அதிகாரிகளும் அதனை ஆராய்வதற்கும், தண்டனை பெற்றவர் அவர்களுக்கு எல்லாம் முறையிடவும் வழி செய்ய வேண்டும். இவர்களுக்கு மேலும் மேலும் ஊக்கம் தரச் சிறந்த உரிமைகளும் நிலையும் இருத்தல் வேண்டும். பட்டங்களும் பாளையப் பற்றுக்களும் சிறந்த ஊழியர்களுக்கு வழங்குவது உண்டு. களவு முதலியவற்றைக் கண்டுபிடிப்போருக்கு நன்கொடை கொடுப்பது உள்நாட்டுப் பாதுகாவல் முறையில் ஒன்றாக இன்றும் உள்ளது. உலகம் அறியப் பாராட்ட வேண்டும் என்பதே இங்குள்ள நுட்பம். இன்று நம் நாட்டில், பட்டம் முதலியவற்றிற்கு இடம் இல்லையானாலும், பாராட்டு எழுதற்குத் தடை ஒன்றும் இல்லை. புகழ் நாட்டம், சிறந்த மக்களது குறிக்கோளாகும். ஆதலின், அந்தப் பேரவா நிறைவேறவும் இடம் செய்யவேண்டும். தேர்தலுரிமையினைப் பற்றி முன்னரே கூறினோம்.

**பணப் பேச்சு:** பணக்குறை நேரிடாமல் அரசியலே காக்கவேண்டும். இல்லையானால், தன்னலத்தோடு பொது நலம் போராட வேண்டி வரும். கடமை உணர்ச்சி எவ்வளவுதான் இருந்தாலும், அதனைச் சோதனைக்குள்ளாக்கி விடுதலாகாது. பட்டினியாய்க் கிடப்பவரும், மனைவி மக்களைத் திறம்பட வாழ்விக்க முடியாதபடி அல்லற்பட நிற்போரும் பொது ஊழியத்தில் முழு மனத்தினையும் எவ்வாறு செலுத்த முடியும்? பொது ஊழியத்திற்கே ஆள் அகப்படாமற்போனாலும் போகும். நாட்டில் நல்லவர்கள் வந்து சேருமாறு அவர்கள் மனத்தினை ஊழிய நிலை கவர வேண்டும். அவர்களுக்குத் தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை உண்டா என்பது ஒரு பெரிய கேள்வி. பிரான்சு முதலிய இடங்களில் இந்த உரிமை உண்டு. வெறுந் தொழிற்சங்க முறைகளைக் கையாண்டு வேலை நிறுத்தம் முதலியன செய்வது, பொது ஊழியத்திற்கு ஒத்தது அன்று என்பது இங்கிலாந்து முதலிய பெரும்பான்மை நாடுகளின் கொள்கை. ஆனால், சட்ட முறைப்படி வழக்குத் தொடர்ந்து தம் உரிமையை நிலைபெறுவிக்க எந்நாட்டிலும் அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், தொழிற்சங்கம் அமைக்க வேண்டுமா என்ற கேள்வியே எழாதவாறு, அரசியலார், அரசியலின் உயிர் நிலையான அவர்கள் நிலையை உயர்த்தி, ஒரு கவலையும் இன்றி அவர்களை வாழச் செய்வதே சிறப்பு என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். இதனை வயிற்றுப் பேச்சு எனப் புறக்கணியாது அரசியலின் உயிர் நிலையாம் ஊழி-

யத்தின் உயிர் நிலையைப்பற்றிய பேச்செடுக்-கொள்ளவேண்டும். வீணான பேராசைப் பேயை ஓட்ட எவராலும் ஆகாதென்றாலும், நேர்மையான அவாவினை நிறைவேற்றியே தீரவேண்டும். இதனா-லேயே எந்த நாடும் தத்தம் பொது ஊழியத்தைத் தலைசிறந்த நிலையில் வைத்து, அவர்களது ஊழியம், உடை, உணவு உறையுள், போக்கு வரத்துப் படி-கள், வேலை நின்றவுடன் பெறும் ஓய்வு காலச் சம்பளம் (Pension), ஓய்வு, மருத்துவ வசதி, எய்ப்பினில் காப்பாம் சேம நிதி (Provident Fund) முதலியவற்றிற்குத் தக்க வகையில் ஏற்பாடு செய்துவருகின்றது. ஆறுதலுற்ற ஊழியராலேயே, வீறு பெற்ற அரசியல் விளங்கும்.